உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
விலை: 30
பக்கங்கள்: 56
சுடர் 33 கதிர் 231 ஆனி 31ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 15 ஜூலை 2018 வள்ளுவர் ஆண்டு 2049

# காணாமற் போனோரை கண்டுபிடிப்பது கடினம்

## பணியகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் கூறுகின்றார்



ஓ.எம்.பி. அமர்வு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அங்கு வந்து போராட்டம் நடத்தினர்.

யாழ்ப்பாணம், ஜூலை 15
காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை உடனடியாகக் கண்டு பிடிப்பது கடினம். ஆனால் பக்கச் சார்பற்ற விசாரணைகளை நடத்தி இதற்கான நகர்வை ஆரம்பிக்க முடியும் என்று காணாமல் ஆக்கப்பட்டோர் >> 53

# இத்தாலி பறந்தார் மைத்திரி

கொழும்பு, ஜூலை 15
ஐக்கிய நாடுகள் உணவு விவசாய நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 6ஆவது உலக வன வாரத்தை முன்னிட்டு இடம்பெறும் மாநாடு மற்றும் உலக வனப் பாதுகாப்புக் குழுவின் 24 ஆவது கூட்டத் தொடரில் பங்குபற்று >> 05



# இராணுவப் புரட்சிவெடிக்கும் இந்தக் கூட்டு அரசு அழியும்

## இந்தியாவால் தமிழருக்கு விடிவு கிடைக்கும் கேப்பாபிலவுப் போராட்டத்தில் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 15
தமிழ் மக்களின் சொத்துக்களை இராணுவம் சூறையாடிப் புசித்துக் கொண்டிருக்கின்றது. இந்தக் கூட்டு அரசு நிச்சயம் >> 05

# அரசியல் தீர்வுக்கே முதலிடம் கொடுங்கள்

## மைத்திரியிடம் இடித்துரைத்து இந்தியா

கொழும்பு, ஜூலை 15
இலங்கையின் நீண்டகாலத் தேசிய பிரச்சினைக்கு புதிய அரசமைப்பின் ஊடாகவே தீர்வைக் காண வேண்டும் என்பதில் தமிழ் மக்கள் உறுதியாக உள்ளார்கள். ஆண்டிறுதிக்குள் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படவேண்டும் என்று தமிழ் மக்களும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் வலியுறுத்துகின்றனர். இந்தக் கூட்டரசு தீர்வு விடயத்துக்கு முதலிடம் .கொடுத்து அதனை உடன் நடைமுறைப்படுத்த வேண்டும்.
இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தினார் இந்திய >> 53

# எந்தத் தரப்பினரையும் விசாரிக்குமாம் பணியகம்

யாழ்ப்பாணம், ஜூலை 15
காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் எந்தத் தரப்பு மீது குற்றம் சுமத்தப்பட்டாலும் அந்தத் தரப்புக்களை விசாரிப்போம். அவர்கள் எந்த உயர்மட்டத்தினராக இருந்தாலும் நாம் எமது விசாரணை வளையத்துக்குள் உள்வாங்கி விசாரணையை நடத்துவோம். இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தின் ஆணையாளர் சாலிய பீரிஸ் தெரிவித்தார். >> 53

# ஏமாற்றவேண்டாம்!

## காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்துக்கு எதிராக உறவுகள் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 15
காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தில் நம்பிக்கையில்லை. பன்னாட்டு விசாரணையே வேண்டும். இந்தப் பணியகத்தைப் புறக்கணிக்கின்றோம் எனத் தெரிவித்து, காணாமல் >> 53



# கால்பந்து உலகக்கிண்ணம்

## பிரான்ஸ் – குரோசியா இறுதியாட்டம் இன்று

உலகக்கிண்ண கால்பந்துத் தொடரின் இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது. பிரான்ஸ் - குரோசியா அணிகள் இந்த ஆட்டத்தில் மோதவுள்ளன. இலங்கை நேரப்படி இரவு 8.30 மணிக்கு ஆட்டம் நடைபெறவுள்ளது.
**(தொடர்புடைய கட்டுரை- பக்:55)**

# வடக்கு மாகாண அமைச்சரவை ஒரு மாதமாகக் கூடவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 15
வடக்கு மாகாண அமைச்சரவைக் கூட்டம் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக நடைபெறவில்லை. அமைச்சரவை அனுமதிபெற்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வேலைகள் அப்படியே கிடப்பில் போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு >> 05

# தேசியப் பரீட்சைகளுக்கு நெருக்கடி

## ஆசிரியர் சேவை சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 15
நாடு முழுவதிலும் உள்ள அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்வி நிர்வாக அதிகாரிகள் எதிர்வரும் 26ஆம் திகதி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை >> 05

# தாலிக்கொடி அறுத்தோர் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்

## பொலிஸார் அவர்களை ஏற்கமறுப்பு

>> 05

# யாழ்ப்பாண வன்முறைகளுக்கு தமிழ்த் திரைப்படங்களே காரணம்

## பயண முடிவில் சட்டம் ஒழுங்கு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 15
தமிழ்த் திரைப்படங்களில் காண்பிக்கப்படும் வன்முறைகளே ஆவாக் குழுவினரின் செயற்பாட்டுக்குக் காரணம். இவ் >> 53

# இராணுவம் தகவல்கள் பெறுவதற்கு விக்கியின் அனுமதி தேவையில்லை

## அதிகாரம் தங்களிடம் இருக்கின்றது என்கிறார் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு, ஜூலை 15
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் தகவல் பெற வேண்டிய அவசியம் இராணுவத்தினருக்கு இல்லை. நாட்டின் தேசியப் பாதுகாப்புத் தொடர்பில் இராணுவத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதனை உரிய விதத்தில் செயற்படுத்துவோம் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடி >> 05

SDB வங்கியிடமிருந்து நிலையான வைப்புக்களுக்கு,
13 மாதங்களுக்கு
13.00%
வ.தே.வ. 12.93%
05 வருடங்கள்
14.00%
வ.தே.வ. 11.20%
06 மாதங்கள்
11.00%
வ.தே.வ. 11.30%
அழையுங்கள்: 0115 411 411
கவர்ச்சிகரமான வட்டி
SDB வங்கி
011 5 411 411
Fitch Rating BB+ (stable). Reg. No: PB62PQ



# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர் கைது

நுவரெலியா, ஜூலை 15
கினிகத்தேனை, பொல்பிட்டியவில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்.
ஹற்றன் மதுவரித்திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.
இதன் போது உற்பத்திசெய்யப்பட்ட கசிப்பு, உற்பத்தி உபகரணங்க என்பன கைப்பற்றப்பட்டன. சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4)

## மோசடியில் ஈடுபட்ட பெண் கைது

கனடாவுக்கு ஆட்களை அனுப்புவதாக கூறி பண மோசடியில் ஈடுபட்ட பாகிஸ்தானிய பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
கல்கிஸ்ஸ, டெம்பல் பகுதியில் வைத்து சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்.
கல்கிஸ்ஸ சிறப்புக் குற்ற விசாரணைப் பொலிஸ் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட் சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரிடமிருந்து 15 இலட்சத்து 79 ஆயிரத்து 650 ரூபா கைப்பற்றப்பட்டது.
சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4)

## மயங்கி வீழ்ந்தவர் சாவு

தென்மராட்சி, ஜூலை 15
மயங்கிவீழ்ந்த மூதாட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.
இந்தச்சம்பவம் கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்றது.
நீரழிவு நோய்ச் சிகிச்சைக்கு சென்று வீடு திரும்பிய மூதாட்டி நெஞ்சுவலிப்பதாகக் கூறி மயங்கி வீழ்ந்துள்ளார். இதனையடுத்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மூதாட்டி சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் எனக் கூறப்பட்டது. மிருசுவில் வடக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் செல்லமுத்து (வயது - 75) என்னும் மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்தார். (ரி4.9)

## சோற்றுப் பானை சரிந்து வீழ்ந்ததில் காயமடைந்த மூதாட்டி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 15
அடுப்பிலிருந்து சோற்றுப் பானை சரிந்து வீழ்ந்ததில் பானைக்குள் இருந்த சூடான கஞ்சி உடலில் பட்டு வயோதிபப் பெண் காயமடைந்தார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் ஆறுகால் மடத்தைச் சேர்ந்த 71 வயதுடைய புஸ்பராஜா பரமேஸ்வரி என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.
கடந்த 8 ஆம் திகதி வீட்டில் மின்சாரம் இல்லாத நிலையில் சமையலறையில் உடைந்த நிலையில் காணப்பட்ட அடுப்பில் சோறு சமைத்துள்ளார்.
உடைந்த அடுப்புக்குள் விறகு வைக்கும் போது சோற்றுப் பானை சரிந்து வீழ்ந்துள்ளது.
பானைக்குள் இருந்த சூடான கஞ்சி வயோதிப பெண்ணின் உடலில் பட்டுள்ளது.
காயத்துக்குள்ளான வயோதிபப் பெண் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று கடந்த 10 ஆம் திகதி வீடு திரும்பியுள்ளார்.
இந்த நிலையில் வயோதிப் பெண்ணுக்கு நேற்றுமுன்தினம் மூச்சு திணறல் ஏற்பட்டுள்ளது.
மீண்டும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட வயோதிபப் பெண் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இது தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (ரி4.8)

# போலி அனுமதிப்பத்திரத்தை தயாரித்து மணல் கொள்ளை

ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்திக்குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டு

**முல்லைத்தீவு, ஜூலை 15**
**முல்லைத்தீவு மாவட்டத்தில் போலி அனுமதிப்பத்திரம் தயாரித்து மணல் கொள்ளை இடம்பெற்றுவருகின்றது. இவ்வாறு சுற்றுச்சூழல் அதிகாரசபை மாவட்ட இணைப்பாளர் கிருபாகரன் தெரிவித்தார்.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்திக்குழுக்கூட்டம் கடந்த 9ஆம் திகதி நடைபெற்றது. இதன் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
சட்டவிரோத மணல் அகழ்வாளர்கள் பொலிஸாரிடம் போலி மணல் அனுமதிப்பத்திரத்தைக் காட்டி மணல் கொள்ளையில் ஈடுபடுகின்றனர்.
அனுமதிப்பத்திரத்துக்கும் அதிகமான மணல்களை உழவு இயந்திரத்தில் ஏற்றிச் செல்கின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.
மணல் அகழ்பவர்கள் வனவளப்பாதுகாப்புப்பிரிவுக்கு உட்பட்ட காடுகளுக்கு ஊடாக உழவு இயந்திரப்பாதையைத் தயாரித்து அதன் ஊடாக முதன்மை வீதிகளுக்கு மணலைக் கொண்டு செல்கின்றனர்.
ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்குட்பட்ட புத்துவெட்டுவானில் அதிகளவான சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக அந்தப்பிரதேசம் பாதிக்கப்பட்டுள்ளது. அம்பகாம், முத்துஐயன் கட்டு, ஒட்டுசுட்டான், பேராறு போன்ற பகுதிகளில் அதிகளவான சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. என்று பிரதேச அமைப்புக்கலால் சுட்டிக்காட்டப்பட்டது - என்றார்.
பிரதேச சபை உறுப்பினர்கள் மணல் அகழ்வு அனுமதிப்பத்திரத்தைப் பரிசோதனை செய்வதுடன் பொலிஸாருக்கு அதுதொடர்பில் தகவல்களைக் கொடுக்கவேண்டும் என்று இணைத்தலைவர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.
இது தொடர்பில் இங்கு பேசிவிட்டுப் போய்விடுவீர்கள் நடைமுறைப்படுத்துவது எவ்வளவு சாத்தியம் என்பது கேள்விக்குறி நீங்கள் இதற்கென்று ஒரு குழுவைத் தெரிவுசெய்யவேண்டும் அவர்கள் ஊடாக சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் அவர்கள் ஒரு மணல் அகழ்வு இடத்துக்குச் சென்று பார்வையிட வேண்டும் என்று பனிக்கன்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த ச.தவசீலன் தெரிவித்தார். இந்தச் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் அபிவிருத்திக்குழுக்கூட்டத்தில் சாத்தியப்படக்கூடிய எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை, வெறும்பேச்சளவிலே கதைத்துவிட்டு சென்றுவிட்டார்கள். மணல்கொள்ளையர்கள் தொடர்ந்தும் மணல் அகழ்வில்தான் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள் என்று அபிவிருத்திக்குழுக்கூட்டத்தில் கலந்துகொண்ட கிராம அமைப்பைச்சேர்ந்தவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ரி3,ரி4)

## தங்கத்துடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 14
மலேசியாவிலிருந்து சட்டவிரோதமாக தங்கம் கொண்டு வந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்.
கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.
கைப்பற்றப்பட்ட தங்கத்தின் பெறுமதி 16 இலட்சத்து 86 ஆயிரம் ரூபா என்று கட்டுநாயக்க வானூர்தி நிலைய ஆயப் பகுதியினர் தெரிவித்தனர்.
இந்தியாவைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4)

## போலிப்பத்திரம் உபயோகித்து மணல்ஏற்றியவருக்குத் தண்டம்

சாவகச்சேரி, ஜூலை 15
போலி அனுமதிப் பத்திரத்தைப் பயன்படுத்தி மணல் கடத்திய டிப்பர் சாரதிக்கு 80ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது சாவகச்சேரி நீதிமன்றம்.
முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு மணல் கொண்டுசெல்ல கனிம வளத் திணைக்களத்தால் வழங்கப்படுவதைப் போன்ற போலி ஆவணத்தைப் பயன்படுத்தி மணல் கடத்தப்பட்டுள்ளது. கனிம வளத் திணைக்கள அதிகாரியுடன் இணைந்து கொடிகாமம் பொலிஸார் எழுதுமட்டுவாழ் சோதனையில் ஈடுபட்டுள்ள போது இந்தக் கடத்தல் கண்டுபிடிக்கப்பட்டது. 15 லோட் மணல் கொண்டு செல்வதற்கு போலி ஆவணம் தயாரிக்கப்பட்டிருந்தது என்றும், 13 ஆவது லோட் மணல் கடத்தப்பட்டபோதே டிப்பரும், சாரதியும் சிக்கிக் கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பில் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்றமைக்காக 75 ஆயிரம் ரூபாவும், போலி அனுமதிப் பத்திரம் வைத்திருந்தமைக்காக 5 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது.
மணலைத் தடுத்து வைக்குமாறு உத்தரவிட்ட நீதிமன்றம் வாகனத்தை 30 லட்சம் ரூபா காசுப் பிணையில் விடுவிக்க அனுமதித்தது.
முகவர் ஒருவரே கனிம வளத் திணைக்களத்தால் வழங்கப்பட்டது என்று கூறி ஆவணத்தைத் தந்தார் என்று வாகன உரிமையாளர் தெரிவித்துள்ளார். 12 தடவைகள் மணல் ஏற்றிச் சென்றபோது பொலிஸ் பொறுப்பதிகாரியுடன் ஒப்படைத்துவிட்டு சென்று வந்தாகவும், 13 ஆவது தடவை வந்தபோது கனிம வளத் திணைக்கள அலுவலர்களும், பொலிஸாரும் இணைந்து சோதனையிட்டு போலியான அனுமதிப்பத்திரம் என்று தெரிவித்தனர் என்றும் அவர் கூறியுள்ளார்.
அதேவேளை, அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற இருவருக்கு 60 ஆயிரம் ரூபா தண்டம் நேற்றுமுன்தினம் நீதிமன்றால் விதிக்கப்பட்டது. (ரி4,9)

## கரிமுத்து பொருத்தப்பட்ட வளையல்கள் விற்பனை; சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஜூலை 15
யானைத்தந்தங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் கரிமுத்துக்கள் பொருத்தப்பட்ட வளையல்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் பேருவளையில் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர்.
வளையல்களை ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முற்பட்டபோதே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். 27, 33 மற்றும் 40 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4)

## சுற்றுலா மையத்தில் புல்வெட்டிய படையினர்

சாவகச்சேரி, ஜூலை 15
கடற்கரைச் சுற்றுலா மையம் அமைக்க தென்மராட்சிப் பிரதேச செயலகம் மற்றும் சாவகச்சேரி நகரசபை ஆகியவற்றால் ஒதுக்கப்பட்ட இடத்தில் படையினரால் புற்கற்றைகள் வெட்டி எடுக்கப்பட்டன. பொதுமக்களால் சாவகச்சேரி கோயிற்குடியிருப்புக் கிராம அலுவலருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்துச் சம்பவ இடத்துக்குச்சென்ற கிராம அலுவலர் புற்கற்றைகள் வெட்டுவதைத் தடுத்து நிறுத்தியுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.
சாவகச்சேரி கோயிற்குடியிருப்புக் கிராம அலுவலர் பிரிவில் உள்ள கடலேரியை அண்டிய பகுதியில் கடற்கரைச் சுற்றுலா மையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
அந்தப் பகுதியில் கடந்த வருடம் பெருமளவு மரக்கன்றுகள் நட்டு பிரதேச செயலகத்தால் பராமரிக்கப்படு வருகின்றது. (ரி4.9)

# எரிபொருள் வரியாலேயே விலை அதிகரிக்கப்பட்டது

## அமைச்சர் அர்ஜுன தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 15

நான் மக்களுக்காகவே எரிபொருள் விலையேற்றத்தை எதிர்த்தேன். எரிபொருளுக்கான வரியை குறைத்தால் எம்மால் எரிபொருளின் விலையைக் குறைக்கமுடியும்.

இவ்வாறு பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

கனேமுல்லவில் நேற்று நடைபெற்ற இராணுவ நினைவுச் சின்னத்தைத் திறந்து வைக்கும் விழாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாம் பொதுமக்களை தவிர்த்து எரிபொருள் விலை அதிகரிக்கும் தீர்மானத்துக்கு வரக்கூடாது.

நாம் எரிபொருள் விலை அதிகரிக்க தீர்மானம் எடுக்கும்போது பொதுமக்களை கவனத்திற்கொண்டு தீர்மானங்களை எடுக்கவேண்டும். பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பொதுமக்களுக்குச்சேவை வழங்கும் நிறுவனமாக இருக்கவேண்டுமே தவிர இலாபமீட்டும் நோக்குடன் செயற்படக்கூடாது.

இந்த நிறுவனங்கள் நட்டத்தில் இயங்கினாலும் நாங்கள் பார்க்கவேண்டியது மக்களுக்குச் சேவையை வழங்குவதே. கடந்த தினங்களில் அதிகரிக்கப்பட்ட எரிபொருள் விலை தொடர்பாக எனக்கு எவ்வித உடன்பாடும் இல்லை. அதை நான் எதிர்க்கவில்லை. ஆனால் மக்களை மனதில் கொண்டு தீர்மானம் எடுக்கவேண்டும் என்பதே எனது கருத்து. உண்மையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு எந்தவித நட்டமும் இல்லை. எரிபொருளுக்கான வரியைக் குறைத்தால் எங்களால் குறைந்த விலையில் எரிபொருளை வழங்க முடியும். வரியைக் குறைத்தால் எண்ணெய் விலையும் குறையும்.

ஆனால் வரியையும் குறைக்க முடியாது காரணம் அரசின் அனைத்து அபிவிருத்திதிட்டங்களும் வரியிலேயே தங்கியுள்ளது. அமைச்சரவையும் விருப்பமின்றியே எரிபொருள் விலையை அதிகரிக்கச் சம்மதித்தது. நாங்கள் அரசுக்கு வந்தபோது இருந்த விலையை விட தற்போது மசகு எண்ணெயின் விலை அதிகரித்துள்ளது. எதிர்காலத்தில் மசகு எண்ணெயின் விலை குறையும் என்று எதிர்பார்க்கின்றேன் - என்றார். (ரி4)



# ஹற்றன் விபத்தில் இருவர் படுகாயம்

ஹற்றன், ஜூலை 15

ஹற்றன், பொகவந்தலாவ முதன்மை வீதியில் நடந்த விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர். முச்சக்கர வண்டியும், பேருந்து ஒன்றும் விபத்துக்குள்ளாகியுள்ளன.

நேற்றுப் பிற்பகல் இந்த விபத்து நடந்துள்ளது. முச்சக்கர வண்டியில் பயணித்தவர்களே காயமடைந்துள்ளனர். அவர்கள் கிளங்கன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ரி4)

# முகிலெனக்குத் துகிலாகும் கவிதைப் புத்தக வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் கவிஞர் வடிவழகையனின் 'முகிலெனக்குத் துகிலாகும்' கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. யாழ்ப்பாண தமிழ்ச் சங்கத்தின் பொருளாளரும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி பேராசியர் தி.வேல்நம்பி தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.



ஆசியுரை தமிழ்ச் சங்கத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன்.வாழ்த்துரை பலாலி ஆசிரியர் கலாசாலை ஓய்வு நிலை அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன், மதிப்பீட்டு உரை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் ஆகியோர் நிகழ்த்தினர்.

யாழ்ப்பாணம் தமிழ் சங்கத்தின் பெருந்தலைவர் சண்முகதாஸ் நூலை வெளியிட்டு வைக்க கிருபா சாரதி பயிற்சி பாடசாலை உரிமையாளர் அ.கிருபாகரன் முதற் பிரதியை பெற்றுக்கொண்டார்.

கவிதை நூல் வெளியீட்டுடன் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் கவியரங்கமும் நிகழ்வில் நடைபெற்றது. நிகழ்வில் ஆர்வலர்கள் ,கவிஞர்கள் ,அரசியல் பிரமுகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ரி47)

# பாக்கிஸ்தான் தேர்தலுக்கு இலங்கை கண்காணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜூலை 15

பாகிஸ்தானில் எதிர்வரும் 25ஆம் திகதி நடக்கவுள்ள அரச தலைவர் தேர்தலில் கொமன்வெல்த் நாடுகளின் பிரதிநிதிகளின் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடும் குழுவில் இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவின் பிரதிநி ஒருவரும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானில் 25ஆம் திகதி அரச தலைவர் தேர்தல் நடைபெறவுள்ளது. அதன் கண்காணிப்புக்காக கொமன்வெலத் நாடுகளின் அமைப்பிற்கு அந்த நாட்டின் தேர்தல் செயலகம் அழைப்பு விடுத்துள்ளது. கொமன்வெல்த் அமைப்பின் செயலாளர் தேர்தல் காணிப்பாளர்களைத் தேர்வு செய்து பாகிஸ்தானுக்கு அனுப்புகின்றார்.

அந்தக் குழுவில் கொமன்வெல்த் அமைப்பின் செயலாளரால் இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ரட்ணஜீவன் கூல் தேர்வு செய்யப்பட்டுள்ளார். கண்காணிப்புக் குழுவினர் தேர்தலுக்கு முன்பும் பின்புமான 10 தினங்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபடும் வகையில் அடுத்த வாரம் பாகிஸ்தான் பயணமாகின்றனர். (ரி4105)



கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த கார் ஒன்று நேற்று விபத்துக்குள்ளானது. அதில் பயணித்த 6 மாதக் குழந்தை ஒன்று சிறு காயங்களுக்குள்ளானது. வீதியில் பயணித்த மாட்டுடன் மோதி விபத்து நடந்து என்று கூறப்பட்டது. (ற)

# வவுனியா காட்டுப்பகுதி திடீரெனப் பற்றி எரிந்தது

## 10 ஏக்கர் அளவிலான காட்டுப்பகுதி தீயில் கருகின



வவுனிய,ஜூலை 15

வவுனியா இரட்டைப்பெரியகுளம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட குருந்துபிட்டிப் பகுதியில் குடியிருப்புக்கு பின்பாகவுள்ள காட்டுப்பகுதியில் திடீரெனத் தீ பற்றி எரிந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. காற்றின் வேகம் அதிகரித்ததால் அனைத்து இடங்களுக்கும் தீ பரவியது. அந்தப் பகுதி முழுவதும் புகைமூட்டமாகக் காட்சியளித்தது.

இதனால் 10 ஏக்கர் அளவிலான காட்டுப்பகுதி எரிந்துள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற இரட்டைபெரியகுளம் போலிஸார் தீயை அணைக்க முற்பட்டதுடன் வவுனியா நகரசபை தீ அணைப்பு பிரிவுக்குத் தகவல் வழங்கினர். சம்பவ இடத்துக்குச் சென்ற நகரசபையின் தீயணைப்புப் பிரிவினர் குடியிருப்புப் பகுதிக்குள் பரவயிருந்த தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

வவுனியா நகரசபைத் தலைவர் இ.கௌதமன், உப நகரபிதா வே.குமாரசாமி ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று நிலமைகளைக் கேட்டறிந்தனர்.

தீ பற்றி எரிந்தமைக்கான காரணத்தைக் கண்டறிவதற்கான முயற்சிகளை இரட்டைப் பெரியகுளம் பொலிஸ் மேற்கொண்டுள்ளனர். (ரி4,110)



# 4ஆயிரம் ஏக்கர் காணிகளே விடுவிக்கப்படாமல் உள்ளன

## மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 15

யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்னும் 4 ஆயிரம் ஏக்கர் காணிகளே விடுவிக்கப்படாமல் உள்ளது என யாழ்ப்பாண மாவட்ட செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வீதி விபத்துக்கள் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மாவட்டச்செயலகத்தில் இடம்பெற்றது. அதன் பின்னர் வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகள் தொடர்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

"2009 இற்க்கு பின்னர் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதைதொடர்ந்து அரசினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நிலங்கள் படிப்படியாக காணிகளின் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் 2009 இலிருந்து 2014 வரையிலான காலப்பகுதியில் 59 ஆயிரத்து 80 ஏக்கர் தனியாருக்குச்சொந்தமான காணிகள் விடுவிக்கப்பட்டதுடன் அதன்பின்னர் 2015 இலிருந்து இன்றுவரை 38 ஆயிரத்து 38 ஏக்கர் காணிகளும் விடுவிக்கப்பட்டுள் என.

மேலும் இதுவரை 4 ஆயிரம் ஏக்கர் காணிகளே வீடுவிக்கப்படாமல் உள்ளன.

விடுவிக்கப்பட்ட காணிகளில் 99% மான காணிகள் தனியார் காணிகளாகவே காணப்படுகின்றன. அத்துடன் நலன்புரி முகாம்களில் தற்பொழுது 541 குடும்பங்கள் இருக்கின்றனர் அவர்களில் 240 குடும்பங்களிற்க்கு சொந்தமான காணிகள் இருந்தும் அவை விடுவிக்கப்படாமையால் தொடர்ந்தும் நலன்புரி முகாம்களில் தங்கவேண்டிய நிலையில் உள்ளர்.

இவர்களில் 301 குடும்பங்களுக்கு காணிகள் இல்லை என்று சொல்கிறார்கள், அதாவது அவர்கள் இந்த இடம்பெயர்வுகள் ஏற்பட்டதன் பிற்பாடு திருமணங்கள் செய்து உருவாகிய புதிய குடும்பங்கள். அவர்களுக்கு சிறப்புத் திட்டங்கள் மூலம் 158 பேருக்கு காணிவாங்கி வீடுகள் கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவர்களில் மீதி உள்ளவர்களுக்கு காணி கொள்வனவுசெய்து வீடு அமைத்து கொடுப்பதற்க்கான நடவடிக்கைகள் மீள்குடியேற்ற அமைச்சின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது." - என்றார். (114)



## "வேண்டியதருளும் வேம்படிக்கந்தா" இறுவட்டு வெளியீடு

சாவகச்சேரி,ஜூலை 15

யாழ்ப்பாணம் சாவகச்சேரி மட்டுவில் அம்பலந்துறை வேம்படி கந்தசுவாமி கோவில் கந்தன் புகழ் பாடும் இசைப்பாடல் தொகுப்பான "வேண்டியதருளும் வேம்படிக்கந்தா" இறுவட்டு வெளியீடு நாளை திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது . இறுவட்டுக்கான பாடல்களை வேலணையூர் கவிஞர் பா.சசிக்குமார் இயற்றியுள்ளார். கே.துஷ்யந்தன் இசையமைத்துள்ளார். சி.ராமச்சந்திரன் குடும்பத்தினர் இறுவட்டை வெளியிடுகின்றனர்.

## இந்து இளைஞர் சங்கத்தின் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் ஜூலை 15

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய ஆடிச்செவ்வாய் மற்றும் மகோற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தப்படும் இந்து இளைஞர் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்கத்தின் பணிமனையில் இடம்பெறவுள்ளது. கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (114)

## இந்து இளைஞர் மாநாடு இந்தமுறை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,ஜூலை 15 -

பன்னாட்டு இந்து இளைஞர் பேரவையின் இந்து இளைஞர் மாநாடு இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நீராவியடி இலங்கைவேந்தன் கலைக்கல்லூரியில் இடம்பெறும்.

மாநாடு எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## அமிர்தலிங்கத்தின் நினைவு நாள் நிகழ்வு

தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவருமான அப்பாபிள்ளை அமிர்தலிங்கத்தின் 29 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு யாழ்ப்பாணம் மாட்டின் வீதியில் உள்ள தமிழ் அரசுக் கட்சியின்தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட கிளைத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் . உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுடன் கட்சி அங்கத்தவர்கள் பலரும் கலந்துகொண்டதோடு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் நினைவுப் பேருரை ஆற்றினார். (105)

## அனுமதி அட்டை வழங்கல்

யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இந்த ஆண்டு முதல்தடவை மற்றும் இரண்டாம் தடவையாக தோற்றும் ஜி.சி.ஈ உயர்தரப் பரிட்சை மாணவர்களுக்கான அனுமதி அட்டை எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வழங்கப்படவுள்ளது.

முதலாம் தடவையாக தோற்றவுள்ள மாணவர்கள் சீருடை, தேசிய அடையாள அட்டை, பெற்றோருடனும், இரண்டாம் தடவையாக தோற்றும் மாணவர்கள் சீருடை, தேசிய அடையாள அட்டையுடனும் வருகைதரல் வேண்டும் என கல்லூரியின் அதிபர் தெரிவித்துள்ளார்.

## சதுர்த்தி விரதம்

யாழ்ப்பாணம் வண்.வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சதுர்த்தி விரதம் நாளை திங்கட்கிழமை மாலை 4.30மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டபப் பூஜை என்பன நடைபெற்று விநாயக பெருமான் வீதி வலம் வருவார் என ஆலய பிரதம குரு சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் தெரிவித்தார்.

## பலாலி செபஸ்தியார் ஆலயத் திருநாள் திருப்பலி

யாழ்ப்பாணம்,யூலை 15

28 வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணம் பலாலி புனித செபஸ்தியார் ஆலயத் திருநாள் திருப்பலி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் மறை.மாவட்ட குருமுதல்வர் அருட்பணி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் பலாலி ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

## புனித கார்மேல் அன்னை ஆலய பெருவிழா

அல்லைப்பிட்டி,யூலை 15

அல்லைப்பிட்டி புனித கார்மேல் அன்னை ஆலய வருடாந்த பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30மணிக்கு நற்கருணையுடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து நாளை திங்கட்கிழமை திருநாள் திருப்பலி காலை 6.30 மணிக்கு ஊர்காவற்றுறை பங்குத் தந்தை அருட்பணி. இராஜசிங்கம் தலைமையில் கூட்டுத்திருப்பலியும் இதனைத் தொடர்ந்து அன்னையின் திருச்சொரூப புதிய தேர் பவனியும் இறையாசீரும் இடம்பெறும் என ஆலய அருள் பணிச் சபை தெரிவித்துள்ளது.

## வணிக நாள் கருத்தரங்கு

தென்மராட்சி, ஜூலை 15

யாழ்ப்பாணம் கச்சாய் அ.த.க.பாடசாலையில் வணிக நாள் கருத்தரங்கு பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மக்கள் வங்கியின் பிரதிநிதிகள் வளவாளர்களாகக் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர் (9)

## "நடன அரங்காற்றுகை"

யாழ்ப்பாணம்,ஜூலை 15

"நடன அரங்காற்றுகை" நிகழ்வு யாழ்ப்பாண சிறி கலைமகள் சனசமூக நிலைய முத்தமிழ் கலையரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு கலாபூஷணம் ந.இராமநாதன் தலைமையில் நடைபெறும் என ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

## புகைப்பட வர்த்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூலை 15

நீண்டகாலமாக புகைப்படத்துறையில் சேவையாற்றி வரும் "தெவெனி எச" (மூன்றாவது கண்) என்ற அமைப்பு யாழ்ப்பாணத்தில் புகைப்பட வர்த்தகக் கண்காட்சியொன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இந்தக் கண்காட்சியானது ,எதிர்வரும் 21, 22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாண புகையிரத நிலையத்துக்கு முன்பாக அமைந்துள்ள ஜெட்வின் ஹோட்டலின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கண்காட்சிக்கு முன்பாக எதிர்வரும் 20 ஆம் திகதி, யாழ்பாணம் "திண்ணை" ஹோட்டலில் காலை 9 மணிக்கு ஒளிப்படவியல் தொடர்பான இலவச பயிற்சிப் பட்டறையொன்று நடத்தப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## அலங்கார உற்சவம்

சண்டிலிப்பாய்,ஜூலை 15

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் கல்வளை காளியம்பாள் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை விளக்கேற்றலுடன் ஆரம்பமானது.

தொடர்ந்து எட்டு நாள்களும் இரவு பூசைகள் இடம்பெற்று அம்பாள்வீதி வலம் வரும் நிகழ்வு இடம்பெறும் 9ஆவது நாள் பொங்கல் உற்சவம்காலை 6மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினரால் தெரிவிக்கப்படது. (63)

## மாணிக்கவாசகர் குருபூசை

யாழ்ப்பாணம்,ஜூலை 15

சைவ பரிபாலனசபை நடத்தும் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை நாள் நிகழ்வுகள் நாளை திங்கட் கிழமை நீர்வியடி பரிபாலனசபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு தலைவர் இ.வசந்தசேனன் தலைமையில் இடம் பெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண வலயம் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அருணாசலம் அகிலதாஸ், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் வாசுகி தவபாலன், மதிப்புறு விருந்தினராக யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலய அதிபர் ந.பரமேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## குருதிக் கொடையாளர் மதிப்பளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை 15

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பிராந்திய குருதி வங்கியால் "குருதிக்கொடை செய்வோம் வாழ்வைப் பகிர்ந்து கொள்வோம்" என்ற தொனிப் பொருளிலான பன்னாட்டு குருதிக் கொடையாளர் மதிப்பளிப்பு நிகழ்வு எதிர்வரும் 21ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமன்ன தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.



தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர்கள் அ,அமிர்தலிங்கம் மற்றும் வெ. யோகேஸ்வரன் ஆகியோரின் 29 ஆவது வருட நினைவு அஞ்சலி நிகழ்வு தமிழர் விடுதலைக்கூட்டணியின் யாழ்ப்பாண தலைமையகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

## தேசியப்...

ஆசிரியர் சேவை சங்கம் அறிவித்துள்ளது.
கடந்த 4 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போது இரு வாரங்களுக்குள் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று அறிவித்திருந்தனர். இரு வாரங்களாகியும் தீர்வு கிட்டாமையினால் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை மற்றும் புலமைப்பரிசில் பரீட்சை ஆகிய தேசிய பரீட்சைகளையும் புறக்கணிக்க நேரிடும் என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (5,31)

## இத்தாலி...


வதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இத்தாலியின் ரோம் நகருக்கு நேற்று மதியம் புறப்பட்டார்.
பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக வனங்களின் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
வனப் பாதுகாப்பு தொடர்பான கொள்கையைப் பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களின் ஒருங்கிணைப்பைப் பலப்படுத்தவும் இந்த மாநாடு விரிவான பங்களிப்பை வழங்குகின்றது.
இலங்கையின் வன அடர்த்தியை 29% - 32% வரை அதிகரிப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள கொள்கை சார்ந்த தீர்மானங்கள் மற்றும் வன வளங்களைப் பாதுகாப்பதற்கரக பல்வேறு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சூழ்நிலையில், இந்தக் கூட்டத் தொடரில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கதாகும்.
இலங்கையின் வனஅடர்த்தியைப் பேணுவதற்காக தென்பகுதியில் காடுகளை அழித்து, வடபகுதியில் நீண்டகால இடப்பெயர்வுக்கு உள்ளான மக்களின் காணிகளை வனவளத் திணைக்களம் பிடித்து வருவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# குரங்குவால் பயிற்றை விதைக்கு கிராக்கி

யாழ்ப்பாண மாவட்ட விதை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் சீக்கோவால் உற்பத்தி செய்யப்படும் குரங்குவால் பயிற்றை இன விதைக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது.
குரங்குவால் இனப் பயிற்றை விதைகளைக் கூடுதலான செய்கையாளர்கள் பெற்று வருகின்றனர். இதனால் விதைகளுக்குச் சீக்கோவில் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.
இதேவேளை கடந்த வருடத்திலும் பார்க்க இந்த வருடத்தில் சீக்கோவால் உற்பத்தி செய்யப்படும் கத்தரி, வெண்டி, தக்காளி, கீரை போன்ற மரக்கறி விதைகளையும் கூடுதலாக விவசாயிகள் பெற்றும் வருகின்றனர். (17)

# சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் ஒலிபெருக்கி பாவனைக்கு தடை

சாவகச்சேரி, ஜூலை 15
எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சைகளை முன்னிட்டு இக் காலப்பகுதிகளில் சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஒலிபெருக்கி பாவனை தடைசெய்யப் படுள்ளதென நகரசபையின் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார்.



கோவில்களில் திருவிழாக்கள் ஆரம்பமாகியுள்ளதால் ஒலிபெருக்கிகளின் பாவனையால் மாணவர்கள் படிக்க முடிவதில்லையென பெற்றோர்களும் முறையிட்டுள்ளனர். இதனையடுத்து எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் பரீட்சைகள் முடிவடையும் வரை ஒலிபெருக்கிப்பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது.
இந்தத் தடையினை மீறி மாணவர்களின் கல்விக்கு இடையூறு விளைவிக்கும்வகையில் ஒலிபெருக்கி பாவித்தால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் ஒலிபெருக்கிப் பாவனைக்கான அனுமதிப் பத்திரம் வழங்க வேண்டாமென பொலிஸாருக்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தார். (9)

# பெரும்போக விதை நெல் ஒகஸ்டில் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 15
யாழ்ப்பாண மாவட்ட விதை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க சிக்கோவால் இந்த ஆண்டு பெரும் போக நெற்செய்கைக்கான விதை நெல்லை ஒகஸ்ட் மாதத்தில் இருந்து செய்கை யாளர்களுக்கு விநியோகிக்க வுள்ளது.
இந்த ஆண்டு செய்கைக்கெனசுமார்நான்காயிரம் புசல் விதை நெல்லைப் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளிடம் இருந்து சிக்கோ கொள்வனவு செய்தது.
கொள்வனவு செய்யப்பட்ட விதை நெல் துப்புரவு செய் யப்பட்டு முளை திறன் கூடி யதா என்பது குறித்து ஆராய்ச்சிக்கும் உட்படுத் தப்பட்டது என்று சிக்கோ வின் பொது முகாமையாளர் ரி.ரவி மயூரன்தெரிவித்தார். (17)

## இராணுவப்...

அழியும். இராணுவப் புரட்சி வெடிக்கும். இந்த அரசு சீனா பக்கம் சாய்ந்து கொண்டிருப்பதால், இந்தியா வேறு வழியின்றி தமிழருக்கு உதவும். கேப்பாபிலவு மக்களின் 500ஆவது நாள் போராட்டத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவித்த கரைத்துறைபற்று பிரதேச சபைத் தவிசாளர் க. தவராசா மேற்கண்டவாறு கூறினார்.
கேப்பாபிலவில் இராணுவத்தினர் வசமுள்ள காணிகளை விடுவிக்கக் கோரி கடந்த ஆண்டு மார்ச் மாதம் மக்கள் போராட்டங்களை ஆரம்பித்திருந்தனர். 138 குடும்பங்களுக்குச் சொந்தமான 482 ஏக்கர் காணி விடுவிக்கப்படவேண்டியிருந்தது. கட்டம் கட்டமாக சில காணிகள் விடுவிக்கப்பட்டது. 59.95 ஏக்கர் காணி இன்னமும் விடுவிக் கப்படவேண்டும் என்று அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இன்னமும் 73 ஏக்கர் காணி விடுவிக்கப்படவேண்டியுள்ள தாக மக்கள் கூறுகின்றனர். கடந்த டிசெம்பர் மாதம் 28ஆம் திகதி 85 காணி உரிமையாளர்களுக்குச் சொந்தமான 133.4 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டது. அதன் பின்னர் எந்தவொரு காணிகளும் இன்னமும் விடுவிக்கப்பட வில்லை. காணி விடுவிப்பை வலியுறுத்தி மக்கள் வீதிக் கரையில் ஆரம்பித்த போராட்டம் 500ஆவது நாளை நேற்று எட்டியது.
தாம் போராடும் இடத்தில் மக்கள் நேற்றுக் கவனவீர்ப்பு நடத்தினர். இதில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா, கரைத்துறைபற்று தவிசாளர், உபதவிசாளர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட இணைப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.
'பன்னாட்டுச் சமூகமே நீயும் கண்மூடியுள்ளாயா? உன்னிடமும் நீதியில்லையா?', 'நல்லாட்சியிலும் பூர்வீக மக்கள் ஏதிலி வாழ்வா?', 'அரசே சுரண்டாதே சுரண்டாதே எங்கள் பூர்வீக வாழ்விடத்தைச் சுரண்டாதே', 'நல்லாட்சி அரசே! மக்கள் பிரதிநிதிகளே! பன்னாட்டுச் சமூகமே! பூர்வீக வாழ்விட மக்கள் வீதியில் கிடக்கும் விதியா?' போன்ற கோசங்களைத் தாங்கிப் பிடித்திருந்தனர்.
இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு கரைதுறைபற்று பிரதேச சபைத் தவிசாளர் மேலும் தெரிவித்ததாவது, மக்களின் காணிகளை விடுவிப்பார் என்ற நம்பிக்கையில் மைத்திரிபாலவுக்கு தமிழ் மக்கள் வாக்களித்தார்கள். ஆனால் இன்று மகிந்தவை விட இன்னும் ஒருபடி மேலே சென்று மக்களின் உரிமைகளை மறுப்பதில், சிங்களப் பேரினவாதிகளின் விருப்பங்களை நிறைவேற்றுவதில் கவனமாக இருக்கின்றார்.
மக்கள் தங்கள் போராட்டத்தில் இருந்து பின்வாங்கக்கூடாது. இன்று 500ஆவது நாள் போராட்டம் என்று சொன்னார்கள். 500 ஆண்டுகளாகவும் உலகத்தில் உரிமைகள் மறுக்கப்பட்ட மக்கள் இன்னும் இருக்கின்றார்கள். அவர்கள் போராட்டத்தைக் கைவிடவில்லை.
கூட்டு அரசு அழியும். அரசு தான் அழிவதற்கான ஏற்பாடுகளைத்தான் செய்து கொண்டிருக்கின்றது. எல்லாவற்றையும் இராணுவ மயப்படுத்துகின்றது. இராணுவப் புரட்சி வெடிக்கும். இந்த அரசு அழியும். ஆட்சியில் உள்ளவர்கள் தூக்கி எறியப் படுவார்கள்.
கூட்டு அரசு சீனாவின் பக்கம் சாய்ந்துள்ளது. இதே நிலமை தொடர்ந்தால், இந்தியா வேறு வழியில்லாமல் கடைசி மருந்தாக தமிழ் மக்களுக்கு கைகொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும்.
இரண்டு தினங்களுக்கு முன்னர் தம்புள்ளவில் செயலமர்வுக்குச் சென்றிருந்தேன். நாம் தங்கியிருந்த ஹோட்டல் இராணுவத்தினரால் நடத்தப்படுகின்றது. போரில் தமிழ் மக்களிடம் அபகரித்த சொத்துக்களை வைத்துத்தான் அந்தப் பிரமாண்ட ஹோட்டலை அமைத்துள்ளார்கள். மக்களுடைய சொத்துக்களைப் பிடுங்கி இராணுவம் புசிக்கின்றது - என்றார். (5,ரி3)

## வடக்கு...

கின்றது. வடக்கு மாகாண அமைச்சரவைக் கூட்டம் கடந்த மாதம் 6ஆம் திகதி நடைபெற்றுள்ளது. இந்த மாதத்துக்குரிய அமைச்சரவைக் கூட்டம் இன்னமும் நடைபெறவில்லை.
வடக்கு மாகாண சபையின் மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிப அமைச்சராக இருந்த டெனீஸ்வரன் தன்னை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கியமைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கில் கடந்த 29ஆம் திகதி இடைக்கால கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. டெனீஸ்வரன் வகித்த அமைச்சுப் பொறுப்புக்களில் அவர் தொடர்கின்றார் என்றும், அவரை அமைச்சரவையில் உள்ளடக்கி அரசமைப்புக்கு ஏற்ற வகையில் அமைச்சர் சபை செயற்படுமாறு இடைக்காலக் கட்டளையில் குறிப்பிடப்பட்டி ருந்தது.
இதற்கு அமைவாக அமைச்சரவை இன்னமும் மாற்றியமைக்கப்படவில்லை. இதனால் அமைச்சர் சபை செயற்பட முடியாத நிலை காணப்படுகின்றது. கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற வடக்கு மாகாண சபையின் அமர்விலும் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கு உட்னடியாகத் தீர்வு காணப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் ஆராய்வதற்காக நாளை சிறப்பு அமர்வு இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (5)

## தாலிக்கொடி...

கிளிநொச்சி, ஜூலை 15
கிளிநொச்சி அக்கராயனில் உந்துருளியில் கணவருடன் சென்றுகொண்டிருந்த மனைவியின் தாலிக்கொடியை அறுத்த கொள்ளையனை, கணவனும் ஊர் மக்களும் இணைந்து மடக்கிப் பிடித்தனர். அவர்களை அக்கராயன் பொலிஸாரிடம் ஒப்படைத்தபோது ஏற்கமறுத்துள்ளனர். பொதுமக்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் கருத்து முரண்பாடு இதனால் ஏற்பட்டுள்ளது.
முறிகண்டியிலிருந்து அக்கராயன் செல்லும் வீதியில் 4ஆம் கட்டைப்பகுதியில் கணவனும், மனைவியும் உந்துருளியில் பயணித்துள்ளனர். காட்டுப்பகுதியில் மறைந்திருந்த இருவர் உந்துருளியைத் திடீரென மறித்தனர். கணவனைத் தள்ளி வீழ்த்தினர். மனைவியின் தாலிக்கொடியை அறுத்தனர். அவர் தாலிக்கொடியை இறுகப் பற்றிப் பிடித்திருந்த மையால் தாலிக்கொடி கொள்ளையனின் கைக்குச் செல்லவில்லை.
கணவன் அபயக் குரல் எழுப்பினார். ஊரவர்கள் அங்கு திரண்டனர். கணவனும், ஊர் மக்களும் திரண்டு கொள்ளையர்களைத் துரத்தினர். ஒருவர் கலைத்துப் பிடிக்கப்பட்டார். மற்றையவரும் மறைந்திருந்தபோது பிடிக்கப்பட்டுள்ளார்.
இருவரையும் அக்கராயன் பொலிஸாரிடம் மக்கள் ஒப்படைத்தனர். அவர்கள் முறைப்பாட்டை ஏற்க மறுத்ததுடன், கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு கூறியதாகத் தெரிவித்த மக்கள், கொள்ளையர்களைப் பிடித்த எங்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப் போவதாகவும் அச்சுறுத்தினர் என்று குறிப்பிட்டனர்.
இதேவேளை இந்தப் பகுதியில் இந்த மாதம் இரண்டு பெண்களின் நகைகள் கொள்ளையிடப்பட்டதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர். (5,105)

## இராணுவம்...

யர் சுமித் அத்தபத்து தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் மே மாதம் 25ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் குழந்தைகள் பிரசவித்தோர் விவரத்தை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கோரியிருந்தனர். இவ்வாறான தகவல்களை, தனது அனுமதியில்லாமல் வழங்கக் கூடாது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்திருந்தார். பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் இவ்வாறு தகவல் கோரியமைக்கு, பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளரிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனத்தையும் தெரிவித்திருந்தது.
இவ்வாறானதொரு நிலையிலேயே இராணுவப் பேச்சாளர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
'அரசியலில் ஈடுபடுபவர்கள் கூறுகின்ற இவ்வாறான கருத்துக்களை நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அவர்களிடம் தகவல்களைப் பெற வேண்டிய அவசியம் எதுவும் இராணுவத்தினருக்கு இல்லை. அவருடைய கருத்துக்கு உரிய பதிலை அரசு வழங்க வேண்டும். நாட்டின் தேசியப் பாதுகாப்பை உறுதிசெய்தல் தொடர்பில் இராணுவத்தினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதனை உரிய வகையில் செயற்படுத்துவோம்' என்றார் இராணுவப் பேச்சாளர். (5,31)

மணமக்கள் தேவை
வாணி சர்வதேச திருமண சேவை நிலையம்
யாழ். இந்துகௌரவகுடும்பத்தைச்சேர்ந்த 1998 ஆம் ஆண்டில்பிறந்த அத்தம் 4ஆம் பாதம், கிரகபாவம் 35 உடைய ஆஸ்திரேலியா P.R. உடைய சிவில் இஞ்சினியர் மணமகளுக்கு ஓரளவு படித்த நற்பண்புடைய குடும்பப் பாங்கான மணமகன் தேவை. 1984 இல் பிறந்த பூசம், 4ஆம் பாதம், இலக்கணத்தில் செவ்வாய், கிரகபாவம் 45, வங்கி முகாமையாளர் மணமகனுக்கு ஓரளவு படித்த மணமகள் தேவை.
VIMB - 077 522 1132, 077 310 7291
வாணி - 077 285 4626
(Govt. Regd. International, VE/IND/33GWIA 83347)

விற்றுத்தீர்த்தல்
CLEARANCE SALES
FLOOR TILES, BATHROOM'S TILES, WASH BASIN, COMMODE SETS AND OTHER CERAMICS WARE, S-LON FITTINGS
VEMAKE
27/3, POWER HOUSE ROAD, JAFFNA.
(1 9919/15/17)

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரை அண்மித்த பகுதியில் உள்ள சைவ உணவகத்துக்கு சப்ளையர், சமையல் வேலையாள்கள் தேவை.

**தொடர்பு - 077 906 3036**

## அறை வாடகைக்கு

நல்லூரில் அமைந்துள்ள வீடொன்றில் படிக்கும் அல்லது தொழில்புரியும் பெண்கள் ஒருவர் அல்லது இருவருக்கு அறை வாடகைக்கு உண்டு.

**தொடர்பு - 076 200 2824**

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி பருத்தித்துறை பிரதான வீதியில் கெருடாவில் கந்தசாமி கோவிலில் இருந்து சாவகச்சேரி நோக்கி 1/2 Km தூரத்திலும் பாடசாலைகள், தபாற்கந்தோர், புகையிரத நிலையம், சந்தைக்கு நடந்து செல்லக்கூடிய தூரத்தில் பஸ் வசதியுடனும் 7 துண்டங்களாக அமைந்துள்ள 65 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. துண்டங்களாகவோ (வரைபடம் உள்ளது), முழுமையாகவோ விரும்பியபடி வாங்க முடியும். விலைபேசித் தீர்மானிக்கலாம்.

திருமதி யோகா நாகேந்திரம், கெருடாவில் கந்தசாமி கோவில் அருகாமை, பருத்தித்துறை வீதி, கெருடாவில், சாவகச்சேரி. 077 160 1115, 011 258 8325. காணி உரிமையாளரை 2018 ஜூலை 16,17,18,19 ஆகிய திகதிகளில் மேற்படி முகவரியில் சந்திக்க முடியும்.

## காணி விற்பனைக்கு

இயக்கச்சி, முள்ளியான், மருதங்கேணி பிரதான வீதியில் வீதியை வடக்கு எல்லையாகக் கொண்டு முள்ளியானில் 40 ஏக்கர் காணி விற்பனைக் குண்டு. ஒருங்கிணைந்த பண்ணை, தோட்டம், தொழிற்சாலை முதலியன அமைக்க உகந்த இடம்

**தொடர்பு - 077 666 0344, 075 760 4313**

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணத்தில் எப்பகுதிகளிலும் வீடு / கடை வாடகைக்கு உடன் தேவை. தொடர்பு - 076 729 3407, 077 917 7027

## வேலையாள் தேவை

மீசாலை புத்தூர்ச்சந்தியில் இயங்கிக் கொண்டிருக்கும் அரைக்கும் ஆலைக்கும் மில் வேலையில் முன் அனுபவமுள்ள வேலையாள் ஒருவர் தேவை.

**தொடர்பு - 077 1972 732**

## வேலையாள் தேவை

**மர விற்பனை** நிலையத்திற்கு வேலையாள்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்

**ஆர்க் தளபாட நிலையம்**
1169, K.K.S.வீதி, யாழ்ப்பாணம்
**021 221 9909, 077 300 1763**

## முதலாம் ஆண்டு நினைவுகள்



தோற்றம் 19.06.1948

மறைவு 26.06.2017

**நாகேஸ்வரி தனபாலன்**

(காரைநகர், சாவகச்சேரி, சரவணை)

திதி - ஆனிமாத வளர்பிறை திருதியை 15.07.2018

**இயற்கையும் இடப்பெயர்வும் தந்த மாற்றங்கள் அடங்காப்பற்றில் நிலை கொண்டது கதிர்காமக் கந்தன் திருப்புகழ்பாடி ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக ! ஓம் நமசிவாய**

இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் 81/01. 2 ஆம் குறுக்குத்தெரு இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

வே. கெ. தனபாலன் ஆசிரியர்
இந்து அரச ஊழியர்கள் இணையம், வவுனியா

கணவர், பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சுற்றத்தவர்கள்.

## புளோரன்ஸ் நைற்றிங்கேள்

### தாதியர் பயிற்சிப்பாடசாலை

**ஒரு வருட தாதியர் பயிற்சிகளை பூர்த்தி செய்த பின் தனியார் வைத்தியசாலைகளில் தொழில் புரிய முடியும்.**

- ஒரு வருட பயிற்சி பாடநெறி
- தகைமை : O/L 6 பாடம்
- வயது : 17 - 35 வரை
- பயிற்சிக் காலங்களில் பகுதி நேர வேலை வாய்ப்புக்கள் பெற்றுத் தரப்படும்.
- பாடமுடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**மிகக் குறைந்த கட்டணத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம்.**



**தொடர்புகளுக்கு : 077 718 6438**
**முகவரி : K.K.S Road, மருதனார்மடம் (ஆஞ்சநேயர் கோயில் முன்பாக)**
**குஞ்சர் கடையடி கரணவாய் மத்தி. நெல்லியடி.**

## THE MOST POWER FULL கொல்லிமலை மாந்திரீகம்

உங்கள் காரியம் எதுவானாலும் வன்சொட்டில் முடிக்க முடியும். பிரிந்த பிரச்சனைப்பட்ட காதலர்களையும் தம்பதியினரையும் சட்டென ஆச்சரியமடையவைக்கும் படியாக நாடிவர வைப்பது சுலபம் நீங்களும் இணைந்து வாழ முடியும்.

Power Full For Lost Love நீங்கள் பிரச்சினைகளால் தடுமாறும் போது சரியான தீர்வு நாங்கள் கொடுப்போம். உங்கள் கவலை எல்லாம் தீர்ந்து நிம்மதி கிடைக்கும்.

அனைத்து வகையான பிரச்சினைகளுக்கும் Fast and Quick Solution காதலன். காதலி கணவன். மனைவி பிரியமாக நடப்பார்கள். குடும்ப வாழ்க்கை பிரகாசமாகும்.

ஓயாமல் வாட்டும் பிரச்சினைகளும் மாயமாய் மறையும் குறைந்த கட்டணம்

**Call : 077 405 7868 Service by post also Available**

**MASTER OF BLACK MAGIC** நேரில் வராமலும் காரியங்களை சாதித்துக்கொள்ளலாம்

சுவாமி ஜீ ஜெய ஸ்ரீ For Contact : 077 405 7868 / 076 409 4786

## வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்தில் **Draftman or QS (Quantity Surveyor)** வேலை வாய்ப்பு உண்டு.

தகைமைகள்

* **Draftman or QS** தொடர்பான ஏதாவது ஒரு கற்கை நெறியை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் வெற்றிகரமாக நிறைவு செய்திருக்க வேண்டும்.


* கணிய அளவீடுகளை துல்லியமாக அளந்து **Measurements Sheet** தயார் செய்யக்கூடிய அறிவும் பொறுமையும் **MS Excel** அறிவுடன் கூடியவராக இருத்தல் வேண்டும். கொடுப்பனவு மாதாந்தம் 30 000/= வழங்கப்படும்.

சுயவிவரக்கோவையை **076 824 5457** என்ற Viber இலக்கத்திற்கு அனுப்பவும்.

**Jathur Enterprise (Pvt) Ltd**
**Shanth Pharmacy 1st Floor**
**Kodikamam Junction, Kodikamam.**

## REACH THE TOP WITH CINEC CAMPUS

28 Years in Maritime Training



"Over 70 + placement tie-ups with leading Shipowners in the World"

Training and Employment for CINEC Cadets Provided by

PIL CMA CGM Seaspan THOME

### JOIN CINEC AS AN OFFICER CADET TO BECOME A;

**SHIP'S CAPTAIN**



0774 058 078 / 011 4 376167
telwattay@cinec.edu

**MARINE CHIEF ENGINEER**



0716 440 354 / 011 4 376165
minodi@cinec.edu

**MARINE ELECTRO TECHNICAL OFFICER**



0774 467 034
nadeera@cinec.edu

ENROLLMENTS NOW ON FOR JULY 2018 INTAKE

HANDS ON TRAINING

BRIDGE / ENGINE SIMULATOR
HIGH VOLTAGE SIMULATOR
SHIP IN CAMPUS
FIRE FIGHTING AND SURVIVAL

BANK LOAN FACILITIES

WILL BE PROVIDED AND ENABLE TO SETTLE THE COURSE FEE IN INSTALLMENTS

ENTRY REQUIREMENTS
- Age should be below 22 years and above 18 years
- 6 Passes at the GCE (O/L) Examination (Sri Lanka /London) including minimum of Credit pass for English AND
- 2 Simple passes at the GCE (A/L) Examination (Sri Lanka /London) in **Maths Stream** OR
- 2 Simple passes (secured a pass for Physics) at the GCE (A/L) Examination (Sri Lanka /London) in **Biology Stream** OR
- 2 Simple passes for Engineering Technology and Science for Technology in **Technology Stream**

ENTRY REQUIREMENTS
- Age below 23
- 6 Passes at the GCE (O/L) Examination (Sri Lanka /London) including minimum of Credit pass for English
- Secured a pass in Physics or Mathematics in GCE A/L Examination

Recruitment process will commence on pending London Advanced Level results

* Students those who do not possess passes for advanced level can apply for **Foundation Course.**
* The recruitment of cadets is done after a series of interviews, psychometric test, medical examination and a physical endurance test.

For more details log on to **www.cinec.edu**

+94(011) 241 3500 / 4486 400 info@cinec.edu www.facebook.com/cinec.edu

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் மிகவும் பிரபலமான Hotel ஒன்றுக்கு Income Auditor தேவை.

**தொடர்பு - 077 036 0555, 077 227 5240**

## காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் அமைந்துள்ள விவசாய பண்ணைக்கு அருகில் நில.பர 5 குளி 00.05 விஸ்தீரணமுடைய காணி கட்டடத்துடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **076 702 3565**

குறிப்பு: திருமணமண்டபம் மற்றும் வைத்தியசாலைகளுக்கு உகந்த இடம்

## வீடு வாடகைக்கு விடப்படும்

உரும்பிராய், கோப்பாய் பிரதான வீதிக்கு அருகில் மேல்மாடி வீடு வாடகைக்குண்டு. 5 அறைகள் கொண்டது NGO, Distributors, அலுவலகங்களாகவும் பயன்படுத்த முடியும்.

**தொடர்பு - 077 772 2870**

## ZOA INGO

ZOA RELIEF | HOPE | RECOVERY

ZOA INGO இனால் புத்தம் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட

### Hino Lorry விற்பனைக்கு

WPLJ 068 - X என்ற இலக்கமுடைய 2011 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட நல்ல நிலையில் இருக்கும் Hino வகை வாகனம் விற்பனைக்கு உண்டு. (30.07.2018 இற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்)

**தொடர்புகளுக்கு - 077 207 8383**

## சாட்சிகளின் மூலப்பிரதி இல்லாது வழக்கை நடத்தலாமா இல்லையா?

*சிறுப்பிட்டி இளைஞர்கள் கொலை வழக்கில் யாழ்ப்பாண நீதிவான்மன்று 26 இல் கட்டளை*

யாழ்ப்பாணம், ஜீலை 15
சிறுப்பிட்டியில் இளைஞர்கள் இருவர் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்ட வழக்கில், சாட்சிகளின் மூலப்பிரதி இல்லாதுவழக்கைநடத்தலாமா இல்லையா என்பது பற்றிய கட்டளை யாழ்ப்பாண நீதிவான் மன்றில் எதிர்வரும் 26 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் சிறுப்பிட்டியில் இளைஞர்கள் இருவர் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவத்தினரின் வழக்கு யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் சுருக்கமுறையற்ற விசாரணைக்காக நேற்று முன்தினம் வந்தது. சந்தேக நபர்களான 5இராணுவத்தினர்கள் சார்பிலும் சட்டத்தரணிகள் முற்பட்டனர்.

இராணுவத்தினருக்கு எதிரான சாட்சிகள் பொலிஸில் வழங்கிய வாக்குமூலங்களின் உண்மைப் பிரதிகள் இல்லை. அவற்றின் நிழல் பிரதிகளைத் தந்தால்தான் வழக்கை நடத்த முடியும் என்று இராணுவத்தினரின் சட்டத்தரணிகள் மன்றில் கோரினர். மூலப்பிரதி இல்லாவிட்டாலும் அதன் பிரதிகளைக் கொண்டு வழக்கை நடத்தமுடியும் என்று, சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் மன்றில் முற்பட்ட அரசசட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த்மன்றில்வாதிட்டார். இர தரப்பினரதும் வாதங்களைப் பரிசீலித்த நீதிமன்று, மூலப்பிரதி இல்லாது வழக்கை நடத்தலாமா இல்லையாஎன்பதுபற்றியகட்டளைக்காக26ஆம்திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தது.

**பின்னணி**

1997ஆம் ஆண்டு ஒக்ரோபர் 28ஆம் திகதி இளைஞர்கள் இருவர் கடத்தப்பட்டு கொல்லப்பட்டனர். கொலையுடன் தொடர்புபட்டனர் என்றுகுற்றஞ்சாட்டப்பட்ட16 இராணுவத்தினரை அச்சுவேலிப் பொலிஸார் கைது செய்திருந்தனர். எனினும் 1998 ஆம் ஆண்டு யாழ்ப்பாண நீதிவான் மன்றம் குறித்த நபர்களுக்குப் பிணை வழங்கியது. இதனைத்தொடர்ந்து கிடப்பில் போடப்பட்ட வழக்கு 2016 ஆம்சட்டமாஅதிபரால்விசாரணைக்கென மீள எடுக்கப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்ட 16 இராணுவத்தினரில் இருவர் போரில் உயிரிழந்துவிட்டனர். மிகுதி14இராணுவத்தினர்யாழ்ப்பாணம்நீதிவான் மன்றால்விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் அவர்களில் 9 பேரை வழக்கிலிருந்து விடுவிக்க சட்டமா அதிபர் அறிவுறுத்தல்வழங்கியதால்அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

ஏனைய 5 சந்தேகநபர்களும்விளக்கமறியலில்நீடிக்கப்பட்டுவந்தநிலையில்சில மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண மேல்நீதிமன்றால் பிணையில் விடு விக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## வடக்கில் திணைக்களங்கள் பறித்துள்ள
# வாழ்வாதாரக் காணிகள் மீளப் பெற்றுத் தரப்படும்
## பிரதி அமைச்சர் மஸ்தான் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஜுலை 15**
**வடக்கில் திணைக்களங்களால் அபகரிக்கப்பட்டுள்ள மக்களுடைய வாழ்வாதாரக் காணிகளை உரியவர்களுடன்பேசிப்பெற்றுக்கொடுப்பதற்குஇயன்றளவு முயற்சிகளை மேற்கொள்வேன். எமது மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு என்று வடக்கு அபிவிருத்திப் பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.**

வடக்கு மாகாணத்தில் திணைக்களங்கள், மற்றும் இராணுவத்தால் அபகரிக்கப்பட்டுள்ளகாணிகள்தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவத்தால்அபகரிக்கப்பட்டுள்ள மக்களுடைய காணிகள் தொடர்பிலான விவரத்தைக் கேட்டுப் பெற்றுள்ளேன். அந்தக் காணிகளைக் காலப்போக்கில் விடுவிப்பதற்குத் துறை சார்ந்தஅமைச்சுடன்பேசியுள்ளேன். அவைவிடுவிக்கப்படும்என்றேநம்புகிறேன். வடக்கில் மட்டுமல்ல சிங்களப் பகுதிகளிலும் திணைக்களங்கள் மக்களுடைய காணிகளைக் கையகப்படுத்தியுள்ளன். அநுராதபுரத்திலும்அவ்வாறான ஒருசம்பவம்இடம் பெற்றுள்ளது. இதுசிக்கலுக்குரியஒரு பிரச்சினை. எனினும் நான் பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டதற்கு முன்னரே இந்த விடயங்கள் தொடர்பில்ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டங்களில் பேசியிருக்கிறேன். தற்போது பிரதி அமைச்சர் என்ற வகையில் இந்த விடயத்தை மேலும் கதைக்க முடியும். பரவலாக இடம்பெறும் காணி அபகரிப்புத் தொடர்பில் உரிய திணைக்களங்களுடன்பேசிமக்களுடைய தேவைகள் கருதி காணிகளை அடையாளப்படுத்தி பிரச்சினைகள் இருப்பின்உயர்மட்டங்களுடன்பேசி அதற்கானநடவடிக்கைகளைஎடுக்க முடியும். இது எங்களுடைய மக்களுடைய பிரச்சினை.

எனவே மக்களுக்காக இவற்றைஉரியவர்களிடம் பேசி இயன்றளவு மக்களுடையவாழ்வாதாரக் காணிகளை அடையாளப்படுத்தி அவற்றை மக்களுக்கே பெற்றுக்கொடுக்க முயற்சிப்பேன் - என்றார்.

வடக்கு மாகாணத்தில் வனவளத்திணைக்களம்,வனஜீவராசிகள்திணைக்களம், தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களம் போன்றன மக்களுடைய காணிகளை அபகரித்து எல்லையிட்டுள்ளன. மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா என்றவாறுதிணைக்களங்களுடைய ஆக்கிரமிப்பு வள்ர்ந்துகொண்டே செல்கிறது. பெருமளவான ஏக்கர் காணிகளை அவர்கள் கையகப்படுத்தியுள்ளனர்.

அண்மையில் ம்ல்லைத்தீவில் நாயாற்றுப்பிரதேசம்,கிளிநொச்சியில் ஜெயபுரம்போன்றனஅவர்களுடைய ஆதிக்கத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

படைத்தரப்பைத்தொடர்ந்துதிணைக்களங்களும் மக்களுடைய காணிகளை அபகரிப்பது தமிழின இருப்பைக் கேள்விக்குள்ளாக்குகிறது என்றுபலரும்கருத்துத்தெரிவித்துள்ளனர். (4,21)

## கதிர்காமப் பெருந் திருவிழா நேற்றுமுன்தினம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜீலை 15
வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமக் கந்தனின் ஆடிப் பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் பஷ்நாயக்க நிலமே தலைமையில் ஆரம்பமானது. நாட்டின் பலபாகங்களில் இருந்தும் பெருந்திரளான பக்தர்கள் கதிர்காமக் கந்தனை வழிபடவருவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்த்திருவிழா எதிர்வரும் 27ஆம் திகதி இடம்பெறவுள்ளது. மறுநாள் 28ஆம்திகதிதீர்த்த உற்சவத்துடன் பெருந்திருவிழா நிறைவுபெறவுள்ளது. பதுளை, பண்டாரவளை, நுவரெலியா, வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து பாதயாத்திரையாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட அடியார்கள் கதிர்காமத்தை வந்தடைந்துள்ளனர் என்று அங்கிருந்து தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கதிர்காமத்துக்கு வருகை தந்திருக்கின்ற அடியார்களுக்கான சிறப்புப் போக்குவரத்து வசதி, குடி தண்ணீர் வசதி, மருத்துவ வசதி, என்பன ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. கதிர்காமத்துக்குச் சென்ற பக்த அடியார்கள் மாணிக்க கங்கையில்நீராடும்பொழுதுமிகஅவதானமாகநீராடுமாறும், ஆழமான பகுதிகளுக்குச் சென்று நீராடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் கதிர்காமம் பொலிஸார் கோரியுள்ளனர். அன்னதானம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)



## 87 பாலங்களின் வேலைகள் முழுமை: அவை பயன்பாட்டுக்கு வருகின்றன
### வீதி அபிவிருத்தித் திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜீலை 15
வடக்கு மாகாணத்தில் கொழும்பு உள்ளூராட்சி அமைச்சின் திட்டத்தின் கீழ் கிராமங்களில் அமைக்கப்பட்ட 85 பாலங்களின் அமைப்பு வேலைகள் நிறைவ டைந்துள்ளன. அவை பயன்பாட்டுக்கு விடப்பட்டு வருகின்றன என்று மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் எஸ். சிவனேசன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது: வடக்கு மாகாணத்தில் கிராமங்களில் காணப்படும் பாலங்களைச் சீரமைத்தல் மற்றும் அமைக்கும் பணிகளை கொழும்பு உள்ளூராட்சிஅமைச்சு2015ஆம்ஆண்டு ஆரம்பித்தது.

பாலத்தின் நீளத்துக்கு ஏற்ப ஒவ்வொரு பாலத்துக்கும் 30 தொடக்கம் 40 மில்லியன் ரூபா வரையில் நிதி ஒதுக்கப்பட்டது. வடக்கு மாகாணத்தில் 87 பாலங்களை அமைக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் 4, கிளிநொச்சியில் 33, முல்லைத்தீவில்15, வவுனியாவில்18, மன்னாரில் 17 என 87 பாலங்களுக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது 85பாலங்கள் அமைக்கப்பட்டுவேலைகள் நிறைவடைந்துள்ளன. வேலைகள் நிறைவு செய்யப்பட்ட பாலங்கள் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டு வருகின்றன - என்றார்.

இதுதவிர, வடக்கு மாகாணத்தில் 8 பாலங்கள் அமைக்கும் பணிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கவனிப்பில் உள்ள வீதிகளில் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. 3 ஆயிரத்து 800 மில்லியன் ரூபா செலவில்20மாதங்கள்காலஅவகாசத்தில் இவை அமைக்கப்படுகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் 2 பாலங்கள், வவுனியாமற்றும்கிளிநொச்சிமாவட்டங்களில் தலா ஒரு பாலம், மன்னார்மாவட்டத்தில் 4 பாலங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று திணைக்களத்தின் தகவல்கள் தெரிவித்தன. (4,7)

## ரூ.45,000 பெறுமதியானபசுவாகனவிபத்தில் இறந்தது

கொடிகாமம், ஜீலை 15
வாகனம்மோதியதால்45ஆயிரம்ரூபாபெறுமதியான பசு உயிரிழந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம் பிரதேச சபைக்கு முன்பாக நேற்றுமுன்தினம்அதிகாலைவாகனம்மோதியது. உரிமையாளர்கள் கால்நடைகளைக் கட்டி வளர்க்காதகாரணத்தால்ஏ9வீதியிலும், தொடருந்துப்பாதைகளிலும்கால்நடைகள் அநாதரவாகத் திரிகின்றன. சாரதிகள் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். முன்னரும் கால்நடைகள் இவ்வாறு உயிரிழந்துள்ளன. இதனால் கால்நடை உரிமையாளர்கள் பல்லாயிரம் ரூபா பெறுமதியான சொத்துகளை இழக்கின்றனர்.

கால்நடைஉரிமையாளர்கள்தமதுகால்நடைகளை கட்டிவளர்க்கவேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றனர்.

அந்தப்பசுபிரதேசசபை ஊழியர்களால் அகற்றப்பட்டது. (4,159)

## தரம் 5 மாணவருக்கு திங்களும் வெள்ளியும் மாதிரிப் பரீட்சை

கொடிகாமம், ஜீலை 15
தென்மராட்சிக் கல்வி வலய பாடசாலைகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்குத்தேசியசேமிப்புவங்கியின் அனுசரணையுடனான மாதிரிப் பரீட்சை நாளை திங்கட்கிழமை மதியம் 12 மணிக்கு அந்தந்தப் பாடசாலைகளில் நடைபெறும்.

இதேவேளைதரம்5மாணவர்களுக்கான மாகாண மட்ட மாதிரிப் பரீட்சை- 7 எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பாடசாலைகளில் நடைபெறும் எனவும் இந்த பரீட்சைக்கான வினாத்தாள்களை அன்றைய தினம் காலை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பரீட்சை நடத்தி முடித்து விடைத்தாள்களை மாலை 4 மணிக்கு முன்னர் வலயக்கல்வி பணியகத்தின் ஆரம்பக் கல்விப் பிரிவில் ஒப்படைக்குமாறுவலயக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் அறிவித்துள்ளார். (4,159)

# பட்டிவலைத் தொழிலில் கம்பிகளுக்கு இனித் தடை

## கடற்றொழில் திணைக்களம் நீதிமன்றில் அனுமதிகோரி மனு

**மன்னார், ஜூலை 15**

**கடலில் வழமைக்கு மாறாக - தடிகளுக்குப் பதிலாகக் கம்பிகளைப் பயன்படுத்தி வலைகளைக் கட்டி இடம்பெறும் பட்டிவலை மீன்பிடித் தொழிலை நிறுத்துவதற்கு நீதிமன்றிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. மன்னார் கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களம் மன்னார் நீதிவான் மன்றில் இந்த அனுமதியைக் கோரியுள்ளது.**

மாவட்டத்தில் மீனவசமூகத்திடம் நீடித்துவரும் முறுகல் நிலையைத் தவிர்க்கும்முகமாக இந்தஅனுமதியைவழங்குமாறு காரணம் கூறப்பட்டுள்ளது.

மாவட்டத்தில்பாப்பாமோட்டைதொடக்கம் பேசாலை வரையிலான வடகடல் பகுதியில் சுமார் இருநூறு மீனவர்கள் பட்டிவலை மூலமாகத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

ஒவ்வொருமீனவரும்நான்கு அல்லது ஐந்து பட்டிவலைகளைக் கடலில் கம்புக்குப் (தடி) பதிலாக இரும்புக் கம்பிகளை கடலில் நட்டுவிடுவர். அதனால் சிறுமீன்பிடியாளர்கள்பெரும்பாதிப்புக்குள்ளாகிவருகின்றனர். இந்தப்பாதிப்பு நீடித்துக்கொண்டிருப்பதால்குறிப்பிட்ட இரண்டுவகைமீன்பிடியாளர்களுக்கும் இடையில் தொடர்ச்சியாக முறுகல் இடம்பெற்று வருகிறது என்று தடைக்கான அனுமதி கோரலில் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, பட்டிவலையால் ஏற்படும் சிறு பிரச்சினைகளை மன்னார்கடற்றொழில்நீரியல்வளத்துறைத் திணைக்களத்திடம் பலதடவைகள் முறைப்பாடு செய்தும் திணைக்களம் அக்கறை செலுத்துவதில்லை என்றும் தமக்கு(திணைக்களத்துக்கு) எதிராக மன்னார் மூன்றாம்பிட்டி மீனவ சமூகம் குற்றஞ்சாட்டி மனித உரிமை ஆணைக்குழுவிடம்முறைப்பாடுசெய்துள்ளது. தமது கோரிக்கையை ஏற்று நீதிமன்றுகம்பிகளைப்பயன்படுத்துவதற்குத்தடைவிதிக்கவேண்டும்என்று திணைக்களத்தினர் கோரியுள்ளனர்.

இது பற்றிய கோரிக்கைமனுநீதிவான் ரி. ஜே. பிரபாகரன் முன்னிலையில் இந்த விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இரு தரப்பினர் சார்பிலும் வாதங்கள் முன்வைக்கப்பட்டன.

"பட்டிவலைத் தொழிலை அகற்றுவதால் பல மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரம்பாதிப்படையும்அபாயம்உள்ளது. தற்பொழுது காடுகளில் கம்புகள் வெட்டமுடியாதநிலைஇருப்பதாலேயே இரும்புக் கம்பிகளைக் கொண்டு இந்தத் தொழிலை இங்குள்ள மீனவர்கள் கையாளுகின்றனர்" என்று தடைக்கு எதிர்ப்புத்தெரிவிக்கும்மீனவர்கள்சார்பிலான சட்டத்தரணிகள் வாதிட்டனர்.

"இந்தத்தொழிலால்சிறுமீன்பிடியாளர்களின் வலைகள் நாசமாக்கப்படுகின்றன. கடலில் நடப்படும் கம்பிகளில் வலைகள் சிக்குண்டு பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றன" என்று தடைக்கு ஆதரவான மீனவர்கள் சார்பான சட்டத்தரணிகளும், திணைக்களத்தினரும்வாதங்களைமுன்வைத்தனர். இருதரப்பினரதும்வாதங்களைக் கேட்டறிந்ததன் பின்னர், இது சம்பந்தமான விரிவான அறிக்கை ஒன்றை மன்றில் சமர்ப்பிக்குமாறு மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளருக்கு மன்று பணித்தது. மனு மீதான தொடர் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. (4,60)

## தேங்காய் பிடுங்குபவர் திருடினார் என்று கைது

### பணம், நகைகள் மீட்பு

வவுனியா, ஜூலை15

வீடுகளுக்குச் சென்று தேங்காய் பிடுங்கிக் கொடுப்பதைத் தொழிலாகச் செய்துவந்த குடும்பத்தலைவர் திருட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். வீடு புகுந்துதிருடப்பட்டவைஎன்று கூறப்படும்நகைகள், பணம், அலைபேசி என்பன அவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா கற்குழி பகுதியில் சில வாரங்களுக்கு முன்னர் வீட்டுக் கதவை உடைத்து நகைகள், பணம், அலைபேசி என்பன திருடப்பட்டன. அங்குள்ள கோவில் திருவிழாவுக்கு அவர்கள் சென்றிருந்தபோது திருட்டு இடம்பெற்றுள்ளது.

வீட்டின் உரிமையாளர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். விசாரணை நடத்திய வவுனியா குற்றத்தடுப்புப்பிரிவுப்பொலிஸார் யாழ்ப்பாண மாவட்ட மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடையவரைக் கைது செய்தனர். அவர் ஒரு பிள்ளையின் தந்தை.

அவர் வீடுகளுக்குச்சென்று தேங்காய் பிடுங்கிக் கொடுக்கும் வகையில் வீட்டில் உள்ள பொருள்களைப் பார்வையிடுவார் என்றும் பிறிதொரு நாளில் அவற்றைத்திருடிவிடுவார்என்றும்விசாரணையில் தெரியவந்ததாகப்பொலிஸார் கூறுகின்றனர். அவர் ஏற்கனவேதிருட்டில்ஈடுபடுபவர்என்றும், போதைப் பொருள், குற்றச்சாட்டுகளில் பலதடவை கைதுசெய்யப்பட்டுசிறையில் இருந்தவர் என்றும்விசாரணைகளில்தெரியவந்ததாகப்பொலிஸார்தெரிவித்தனர். அவர் வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார்மேலும்தெரிவித்தனர். (4,21)



## பார்த்தீனியத்தை அடியோடு ஒழிக்க மீண்டும் வடக்கு அமைச்சு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை15

விவசாயச் செய்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் பார்த்தீனியச் செடிகளை அடியோடு அழிக்கும் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. பார்த்தீனியச் செடிகள்காணப்படும்இடங்களின்உரிமையாளர்கள்மீது விவசாயத் திணைக்களத்தினர் சட்ட நடவடிக்கைகளை உரிய முறையில் எடுக்கவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுடனான கலந்துரையாடல்நடத்தி அவர்களது ஒத்துழைப்புடன்சட்டநடவடிக்கைஎடுக்கப்படும் என்று வடக்கு விவசாய அமைச்சர் க. சிவநேசன் தெரிவித்தார்.

பார்த்தீனியச் செடிகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் அமைச்சருடன் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் மேலும் தெரிவித்தாவது;

பார்த்தீனியம் கட்டுப்பாட்டுக்குள் இல்லை. பரவலடைந்து கொண்டே செல்கிறது. அதனைத் தடுக்க விவசாய அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பார்த்தீனிய ஒழிப்புக்கு என்று பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் களப் பயணம் மேற்கொண்டுபார்த்தீனியம்உள்ளபிரதேசத்துக்கு உரித்துடையவர்கள் எவராக இருந்தாலும் சட்ட நடவடிக்கையை மேற்கொள்வார்கள். உரித்துடையவர்கள் திணைக்களங்கள், பொது இடங்கள் என்ற வேறுபாடு இதில் இருக்காது.

இவற்றுக்கு முன்னர் விவசாயத் திணைக்களத்தினருக்கும் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்குமிடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. பொலிஸாரின் ஒத்துழைப்புடனேயே இந்த நடவடிக்கையை முன்னெடுக்க முடியும் என்பதால் அந்தக் கலந்துரையாடலின் பின்னர் சட்ட நடவடிக்கை கண்டிப்பாக எடுக்கப்பட்டுப் பார்த்தீனியம் ஒழிக்கப்படும் - என்றார்.

வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டபோது விவசாய அமைச்சராக இருந்த ஐங்கரநேசன் கொண்டுவந்த திட்டங்களில் ஒன்று பார்த்தீனிய ஒழிப்பு. அந்தத் திட்டத்தை அவர் நடைமுறைப்படுத்தியிருந்தார். அதற்கெனக் குழுக்களும் அமைக்கப்பட்டிருந்தது. பார்த்தீனியம் ஆமை வேகத்தில்கட்டுப்படுத்தப்பட்டது. ஐங்கரநேசன் வடக்குவிவசாய அமைச்சுப்பதவியில் இருந்து விலக்கப்பட்டதும் சிவனேசன் அந்த அமைச்சைப் பொறுப்பேற்றார். அவரும்பார்த்தீனியத்தைஒழிப்பதில்அக்கறை கொண்டார். முல்லைத்தீவில் விவசாய அமைப்புகளுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. பார்த்தீனியத்தைஒழிக்கத் தவறியவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும்அதுதொடர்பில்நடவடிக்கை எடுப்பதாக தெரியவில்லை.

"மாகாணசபையின் ஆயுட்காலம் முற்றுப்பெறும் நிலையில் உள்ளது. தற்போதுகூட பார்த்தீனியம்ஓரளவேனும்கட்டுப்படுத்தப்படவில்லை. இந்திய இராவணுத்தின் வருகையுடன் இலங்கையில் பார்த்தீனியம் பரவ ஆரம்பித்தது. இன்று அது வீரியமாக வளர்ந்துபயிர்களுக்குப்பாதிப்பைஏற்படுத்துகின்றது என்று தெரிவிக்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் அக்கறையுடன் செயற்பட்டாலும், பார்த்தீனியம்வேறுஇடங்களில் பரவலடைந்தேஉள்ளன. எனவேஅமைச்சு, திணைக்களம் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4,21)

## சிறுத்தைகளின் ஆட்டம் ஜெயபுரத்திலும் ஆரம்பம்

### இரையாகின இரண்டு ஆடுகள்

கிளிநொச்சி, ஜூலை15

கிளிநொச்சி, ஜெயபுரம்பகுதியில்சிறுத்தைப் புலிக ளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். அண்மையில் கிராமத்துக்குள் நுழைந்த சிறுத்தைகள்மேய்ச்சலுக்காகக்கட்டியிருந்த இரண்டு ஆடுகளை வேட்டையாடிச் சென்றுள்ளனஎன்றும் அவர்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சிப் பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்டகிராமமேஜெயபுரம், அந்தக் கிராமத்திலேயே சிறுத்தைகளின் நடமாட்டம் தற்போது அவதானிக்கப்பட்டுள்ளது. வீதிதிருத்தப்பணிகளில்ஈடுபட்டுள்ளவர்கள் வேலை முடிந்து செல்லும்போது சிறுத்தைகள்வீதியின் குறுக்காகச்செல்வதைஅவதானித்துள்ளனர். பன்றிவெட்டிக் குளத்துக்கு அண்மையில் கட்டப்பட்ட பாலத்தில் பசு ஒன்றைத் துரத்திச்சென்ற சிறுத்தை பேருந்து வருவதைக்கண்டுபசுவைவேட்டையாடாது தப்பித்துச் சென்றதைப் பேருந்தின் சாரதி அவதானித்துள்ளார்.



> ❝ ஜெயபுரம் முருகன் ஆலயத்துக்கு அருகில் மேச்சலுக்காகக் கட்டப்பட்டிருந்த இரண்டு ஆடுகளை சிறுத்தைகள் வேட்டையாடியுள்ளன. மக்கள் மத்தியில் சிறுத்தைகள் தொடர்பில் தற்போது அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சில நாள்களுக்கு முன்னர் ஜெயபுரம் முருகன் ஆலயத்துக்கு அருகில் மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்டிருந்த இரண்டு ஆடுகளை சிறுத்தைகள் வேட்டையாடியுள்ளன. மக்கள் மத்தியில் சிறுத்தைகள் தொடர்பில் தற்போது அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் ஜெயபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் பால்ராஜிடம் தொடர்புகொண்டுகேட்டபோது, "சிறுத்தைகள்நடமாடுகின்றனஎன்றுபலர்கூறியுள்ளனர். இது தொடர்பில் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. வனஜீவராசிகள் திணைக்களத்துக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்குவந்தவனஜீவராசிகள்திணைக்களத்தினர் கரையோரங்களில் உள்ள மக்களுக்குச் சிறுத்தையை விரட்டும் வெடி பொருள்களை வழங்கியுள்ளனர். சிறுத்தையை அவதானித்தால் உடனடியாகத் தகவல் வழங்குமாறு பொலிஸாரும், வன ஜீவராசிகள் திணைக்களத்தினரும் தெரிவித்துள்ளனர்" என்றுபால்ராஜ்தெரிவித்தார்.

சில வாரங்களுக்கு முன்னர் கிளிநொச்சி, அம்பாள்குளம் பகுதிக்குள் நுழைந்த சிறுத்தை அந்தக் கிராமத்தைச் சேர்ந்த 10க்கும் மேற்பட்டவர்களைத் தாக்கியது என்று தெரிவிக்கப்பட்டது. பின்னர் அந்தச் சிறுத்தை அங்குள்ளவர்களால் அடித்துக் கொல்லப்பட்டது. இந்தச் சம்பவத்தில் பலர் கைதாகிமறியலில்வைக்கப்பட்டுப்பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (21)


CAPITAL MAHARAJA
3 மில்லியனுக்கும் அதிக பெறுமதியான பரிசுகளை வென்றிடுங்கள்.
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது
சுரண்டுங்கள் வெல்லுங்கள்
ஒவ்வொரு மாதமும் 50 வெற்றியாளர்கள்
ஒரிஜினல் PE+ ஹாட்வெயார் உற்பத்திகளை உறுதிசெய்திடுங்கள்
PE+
Dio ஸ்கூட்டர்
ரைஸ் குக்கர்
பவர் டூல்
ரூ.5000 பெறுமதியான பரிசு வவுச்சர்கள்
PE+ கட்டிங் டிஸ்க், டயமண்ட் டிஸ்க் போன்றவற்றை கொள்வனவு செய்திடும் போது சுரண்டும் பகுதியில் உள்ள இலக்கத்தை கையடக்கத் தொலைபேசியிலிருந்து 4556ற்கு இலவசமாக SMS செய்து ஒரிஜினல் PE+ என்பதினை உறுதி செய்திடுங்கள். பரிசில்களை வென்றிடுங்கள்.
அதிகதிகமாக ஒரிஜினல் PE+ ஹாட்வெயார் உற்பத்திகளை கொள்வனவு செய்திடும் உங்களுக்கு ஸ்கூட்டர், ரைஸ் குக்கர், பவர் டூல் மற்றும் பரிசு வவுச்சர்களை வெல்வதற்கானதோர் அரிய வாய்ப்பு.
ஒரிஜினல் PE+ கட்டிங் டிஸ்க், PE+ கிரைன்டிங் டிஸ்க் மட்டுமே வாங்கிடுங்கள். அதன் உத்தரவாதம், நம்பிக்கை, பாதுகாப்பு மற்றும் நீண்ட கால நிலைப்பதோடு தரத்திலும் உயர்வானது.
இப் போட்டி 2018 ஜுன் மாதம் 01 முதல் நவம்பர் 30 வரை செல்லுபடியாகும்.
airtel
Dialog
Telecom
WP/GT/5048
PE+ விசேடத்துவத்தின் பிணைப்பு
பிசு பிளஸ் (பிறைவேட்) லிமிட்டெட் 32, மினுவாங்கொட- ரோட், ஏக்கல, ஜாஎல. தொ.பே : (011) 7 866 800-1 தொலைநகல் : (011) 7 866 810 மின்னஞ்சல் : sales@peplus.maharaja.lk இணையம் : www.peplus.lk


மின்சார பில்லை பார்த்ததும் தலை சுற்றுகிறதா?
மின்சார சேமிப்புப் புரட்சி
LG இன்வெர்டர் லீனியர் கொம்பிரெஸர் குளிர்சாதனப் பெட்டிகள் அல்லாதவைகளில் மின்சாரம் அதிகமாக செலவாகிறது என்பதனை
நீங்கள் அறிவீர்களா?
LG Life's Good
கொம்பிரெஸர் குளிர்சாதனப் பெட்டியின் இருதயமாகும். அதனால் மின்சாரத்தை அதிகமாக சேமிப்பது கேஸ் அல்ல, கொம்பிரெஸராகும்.
சாதாரண இன்வெர்டர் கொம்பிரெஸர்
மோதும் இடங்கள் – 4
VS
இன்வெர்டர் லீனியர் கொம்பிரெஸர்
மோதும் இடங்கள் – 1
வேறு குளிர்சாதனப் பெட்டிகளில் இருக்கும் சாதாரண இன்வெர்டர் கொம்பிரெஸர்கள் இயங்கும் போது 4 இடங்களில் மோதுவதால் மின்சாரம் அதிகமாக செலவாகிறது.
LG குளிர்சாதனப் பெட்டிகளில் இருக்கும் லீனியர் இன்வெர்டர் கொம்பிரெஸர்கள் ஒரு இடத்தில் மட்டும் மோதி சிறப்பாக செயல்படுவதால் குறைந்த அளவு மின்சாரமே செலவாகின்றது.
INVERTER LINEAR COMPRESSOR 10 YEAR WARRANTY
இரட்டைக்கதவு குளிர்சாதனப் பெட்டியின் ஆரம்ப விலை ரு.67,900
முந்துங்கள்! இன்றே அபான்ஸ் வழங்கும் LG இன்வெர்டர் லீனியர் குளிர்சாதனப் பெட்டிக்கு மாறுங்கள் - தேசிய மின்சார சேமிப்புத் திட்டத்துடன் இணைந்திடுங்கள்!
011 5 999 000
Abans.com
us at www.facebook.com/abans
நாடளாவிய அபான்ஸ், அபான்ஸ் எலைட் மற்றும் ஏக முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.
Abans

# நிர்வாகம் இன்றிய காடழிப்பே யானைகள் அட்டகாசத்துக்கு காரணம்

## சொல்கிறார் சரத் பொன்சேகா



கொழும்பு, ஜூலை 15

யானைகளால் பொது மக்களுக்குப் பாதிப்பு ஏற்பட பிரதான காரணியாக அமைவது உரிய நிர்வாகம் இன்றிக் காடுகள் அழிக்கப்படுவதுதான். இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

வனஜீவராசிகளின் பாதுகாப்பு தரப்பினருக்காகக் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,

உயர்தரத்திலான வேலிகளை அமைப்பதே, யானைகளால் பொதுமக்களுக்குஏற்படும் பாதிப்புக்களைத் தடுப்பதற்கு ஒரே தீர்வாக அமையும்.

யானைகளுக்கான வேலிகளுக்குப் பொறுப்பாகச் செயல்படும் பணியைக் கிராம மக்களுக்கு வழங்குவது தோல்வி கண்ட வேலைத்திட்டமாகும்

இதனால் யானைகளுக்கான வேலிகளைப் பாதுகாப்பதற்காக சுமார் 700 பேர் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

வனவிலங்குகள் முகாமைத்துவத்திற்காகப் புதிய சட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்றார்.

அபிவிருத்தித்திட்டங்கள் திட்டமிட்ட வகையில் முன்னெடுப்பதையும் அமைச்சர் இதன்போது, சுட்டிக் காட்டினார். (ரி2)







# சாவுத் தண்டனை விவகாரம் ஆளும் கட்சிக்குள் முரண்பாடு

கொழும்பு, ஜூலை 15

சாவுத் தண்டனை விதிப்பது தொடர்பில் ஆளும் கட்சியினருக்கு இடையில் முரண்பாட்டு நிலைமைஉருவாகியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனசாவுத்தண்டனையை மீளவும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்றுதீர்மானித்துள்ளார்.

அரச் தலைவரின் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாகவும், எதிராகவும் அரசின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், சாவுத் தண்டனை விதிப்பது தொடர்பில் அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் சாவுத்தண்டனைநிறைவேற்றம்தொடர்பில் சில முக்கிய அமைச்சர்கள் தமது எதிர்ப்பைப் பகிரங்கமாகவே வெளியிட்டுள்ளனர்.

இதனால்சாவுத்தண்டனையை நடைமுறைப்படுத்துவதுதொடர்பில்தற்போதுஆளும்கட்சிக்குள் கருத்து முரண்பாடுகள் நிலவி வருவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளைசாவுத்தண்டனை நடைமுறை தொடர்பில் பன்னாட்டு ரீதியிலும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

# துப்பாக்கிச்சூட்டில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 15

மொனராகலைப் பகுதியில், இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில்இருவர்கொல்லப்பட்டுள்ளனர்.

மொனராகலை மாவட்டத்தின் இருவேறு இடங்களில் நேற்று முன்தினம்இரவுஇந்தத்துப்பாக்கிச்சூட்டுச்சம்பவங்கள்இடம்பெற்றுள்ளன.

ஊவா குடாஓய பிரதேசத்தில் மூவருக்கு இடையில் மோதல் ஏற்பட்டது இதன்போது துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார்.

52வயதானநபரொருவரேசாவடைந்ததாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில், சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கொவிதுபுர உனானயாப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில்இன்னுமொருவர்உயிரிழந்தார். 38 வயது மதிக்கத்தக்க ஒருவரே சம்பவத்தில் கொல்லப்பட்டார். துப்பாக்கிச்சூடு நடத்திய சந்தேகநபர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ரி2)













காரைநகர்

## கிழவன்காடு கலாமன்றம்

### அறநெறிப் பாடசாலை

நடத்தும்

### மாணிக்கவாசகர் குருபூசை விழா

**இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.**

**காலம் : 16.07.2018 திங்கட்கிழமை பி.ப 5.30 மணி**

மூதறிஞர் கலாநிதி

**வைத்தீசுவரக்குருக்கள் அரங்கு**

**நிகழ்ச்சிகள்**

★ கலாமன்ற அறநெறித்துறையினர் வழங்கும் "அர்ப்பண நிகழ்வு"

★ சொற்பொழிவு: **"கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே"** வழங்குபவர் **செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன்** அவர்கள்

★ ஈழத்தின் பிரபல பண்ணிசைக் கலைஞர்கள் இணைந்து வழங்கும் **"திருவாசகத் தேனிசை"**

★சிறப்புப் பட்டிமண்டபம்

**இன்றைய வாழ்வியல் முறைமை சமூகத்தை**

| **சீர்ப்படுத்துகின்றது!** | **சீரழிக்கின்றது!** |
|---|---|
| திரு. வே. சிவராஜா (சமூகசேவை உத்தியோகத்தர்) | திரு. சி. சசீவன் (உ. தவி முகாமையாளர், மக்கள் வங்கி, பருத்தித்துறை) |
| திரு. ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ (சட்டத்துறை மாணவன், யாழ் பல்கலைக்கழகம்) | திரு. சி.சிவாம்சன் (விஞ்ஞானப் பட்டதாரி) |
| திரு. த. கருணாகரன் (சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்) | திரு. க.அருண்பிரசாந் (காணிய நில அளவையாளர்) |

நடுவர்: **காரை தமிழுருவி த. சிவகுமாரன்** அவர்கள்

★ நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.**

(IN 7282)(10)

## கல்யாண மண்டபம்

விளையாட்டு அரங்கு வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாயில் அமைந்திருக்கும் A/C உட்பட சகல வசதிகளுடனும் காணப்படும் கல்யாண மண்டபம் வாடகைக்கு விடப்படும். காரியாலயமாகவோ, நிறுவனமாகவோ விரும்பினால் பயன்படுத்தலாம்.

தொடர்பு: **076 2025 471**

## வேலைவாய்ப்பு

**வவுனியாவில் இயங்கும்**

### சின்பொன் வெதுப்பகம்

**உற்பத்தி நிறுவனத்திற்கு**

**பின்வரும் வெற்றிடங்களுக்கு ஆள்கள் தேவை**

- CAKE ICING உற்பத்தி பிரிவு (பெண்) (அனுபவம் உள்ளவர்களும் / அனுபவம் அற்றவர்களும் விண்ணப்பிக்கமுடியும்)
- கிளை முகாமையாளர் (1 வருட அனுபவம்)
- உதவி கிளை விற்பனையாளர்கள்

உணவு, தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். விண்ணப்பப்படிவங்களை பின்வரும் முகவரி அல்லது தொலைபேசி இலக்கங்களோடு தொடர்புகொள்ளவும்.

(in 7258) (3.17)

**சின் பொன்**

**கைத்தொழில் பேட்டை, பூந்தோட்டம், வவுனியா.**

**076 541 5253**

## Vacancy

**for Accountancy Trainee for a office in Jaffna and Kilinochchi**

**Requirment**

Those who are sat for Commerce stream and students of AAT, CA Sri Lanka, HNDA Accounting package knowledge will be added qualification.

Apply:

ASMC (PVT) LTD
245, Kasthuriyar Road,
Jaffna.
E-mail- asmctax@gmail.com
T.P: 071 261 5806

(C/31979)(10)

## ஜெயக்குமார் திருமணசேவை

1986 வெளிநாட்டு பெண் கேட்டை, பாவம் 70 படித்த மணமகன் தேவை

1994 வெளிநாட்டு பெண் ஆயிலியம், பல்கலைகழகம் படித்த மணமகன் தேவை

1984 வெளிநாட்டுப் பெண், திருவோணம் படித்த மணமகன் தேவை

1984 பட்டதாரி வெளிநாட்டு கிறிஸ்றியன் பெண், படித்த பட்டதாரி மணமகன் தேவை.

இலங்கையில் படித்த மணமகன், மணமகள் தேவை

077 535 3289, 075 568 5766, 076 178 7848

வைபர் - 009 476 725 0144

(es.13061) (13.17)

## அறை வாடகைக்கு

பல்கலைக் கழகத்திற்கு அருகில் பிறவுண் வீதியில் வீட்டுடன் கூடிய அறைகள் பெண்களுக்கு வாடகைக்கு கொடுக்கப்படும்.

(பல்கலைக்கழக மாணவிகள் விரும்பத்தக்கது)

**077 633 3000 / 077 429 1246**




SRI LANKA INSTITUTE OF TOURISM & HOTEL MANAGEMENT

MINISTRY OF TOURISM DEVELOPMENT & CHRISTIAN RELIGIOUS AFFAIRS

The premier institute in the country providing education for the development of human resource for Tourism and Hospitality Industries



## Provincial campus in Jaffna

Applications are invited for Hotel Craft Level Courses Commencing in July 2018

**Craft Level (Duration - 03 months - Full Time)**

| Courses | Course Fee |
|---|---|
| Cookery | Rs.3500.00 |
| Restaurant & Bar Service | Rs.3000.00 |
| Hotel Reception | Rs.3000.00 |
| Hotel Housekeeping | Rs.3000.00 |

**Entry Requirements : Studied up to Grade 8, Age : Above 17 years**

Registration: Rs.500/-

- Scholarship for low income students
- Female Students are encouraged to apply

Submit your application form indicating the course which you are applying for on the top left - hand corner of the envelope to below address on or before **24th July 2018.**

**Application can be downloaded from the web site**

Registrar,
SLITHM, Galle Road, Colombo 03

Web site : http://slithm.edu.lk
General inquiry : 0112 382201

# உடல் எடை குறைய வேண்டுமா?

- எடை கூடுகிறதா?
- ஊளைச் சதையா?
- உடல் எடை கூடி பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா?
- வயிற்று கோளாறா?
- வயிறு.மார்பு குறைக்க வேண்டுமா.
- உடல் எடை குறைகிறதேயில்லை என்ற கவலையா?

100% பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம்
(பால்மா. குளிசை. கிறீம்) 2 வாரங்களில் அற்புதமான மாற்றத்தை உணர்வீர்கள்.

**(விலை - 3500, 5500, 9000)**

# தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

- தலைமுடி வளர வேண்டுமா?
- பேன். பொடுகு தொல்லையா?
- முடி கொட்டுகிறதா?
- இளநரையா?
- தலையிடியா?
- முடி அடர்த்தி இல்லையா?
- புதிதாக முடி முளைக்க வேண்டுமா?

பொன்னாங்காணி. கரிசலாங்காணி. இலாமிச்சைவேர். கருவேப்பிலை. வல்லாரை. நெல்லி சேர்த்துக் காய்ச்சிய எண்ணெய் 100% ஆயுள்வேத முறைப் படி காய்ச்சிய இவ்வெண்ணையைப் பாவித்து பலனடைய.

**பதிவு இல: 16168**
**077 210 6155** **221, நாவலர் றோட், யாழ்.**

# யாழ்.பல்கலைக்கழக பழைய மாணவர்களின் ஒன்றுகூடல் - 1981

1981 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இணைந்து 1984 மற்றும் 1985 இல் பட்டப்படிப் பினை முடித்து வெளியேறிய கலை. வர்த்தக. முகாமைத்துவ பீட நண்பர்களுக்கிடையிலான ஒன்றுகூடல் East Lagoon Hotel, Uppodai Lake Road, மட்டக்களப்பில் ஆகஸ்ட் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியிலிருந்து நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உள்நாட்டிலும். வெளிநாட்டிலும் வாழும் பாசமிகு நண்பர்களைச் சந்தித்து எமது பழைய உணர்வு களை வெளிப்படுத்துவதற்கான அரிய சந்தர்ப்பம். தவறாது கலந்து கொள்ள அன்புடன் அழைக் கின்றோம்.

**தொடர்புகளுக்கு:-**
**ஜெயராஜ் - 077 738 5858**
**கில்பேட்குணம் - 075 966 4266**
**குமரகுருபரன் - 077 256 9626**
**திருமதி . விசாலினி - 076 601 8977**
**திருமதி. வசந்தா - 071 751 2092**
(CS/18147)(11) **செல்வி. வேர்ஜினியா - 077 650 7583**

# Little Masters' Montesoori

**ஆங்கில தமிழ் மொழிமூலமான**
**பாலர் பாடசாலையில் வேலைவாய்ப்பு**

- ஆங்கில ஆசிரியர்
- தமிழ் ஆசிரியர்
- சிங்கள ஆசிரியர்
- முன்பள்ளி உதவியாளர்
- கணினி போதனாசிரியர்
- முன்பள்ளி மேற்பார்வையாளர்
- கணினி உதவியாளர் (Tamil, English Typing தெரிந்தவர். Photoshop தெரிந்தவர்கள்)

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு புத்தூர். மல்லாகம். தெல்லிப்பழை. இணுவில். மாவிட்டபுரம். வட்டுக்கோட்டை ஆகிய இடங்களுக்கு ஆள்கள் தேவைப்படு கின்றது.

**நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்:**
Little Masters Montesoori
கே.கே.எஸ். றோட். மல்லாகம்
(அகரம் கலவி நிலையத்துக்கு அருகில்)

**நேர்முகத் தேர்வுக்குரிய திகதி:**
16.07.2018 திங்கட்கிழமை
காலை 8.00 மணி முதல் 12. 00 மணிவரை

நேர்முகத் தேர்வுக்கு வருகைதரும்போது சுயவிவரக்கோவைகள் கல்வி சான்றிதழ்கள் என்பவற்றை தவறாது கொண்டு வருதல் வேண்டும்.

(in 7258) (13.17)

**தொடர்பு: 077 747 4741**

எங்கவின் அருமையான பாசத் தம்பியின்
# பன்னிரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

**அமரர் செல்லத்துரை சிவபாதம்**



பெற்றறோர் மகிழ
10.06.1952

சகோதரிகள் கதற
15.07.2006

எங்கள் அருமையான பாசமுள்ள தம்பி அண்ணா
எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி
விண்ணுலகு சென்று பன்னிரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டதையா!
இன்றும் உன் நினைவு எங்களை வாட்டிவதைக்குதே
என்றும் எம் நெஞ்சில் நீ வாழ்ந்து கொண்டே இருக்கிறாய்
எங்கு பிறந்தாலும் எம்மை வாழவைத்த
செல்வனே நீ நன்றாக வாழுவாய்

**நித்தமும் உன்நினைவாக வாழும் அக்காமார், தங்கை தனலட்சுமி, இராஜேஸ்வரி, வசுந்தரா, மைத்துனர்மார், மருமக்கள்.**

**அன்னை நிழல், செட்டியார்மடம். அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.**
**077 621 8389** (cs.18121) (13,17)


# UNIVERSITY COLLEGE OF JAFFNA

UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY
MINISTRY OF SCIENCE, TECHNOLOGY, RESEARCH, SKILLS DEVELOPMENT & VOCATIONAL TRAINING AND KANDYAN HERITAGE

UNIVERSITY COLLEGE OF JAFFNA

## VACANCIES

TVEC Reg No :P25/0071

Applications are invited from suitable qualified persons for the below mentioned posts in University College of Jaffna.

### 1. LECTURER (PROBATIONARY)IN CONSTRUCTION TECHNOLOGY / HOSPITALITY MANAGEMENT / FARM MACHINERY TECHNOLOGY / BUILDING SERVICES TECHNOLOGY

**Qualifications:**

1. A Degree with specialization in a relevant subject with First Class or Second Class (Upper Division) Honours.

OR

2. A degree with specialization in a relevant subject with Second Class (Lower Division) Honors and at least 01 year of experience in teaching /research/professional work in recognized mercantile establishment /postgraduate studies in a recognized University or Higher Education Institution;

OR

3. (a) A degree with specialization in the relevant subject without Honors or any other general degree with at least Second Class Honors,

AND

(b) A Postgraduate Degree with duration of at least 02 academic years in the relevant subject with a research component by way of thesis/dissertation;

OR

4. (a) A Degree or equivalent professional qualification offered or recognized by a professional institution established by an Act of Parliament of Sri Lanka in the relevant subject.

AND

(b) One year Master Degree in the relevant subject or equivalent further professional qualification offered or recognized by a professional institution established by an Act of Parliament of Sri Lanka.

AND

(c) Five (5) years professional experience after graduation or after securing professional qualification given in 4(a).

OR

5 (a) A degree or equivalent professional qualification offered or recognized by a professional institution established by Act of parliament of Sri Lanka in the relevant subject.

AND

(b) Eight (8) years professional and/ or teaching experience after graduation or after securing professional qualification given in 5(a)

**Age Limit** - 22 – 60yrs
**Selection Procedure**: Through an Interview.
**Salary Scale**: U-AC 3 (IV) - Rs. 43,051 – 10 x 1002 – 53,071 p.m. (as at 01.01.2018)
Rs. 53,235 – 10 x 1,240 – 65,635 p.m. (as at 01.01.2020)

### 2. LECTURER (PROBATIONARY) IN COSMETOLOGY (BEAUTY CULTURE)

**Qualifications:**

1. Candidates shall possess the academic qualifications required for the Category 1 Mentioned above (Who have specialized in Siddha Medicine or Chemistry area also can apply)

OR

2. National Vocational Qualification (NVQ) Level 5 or equivalentin the relevant field with 5 years relevant experience.

**Age Limit** - 22 – 60yrs
**Selection Procedure**: Through an Interview.
**Salary Scale**: U-AC 3 (IV) - Rs. 43,051 – 10 x 1002 – 53,071 p.m. (as at 01.01.2018)
Rs. 53,235 – 10 x 1,240 – 65,635 p.m. (as at 01.01.2020)

### 3. DEMONSTRATORS INBUILDING SERVICES TECHNOLOGY(MECHANICAL &ELECTRICAL)/ PRODUCTION TECHNOLOGY

**Qualification:**

- A Degree in the relevant filed

**Age Limit**- 22 – 45yrs
**Selection Procedure**: Through an Interview.
**Salary Scale**: U-AC-1 - Rs.33,100p.m (Fixed)(as at 01.01.2018)

### 4.MAINTENANCE TECHNICIAN

**Qualifications:**

(a) Having passed the G.C.E. (O/L) Examination in six subject in one sitting with credit passes for 04 subject including;
(i)Sinhala/Tamil
(ii)English Language
(iii)Mathematics

(b) Having achieved the performance level required to follow a tertiary education course by passing the required number of subjects other than the 'General Papers' at the G.C.E.(A/L) Examination.

AND

(c) Not below National Vocational Qualification (NVQ) Level 5 in Electronics, Electrical, Multi Media, Instructional Material Development, Mechanical & ICT.

**Age Limit** - 18 – 45yrs
**Selection Procedure**: Written competitive Examination & Interview.
**Salary Scale** :U-MT12016 - Rs25,589-7X242; 10X287–30,153-p.m (01.01.2018)
Rs31,625 -7X300 ; 10X355 – 37,275 -p.m (01.01.2020)

**Nature of Appointment:**
- ✓ Demonstrator (Contract -1Yr) –withentitlement to EPF & ETF
- ✓ Lecturer (Prob) - Permanent with entitlement to EPF & ETF
  Entitled for Academic Allowance of 25%
- Other Government Approved Allowances.

- Specimen Application form and further details are available at**www.ucj.ac.lk.**Duly filled applications forms indicating academic and professional qualifications shall besent to **"Assistant Registrar, University College of Jaffna,No 29, Brown Road, Kokuvil, Jaffna"** by Registered post on or before **26th July 2018**.
- Desired post applied should be indicated clearly on the top left hand corner of the envelope.
- Applicants from Higher Education Institutions, Government Departments and Government Corporations should apply through the Heads of such Institutions. Applications which do not conform to this requirement will be rejected. Such applicants are strongly advised to submit an advance copy to the address given above.
- Only short listed applicants will be called for the interview.

15.07.2018

Assistant Registrar
University College of Jaffna

## சேவை நலன் பாராட்டு

Best Wishes



யாழ். போதனா வைத்தியசாலையில் 38 வருடங்களாக தாதிய உத்தியோகத்தராகவும், விடுதிச்சகோதரியாகவும் கடமையாற்றி இன்று ஓய்வு பெற்றுச் செல்லும்

**திருமதி இந்திராணி மயில்வாகனம்**

அவர்களது ஓய்வுக்காலம் சிறப்புற அமையவும் பல்லாண்டு காலம் வாழ்வும் வாழ்த்துகின்றோம்.

தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக்கூட்டுறவுச்சங்கம், யாழ்ப்பாணம்.

## பகிரங்க அறிவித்தல்

சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரியில் அமைந்துள்ள எமது நிறுவனமாகிய "வாழ்வகம், விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்" கண் பார்வையற்ற, பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளின் மேம்பாட்டினை நோக்காகக் கொண்டு இயங்கி வரும் ஒருதொண்டு ஸ்தாபனமாகும். எமது நிறுவனத்துக்காக நிதி திரட்டவோ அன்றி வேறு வழிகளில் உதவிகளைக் கோரவோ நாம் யாரையும் நியமிக்கவில்லை என்பதை திட்டவட்டமாக அறியத் தருகின்றோம். இவ்வாறிருக்க எமது நிறுவனத்தின் பெயரைப் பயன்படுத்தி ஒருசிலர் நிதிசேகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாக அறிந்து நாம் அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம்.

இவ்வாறானவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தொடர்பான தகவல்களை தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் எமது முகவரிக்கோ அன்றி, 0212240146, 0768286331 என்னும் தொலைபேசி இலக்கங்களுக்கோ உடன் அறியத் தந்து எமக்கு ஒத்துழைப்பு நல்குமாறு அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்கின்றோம். வாழ்வக நிறுவனத்துக்கு உதவ விரும்புகின்ற அன்பர்கள் மேற்குறிப்பிட்டுள்ள முகவரி அல்லது தொலைபேசி இலக்கங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு உங்கள் பெறுமதிமிகு உதவிகள் உரிய இடத்தை அடைந்துள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். (0768286331 WhatsApp, Viber)

**ஆறுமுகம் ரவீந்திரன்**
**தலைவர், வாழ்வகம்.**

(IN 32701)(10)

## மரண அறிவித்தல்

### ஐயம்பிள்ளை செல்வகுமார்



யாழ்ப்பாணம், கச்சேரியை பிறப்பிடமாகவும் 286, புன்னை நீராவியை வசிப்பிடமாகவும் கொண்ட கச்சேரி செல்வாஎன்றுஅழைக்கப்படும் ஐயம்பிள்ளை செல்வகுமார் 12.07.2018 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும், இரஞ்சிதமணியின் அன்புக் கணவரும், செல்வரஞ்சன், செல்வறூபி, கலைச்செல்வி, சுதர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பூபாலசிங்கம் (London), பாலசுப்பிரமணியம் (London) ஆகியோரின் அன்புச் சகோதரனும், வாசுகி, முகுந்தன், மனோகரன் (குகன்), சோபனா ஆகியோரின் அன்பு மாமனும், தர்சன், நிதுசா, நந்தவி, கபிசன், லக்சன், சப்தவி, லதுசன், அக்சயன், ஆருஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2018) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 12 ஆம் கட்டை விசுவமடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.286, புன்னை நீராவி,**
**விசுவமடு.**
**076 639 8687**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985, புனர்பூசம் (சூரியன் செவ்வாய் 6 இல்) பிரபல தனியார் நிறுவனத்தில் தொழிநுட்ப உத்தியோகத்தராக (சிவில்) தொழில்புரியும் மணமகளுக்கு தகுந்த மணமகன் உடன்தேவை.

077 964 4668

## விற்பனைக்கு

வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட பாவிக்கப்படாத புத்தம் புதிய 04 அடுப்பு காஸ் குக்கர் மற்றும் அவுன் (Oven) உடன் கூடிய Cooking range விற்பனைக்குண்டு.

**071 814 8150**

(CS 17700)(1517)

## Annex வீடு வாடகைக்குண்டு

யாழ்ப்பாண பாங்ஸால் வீதியில், பாதுகாப்பான சூழலில் சகல வசதிகளுடன் Annex வீடு பல்கலைக் கழக மாணவிகளுக்கு, பெண் அலுவலக உத்தியோகத்தர்களுக்கு, வயதான தம்பதியர்களுக்கும் வாடகைக்கு விடப்படும்.

**தொடர்பு - 072 786 2171**

## தினமும் கொண்டாட்டம்

**விருந்தினர் விடுதி**

**யாழ். ஒடியல் கூழ் - 150/=**
**இந்தியன் தம் புரியாணி -250/=**
**மதிய / இரவு உணவு**
**பிறைற் றைஸ் / நூடில்ஸ்**
**பைட்ஸ் மற்றும் மேலும் பல**

**யாழ்பாடி**
**49/51, அம்மன் வீதி, நல்லூர்.**
**021 222 6868/075 987 5800**

## வீடு வாடகைக்கு விடப்படும்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குள் வண்ணார் பண்ணை, லோட்டஸ் வீதியில் 5 அறைகள், 3 கோல்களுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு (7 3/4 பரப்பு) வாடகைக்குண்டு. நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தொடர்பு - 076 101 6580, 001 514 884 1126, 077 3458 057**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்துக்கு அருகில் 8½ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

(தரகர் தேவையில்லை)

**077 869 5005 / 077 064 7499**

## தேவை

IT கம்பனி ஒன்று, Laser Printer தொழில் நுட்பவியலாளர் ஒருவரை எதிர்பார்க்கிறது. Canon/Toshiba/HP/Lexmark போன்றவற்றில் பழுதுபார்க்கும் இரண்டு வருட தொழில் அனுபவம் கொண்டவராக இருக்கவேண்டும். தெரிவுசெய்யப்படும் நபர் :

- வடக்கு, கிழக்கு இரு மாவட்டங்களிலும் பணியாற்றுவதோடு.
- தங்களுடைய வீட்டிலிருந்து செயற்படக் கூடியவராகவும்.
- மோட்டர் சைக்கில் ஓடக்கூடிய அனுமதிப் பத்திரம் உடையவராகவும்.
- G.C.E O/L சித்தியடைந்தவராகவோ தொழில்நுட்ப பயிற்சி பெற்றவராகவோ இருப்பது விரும்பப்படத்தக்கது.
- தகுதிக்கேற்ற கவர்ச்சியான சம்பளமும் மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க :- hr@rng.lk or 0772930282

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், வங்கியாளர், ஆசிரியர், அரச உத்தியோகத்தர், தனியார் துறையினர் மற்றும் வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். நீங்கள் விரும்பும் மணமகனை / மணமகளை மிகப்பொருத்தமாக உடன்தெரிவு செய்து தரப்படும்.

**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**(கந்தர்மடச்சந்திக்கும் பரமேஸ்வராச்சந்திக்கும் இடையில்) தொடர்பு - 077 138 7596, 071 8945 692**

## உடனடி தொழில் வாய்ப்பு

யாழ் மாவட்டத்தில் இயங்கும் நொதேர்ண் சென்றல் வைத்திய சாலைக்கு பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. கணக்கீட்டு உதவியாளர்** (Accounts Assistant)

1. க.பொ.த (உ/த) (A/L) இல் வர்த்தகப் பிரிவில் 3 பாட சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
2. பகுதித் தகைமை - Partly Qualified - HNDA, AAT விரும்பத்தக்கது.
3. ஒரு வருட துறை சார் அனுபவம்
4. கணினி பற்றிய அறிவு
5. வயதெல்லை 21 தொடக்கம் 35 வரை

**02. ஆண் பரிசாரகர்** (Male Attendant)

1. க.பொ.த. (சா/த) (O/L) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.**

இது தொடர்பான விண்ணப்பங்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நேரடியாக நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்கலாம். அல்லது விண்ணப்பங்களை 20.07.2018 இற்கு முன்னர் தபால் மூலமோ அல்லது மின்னஞ்சல் மூலமோ அல்லது நேரிலோ கையளிக்கலாம்.

**மனிதவள முகாமையாளர்**
**நொதேர்ண் சென்றல் வைத்தியசாலை**
**இல.342, பலாலி வீதி,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

தொலைபேசி இல:
**021 221 9988, 021 7217324**
**Mobile No: 077 77 32892**
**E-Mail No: northernhrm@gmail.com**

(IN/31980)(10)

## வென்டோல் வெனிவெல் சவர்க்காரம்




மூலிகை நலன்கள் நிறைந்தது


Vendol Venivel - Natural Secret of Beauty

அழகாகத் தோற்றமளிக்கவே அனைவரும் விரும்புகின்றனர். அதனால்தான் நாம் அடிக்கடி முகத்தையும் மேனியையும் கழுவிச் சுத்தம் செய்கிறோம். அவ்வாறு கழுவுவதற்கு நாம் பாவிக்கும் சவர்க்காரங்கள் நறுமணத்தை மட்டுமே கொண்டிருந்தால், காலப்போக்கில் அந்த நறுமணப் பதார்த்தம் உங்கள் சருமத்தை வறட்சியடையச் செய்துவிடும்.

ஆனால், மூலிகைச் சாறுகள் கொண்ட வென்டோல் வெனிவெல் சவர்க்காரத்தை நீங்கள் பாவிக்கப் பாவிக்க உங்கள் சருமம் மென்மேலும் பளபளப்பு அடையும். முகப்பருக்கள், வெயிலினால் சருமம் கருமையடைதல் போன்ற பிரச்சனைகளும் தணியும். அது மாத்திரமன்றி, சருமத்தின் ஈரலிப்புப் பாதுகாக்கப்படும் என்பதால் உங்கள் மேனியின் இயற்கைத் தோற்றம் நாளுக்கு நாள் பொலிவடையும்.

இதற்குக் காரணம் யாதெனில், இயற்கைக் கிருமிநாசினிகளான மஞ்சள், வேம்பு, மரமஞ்சள் மற்றும் சருமத்தை மென்மையாக்கும் சந்தனம், சருமத்தின் ஈரலிப்பைப் பாதுகாக்கும் கற்றாளைச் சாறு என்பன கொண்ட மூலிகை எண்ணெய் சேர்வை வென்டோல் வெனிவெல் சவர்க்காரத்தில் அடங்கியிருப்பதேயாகும்.

இதனை நன்றாகப் புரிந்துகொள்ளுங்கள். நறுமணத்தை மாத்திரம் நம்பி ஏமாறாதீர்கள். உங்கள் மேனியழகைப் பாதுகாப்பதற்கு உதவக்கூடிய ஒரேயொரு இயற்கைப் பரிகாரம் வென்டோல் வெனிவெல் மூலிகைச் சவர்க்காரம் மட்டுமே.



"மேனியழகின் இயற்கை இரகசியம் வென்டோல் வெனிவெல்"

**Beware of Fake Products**




## உங்களது குடும்ப வாழ்க்கை இந்த இரண்டில் எது?

உங்களது ஆளுமை, இளமைத் துடிப்பு, செயற்திறன் ஆகியவற்றைத் தக்கவைத்து இளைஞனாக இருக்க நீங்கள் மேலும் விரும்புகிறீர்களா? அதற்காக உங்களது சிறந்த தெரிவு
**Biovita 40 +**

டர்ரிபியுலஸ் டெராஸ்ரீஸ் தோலின் சாறு காரணமாக இரத்தத்தில் உள்ள டெஸ்டஸ்டேரோன் அளவு உயர்வடைவதனால் ஆண்களின் உடல் வலிமை மற்றும் ஆண்மைப் பலவீனத்தைக் குறைப்பதற்கும் பலவீனமான குழந்தைப் பேற்றுத் தன்மையை ஆகக் குறைந்ததாக்குவதற்கும் உதவியளிக்கும். [illegible]

அல்பா லெபோலிக் அசிட் போன்ற போஷாக்கு பிரிவுகளினால் இரத்தத்தில் சீனி மட்டத்தை சீராக வைத்துக் கொள்வதற்கு உதவியளிக்கும்.

திராட்சை விதைச் சாறு, விட்டமின் C, பைன் மரத் தோலின் சாறு, சருமத்தின் நிறம் மாறுதலை தடுப்பது போன்றே புகை பிடிப்பவர்களின் வாயில் கறுப்பு நிறத்தை அகற்றி சருமத்தில் சுருக்கம் விழுவதை கட்டுப்படுத்தும்.

நிறைவேற்று உத்தியோகத்தர்களிடம் பரவலான [illegible] தலை மயிர் கழன்று போவதைத் தடுப்பதற்கு விட்டமின் E, [illegible] போஷாக்குப் பிரிவுகள் அடங்கலாக இருப்பதனால் ஆரோக்கியமாக செயற்திறன் கொண்டதாகவும் வைக்கும்.

[illegible] 0770 103 796



யாழ். திருநெல்வேலியில்
முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட

# யாழ் வைத்தியசாலை



**24 மணிநேர சேவை**

**தற்போது அதிநவீன வசதிகளுடன் கூடிய சத்திர சிகிச்சைக் கூடம்**

✓ **General Surgeries**
- **Vericosevein** (வரிகோஸ் சத்திரசிகிச்சை)
- **Hernina** (ஹேணியா சிகிச்சை)
- **Appendectomy** (அப்பண்டிஸ் சத்திரசிகிச்சை)
- **Thyroidectomy** (தைரொட்டு சுரபி அகற்றல்)
- **Parotidectomy** (உமிழ் நீர் சுரப்பி அகற்றல்)
- **Anal Fissure**
- **Anal Fistula**
- **Haemorrhoids (Piles) Surgery**

**Laser Surgeries**
- **Laser Vericose Surgery** (வரிகோஸ் சத்திரசிகிச்சை)

**Eye Laser Treatment**
நீரிழிவு நோயாளர்களுக்கான லேசர் சிகிச்சை

✓ **Laproscopy Surgery** (வீடியோ மூலம் சத்திரசிகிச்சை)
- **Hernia** (ஹேணியா)
- **Appendectomy** (அப்பண்டிஸ் சத்திரசிகிச்சை)
- **Hysterectomy** (கருப்பை அகற்றல்)
- **Cholecystectomy** (பித்தப்பை அகற்றல்)
- **Lap & Dye Examination**

✓ **E.N.T சத்திர சிகிச்சை**
- **Nasal** (மூக்கு)
- **Septoplasfy** (மூக்கு சீராக்கள்)
- **Ear** (காது)
- **Myringoplasy** (காது சௌவு துவாரம் அடைத்தல்)
- **Mastoidectomy**
- **Thyroidectomy** (தைரொட்டு சுரபி அகற்றல்)
- **Parotidectomy** (உமிழ் நீர் சுரப்பி அகற்றல்)

✓ **Endocopy** (அதிநவீன என்டர்ஸ்கொப்பி )

அக்ரகாரா, அரச/ ETF தனியார் நிறுவனங்களின் காப்புறுதி அங்கீகாரம் பெற்றது.

- வெளிநோயாளர் பிரிவு O.P.D
- மருந்தகம் Pharmacy
- ஆய்வுக்கூட சேவை Laboratory



மேலே குறிக்கப்பட்ட கட்டணங்கள் அனைத்தும் வைத்திய சாலை, வைத்திய நிபுணர், ஒரு நாள் இணைந்த குளியலறையுடனான தங்கும் விடுதி அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(நிபந்தனைக்குட்பட்டது)

315, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 3533, 021 222 1011, 0777 781 005

மேலதிக தகவல்களுக்கு: 077 310 7685



திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

## ஆடித் தள்ளுபடி

**10%-50%** வரை விலைக்கழிவு



உங்களுக்குத் தேவையான
- ✓ பட்டுச் சாறிகள்
- ✓ கொட்டன் சாறிகள்
- ✓ சல்வார்கள்
- ✓ சல்வார் துணிகள்
- ✓ பார்ட்டி புரொக்
- ✓ சேட், T-சேட், ரவுசர் வகைகள்

போன்றவற்றையும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.



**இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்**
**காலம்: 16.07.2018-01.08.2018**

**இந்தியன் செலக்ஷன்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

## FACTORY VACANCIES - VAVUNIYA

ESL Electrodes (Pvt) Ltd, is an upcoming electrodes/welding rods manufacturing plant in the Vavuniya Districts. We are looking for a dynamic individuals/high caliber persons to fill the following vacancies in our company.

1) Consultant - mechanical engineering
   Key responsibilities
   Oversee the production process, drawing up production schedule
   Ensure production is costs effective
   Establishand maintain quality standard for the products
   Advice management on new product and market requirements
   Qualification and experience
   Degree or diploma in mechanical engineering
   2-3 years working experience in a manufacturing plant operations
   Excellent planning and negotiation skills
2) Factory supervisor
   Key responsibilities
   To oversee the operation of production plant
   Able to lead and guide factory employees effectively
   Qualification and experience
   Having 2- 3 years factory supervision experience together with relevant qualification
3) Maintenance Forman/Technicians
   Key responsibilities
   Plan and manage all required routing mechanical and electrical mainte nance works
   Undertaking minor repair maintenance work within the premises
   Report on maintenance issues and critical incident
   Maintain and update the inventory of spare parts to support the mainte nance of all equipment
   Qualification and experience
   Having proper training and educational qualification in the relevant field
   Having 2- 3 years factory maintenance work experience
4) Human Resource Officer
   Key responsibilities
   Recruitment selection and termination of employees
   Maintain personal files for all employees.
   Qualification and experience
   Diploma or similar qualification in HR with 2-3 years working experience
   Computer knowledge in MS office is essential
   if you are the person we are looking for please apply via email within 7 days .
   **Email address :eslelectrodes@gmail.com**

Factory Address :ChettikulamVeethy,Poovarasamkulam,Vavunia

(IN.7286) (13.17)

### தேவை

அரைக்கும் ஆலைக்கு வேலை தெரிந்தவர். பயிலுனர் மேலும் பில் கிளார்க், பொதியிடல், சமையல் உதவியாளர் என்பனவற்றுக்கு பெண்கள் தேவை.

**077 174 6101**

### வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரபலமான பார்மசி ஒன்றுக்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை. கணினி அறிவுடையவர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு - 076 523 9171**

### வீட்டுப்பணிப்பெண் தேவை

கொழும்பில் 2 பேர் கொண்ட சிறிய குடும்பத்துக்கு தங்கியிருந்து வேலை செய்யப் பணிப்பெண் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

(AKN/4989)(11.17)

**077 261 9470**

### வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணத்தில் எப்பகுதிகளிலும் வீடு / கடை வாடகைக்கு உடன் தேவை. **தொடர்பு - 076 729 3407, 077 917 7027**

### VACANCY

**பிரபல வர்த்தக நிறுவனத்துக்கு**
**O.I.C (Officer In Charge)**
தேவைப்படுகின்றது.

**தகைமைகள்**

3 வருட நிர்வாக அனுபவம் மற்றும் சந்தைப்படுத்தல் சிறப்புத் தேர்ச்சி.

மேலதிக தொடர்பு:-
kenneth@avery.edna.lk
077 348 6004

(CS 18198) (11.17)

### வேலை வாய்ப்பு

யாழ்நகரில் அமைந்துள்ள
Samsung Singhagiri (Pvt) LTD
நிறுவனத்திற்கு வேலையாள்கள்
தேவை (ஆண்/பெண்)
வயது: 18 - 28
யாழ்நகரை அண்மித்தவர்கள்
விரும்பத்தக்கது

**077 589 8698**

## வேலை வாய்ப்பு

**யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும்**

Vishnu International Industry

**நிறுவனத்துக்கு**

**கணக்காளர்** இரு பெண்கள் தேவை.

**மேலதிக தகைமைகள்:**

1 வருடம் அல்லது 2 வருட கணக்கு துறையில் அனுபவம், ஆங்கிலம் கணினி அறிவு அவசியம்


மேலதிக தொடர்புகளுக்கு:

**076 303 7154**

(AVA 382) (13.17)

## முதலாம் ஆண்டு நினைவு நாள்

### திருமதி பொன்னாபரணம் இராசநாயகம்



தோற்றம் 12.07.1942 — மறைவு 26.06.2017

**திதி:- 15.07.2018**

அம்மா!
இம்மண்ணில் எம்மை மலர வைத்த தாயே
பாசத்தை அள்ளிக் கொடுத்தாய்.
அன்பால் அரவணைக்க கற்றுக்கொடுத்தாய்.
பாசத்தின் பரம்பொருளே எம்மைக் காக்கும் கடவுள் அம்மா.
உங்கள் பசுமையான நினைவுக்களை
எங்களால் மறக்க முடியவில்லை அம்மா
ஆண்டு ஒன்று ஆனாலும் உங்கள் எண்ணங்கள்
எமது கண்களில் துளியாய் வடிகின்றது


**குடும்பத்தினர்.**
நெல்லொருபாதி
பிள்ளையார் கோயில் அருகில்,
தாவடி தெற்கு, கொக்குவில்.

# போதையற்ற உலகப் பொதுமை காண்போம்

சேரலாதன்

**போரும் போதையும்**

தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலே அவர்களுடைய வாழ்வியல் சுற்றோட்டம் என்பது தற்காலத்திலே இடர் மிகுந்த பயணவெளியாகவே அமைந்துள்ளதை காண முடிகிறது. ஆம், கடந்த மூன்று தசாப்த காலத்தில் தமிழர்கள் நிம்மதியான, சுதந்திரமான, அமைதியின் களிப்புடைய சூழல் இயல்தகவை உரிமை என்ற பற்றுதலின் வழி பெற்றிருந்தனர். ஆனாலும் போர் என்ற அகங்காரம் அவ்வப்போது கோர முகம் காட்டி வலிந்து அழிவுகள் பலதை தந்திருந்தது. இறுதியில் இனப்படுகொலையாக அகங்காரத்தின் மொத்த வடிவமும் தமிழனத்தையே அடிமைப்படுத்தி விட்டது. இந்த அழிவு நிலைகளின் ஆழத்தில் இருந்து மீண்டு வருவதற்கு நீண்ட காலங்கள் தேவைப்படுகின்றன. இந்த சந்தர்ப்பத்திலே மீண்டும் ஓர் அழிவு தரும் அகங்காரத்தின் உரத்த தொனிப்பு 'போதை' என்ற விஷமாக தமிழ் சமூகத்தின் பரம்பலினுள் திட்டமிட்டு தெளிக்கப்பட்டுள்ளது. இதன் வீரியமும், அளவற்ற அகத்துறுஞ்சலும் தமிழின இருப்பை வேரோடு அழித்துவிடுவதற்கான காரண காரியமாக இருந்து செயலாற்றி வருகிறது. இந்த பின்னடைவான சமூக நிலைத்திருப்பில் இருந்து நாம் மீண்டுவருவதற்கு ஒற்றுமையும், முயற்சியும், விடுதலை என்கிற ஒருமுகமான உணர்வும் எல்லோரிடத்திலும் ஏற்பட வேண்டும். அதற்கான பணிக்கூறுகளை நாம் வினைத்திற னோடு மேற்கொள்ள முன்வர வேண்டும்.



**ஏழைகளின் எதிரி**

குறிப்பாக கிராமப் புறங்களில் வாழ்கின்ற மக்கள் வறுமையில் துன்பங்களை அனுபவிப்பதற்கு போதைப்பொருள்களின் பாவனையே முதன்மைக் காரணமாக அமைந்துள்ளது. இவற்றின் நுகர்ச்சி வீதம் எல்லை மீறிச் செல்கிறது. போதைப் பொருள்களின் வகைப்பாட்டினுள் மதுசாரமும் தன்னிலையை முன்னிலைப்படுத்தியுள்ளது. மதுசாரத்தை அருந்திவிட்டு போதை தலைக்கேறியதும் அவர்கள் கண்டுகொள்கின்ற நடத்தை மாற்றங்களை சரித்துக்கொள்ள முடியவில்லை. உண்மையில் மனிதர்களாக நடந்துகொள்ளாது மிருகங்களை விடவும் கீழ்மைக் குணமுடை யோராக இவர்கள் நடந்து கொள்கின்றனர்.

இங்கு மதுசாரத்துக்கு அடிமையான கூலித்தொழிலாளி ஒருவனின் வாழ்க்கையை எடுத்து நோக்கின், இவை அளவின்றி வரையறை செய்துள்ள தீமைகள் தொடர்பில் நன்கு அறிந்துகொள்ள முடியும். நாள் முழுவதும் கடுமையாக வேலைகளைச் செய்து உடல் உழைப்பை வியர்வையாக சிந்துகிறான். வெயில் மழை என எந்தவிதமான காலநிலை மாற்றங்களையும் பொருள்படுத்தாமல் முயற்சியுறுகிறான். ஆனாலும் தனது உடல் அசதியை இல்லாது போகச் செய்ய வேண்டும் என்ற காரணத்தை அடிப்படையாக்கி மாலை வேளையில் மதுசாரத்தை அருந்துகிறான். மதுசாரம்ஒருபோதும் தன்னைத் தொட்டவனை இலகுவில் விட்டதில்லை. அதன் வழியே தனக்குப் பூரணமாகப் போதை ஏறும் வரையில் மதுசாரத்தை அகத்துறிஞ்சிக்கொண்டே இருக்கின்றான். மதுசாரத்தின் மயக்கம் பணம் செலவாவது தொடர்பில் அறிவுரையை தர மறுக்கிறது. அன்றைய தினம் உழைத்த பணம் முழுவதையும் மதுசாரத்துக்கு வாரிவழங்கி விடுகிறான். குடும்ப உறவுகளை முழுவதுமாக மறந்துவிடுகிறான். அவர்களுக்கான உணவு, ஏனைய தேவைப்பாடுகள் என அத்தனையும் முடிவின்றி தொடர் கதையாக தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. மதுசாரத்துக்கு அடிமையானவர்களின் அநேகமான குடும்பங்களில் இவ்வாறானதொரு அவல நிலைதான் காணப்படுகின்றது. நாகரிக மாற்றத்தில் வாழ்வாதாரச் சிறப்புடைய மேற்தட்டுக் குடும்பங்களுக்கு மதுசாரப் பாவனை ஒரு சாதாரண விடயமாகவே காணப்படுகின்றது. ஆனால் ஏழ்மைநிலையிலுள்ள குடும்பங்களுக்கு இதுவொரு உயிர்போகின்ற விடயமாகவே மாறிவிட்டது.

> எமது நாட்டில் போதைப்பொருள்களின் வர்த்தகம் தடையின்றி இடம் பெற்று வருவதைக் காணமுடிகின்றது. உயர்மட்ட அரசியல்வாதிகளுக்கும் இதில் தொடர்பு இருப்பதாகத் தெரியவருகின்றது. இதன் காரணமாகவே இவற்றின் பரம்பலை தடை செய்வதில் இடர்பாடுகள் தோன்றியுள்ளதாக ஆய்வு அடிப்படைகள் தெரிவிக்கின்றன.

**போதையில் இருந்து இளையோர் விடுதலை பெற வேண்டும்**

மதுசாரமும் போதையை ஏற்படுத்துவதால் அதையொரு போதைப் பொருளாகவே கருதவேண்டியுள்ளது. ஆனால் அரசின் அங்கீகாரத்துடன் மதுசார விற்பனை நிலையங்களில் இன்று சர்வ சாதாரணமாக அவை விற்பனை செய்யப்படுகின்றன. உள்நாட்டு உற்பத்தி தவிர வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற மதுசார வகைகளும் எமது நாட்டில் தாராளமாக விற்பனை செய்யப்படுகின்றன. இவை கவர்ச்சிகரமான போத்தல்களில் அடைக்கப்படுவதால் மதுசார விற்பனை நிலையங்களில் அவை அடுக்கி வைக்கப்படும் போது அவற்றைக் காண்பவர்களின் மனங்களில் சலனம் ஏற்படுகின்றது. குறிப்பாக இளைஞர்கள் அதிகளவில் இவற்றால் ஈர்க்கப்படுகின்றனர். இளவயதினர் மதுவை நாடிச் செல்வதற்கு இதுவுமொரு காரணமாக அமைந்துவிடுகிறது.


தவிர 'கஞ்சா, அபின், ஹெரோயின், ஹவீஸ்' போன்றவை மோசமான போதைப்பொருள்களாக அடையாளம் பெறுகின்றன. இவற்றின் விலைகள் மிக அதிகம் என்பதோடு இவற்றால் ஏற்படுகின்ற தீமைகளும் மோசமானவையாக அமைகின்றன. இத்தகைய போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்கள் அவற்றிலிருந்து மீட்சி பெறுதல் என்பது இயலாத காரியம். அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு இவர்கள் அதீத முயற்சியை மேற்கொள்வர். நுகர்ச்சி என்ற காரணத்துக்காகவே எதைச் செய்வதற்கும் இவர்கள் தயாராகவே இருப்பர். கொலை செய்வதற்குக் கூட இவர்கள் ஒருபோதும் தயங்கமாட்டார்கள்.

**போதைப் பொருள்களின் பரம்பலை தடை செய்ய வேண்டும்**

எமது நாட்டில் போதைப்பொருள்களின் வர்த்தகம் தடையின்றி இடம் பெற்று வருவதைக் காணமுடிகின்றது. உயர்மட்ட அரசியல்வாதிகளுக்கும் இதில் தொடர்பு இருப்பதாகத் தெரியவருகின்றது. இதன் காரணமாகவே இவற்றின் பரம்பலை தடை செய்வதில் இடர்பாடுகள் தோன்றியுள்ளதாக ஆய்வு அடிப்படைகள் தெரிவிக்கின்றன.

மதுசார வகைகளின் விலைகள் அதிகரித்துக் காணப்படுவதால் கசிப்புப் போன்ற கீழ் தராதரமுடைய மதுசார வகைகளின் உற்பத்தியும் தடையின்றி இடம் பெற்று வருகிறது. கிராமப்புற மக்கள் இவை கொண்டுள்ள விலைக் குறைவை காரணம் காட்டியே இவற்றை நாடிச் செல்கின்றனர். உடல் நலக் கேடுகளால் விரைவிலேயே நோயாளிகளாக மாறிவிடுகின்றனர்.

அண்மைக் காலமாக புகையிலையின் உற்பத்தியை தடை செய்வது குறித்த செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. புகையிலைப்பாவனை புற்றுநோயை ஏற்படுத்தி விடும் என்பதால் இந்தத் தடை நடைமுறைக்கு வரவுள்ளதாக அதற்கொரு காரணமும் கூறப்படுகின்றது. வடபகுதி விவசாயிகளே புகையிலைச் செய்கையில் அதிகளவில் ஈடுபட்டு வருவதால் அவர்கள் நிச்சயமாகப் பாதிக்கப்படவே செய்வார்கள். ஆனாலும் பொது நன்மையைக் கருத்தில் கொண்டு அவர்கள் இதை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனாலும் சிகரெட் போன்ற புகைப் போதை ஊட்டிகள் புற்றுநோயை ஏற்படுத்துகின்ற போதிலும் அவற்றின் விற்பனைக்குத் தடை எதுவும் விதிக்கப்படவில்லை. அரசுக்கு அதிக வருவாயை ஈட்டித் தருவதால் மதுசாரத்துக்கும், சிகரெட்டுக்கும் தடைவிதிக்கப்படாமை சரியான விடயமாகத் தெரியவில்லை. சந்தர்ப்பத்துக்கு ஏற்றற் போல் அரசு கொள்கைளை வகுக்கும் போக்கும் ஏற்புடையதல்ல.



**பொறுப்புக் கூறலும் வினைத்திறனான செயற்பாடுகளும் வேண்டும்**

ஆக, மதுசாரப் பாவனை ஏழைகளை மேலும் ஏழைகளாக்கி அவர்களின் வாழ்க்கையையே சீரழித்து விடுகிறது. ஏனைய போதைப்பொருள்களும் மக்களின் வாழ்வியல் சுற்றோட்டத்தையே நாசமாக்கி விடுகின்றன. இந்த விடயங்கள் குறித்து ஆழ்ந்து சிந்திப்போம். உலகம் முழுவதும் ஒன்றிணைந்து பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராட ஒன்றிணைவது போன்று போதைப்பொருள்களை இல்லாதொழிப்பதற்கும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும். போதை இல்லாத உலகை உருவாக்குவதே அனைவரதும் இலக்காக இருக்கவேண்டும்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நடவடிக்கை தொடரட்டும்!

எல்லைதாண்டி வந்து இலங்கையில்தடைசெய்யப்பட்ட உபகரணங்களைக்கொண்டு மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள்மீது திருத்திய புதிய குற்றவியல் சட்டம் பாயத் தொடங்கியிருக்கிறது. இந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு ஒரு வருடத்தின் பின்னராவது நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருப்பது வரவேற்புக்குரியதே!

இந்திய மீனவர்களின் இழுவை மடிப் படகுகளால் வடபகுதித்தமிழ் மீனவர்கள் எதிர்கொண்டு வந்த பிரச்சினைகள் அவர்களின் வாழ்வாதாரத்தையே அழிப்பதாக அமைந்திருந்தன. பாக்கு நீரிணையின் இருபக்கங்களிலும் அண்ணன் தம்பிகள் தான் வாழ்கிறார்கள் என்கிறபோதும் , வாயும் வயிறும் வேறுதானே! அதனால் இந்தப்பிரச்சினை எப்போதுமே உணர்வுபூர்வமானதாக, சிக்கில் நிறைந்ததாக இருந்தது . ஆனாலும் தர்மத்துக்கும்நியாயத்திற்கும்அப்பால்வடக்குமீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள்.

அரசுகள்மட்டத்தில்பேசி இந்தப்பிரச்சினையைத்தீர்த்திருக்க முடியும் என்கிறபோதும், அது செய்யப்படவேயில்லை. பல சுற்றுப் பேச்சுக்கள் இரு நாடுகளின் அரச அதிகாரிகளுக்கும் மீனவர்களுக்கும் இடையில் நடந்தபோதும் வெற்றிகரமான முடிவுகள் எவையும் எட்டப்படவில்லை. இலங்கையில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளைக் கைவிடுவதற்கு இந்திய மீனவர்கள் தயாராக இல்லாத நிலையில் பேச்சு என்பது ஒப்புக்குச் சப்பாணியாகவே நகர்ந்து கொண்டிருந்தது.

இப்படியே போனால்சரிவராது என்பதனால்தான்இந்த விவகாரத்தை ஓரளவுக்காகவாவது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக இலங்கைக்கடலில் மீன் பிடிப்பது தொடர்பான சட்டங்கள் திருத்தப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமானஎம்.ஏ.சுமந்திரன்இந்தச்சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்திருந்தார். இதனடிப்படையில் எல்லை தாண்டுவதும், தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைத் தொழில் செய்வதற்குப் பயன்படுத்துவதும், குற்றவியல்குற்றங்களாக்கப்பட்டன. இதற்கு முன்னர்அவை குற்றங்களாகப்பார்க்கப்படாதகாரணத்தால், எல்லைமீறும் மீனவர்களைத் தண்டிப்பதற்கு வழியற்றிருந்தது. இதனால் கைது செய்யப்படும் இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டு வந்தனர். இரு நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வின் அடிப்படையில் இந்த விடுவிப்பு நடந்தது. தண்டனை இல்லாத காரணத்தால் மீண்டும் மீண்டும் எல்லை தாண்டியதுடன்வடக்கு மீனவர்களின்பொருள்களுக்கும் வாழ்வாதாரத்திற்கும் சேதங்களையும் ஏற்படுத்தி வந்தனர்.

இப்போது எல்லைமீறி தடைச் செய்யப்பட்ட முறையில் மீன்பிடிப்பவர்கள் மீத புதிய சட்டத்தின் கீழ் நடவடிக்கைஎடுக்கத்தொடங்கியிருக்கிறார்கள். இது தொடர்பான முதல் வழக்கில் குற்றவாளிகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. முதல் தடவை என்பதாலும், கைது செய்யப்பட்டிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் வெறும் கூலிகள் என்பதாலும் நீதிமன்றம் மென்போக்குடன் அணுகியிருக்கிறது. எதிர்காலத்தில்தீவிரமானஅணுகுமுறையை எதிர்பார்க்கலாம்.


இவ்வாறு தண்டனை கொடுப்பதும் எல்லைமீறிய படகுகளை அரசுடமையாக்குவதும் எதிர்காலத்தில் அத்துமீறல்களையும் வடக்கு மீனவர்களுக்கான பாதிப்பையும்குறைக்கும் என்று எதிர்பார்க்கலாம். எல்லைமீறும் மீனவர்களுக்கு எதிராக மட்டுமல்லாமல் உள்நாட்டில் வரம்பு மீறி சட்டத்திற்குப் புறம்பாகத் தொழில் செய்பவர்கள் மீதும் இதே சட்டத்தின் கீழ் உடனடியாக நடவடிக்கைஎடுக்கப்படவேண்டும். அப்போதுதான் இந்தக் குற்றங்களைக் கட்டுப்படுத்த முடியும் என்பதுடன் கடல்வளத்தையும் பாதுகாக்கமுடியும். எனவே அதிகாரிகள் இது விடயத்தில் தீவிரமான நடவடிக்கைகளைத் தொடர வேண்டும்.



# அரசு உண்மையாக நடக்கும்போதே குடாநாட்டுக்கு விமோசனம் கிடைக்கும்

இந்துமதி


சட்டம் ஒழுங்கு பிரதி அமைச்சர்


பொலிஸ்மா அதிபர்

விடுதலைப்புலிகள் யாழ்.குடா நாட்டில் இருந்தபோது மக்கள் நிம்மதியாக வாழ்ந்தார்கள் எனக் கூறுவது அறியாமையின் வெளிப்பாடேயென இங்கு வருகைதந்த சட்டம் ஒழுங்கு பிரதி அமைச்சர் கூறியுள்ளார். அவர் நிம்மதியென எதைக் குறிப்பிட்டார் என்பது புரியவில்லை. போர் இடம்பெறுகின்ற ஒரு பிரதேசத்தில் நிம்மதியை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? அந்த வேளையில் உண்ண உணவு கூடச் சரியாகக் கிடைக்கவில்லை என்பது ஒரு புறமிருக்க, எரிபொருள்களை கண்ணால் காண்பது அரிதாகவே காணப்பட்டது. மின்சாரம் இல்லாததால் மக்கள் இருட்டு வாழ்க்கையைத்தான் அனுபவித்து வந்தனர். பாடசாலை மாணவர்கள் இரவு நேரக் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது அவதியுற்றனர். ஆனால் எதிரிகளின் பயமின்றி மக்களால் வாழமுடிந்தது. குற்றச் செயல்களை இரும்புக் கரம்கொண்டு புலிகள் ஒடுக்கி வைத்தமையே இதற்கான காரணமாகும். குற்றங்கள் தொடர்பாக உடனுக்குடன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டதால் குற்றச்செயல்களில் ஈடுபடுவதற்கு எவருக்குமே துணிவு இருக்கவில்லை. இதனால் மக்களால் நிம்மதியாக வாழமுடிந்தது. இதைப் பிரதியமைச்சர் புரிந்துகொள்ளாதது வேதனைக்குரியது.

### குடநா நாட்டின் இன்றைய வன்முறைச் சூழலில் சட்டம் ஒழுங்கு அமைச்சரது யாழ்.வருகை முக்கியத்துவம் பெறுகிறது

குடாநாட்டின் தற்போதைய நிலை தொடர்பாக கண்டறியும் பொருட்டு சட்ட ஒழுங்கு அமைச்சர், சட்டம் ஒழுங்கு பிரதியமைச்சர், பொலிஸ்மா அதிபர் ஆகியோர் குடாநாட்டுக்கு வருகை தந்தமை முக்கியமானதொரு நிகழ்வாகக் கருதப்பட்டது. குடாநாட்டில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்ற நிலையில் இவர்களின் வருகைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அரசதலைவரின் பணிப்பின் பேரிலேயே இவர்கள் இங்கு வந்ததாகவும் கூறப்படுகிறது.

விடுதலைப்புலிகளை அழித்து சமாதானத்தை ஏற்படுத்திய தம்மால், குடாநாட்டின் குற்றச்செயல்களை ஒடுக்குவது பெரிய காரியமல்ல என்பது போன்று பொலிஸ்மா அதிபர் தமது பங்குக்கு அறிவித்தார். ஆனால் ஒருநாட்டின் பொலிஸ்மா அதிபரான அவர், அரசதலைவர் அறிவுறுத்தும் வரையில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தாமல் ஏன் வாளாவிருந்தார் என்பது புரியவில்லை.

### குற்றச் செயல்களின் பெருக்கத்துக்கு போதைப்பொருள் பாவனை முக்கிய காரணம்

சில தீய சக்திகள் பாடசாலை மாணவர்கள் உட்பட இளைஞர்களுக்கு போதைப் பொருள்களை விநியோகித்து அவர்களைச் சீரழிப்பதற்கு முயற்சி செய்வதாகக் கூறப்படுகின்றது. குற்றச் செயல்கள் கட்டுக்கடங்காமல் பெருகியமைக்கு போதைப் பொருள்களின் பாவனையும் ஒரு காரணமாகக் கூறப்படுகின்றது. ஆகவே குற்றச்செயல்களை ஒழிப்பதன் முதற்கட்டமாக போதைப்பொருள்களின் பாவனைக்கு முற்றாக முடிவுகட்ட வேண்டும்.

பொலிசார் பக்கச்சார்பின்றிச் செயற்பட்டு போதைப் பொருள்களின் விநியோகத்தில் ஈடுபடுகின்ற தீய சக்திகளின் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். வாள்வெட்டு, கொலை, கொள்ளை, திருட்டு, பெண்கள் மீதான வன்செயல்கள் ஆகியவற்றில் ஈடுபடுகின்ற உண்மையான குற்றவாளிகள் பாரபட்சமின்றிக் கைது செய்யப்பட்டு தண்டனைக்கு உள்ளாக்கப்படுதல் வேண்டும். பொலிசார் கடமையுணர்வுடனும், பாரபட்சமின்றியும் செயற்படும்போது இது சாத்தியமாகும். பல்வேறு பிரச்சினைகளுடன் அல்லாடிக்கொண்டிருக்கும் குடாநாட்டு மக்கள் குற்றவாளிகளுடன் போராடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதற்கு ஒப்பானதாகக் காணப்படுகின்றது. அரசு இவர்களைத் தமிழர்கள் என்று பார்க்காது இந்த நாட்டின் குடிமக்களாகவே கருதிப் பாதுகாக்க வேண்டும்.

### வடபகுதியிலிருந்து இராணுவத்தை முற்றாக விலக்கிக்கொள்ள அரசு முன்வரப் போவதில்லை

வடக்கு முதலமைச்சர் மாகாணசபைக்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்கிவிட்டு இராணுவத்தையும் விலக்கிக்கொண்டு விட்டால், வன்செயல்களைக் களைந்து விடுவது தமக்குப் பெரிய காரியமாக இருக்கமாட்டாதெனக் கூறியிருந்தார். ஆனால் சாத்தியப்படாத விடயத்தை அவர் கூறியதாகவே கொள்ளவேண்டியுள்ளது. ஏனென்றால் மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதும் வடபகுதியிலிருந்து .இராணுவத்தை விலக்கிக் கொள்வதும் முடியாத காரியங்களாகவே உள்ளன. எந்தவொரு விடயத்தையும் இனவாதப்போக்குடன் பார்க்கின்ற போக்கு இந்த நாட்டில் அளவுக்கு அதிகமாகவே காணப்படுகின்றன. இதன் காரணமாகவே தமிழர்கள் மீது அக்கறையற்ற ஒருபோக்கு தொடர்ந்து செல்கின்றது. அரசு மனம் வைத்திருந்தால் குடாநாட்டை குற்றவாளிகளின் பிடியிலிருந்து எப்போதோ மீட்டிருக்கமுடியும். ஆனால் அவ்வாறு நடந்துகொள்வதை அரசு விரும்பாததால் குடாநாட்டு மக்களின் அவலம் தொடவதாகக் கொள்ள முடிகிறது.

தற்போது அமைச்சர் தலைமையில் இங்கு வருகை தந்த குழுவினர் தாம் வழங்கிய வாக்குறுதிகளைக் காப்பாற்றுவார்களா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல அரசு உண்மையாக நடக்காத வரையில் குடாநாட்டுக்கு விமோசனம் கிடைக்குமென எதிர்பார்க்க முடியாது.

# நெருப்பாற்றைக் கடக்கும் நிலையில் வடக்கு - கிழக்கின் எதிர்காலம்

சேரலாதன்




வடக்கில் தனியானதொரு அரசு இயங்கி வருவதாக மகிந்த ராஜபக்ச கூறியதை இனவாதத்தின் ஒரு வெளிப்பாடான கருத்தாகவே கருத முடிகின்றது. வடக்கில் மைய அரசின் ஆணைகள் மதிக்கப்படுவதில்லையெனவும், சட்டமும் ஒழுங்கும் அங்கு கடைப்பிடிக்கப்படுவதில்லையெனவும் தென்பகுதி இனவாதிகள் இனவாதக் கருத்துக்களைக் கூறிவரும் நிலையில் மகிந்த அதற்கும் ஒருபடி மேலே சென்று தமது பங்குக்கு தனிநாடு தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ளார்.

வடக்கை எந்த வகையிலாவது இராணுவத்தின் அடக்குமுறைக்குள் கொண்டுவர வேண்டும் என்பதில் இனவாதிகள் குறியாக உள்ளனர். தமிழர்கள் அமைதியுடனும், நிம்மதியுடனும் வாழ்வதை இவர்கள் ஒருபோதுமே விரும்புவதில்லை.

**தெற்கில் உருவாகி வரும் தமிழர்களுக்குப் பாதகமான சூழ்நிலை**

தற்போது தமிழர்களுக்குப் பாதகமானதொரு அரசியல் சூழ்நிலை தெற்கில் உருவாகி வருவதைக் காணமுடிகின்றது. மகிந்த தரப்பினர் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு உருவாகி வருவதே அந்தப்பாதகமான அரசியல் சூழ்நிலையாகும். அரச தலைவராக மகிந்தவின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரே வருவதற்கான சாத்தியம் அதிகமாகக் காணப்படுகின்றது. சிலவேளை முன்னாள் பாதுகாப்புச் செயலரான கோத்தபாயவுக்கும் அந்த வாய்ப்புக் கிட்டக்கூடும்.

> தமிழர் தரப்பு இதையெல்லாம் கவனத்தில் கொள்ளாது, பதவிக்காகவும், அதிகாரத்துக்காகவும் சண்டையிடுவதிலேயே தனது காலத்தைக் கடத்தி வருகின்றது. தமிழினம் நிம்மதியாக வாழும் போதுதான் பதவியையும், அதிகாரத்தையும் அனுபவிக்க முடியும். ஆனால் அந்த நிம்மதியை வெகு தூரத்தில் கூடப் பார்க்க முடியவில்லை.



வடக்கில் இறுதிப் போரில் கொல்லப்பட்டவர்களுக்கு நினைவஞ்சலி செலுத்தியமை, வடக்கின் சில இடங்களில் கரும்புலிகள் தினத்தை நினைவு கடர்ந்தமை, முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜய கலாவின் புலிகள் தொடர்பான உரை ஆகியவை தென்பகுதியில் உள்ள இனவாதிகளுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்திவிட்டது. புலிகள் என்று கூறினாலே அங்குள்ளவர்கள் மிரண்டு காணப்படுகின்றனர்.

வடக்குக்கும் தெற்குக்கும் இடையில் ஏற்பட்டுள்ள விரிசல் மேலும் மேலும் விரிவடைந்து செல்வது நாட்டுக்கு நல்ல சகுனமாகத் தெரியவில்லை. இனங்களுக்கிடையில் நல்லுறவு நிலவாத ஒரு நாட்டில் அமைதியும், சுபீட்சமும் ஏற்பட்டு விடாது.

**உலகில் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் இனங்கள் மத்தியில் வேற்றுமைகள் மிகக் குறைவே**

இந்தியா உலகிலேயே இரண்டாவது அதிகூடிய சனத்தொகையைக் கொண்ட மிகப்பெரிய நாடாகத் திகழ்கின்றது. அங்கு பல இனத்தவர்கள் வாழ்கின்றனர். வெவ்வேறு மொழிகளைப் பேசுகின்றனர். மத ரீதியிலும் வேறுபட்டவர்களாக மக்கள் காணப்படுகின்றனர். கலாசாரம், பழக்க வழக்கங்கள் ஆகியனவும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. ஆனால் நாம் அனைவரும் இந்தியர்கள் என்ற உணர்வு அந்த மக்களிடையே குறைவின்றிக் காணப்படுகின்றது. இதுவொன்றே இந்தியா அழிந்துவிடாமல் பாதுகாப்பதற்குப் போதுமானது. ஆனால் இங்கே அவ்வாறானதொரு நிலையைக் காணமுடியவில்லை. இந்த நாடு எமக்குத்தான் சொந்தமென ஓர் இனத்தவர்கள் உரிமை கொண்டாடுகின்றனர். ஏனைய சிறுபான்மை இனத்தவர்கள் ஒதுக்கி வைக்கப்படுகின்றனர். அந்த நிலையில் நாம் அனைவரும் இலங்கையர் என்ற உணர்வு எவ்வாறு தோன்றும்?

தமிழ்த் தலைவர்கள் தனிநாடு கோரி நிற்கவில்லை. பிரிக்க முடியாத நாட்டினுள் தமக்கும் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்றுதான் அவர்கள் கேட்கிறார்கள். இதில் என்ன தவறு உள்ளது? சம்பந்தன், பிரபாகரன் போன்று தனிநாடு கேட்டுப் போராடவில்லை என்பதைக் கூடப் புரிந்து கொள்ள இவர்களால் ஏன் முடியவில்லை? இனவாதம் இவர்களது கண்களை மட்டுமல்லாது, மனங்களையும் மறைத்து நிற்பதால் உண்மைகளை இவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. பெரும்பான்மையோ அல்லது சிறுபான்மையோ தாம் வாழ்கின்ற நாட்டின் மீது உரிமை கோருவதற்கு நாட்டு மக்கள் அனைவருக்குமே உரிமை உள்ளது.

**தமிழ்த் தலைவர்கள் இன்றைய யதார்த்த அரசியல் நிலையைப் புரிந்து செயற்பட வேண்டும்**

இதேவேளை தமிழ்த் தலைவர்கள் தொடர்ந்தும் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டிக்கொண்டிருப்பதால் பயனொன்றும் கிடைக்கப்போவதில்லை. அயல்நாட்டு இராஜதந்திரிகளுடன் பேசுவதாலும்எவ்விதபயனும்கிடைக்கப்போவதில்லையென்பது தெளிவாகி விட்டது. இறுதிப்போரின்போது பல்லாயிரக் கணக்கில் தமிழர்கள் கொல்லப்படும் போது ஐ.நா வால் வேடிக்கை பார்க்க மட்டுமே முடிந்தது. போர் முடிந்து ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான தீர்மானங்களுக்கு என்ன நடந்தது? இலங்கையைக் காப்பாற்றுகின்ற முயற்சியில் சில நாடுகள் ஈடுபடுவதைத்தான் காண முடிகின்றது.

ஆனால் தமிழர் தரப்பு இதையெல்லாம் கவனத்தில் கொள்ளாது. பதவிக்காகவும், அதிகாரத்துக்காகவும் சண்டையிடுவதிலேயே தனது காலத்தைக் கடத்தி வருகின்றது. தமிழினம் நிம்மதியாக வாழும்போதுதான் பதவியையும், அதிகாரத்தையும் அனுபவிக்க முடியும். ஆனால் அந்த நிம்மதியை வெகு தூரத்தில் கூடப் பார்க்க முடியவில்லை.

நாட்டில் ஆட்சிமாற்றமொன்று ஏற்படுமானால் வடக்குக் கிழக்கில் இராணுவ ஆட்சியொன்று ஏற்படுவதற்கான சாத்தியமே அதிகமாக உள்ளது. இதற்கு ஏதுவாகவே புலிகள் மீண்டும் தலைதூக்கி விட்டார்கள் என்றும், வடக்கும் கிழக்கும் தனிநாடுபோன்று செயற்படுவதாகவும், தெற்கு இனவாதிகள் கூறிவருகின்றனர். இதனால் ஆட்சி மாற்றத்தின் பின்னர் கடுமையான சட்டதிட்டங்கள் இங்கு நடைமுறைப்படுத்தப்படலாமென எதிர்பார்க்க முடியும். இதன் காரணமாகத் தமிழர்களின் அவலங்கள் நீடிக்கவே செய்யும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# தீதும் நன்மையும் எமது செயற்பாடுகளின் விளைவே

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தரவுகளின்படி கடந்த ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னரான ஆறு மாதங்கள் காலப்பகுதியில் வடமாகாணத்தில் வீதிவிபத்துக்களில் சிக்கி 2ஆயிரத்து 500பேர் வரையில் காயமடைந்ததாகவும், அவர்களில் 42பேர் உயிரிழக்க நேர்ந்ததாகவும் தெரியவந்துள்ளது. மிக அண்மைகாலமாக குடாநாட்டில் வீதிவிபத்துக்கள் பெருமளவில் அதிகரித்துள்ளமையை நாம் நாள்தோறும் கண்டும், கேட்டும், ஊடகங்கள் வாயிலாகவும் அறிந்து கொள்கின்றோம். இது உண்மையில் எமது சமூகத்தில் உருவாகியுள்ள பின்னடைவே.

குடாநாட்டில் மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்துவோரின் தொகையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையும், வீதிப் போக்குவரத்து வழிமுறைகளைக் கடைக்கொள்ளாது தான்தோன்றித்தனமாக மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்துவதாலும் ஏற்படும் கவலை தரும் நிலை இது.

இத்தகைய அநியாய விபத்துக்களில் எம்மவர்கள் சிக்கி காயமுறாமலோ, உயிரிழப்பைச் சந்திக்காமலோ பாதுகாப்பான விதத்தில் உரிய வீதிப் போக்குவரத்து வழிமுறைகளைக் கடைக்கொண்டு எம்மவர்கள் தத்தமது வாகனங்களைப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுக்க, வீதிப்போக்குவரத்து விடயத்துடன் தொடர்புபட்ட சில வெவ்வேறு தரப்பினர்கள் தற்போது கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளமை பாராட்டுக்குரியதொரு விடயம். குறித்த விடயம் தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்தில் குடிசார் நிர்வாகச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய அதிகாரத் தரப்பினர் பல்வேறு திட்டங்களை வகுத்து அவற்றை உடனடியாகவே நடைமுறைப்படுத்தவுள்ளதாக தெரிய வந்துள்ளது. அந்தவகையில் "கவனமாகச் சென்று வாருங்கள்" என்ற வகையில் போக்குவரத்து பாதுகாப்புச் சிறப்பு நிகழ்ச்சிகளை வடமாகாண ஆளுநர் அலுவலகம் ஒழுங்கு செய்து பொதுமக்கள் மற்றும் வாகனங்களது சாரதிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி செயலாற்றி வருகின்றமை பாராட்டுக்குரியது.


பல்வேறு பின்னடைவுத் தன்மைகளை இனங்கண்டு, அவற்றை நேர் சீர் செய்ய, குறிப்பாக இரவு வேளைகளில் வாகனப் பயணங்களை முறைப்படி மேற்கொள்ள உதவும் விதத்தில், பல்வேறு தரப்புக்களைச் சேர்ந்திருக்கும் தம்மை பங்காளிகளாக்கி செயற்படமுன்வந்தால் வீதி விபத்துக்களைக் கணசமான அளவில் குறைத்திட வாய்ப்பமையும். அதேவேளை தவறான விதத்திலான சாரத்தியம், உரிய ஆவணங்களின்றி வாகனங்களைச் செலுத்துதல் போன்ற தவறுகளுக்கு அதிகபட்சத் தண்டனை வழங்கும் வகையில் சட்ட ஏற்பாடுகளில்பல்வேறுதிருத்தங்கள்,மாற்றங்களைக்கொண்டு வரத் தீர்மானிக்கப்பட்டுள்ளமையும் பாராட்டுக்குரியதே.

அதேவேளை பக்கச்சார்பற்ற வகையில் இத்தகைய குற்றங்களைக் கண்டுபிடித்து, குற்றமிழைப்போருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை காய்தல் உவத்தலின்றி நேர்மையுடன் நடைமுறைப்படுத்தும் விதத்தில் பொலிஸ் தரப்பினர் செயற்பட்டால் இத்தகைய வீதிவிபத்துச் சம்பவங்களில் பலவற்றைத் தடுத்திட இயலும்.

அந்த வகையில் வாகனப்போக்குவரத்து, வீதிப்போக்குவரத்து நடைமுறைகளை உரிய வகையில் கடைப்பிடித்து பொதுமக்களாகிய நாம் அர்ப்பணிப்பு உணர்வுடனும், விழிப்புணர்வுடனும் செயற்பட வேண்டியதும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும்.

இவைகளை நன்குணர்ந்து செயற்படமுன் வருவோமா?

ச.பஞ்சலிங்கம், புன்னாலைக்கட்டுவான்.



# நித்திய சுகம்


373

உடலே கோயில்

# நீரிழிவும் ஆலோசனைகளும்

எம். அரவிந்தன்

**கேள்வி :** 27 வயதுடைய எனது மகளின் உடல் நிறை சிறிது சிறிதாக அதிகரித்துச் செல்கிறது. தற்போதைய நிறை 92 கிலோவாகவும் உயரம் 5 அடி 4 அங்குலமாகவும் காணப் படுகிறது.மாத சுகவீனம் ஒழுங்கற்று இருக்கிறது. எமது குடும்ப மருத்துவரின் ஆலோசனைப்படி சில குருதிப் பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தோம். அந்தப் பரிசோதனை முடிவுகளின் படி நீரிழிவு நோய் ஏற்படும் ஆரம்ப நிலை அறிகுறிகள் இருப்பதாக அவர் கூறியுள்ளார்.மகளுக்கு திருமண ஏற்பாடுகள் இடம்பெற்று வருகிறது.மிக விரைவில் திருமணம் செய்யவிருக்கிறார்.இந்த மாற்றங்களால் மகளின் திருமண வாழ்வில் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா...? எனது மகளின் உடல் நிலை பற்றி விளக்கிக் கூறுங்கள்..?




**பதில் :** உங்களுடைய மகளின் உடல் நிறை மிக அதிகமாக உள்ளது. ஒருவரின் உடல் நிறையானது அவரது உயரத்துக்கேற்ப இருத்தல் அவசியமாகிறது. இதனை 'உடற்திணிவுச் சுட்டெண்' ( Body mass index-BMI) மூலம் கணித்துக் கொள்ள முடியும்.

$$\text{'உடற்திணிவுச் சுட்டெண்'} = \frac{\text{உடல் நிறை (கிலோ கிராம்)}}{(\text{உயரம் (m)})^2}$$

இந்தக் கணிப்பீட்டின் படி மகளின் 'உடற்திணிவுச் சுட்டெண்' ஆனது மிகவும் அதிகமாக உள்ளது. அதாவது '35.09' ஆக காணப்படுகிறது.சாதாரணமாக ஒருவரின் 'உடற்திணிவுச் சுட்டெண்' ஆனது 18.5 தொடக்கம் 23 என்ற அளவு பரிமாணத்தினுள் இருத்தல் அவசியம்.ஒருவரின் உடற்பருமன் அதிகரித்துச் செல்லும் போது பல வகையான பிரச்சினைகளும் நோய்களும் ஏற்படுகின்றன. இளம் பெண்களில் அவர்களது சூலகங்களில் (Ovaries) சிறு கட்டிகள் உருவாதல் போன்ற நோய் (Poly Cysitc Ovarian Syndrome) அறிகுறிகள் ஏற்படும் போது உடற்பருமன் அதிகரிக்கும். மாதவிடாய் ஒழுங்கீனங்கள் ஏற்படும். இவர்களுடைய முகத்தில் பருக்கள் ஏற்படுவதோடு தேவையற்ற விதத்தில் ஆண்களைப் போன்ற உரோம வளர்ச்சியும் ஏற்படும்.


தவறான உணவுப் பழக்க வழக்கம், தேக அப்பியாசமற்ற வாழ்க்கை முறை (Sedentary Life Style)என்பன இவ்வாறான உடற்பருமன் அதிகரிப்புக்கு பிரதானமான காரணங்களாக அமைந்துவிடுகின்றன. இதே போன்று தைரொயிட் சுரப்பிக் குறைபாடு போன்ற சில ஓமோன் சுரப்புத் தொடர்பான பிரச்சினைகளும் இவ்வாறான உடல் நிறை அதிகரிப்புக்குக் காரணமாக அமையலாம்.

உங்களுடைய மகள் போன்று திருமண பந்தத்தில் இணையவிருக்கின்ற இளம் பெண்களின் உடற்பருமன் அதிகரிக்கும் போது பல வகையான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. மாதவிடாய் சக்கரம் ஒழுங்கற்று அமைவதுடன் சிறிது சிறிதாக குறைவடைய நேரிடுகிறது. இவ்வாறான உடலியல் செயல்நிலைகளால் கர்ப்பம் தரிக்கும் சாத்தியக் கூறுகள் குறைவடையும் வாய்ப்புகள் அதிகம் உண்டு.

உங்களுடைய மகளின் குருதிப் பரிசோதனை முடிவுகளின் படி அவர் நீரிழிவுக்கு முன்னைய நிலையில் (Pre diabetes stage) இருக்கிறார். ஆக, ஆரோக்கியமான வாழ்க்கை முறையை அவர் கடைப்பிடிக்க வேண்டும். உடல் நிறையைக் குறைப்பதற்கு முயற்சிக்க வேண்டும். இல்லாவிடின் இன்னமும் சில வருடங்களில் முற்று முழுதான நீரிழிவு நோயாளியாக மாறும் சாத்தியக்கூறுகள் அதிகம் உண்டு. இவருக்கு குருதியில் கொழுப்பின் (கொலஸ்திரோல்) அளவு அதிகரித்தல் மற்றும் உயர் குருதி அழுத்தம் (High Blood Pressure) என்பன ஏற்படும் வாய்ப்புகளும் உண்டு. எனவே இவர் மருத்துவ ஆலோசனைகளை பெறுவது கட்டாயமானது.

**ஆலோசனைகள்**

- ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்தல் நன்று. இனிப்பான சீனி சேர்த்த உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும். அதே போன்று மாச்சத்து அதிகமுள்ள உணவுகளையும்,கொழுப்புச் சத்து அதிகமுள்ள உணவுகளையும் குறைவாக உள்ளெடுத்தல் வேண்டும். இவரது உடற்பருமனை குறைப்பதற்கு ஏற்ற விதத்தில் நாளொன்றுக்கு எடுக்க வேண்டிய கலோரிப் பெறுமானத்தை கணித்து உணவை உள்ளெடுக்க வேண்டும். இதனை மருத்துவ ஆலோசனைப்படி அறிந்து கொள்ள முடியும்.
- ஒவ்வொரு நாளும் ஆகக் குறைந்தது 45 நிமிடங்களாவது உடற் பயிற்சி செய்ய வேண்டும். குறிப்பாக உடல் வியர்க்கும் வரையில் பயிற்சியை செய்வது அவசியம். வேகமாக ஓடுதல், சைக்கிளோட்டுதல் மற்றும் இயந்திரங்களின் உதவியுடன் அப்பியாசம் செய்தல் என்பன இதற்கு உதாரணங்களாகும்.
- இவருடைய நீரிழிவுக்கு முன்னைய நிலையைக் கட்டுப்படுத்துவதற்கு மருத்துவரின் ஆலோசனைப் படி 'மெற்போமின்' மருந்தைப் பயன்படுத்த வேண்டும். இதனால் குருதியிலுள்ள குளுக்கோசின் அளவு கட்டுப்படும். பசியின் தன்மை குறைவடைந்த உடற்பருமனும் குறைவடையும்.
- இவரது உடல் நிலை பற்றிய பூரணமான பரிசோதனைகள் மேற்கொள்வது அவசியம். சில வகையான குருதிப் பரிசோதனைகளுக்கு உதாரணமாக,கொலஸ்திரோல், தைரொயிட் மற்றும் வேறு ஓமோன்கள் பற்றியதான செயன்முறைகளுக்கு உட்பட வேண்டியிருக்கும்.
- இவரது மாதவிடாய் சக்கரத்தை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு உடற்பருமனைக் குறைப்பது அவசியம். மருத்துவ ஆலோசனைப்படி குருதியிலுள்ள ஓமோன் மற்றும் ஸ்கான் (கர்ப்பப்பை, சூலகங்கள்) பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினைகளுக்குத் தேவையான மருந்தை நிபுணத்துவமான மருத்துவரின் ஆலோசனைப்படி பெற்றுக் கொள்ள முடியும்.
- இறுதியாக, ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வாழ்வதற்கு உங்களுடைய மகள் உறுதி பூண வேண்டும். அவ்வாறு வாழ்ந்து உடற்பருமனைக் குறைத்துக் கொள்ளும் போது அவருக்கு இருக்கின்ற பல வகையான பிரச்சினைகளில் இருந்து விடுபட முடியும். இவர் மிக விரைவில் திருமணம் செய்யவிருப்பதால் துரிதமாக மருத்துவ ஆலோசனைகளைப் பெற்று உடல் நிறையைக் குறைத்துக் கொள்ள முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். குருதியிலுள்ள குளுக்கோஸின் அளவைக் கட்டுப்படுத்தி மாதவிடாய் சக்கரத்தை ஒழுங்குபடுத்திக் கொள்வது அவசியமாகிறது. இதன் மூலம் பல நீண்ட காலப் பிரச்சினைகளை குறிப்பாக, கர்ப்பம் தரிக்காத நிலைமையை (Subfertility) தவிர்த்துக் கொள்ள முடியும்.



**நீரிழிவு நோயாளிகளுக்கான கவனக் குவிவு**

- ✦ நீரிழிவு நோய் கண், மூளை, இருதயம் மற்றும் சிறுநீரகங்களைப் பாதிக்கும்.
- ✦ இந்த நோய் உள்ளோர்க்கு ஏனையவர்களை விடவும் பார்வைக் கோளாறு ஏற்படும் வாய்ப்புகள் அதிகம்.
- ✦ கண்களில் பாதிப்பை ஏற்படுத்தும். முக்கியமாக விழித்திரையின் குருதி நாளங்களைப் பாதிக்கும்.
- ✦ விழித்திரையில் ஏற்படும் மாறுதல்களை கண் மருத்துவர்களினால் மட்டுமே பரிசோதித்து கண்டறிய முடியும். மூளை,இருதயம் மற்றும் சிறுநீரகங்களிலும் இதே மாறுதல்கள் ஏற்படுவதால் இந்தப்பரிசோதனை மூலம் இவற்றின் தன்மைகளையும் அறிந்துகொள்ள முடியும்.
- ✦ நீரிழிவு நோயினால் ஏற்படும் விழித்திரைப் பாதிப்பு, நோயின் தீவிரம் மற்றும் எவ்வளவு காலம் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்ற விடயங்கள் சார்ந்து அமைந்திருக்கும்.
- ✦ பல வருடங்கள் நோய் உள்ளவர்களில் 70 தொடக்கம் 80 சதவீதமானவர்களுக்கு விழித்திரைப் பாதிப்பு ஏற்படும்.
- ✦ நீரிழிவு நோயாளிகளுக்கு பார்வையிழக்கும் வாய்ப்பு அதிகம்.குறிப்பாக 25 மடங்கு அதிமாகக் காணப்படும்.
- ✦ குறைந்த பார்வை அல்லது பார்வையிழப்பு ஏற்படும் வரை எந்தவித அறிகுறிகளும் தெரியாது.
- ✦ விழித்திரைப் பாதிப்பை ஆரம்ப நிலையிலேயே கண்டு பிடித்து லேசர் சிகிச்சையளிப்பதன் மூலம் கணிசமான அளவில் பார்வையிழப்பைத் தடுக்க முடியும்.
- ✦ லேசர் சிகிச்சை மூலம், இருக்கும் பார்வையைப் பாதுகாக்க முடியும்.மாறாக இழந்த பார்வையைத் திரும்பப் பெற முடியாது.
- ✦ விழித்திரைப் பாதிப்பினால் ஏற்படும் பார்வையிழப்பைத் தடுக்க நீரிழிவு நோயாளிகள் அனைவருமே 12 மாதங்களுக்கு ஒருமுறையேனும் தங்கள் கண்களை கண் மருத்துவரிடம் அவசியம் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். விழித்திரை பாதிக்கப்பட்டிருந்தால் அடிக்கடி பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் கண் பார்வையை முற்றிலும் இழந்துபோகாமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

*கட்டுரையாளர்: நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதி சிறப்பு மருத்துவ நிபுணர், யாழ். போதனா மருத்துவமனை.*


ஞாயிறு சிறப்பம்சம் 15.07.2018

சூரியகாந்தி

உதயன்
















# அழுத்த குழுக்களின் அவசியம்

கட்டுரை

வி. அருணாசலம்

போர் முடிந்த கையோடு தோன்றிய பிரச்சினைகள் பல. காணாமல் ஆக்கப்பட்ட, அரசியல் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கிற உறவுகளுக்காகவும், சில ஆக்கிரமிப்புக்களை நிறுத்தும்படியும், அத்துமீறிய குடியேற்றங்கள், விகாரை அமைப்புக்கள், என்பவை மூலம் தம்மிடம் இருந்து பறிக்கப்பட்டவற்றை மீள வழங்கக் கோரியும் பாதிக்கப்பட்ட மக்கள் திரும்பத் திரும்பக் குரல் கொடுக்கிறார்கள், களத்தில் இறங்கிப் போராடவும் செய்கிறார்கள். அல்லல்படுகிறார்கள், ஆனாலும் தீர்வில்லாமல் நீள்கின்றன அவை. இப்படியிருக்க, அவதாரங்கள் பல எடுத்து, எழுகிற புதிய புதிய பிரச்சினைகள் அவர்களைச் சூழ்ந்து மல்லுக் கட்டி நிற்கின்றன. நெருக்குதலுக்குள்ளாக்குகின்றன. கிளை வடிவங்கள் பல பூண்டு முதன்மைப் பிரச்சினைகளை நீத்துப்போகச் செய்கின்றன.



கோட்டையில் இராணுவ முகாம், கோட்டையை அண்மித்த முற்றவெளியில் பிக்குவின் உடல் தகனம், நயினாதீவில் புத்தர் சிலை, எல்லைக் கிராமங்களில் அத்துமீறிய குடியேற்றங்கள், அத்துமீறிய கடல் மீன்பிடி, பொலிசாரின் துப்பாக்கிச் சூடுகள், பல்கலைக் கழகங்களில் பிடுங்குப்பாடு, கஞ்சா உட்பட்ட போதைப் பொருள்களின் பரவல், கொலை, கடத்தல், வன்புணர்வு, வாள்வெட்டு எனப் பலவாகி முன்வந்து நிற்கின்றன. இவற்றைக் கையாள்வதென்பது மக்களாலோ, அரசியல்வாதிகளாலோ முடியாத ஒன்றாக இருக்கிறது. ஆனால், அழுத்தக் குழுக்களால் இதைச் சாதிக்க முடியும். தீர்வு காண்பது மாத்திரமன்றி, திரும்பவும் நிகழாமல் இருப்பதற்கான, கட்டுக்குள் வைத்திருப்பதற்கான, எந்நேரமும் அவற்றுடன் மல்லுக்கட்டி வலுவிழக்கச் செய்வதற்கான, வென்றெடுப்பதற்கான ஆற்றலை அழுத்தக்குழுக்களால் தொடர்ந்து பேணிக்கொள்ள முடியும்.

### 'பிறசர் குறூப்'

'பிறசர் குறூப்' என ஆங்கிலத்தில் கூறப்படுகின்ற அழுத்தக் குழுக்கள், தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு அவசியம் என்பதை, தமிழ் அரசியல்வாதிகளோ, 'சிந்தனையாளர்கள்', 'ஆய்வாளர்கள்' என்று தம்மைக் றிக்கொள்பவர்களோ இன்றுவரை விளங்கிக் கொண்டதாக இல்லை. இந்த அழுத்தக் குழுக் கட்டமைப்புக்கள் சிங்களவர்களிடமும் முஸ்லிம்களிடமும் அதிகமாக வளர்ச்சியடைந்துள்ளன. அந்த இரண்டு இனங்களினதும் முக்கியமான அழுத்தக் குழுக்களாகப் பௌத்த, இஸ்லாம் மதங்கள் காணப்படுகின்றன.

பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் என்பவை செயற்பாட்டு வடிவங்களைப் பெறாது தடுப்பதில் பௌத்த அழுத்தக் குழுக்கள் வெற்றி பெற்றன. அதே வேளை சிங்கள, பௌத்த தேசியவாதக் குழுக்கள் இன்னோர் பக்கத்தில் அழுத்தக் குழுக்களாக எழுச்சியும் கண்டன. இவை அரசியல் வரலாற்றுக்குள் புதைந்திருக்கும் உண்மைகள். பன்னாட்டு அமைப்புக்கள் பல, சிங்கள அழுத்தக் குழுக்களுக்கு நிதி உதவியும், சட்ட ஆலோசனைகளும் வழங்கின.





பொதுபலசேன ஓர் அழுத்தக் குழுவாக அல்லது சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கு மிக்க அமைப்பாக இருக்கிறது. அதன் செயலாளரான ஞானசார தேரர் நீதிமன்றில் வைத்து பத்திரிகையாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவியைத் தரக்குறைவாகப் பேசியிருந்தார். இதை லபக்கெனப் பிடித்த இன்னோர் அழுத்தக் குழுவாகச் செயற்படுகின்ற பெண்கள் அமைப்பு ஒன்று கொடுத்த நெருக்கடி காரணமாக அவரைச் சிறைக்கு அனுப்ப முடிந்தது.

### தமிழர்கள் மத்தியில் 'அழுத்தக் குழு' வளர்ச்சியில்லை

தமிழ் அரசியல்வாதிகள் சிலர் தமக்குள் உள்ள போட்டிகள் காரணமாக சில ஆர்ப்பாட்டங்களில் முந்திக்கொண்டு இறங்கினாலும், அவை குறிப்பிட்ட விடயத்தில் வெற்றி பெறும்வரை முன்னேறிச் செல்வதில்லை. தமிழர்கள் மத்தியில் இன்றுவரை 'அழுத்தக் குழு' ஒன்று தனிப் பெயருடன் அலுவலகம் ஒன்றை அமைத்து சட்ட ஆலோசனை பெற்றுச் செயற்பட்டதாக இல்லை. இது தமிழரின் அரசியல் சமூக, விடயங்களில் காணப்படும் மிகப்பெரிய குறைபாடாகும்.

தமிழரைப் பொறுத்தவரை, பிரித்தானியர் காலத்தில் தமக்கிருந்த அரச உத்தியோகப் பலம் ஒழிக்கப்பட்டதும், தாமாகத் தம்மை முடக்கிக் கொண்டார்கள். அரச ஊழியம் செய்தவர்கள் அரசுக்கு விசுவாசமாகவும், தமது தொழில் பறிபோய்விடக்கூடாது என்பதிலும் பதவி, உயர்வுகள் பாதிக்கப்பட்டுவிடும் என்பதிலும் கவனம் செலுத்தினார்களே தவிர, எவரும் ஓர் அழுத்தக் குழுவாகச் செயற்படத் தயாராக இருக்கவில்லை.

பல அரச கட்டமைப்புக்களிலும் சிங்கள அழுத்தக் குழுக்கள் உறுதியான செயற்பாட்டுடன் இருக்கின்றன. அவர்கள் பெறுகிற வெற்றியானது அந்தக் கட்டமைப்பில் உள்ளீர்க்கப்பட்டிருக்கிற தமிழருக்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. பல தமிழ் ஊழியர்கள் அதற்குச் செவி சாய்த்துச் செயற்படுகின்றமையும் கண்கூடு.

'சிங்களம் மட்டும்' என்ற கோட்பாட்டைக் கொண்டு வந்ததால் 'தமிழ்த் துரோகி' எனச் சாதாரண மக்களுக்குப் பண்டார நாயக்காவைக் காட்டி உசுப்பேற்றியவர்கள் தமிழ் அரசியல்வாதிகளும், உத்தியோகத்தர்களும், 'புத்தி ஜீவிகளும்' தான். ஆனால், அவர்களது பண்டாரநாயக்க குடும்பத்துடனான உறவு சிறிமா - சந்திரிகா என இன்று வரை தொடர்வதே வரலாறு. இத்தகைய 'தமிழ்த் தலைவர்களும்', 'புத்தி ஜீவிகளும்' தனிநபர் நலன்களில் கவனம் செலுத்துகின்றனரே தவிர, தாம் சார்ந்த மக்கள் விடயத்தில் அல்ல. அவ்வாறு செயற்பட்டால், அரசியல் எதிர்ப்புகள் கிளம்பும், அதனால் தமது எதிர்காலம் பாதிக்கப்படும், எனக் கருதி தமது அரசியல் வாழ்க்கையில் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். இவர்கள் மத்தியில் ஒரு போலித் தேசிய வாதமே எப்போதும் நிலவி வருகிறது.

### சிங்களவர்கள் மத்தியில் புதிய புதிய குழுக்கள் தோற்றம்

அழுத்தக் குழுச் செயற்பாட்டை ஏலவே கொண்டிருக்கிறார்கள் சிங்களவர்கள். ஏற்கனவே தொடங்கிய சில அழுத்தக் குழுக்களின் வேகம் போதாது என்பதால், அதிலிருந்து வேறுசில அழுத்தக் குழுக்களைத் தோற்றுவித்தும் வருகின்றனர். இந்தப் போக்கு சிங்கள மக்களை மேலும் ஜனநாயக வழிப்படுத்துவதற்கும், குரல்கொடுத்து உரிமைகளை வென்றெடுப்பதற்கும் வாய்ப்பாக அமைகிறது. ஆனால், மிக நீண்ட போராட்ட வரலாற்றைக் கொண்டிருக்கும் (அகிம்சை, ஆயுதம்) தமிழர்கள் பல படிப்பினைகளைப் பெற்ற மக்களாக இருந்தும்கூட, தமிழர் மத்தியில் அழுத்தக் குழுக்கள் இல்லாதிருக்கிறது. இதனால் ஒரு விடயத்தைத் தர்க்க ரீதியாக, அல்லது சட்ட ரீதியாக அணுக முடிவதில்லை. தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ளடங்குகின்றனர் என்ற அடிப்படையில் இந்து மதக் கட்டமைப்புக்களால், சிறப்பான அழுத்தக் குழுக்களாகச் செயற்பட முடியும். ஆனால், இவர்களில் பலர் ஏதோ ஓர் அரசியல்வாதிக்குப் பின்னால் அல்லது கட்சிக்குப் பின்னால் நிற்கின்ற நிலையும், அல்லது மக்கள் நலன் சாராமல் மத நலனிலேயே அதிக கரிசனை காட்டும் நிலையுமே காணப்படுகின்றது. சுன்னாகத்தில் கழிவு ஒயில் கலந்த குடிநீர் தொடர்பில், ஓர் அழுத்தக் குழு உறுதியாகச் செயற்பட்டிருந்தால், குற்றவாளிகள் தண்டிக்கப்படவும், பாதிக்கப்பட்ட மக்கள் நிவாரணம் பெறவும் அது வாய்ப்பளித்திருக்கும்.

### தமிழரின் தற்காலிக அழுத்தங்கள்

காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், கைதிகள் விடுதலை போன்ற விடயத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் தாமாகக் களத்தில் இறங்கித் தமது உயிரைப் பணயமாக வைத்துத் தமது இலக்கை அடைந்துள்ளார்கள். தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வருகிறார்கள். இவர்கள் தமது பிரச்சினை தீர்ந்தவுடன் விலகிச் சென்றுவிடுகின்றனர். அதுவரை அவர்கள் அரசியல்வாதிகளைக் கட்டாயப்படுத்தக் கூடிய அழுத்தக்குழுவுக்குரிய தன்மையைப் பெற்றிருப்பர். இவர்கள் தாமாக முன்வந்து போராட்டங்களில் வெற்றியைப் பெறுவதை அறிந்ததும் 'தமிழ்த் தலைவர்கள்' சிலர் தாமும் ஓடிச்சென்று அந்தப் போராட்டத்துக்குள் தம்மைச் செருகிக் கொள்ளும் நிலை காணப்பட்டது. இது கூடக் கட்சிகளுக்கிடையிலான போட்டிகளாக அமைகின்றனவே தவிர ஓர் அழுத்தக் குழுவுக்குரிய செயற்பாடாக நீடிப்பதில்லை.

> **தமிழர் மத்தியில் அழுத்தக் குழுக்களை உருவாக்கினால், அரசியல் கட்சிகளுக்கு எதிரான போராட்டமாகவோ, அவற்றை விமர்சிப்பதாகவே, எதையும் குழப்பியடிக்கும் விடயமாகவோ அமைந்துவிடவும் வாய்ப்புண்டு. அவ்வாறாகாமல் தமிழ் மக்களை விழிப்படையச் செய்வதற்கும் மேலும் ஜனநாயக மயப்படுத்துவதற்கும் தொடர்ந்து வலுவாகக் களத்தில் நின்று உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதாகவுமே கட்டியமைக்கவேண்டும்.**

இரணைதீவு மக்கள் ஓர் அழுத்தக்குழுவாகச் செயற்பட்டுத் தமது தீவில் இறங்கினர். தமிழ்த் தலைவர்கள் அங்கு ஓடிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. இது அந்த மக்கள் மத்தியில் காணப்பட்ட அழுத்தக் குழுச் செயற்பாட்டின் வெற்றியே. அவர்களின் வெற்றிக்குப் பிறகு அந்தக் கட்டமைப்பு இல்லாதுபோயிற்று. இரணைதீவு மற்றும் போராடி வருகிற ஏனைய தமிழ் மக்களையும் ஒன்றிணைத்துக் கட்டமைக்கக்கூடிய பலம் மிக்க ஒரு அழுத்தக் குழுவின் அவசியம் இன்னமும் உணரப்படவில்லை. ஆனால், தமிழர் மத்தியில் கிறிஸ்தவ அமைப்புக்கள் சில சிறியளவான அழுத்தங்களையாவது ஏற்படுத்தி நிற்பதாகச் செயற்பட்டு வருவதும் கண்கூடு. அதற்குக் காரணம் கிறிஸ்தவத் துறவிகள் பாதிக்கப்பட்ட, போராடுகிற சூழலை எட்டிப்பார்ப்பதுவும், அந்த மதத்தின் உலகளாவிய செல்வாக்குமே.



### அழுத்தக் குழுக்களால் காத்திரமாகப் பங்காற்ற முடியும்

மகிந்த ராஜபக்சவின் ஆட்சியை எவருமே மாற்ற முடியாது என்று சிங்களச் சமூகம் நினைத்திருந்த வேளையில் தனது உயிருக்கும் அஞ்சாது சோபித தேரர் அந்த ஆட்சியை மாற்ற வேண்டும் என்ற முடிவை எடுத்ததன் விளைவாகவே பலர் அதற்கு ஆதரவாகச் செயற்படவேண்டியிருந்தது.

இத்தகைய ஒரு நிலை தமிழ் அரசியல்வாதிகளை மாற்றுவதிலோ, கட்சிகளை ஜனநாயக மயப்படுத்துவதிலோ ஏற்படுத்தப்படவில்லை. ஒரு கட்சியைச் சார்ந்தவர்களை மற்றக் கட்சிக்காரர் விமிர்சிப்பதோ, குரல் கொடுப்பதோ அழுத்தக் குழுச் செயற்பாடு அல்ல. அழுத்தக் குழுக்கள் உரிய காலத்தில் உரிய முறையில் செயற்பட்டிருந்தால், ஒரு சிறிய இனமான தமிழர் அதிக கட்சிகளை உருவாக்கியிருக்க வாய்ப்பில்லை.

மக்களின் மேம்பாட்டு விடயங்களில் மதத் தலைவர்கள், நீதித் துறையினர், புத்திஜீவிகள், ஊழலுக்கு எதிரான அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள் எனப் பலர் களமிறங்க முடியும். அவ்வாறு களமிறங்குவோரின் கடந்தகாலம் கறைபடியாதிருப்பது அவசியம்.

சிங்கள மக்கள் மத்தியில் ஜே.வி.பி ஒரு கட்சியாகவும் முக்கிய அழுத்தக் குழுவாகவும் செயற்பட்டு வருகிறது. மத்திய வங்கி பிணைமுறி ஊழல் தொர்பில் ஆராய்ந்த கோப் குழுவின் தலைவர் சுனில் கந்துநெத்தி ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர். அவர் பல சந்தர்ப்பங்களில் இந்த விவகாரத்தை மூடி மறைக்க அனுமதிக்கவில்லை. இவ்வாறானதொரு பங்களிப்பு சுன்னாகம் கழிவு நீர் தொடர்பில் தமிழ்த் தலைமைகளிடம் இல்லாது போனது துர்ப்பாக்கியமே.

### தமிழர் மத்தியில் குழுக்கள்

தமிழர் மத்தியில் அழுத்தக் குழுக்களை உருவாக்கினால், அரசியல் கட்சிகளுக்கு எதிரான போராட்டமாகவோ, அவற்றை விமர்சிப்பதாகவோ, எதையும் குழப்பியடிக்கும் விடயமாகவோ அமைந்துவிடவும் வாய்ப்புண்டு. அவ்வாறாகாமல் தமிழ் மக்களை விழிப்படையச் செய்வதற்கும் மேலும் ஜனநாயக மயப்படுத்துவதற்கும் தொடர்ந்து வலுவாகக் களத்தில் நின்று உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதாகவுமே கட்டியமைக்கவேண்டும்.

உதாரணமாக, ஆசிரியர்களால் மாணவிகள் பாலியல் தொல்லைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள் என்று அடையாளம் கண்டால், இந்த விடயத்தில் பொதுமக்கள் தரப்பில் இறுக்கமான செயற்பாடுகளை முன்னெடுக்கும் ஓர் அழுத்தக் குழுவை உருவாக்கிக் குறிப்பிட்ட ஆசிரியர் தனது வாழ்நாளில் ஆசிரியத் தொழிலைச் செய்ய முடியாதவாறும், அதேவேளை தண்டனையைப் பெற்றுக் கொடுக்கிற சட்ட நடவடிக்கைகளைச் சோர்வடைய விடாமல் செய்து முடிக்கிற ஆற்றலையும் இந்த அழுத்தக் குழுக்கள் மூலம் செயற்படுத்த முடியும்.

தமிழர்கள் ஒருவிடயத்தில் கடுந்தீவிரப் போக்கைக் கடைப்பிடிப்பதாக வெளிக்காட்டிக் கொண்டாலும், சிங்களவருக்கு இருக்கக்கூடிய தன்மையில் அது இருப்பதில்லை. சிங்களவரைப் பொறுத்தவரை அவர்களுக்கு என்று ஓர் அரசு உண்டு. சமூகக் கட்டமைப்புக்கள் உள்ளன. அவற்றில் மாற்று வழிகளைத் தேடினால் போதுமானது. ஏற்கனவே இருக்கின்ற கட்டமைப்பக்குள் ஜனநாயகத் தன்மைகளை உட்செலுத்தினால் போதுமானது. அப்படியிருந்தும் அவர்கள் அழுத்தக் குழுக்களைப்போல பலதையும் முன்னெடுத்து வருகின்றனர். தமிழரைப் பொறுத்தவரை அரச கட்டமைப்போ, இறுக்கமான சமூகக் கட்டமைப்போ ஒற்றுமையோ இல்லாத நிலையே காணப்படுகிறது. இந்த அடிப்படைக் கட்டுமானங்கள் இன்றியே இதுவரை அரசியல் நடத்துகிறார்கள். இப்படியிருந்தும் இன்றுவரை அழுத்தக் குழுக்களின் அத்தியாவசியம் உணரப்படாமலேயே இருக்கிறது.

தமிழர்கள் அழுத்தக் குழுக்களை அமைக்கவேண்டியது இலங்கை அரசுக்கு எதிராக அல்ல. தமிழர்கள் தமக்குள் ஜனநாயகத்தையும் ஒற்றுமையையும் கொண்டுவருவதற்காகவே. தமிழர்கள் மேலும் மேலும் புதிய கட்சிகளைத் தொடங்குவதைவிட பல்வேறுபட்ட புதிய அழுத்தக்குழுக்களை உருவாக்குவதே தற்போதைய தேவையாகும்.

# 'சிடைன்: ஏ 21செஞ்சரி போர்ட்றைட்'

**2018** ஆம் ஆண்டுக்கான உலகக்கோப்பை கால்பந்துப் போட்டி ரஷ்யாவில் களைகட்டியிருக்கிறது. பிரபல அணிகளின் எதிர்பார்ப்புக்களைச் சிதறடித்துப் புதிய முனைப்புக்கள் பலவற்றையும்கூடச் சில புதிய அணிகள் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இதன் நிமித்தம் கடந்த வாரம் பிறேசில் நாட்டைச் சேர்ந்த கால்பந்து ஆட்டக்காரர் 'பீலே' பற்றிப் பேசுகின்ற திரைப் படம் குறித்த சிறிய கட்டுரை வடிவத்தைத் தந்திருந்தோம். அவ்வகைக்குள்தான் இதுவும் அடங்குகிறது. பிரான்ஸ் நாட்டுக் கால்பந்து ஆட்டக்காரனான 'சினேடின் சிடென்' பற்றி இது பேசுகிறது.




பிரான்ஸில் உருவான ஆட்டக்காரரே 'சினேடின் சிடென்'. பீலே யைப் போன்று நளினமோ மரடோனோவைப்போன்று வேகமோ இன்றைய மெஸ்ஸியைப் போன்று நளிணம் கலந்த வேகமோ அவருக்குக் கிடையாது. அவரிடம் காணப்பட்ட மன உறுதியும் விடாமுயற்சியும் போராட்ட குணமும் அதற்கு ஈடாக அமைந்தன.

2005ஆம் ஆண்டு. ரியல் மட்ரிட், வில்லாரியல் ஆகிய ஸ்பெயின் நாட்டு அணிகள் இரண்டுக்கு இடையே மாட்ரிட் நகரின் புகழ்பெற்ற கால்பந்து மைதானத்தில் ஒரு போட்டி. அந்தப் போட்டியின் 90நிமிடக் காட்சித் தொகுப்பே 'சிடென்: ஏ 21 செஞ்சரி போர்ட்றைட்' எனும் ஆவணப்படம். ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த டக்ளஸ் கோர்டனும் அல்ஜீரியாவைச் சேர்ந்த பிலிப்பி பார்ரீனோவும் சேர்ந்து இந்தப் படத்தை உருவாக்கியுள்ளார்கள். 17கமராக்களைப் பயன்படுத்தி அந்தப் போட்டியை அவர்கள் பதிவு செய்தார்கள். அந்தப் போட்டியினூடே 'சினேடின் சிடென்' என்ற தலைசிறந்த கால்பந்து ஆட்டக்காரனின் வாழ்க்கையை அவர்கள் விவரித்த விதம் சுவாரசியமாக இருக்கிறது.

### தலைமுறைக்கு ஒருவர்

100மீற்றர் நீளமும் 50மீற்றர் அகலமும் கொண்ட மைதானத்தில்தான் எல்லா ஆட்டக்காரர்களும் கால்பந்து விளையாடுகிறார்கள். 2.5மீற்றர் உயரமும் 7.32மீற்றர் அகலமும் கொண்ட கட்டத்துக்குள் பந்தைத் தள்ளுவதே அவர்களது சவால். அவர்கள் அனைவரும் 11வீரர்களை எதிர்த்துத்தான் விளையாடுகிறார்கள். கால்கள்தாம் அவர்களது ஆயுதம். சிறுவயது முதலே அவர்கள் விளையாடுகிறார்கள். களமும் திறனும் வாய்ப்பும் சமமாகவே உள்ளன. இருப்பினும், ஒரு தலைமுறைக்கு ஒன்று அல்லது இரண்டு சிறந்த ஆட்டக்காரர்களே உருவாகிறார்கள்.

பீலேவுக்கு இணையாக அவர் தலைமுறையில் யாருமில்லை. அதே போன்றே மரடோனாவுக்கு இணையாக அவர் தலைமுறையில் யாருமில்லை. மரடோனாவுக்குப் பின் தனித்துவத் திறன்மிக்க ஆட்டக்காரர்கள் என்று யாரையும் தனித்துப் பிரிக்க முடியாத வண்ணம், ஒரு முழுமையான குழு விளையாட்டாகக் கால்பந்தாட்டம் மாறியது. அந்தக் காலகட்டத்தில் பிரான்ஸில் உருவான ஆட்டக்காரரே 'சினேடின் சிடென்'. பீலே யைப்போன்று நளினமோ மரடோனோவைப்போன்று வேகமோ இன்றைய மெஸ்ஸியைப் போன்று நளிணம்கலந்த வேகமோ அவருக்குக் கிடையாது. அவரிடம் காணப்பட்ட மன உறுதியும் விடாமுயற்சியும் போராட்ட குணமும் அதற்கு ஈடாக அமைந்தன.

### இரசிகர்களின் ஆட்டக்காரர்

2005ஆம் ஆண்டில் நடந்த அந்தப் போட்டியில் ரியல் மட்ரிட் அணியின் சார்பாகச் சிடென் விளையாடுகிறார். அந்தப் போட்டியின் முடிவு என்ன ஆகும் என்று சிடெனுக்குத் தெரியாது. பிரம்மாண்டமான திரையில், வழுவழுப்பான மொட்டைத் தலையுடன் 'ஜென்' மன நிலையைப் பிரதிபலிக்கும் சாந்தமான முகத்துடன், அவர் மூச்சிரைக்க, வியர்வை சொட்ட விளையாடுகிறார். உடன் ஆடும் வீரர்களை உற்சாகப்படுத்துகிறார். இரசிகர்களைப் பார்த்துக் கைகாட்டுகிறார். மகிழ்ச்சியில் குதிக்கிறார். கவலையுடன் கத்துகிறார். ஏமாற்றத்தில் தரையை உதைக்கிறார். எதிர் அணி ஆட்டக்காரர்களுடன் மல்லுக் கட்டுகிறார். நடுவருடன் வாக்குவாதம் செய்கிறார். திடீரென்று கமராவைப் பார்த்துச் சிரிக்கிறார். "சிடென்... சிடென்" எனும் கூச்சல் கேட்டு, நாமும் அவர் நாமத்தை முணுமுணுக்கத் தொடங்குகிறோம். நாமும் அந்தப் போட்டியினுள் இருக்கிறோம். நமக்கும் மூச்சிரைக்கிறது. நாமும் அவருடன் சேர்ந்து விளையாடுகிறோம். பந்து அவர் காலை விட்டு விலகிப் பிறர் கால்களில் தஞ்சம் அடையும்போது எல்லாம், எமக்குச் சிடெனின் வாழ்க்கைச் சம்பவங்கள் விவரிக்கப்படுகின்றன. அந்தப் போட்டியின் இறுதியில் அவர் நடுவரால் வெளியேற்றப்படுகிறார். இந்தப் படத்தில் நடந்ததுபோன்றே 2006ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகக் கோப்பையின் இறுதிப் போட்டியில் சிடேன் வெளியேற்றப்பட்டிருப்பார் என்று கால்பந்து இரசிகர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

### மீண்டும் சிடேன்

2005ஆம் ஆண்டில் நடந்த போட்டியுடன் சிடென் கால்பந்து விளையாட்டிலிருந்து ஓய்வுபெற்றுவிட்டார். அவரின்றி 2006ஆம் ஆண்டு உலகக் கோப்பைத் தகுதிப் போட்டியில் பிரான்ஸ் அணி தடுமாறியது.




அந்தப் போட்டிகளில் பல மோசமான தோல்விகளைச் சந்தித்தது. பின் அதிர்ஷ்டவசமாகத் திக்கித் திணறியே உலகக் கோப்பைக்குத் தகுதி பெற்றது. சிடேன் இல்லாமல், பிரான்ஸ் கால்பந்து அணியே இல்லை என்பதைப் பயிற்சியாளர் உணர்ந்தார். ஆகவே, பயிற்சியாளர் சிடெனிடம் பேசியும் மன்றாடியும் அவரை மீண்டும் விளையாட வைத்தார்.

சிடென் மீண்டும் அணிக்குத் திரும்பியவுடனே பிரான்ஸ் அணிக்குத் தலைவரானார். ஓய்வுக்குப் பின் திரும்பியதால், ஆரம்பச் சுற்றுகளில் அவர் அவ்வளவாக ஜொலிக்கவில்லை. பிரான்ஸும் தட்டுத் தடுமாறித்தான் அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. ஆனால், அதற்குப் பின் நடந்தது எல்லாம் நம்பவே முடியாத அற்புதங்கள். காலிறுதிக்கு முந்தைய போட்டியில் சிடென் வெளிப்படுத்திய ஆட்ட நேர்த்தி உலகை வியக்கவைத்தது. அந்தப் போட்டியில் உலகக் கோப்பையை வெல்லும் என எதிர்பார்க்கப்பட்ட ஸ்பெயின் அணியை 3:1 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் வீழ்த்தியது. காலிறுதியில் கால்பந்து ஜாம்பவானான பிரேசிலை பிரான்ஸ் வீழ்த்தியது. அரையிறுதியில் போர்த்துக்கலை எளிதில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

### திகைக்கவைத்த திருப்பம்

இறுதிப் போட்டியில் இத்தாலியுடன் பிரான்ஸ் மோதியது. கால்பந்து இரசிகர்களின் நாயகனாக சிடேன் களத்தில் இருந்தார். இரசிகர்கள் சிடெனுக்காக ஆர்ப்பரித்தார்கள். போட்டி விறுவிறுப்பாகச் சென்றது. 1:1 என்ற கோல் கணக்கில் இரண்டு அணிகளும் சமமாக இருந்தன. அப்போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது.

ஒரு 'ஜென்' துறவியைப்போன்று அமைதியான முகத்துடன் தியான நிலையில் விளையாடி வந்த சிடென், திடீரென்று சினங்கொண்டு தனது தலையால், ஒரு காளையைப்போல முட்டி, 'மார்கோ மெடராஸ்ஸி'எனும் இத்தாலிய ஆட்டக்காரரைக் கீழே தள்ளினார். நெஞ்சைப் பிடித்தபடி அந்த ஆட்டக்காரர் சுருண்டு விழுந்தார்.

மைதானமே அதிர்ச்சியில் உறைந்துபோனது. தொலைக் காட்சிகளில் போட்டியைப் பார்த்த இரசிகர்கள் மூச்சடைத்துப் போனார்கள்.

உலகையே உலுக்கிய அந்தச் சம்பவம் மட்டும் நிகழ்ந்திருக்காவிட்டால், பிரான்ஸ் உலகக் கோப்பையை வென்றிருக்கும். சிடெனும் கால்பந்து உலகின் நாயகனாக என்றும் நிலைத்திருப்பார். வரலாறு அவருக்குக் கருணை காட்டவில்லை. அவர் வில்லனாக என்றும் நிலைத்துவிட்டார்.

இந்த ஆவணப்படத்தின் இறுதியிலும், சிவப்பு அட்டை காட்டப்பட்டு நடுவரால் மைதானத்திலிருந்து சிடென் வெளியேற்றப்படுவார். தலையைக் குனிந்தபடி வெளியேறுவதுடன் படம் முடிவுற்றது. சிடென் என்ற சகாப்தமும் அதன் பிறகு நடந்த 2006ஆம் ஆண்டுக்கான உலகக் கோப்பைக் கால்பந்து இறுதிப் போட்டியுடன் அதேபோன்று முடிவுற்றது பெரும் சோகமே.

சிடென் இன்றைக்குச் சில வருடங்களாக ரியல் மட்ரிட்டின் பயிற்சியாளராக இருந்து வருகிறார். அவர் கையாளும் பற் பல உத்திகள் பற்றி ஏராளம் விமர்சனங்கள் இருக்கின்றன. ஆனாலும் வெற்றிகளைக் குவிப்பதில் அந்த உத்திகள் இற்றைவரை ஒருபோதும் பின்னிற்பதில்லை. 'றோனால்டோ' எனும் தலைசிறந்த மற்றுமொரு ஆட்டக்காரரைத் தன்னகத்தே கொண்ட அணி அது.


தகவல்: நன்றி த ஹிந்து

facebook Search Home Profile Inbox Friends Account

# சின்னதா ஓர் அரட்டை

அரட்டை
மேரிகிரேஸ் வரதராஜன்

## வாங்கையா வாத்தியாரய்யா! இது மிஸ்ரர் கமலுக்கு!



கீச்சகப் பக்கத்தில் இனிப்பதிவிடுவதில்லை என்றுகூறியபடி கட்சி ஆரம்பித்த கமல் மறுபடியும் கீச்சகத்தில் கிசு கிசுப்பை ஏற்படுத்தியிருக்கிறார்.

"என் மகள்களைப் பள்ளியில் சேர்க்கும் போது ஜாதி, மதம் பதிவு செய்ய மறந்துவிட்டேன். இப்படித்தான் ஜாதி அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படுகிறது என்பதால், ஒவ்வொரு தனி மனிதரும் முன்னேற்றத்துக்குப் பங்களிப்புச் செய்ய வேண்டும். கேரளா மாநிலம் இதைக் கடைப்பிடிக்கிறது. சாதி மதத்தைப் பள்ளிச் சான்றிதழ்களில் குறிப்பிடாமல் இருப்பவர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள்" என்று பதிவிட்டிருக்கிறார்.

"வாங்கய்யா வாத்தியாரய்யா" என்று கமலை வரவேற்ற அரட்டையர்கள் வசை மாரியைப் பொழிந்துதள்ளத் தவறவில்லை. "சான்றிதழ்களில் மாத்தினால் மாத்திரம்போதாது. சமூக நீதியப் புரிஞ்சுகிட்டு அரசியலுக்கு வரவும்" "தலித்துக்கள் முன்னேறும்வரை பொறுத்துத் தான் ஆகனும். அவசரப்பட முடியாது. இங்க இட ஒதுக்கீடு என்பது நிவாரணமே தவிர வேறு இல்லை" என்கிறார்கள்.



## சிறு நீர்ப் பாசனம்!

'சிறுநீர்ப்பாசனம்' என்று மொழிபெயர்ப்புச் செய்த எச்.ராஜாவை லபக்கொன்று கௌவிக்கொண்டுள்ளனர் அரட்டையர்கள். "சிறுநீர்ப்பாசனத்துக்கு இந்திய - மத்திய அரசு 332கோடிரூபா நிதி ஒதுக்கீடு" என்பதாக அமித்ஷாவின் உரையைத் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்த எச்.ராஜா தான் இந்த வார இணைய உலகில் பேசப்படும் 'ரொப்' நபர். 'நுண்நீர்ப்பாசனம்' என்று பொருத்தப்படக் கூறியிருந்தால் அவர் தப்பித்திருக்கலாம் ஆனால், அவர் சிறுநீர்ப்பாசனம் என்று சொல்லிச் சிக்கிக் கொண்டுவிட் டார். அதுவும் மேடையில் வைத்து மொழிபெயர்ப்புச் செய்துகொண்டிருந்த சமயம் பார்த்துச் சிக்கிவிட்டதால், சிக்கல் இடியப்பச் சிக்கலாகி விட்டது.

"தமிழே சரியாக வரவில்லை. இதிலை தமிழ் நாட்டில் ஆட்சிக்கு வரவேணுமாம்!". "இனி மூக்கைப்பொத்திக் கொள்ள வேண்டியதுதான் தமிழகம்" என்றுபல அரட்டைகள் பதிவாகிக்கொண்டிருக்கின்றன.

## பிக் பாஸ் - 2




"அடுத்தவர் வீட்டுப் பிரச்சினைகளை, 'அந்தரங்கங்களைப் பார்ப்பது மனிதர்களுடைய சுபாவம்". "ஆபாசமாக அவர்கள் காட்சியளிப்பதும், அவர்கள டிக்கும் லூட்டிகளும் சீச்சீ..." என்றவாறாகப் பல விமர்சனங்களையும், "தவறான மனிதச் செயற்பாடுகள் பற்றிய் புரிதல்களை ஏற்படுத்துகிறது (நடந்து முடிந்த பிக்பாஸில் காயத்திரி ரகுராமின் பாகுபாட்டுநிலைச் செயற்பாடு குறிப்பிட்டுச் சொல்லக்கூடியது)" என்று சில வரவேற்புகளையும் பெற்றிருந்த, நடிகர் கமல்ஹாசன் தொகுத்து வழங்கும் 'பிக்பாஸ்' தொலைக்காட்சி நிகழ்ச்சியின் இரண்டாவது பகுதி ஆரம்பமாகிக் களைகட்டிக் கொண்டிருக்கிறது. குடும்பப் பிணக்குகள், பெண்ணிய வாதக் கருத்துக்கள், ஆண் - பெண் உறவுகள் எனக் காரசாரங்களைப் புகுத்தி இந்தமுறை தொடர் நாடக இரசிகர் பட்டாளத்தையும் தோற்கடித்துவிடும் அளவுக்குக் களத்தில் இறங்கியிருக்கிறது பிக்பாஸ் - 2. பொழுதுபோவதும், பொழுதைப் போக்குவதும் பெரும் பிரச்சினையாக இருக்கிற சோம்பேறிகளுக்கும், வயிற்றுப் பசியைத் தீர்ப்பது ஒரு பிரச்சினை யாக இருக்காத 'கொழுத்த பன்றி'களுக்கும், தொடர்நாடகப் போதையில் மூழ்கிக் கிடக்கின்ற அடிமட்டத்தினருக்கும் இது நல்ல தீனி தான்!




## 'நல்லாட்சி'யிலும் நம்பர் 1

ஒன்றல்ல. இரண்டல்ல தொடர்ந்து ஏழு ஆண்டுகளாகத் தான் பிடித்து வைத்துள்ள இடத்தை யாருக்கும் கொடுத்து விடாமல் உறுதியுடன் நிற்கிறது இலங்கையின் ஜனநாயக அரசு. ஆம்! மிகவும் மோசமான சித்திர வதைகளும், துன்புறுத்தல்களும் இடம்பெறும் நாடுகளை வரிசைப்படுத்துகிற 'பிறீடம் வ்றொம் டார்ச்சர்' என்கிற பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு இயங்குகிற சித்திர வதைகளுக்கு எதிரான பன்னாட்டு அமைப்பு வெளியிட்டிருக்கிற இந்த ஆண்டுக்கான தரப்படுத்தல் பட்டியலில் 'சிறீலங்கா' இந்த முறையும் முதலிடத் தையே பிடித்துள்ளது.

'நல்லாட்சி' வாழ்க!
சிறீலங்கா தாயே
நமோ நம!

### வேலையற்ற பட்டதாரி



## தாய்லாந்தால் முடிகிறது இந்தியாவால் இயலவில்லை

தாய்லாந்து அரசு தான் 2020ஆம் ஆண்டளவில் வல்லரசு ஆகுவேன் என்று கூறியதில்லை. தன்னிடம் உலகில் நான்காவது பெரிய கப்பற்படை, விமானப்படை இருப்பதாகப் பெருமை பேசியதில்லை. இருந்தாலும் தனது முழுப் பலத்தையும் பயன்படுத்திக் குகையில் மாட்டிக்கொண்ட தனது 12வரையான குடிமக்களைக் காப்பாற்றியுள்ளது.

ஆனால், ஓகிப்புயல் வந்தபோதும்சரி, கொங்கினி தீ விபத்தின் போதும்சரி பாதிக்கப்பட்ட தமிழ் மக்களைக் காப்பாற்ற இந்திய அரசு அக்கறை கொள்ளவில்லை.

ஓகிப் புயல் எற்பட்டதில் பல மீனவர்களைக் காணவில்லை என்று உறவுகள் முறையிட்டபோதும் 11நாள்களாக இந்திய அரசு அவர்களைக் காப்பாற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தன்னிடம் நான்காவது பெரிய கப்பற்படை இருப்பதாகப் பெருமை பேசும் இந்திய அரசு அதில் ஒரு கப்பலைக்கூட அவர்களைத் தேட அனுப்பவில்லை. சிறந்த விமானப்படை வைத்து சுதந்திரதினத்தன்று பூச் சொரிந்து சாகசம் காட்டும் விமானத்தில் ஒன்றைக்கூட அவர்களைத் தேடும் பணிக்கு அனுப்பவில்லை. மாட்டுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைக்கூடத் தமிழக மீனவனுக்குக் கொடுக்க இந்திய அரசு தயாரில்லை. மாட்டுக்கு மருத்துவமனை, அவசர காவுகை வண்டி, காப்புறுதி, மற்றும் விசேட சட்டங்கள் வழங்கிய இந்திய அரசு, மீனவர்களைக் காணவில்லை என்றால் மௌனமாக இருக்கிறது. செவ்வாய்க்கு ரொக்கட் விட முடிகிறது ஆனால், தனது நாட்டில் ஒரு சிறுபிள்ளை குழிக்குள் விழுந்துவிட்டால் அதை மீட்பதற்குப் படாதபாடு படுகிறது. இடர்களில் சிக்குகிற குடிமக்களைக் காப்பாற்றுவதற்கு இந்தியாவால் இயலவில்லை; அது முன்வருவதுமில்லை. தாய்லாந்தைப் பார்த்தாவது கொஞ்சம் திருந்தினால் நல்லது.

தொகுப்பு
தி.இராஜநாயகி

## கலை இலக்கியத்தில் கொய்தலும் கொழித்தலும்

கலை, இலக்கியப் படைப்பாளிகளின் பல்வேறு கருத்துக்களைத் தொகுத்து இந்தப் பகுதியில் தருவது வழமை. இவை துண்டி இலக்கிய வட்டத்தினரின் தொகுப்பாக வெளிவந்த 'முற்போக்கு இலக்கியம் கலைச்செல்வி இதழ்வழிக் கருத்தரங்கக் கட்டுரைகள்' நூலில் பதிப்பாகியிருக்கிற எஸ்.பொன்னுத்துரையின் எழுத்துக்களில் கொய்யப்பட்டவை.

# முற்போக்கா? பிற்போக்கா?

“கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் முன்தோன்றிய மூத்த குடியினரான தமிழரின் இலக்கியம் (செய்யுள் துறையைத் தவிர) பிள்ளைப் பருவத்தில் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ள நாம் வெட்கப்படத் தேவையில்லை. ஈழத்துத் தமிழ் இலக்கியமும் பசலைப் பருவத்தில்தான் இருக்கின்றது. இருப்பினும், கடந்த பத்தாண்டுகளுக்கிடையில், ஓர் அளவில் தன்னை விமர்சனத்துக்குள் வளைத்துக் கொடுக்கும் அளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளதுஎன்பதும்உண்மை. இந்த வளர்ச்சியின் பயனாக இன்றைய ஈழத்துத் தமிழ் சிருஷ்டி இலக்கியகாரர்களிடையே, ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களுடன், இரண்டு கோஷ்டிகள் உருவாகி வருவதை அவதானிக்கலாம். ஒரு கோஷ்டியினருக்கு 'முற்போக்குக் கோஷ்டி' என்று 'லேபல்' ஒட்டப்பட்டிருக்கிறது. பிரித்துக் கூறுவதற்காக மற்றக் கோஷ்டியினரைப் 'பிற்போக்குக் கோஷ்டி' என்று அழைக்க அனுமதிப்பார்களா?

இந்த இரண்டு பிரிவினரும் இலக்கியத்தில் கொண்டுள்ள குறை, நிறைகளை இந்தக் கட்டத்தில் எடைபோட்டுப் பார்ப்பது நல்லது. சில இலக்கியப் 'பெருச்சாளி'கள், ஓய்வு நேரங்களில் மாத்திரமே இலக்கியத்துக்காக ஒதுக்கிக் கொடுப்பதால், இலக்கியம் பொழுது போக்குச் சாதனம் என்று தப்புக் கணக்குப் போட்டு வைத்திருக்கிறதுக்கு(அல்லது கொல்வதற்கு) எத்தனையோ வசதியான சாதனங்கள் இருக்கின்றன. இலக்கியம் வாழ்க்கையின் எதிரொலியே. வாழ்க்கையின் எதிரொலியின் ஆதார சுருதி குலையாமல், கலை மெருகுடன்(அதே சமயம் சம்பவங்களுக்குப் பூச்சுக் கொடுக்காமல், பச்சையாக)கற்பனைச் செறிவுடன் (நிர்வாணக் கோலத்துக்கு உடையணியும் 'மரபு'க் கற்பனையல்ல) மனித எழுச்சிகள், வீழ்ச்சிகள் விஸ்தரிக்கப்படும்பொழுது, இலக்கியம் மலருகின்றது.

இந்த உண்மையின் உருவத்தைக் காணாது அந்த நிலையில், 'இலக்கியம் என்பது கலை; கலை மனதைக் குஷிப்படுத்துகின்றது. எனவே மனித மனத்துக்குக் குளுகுளுப்பு ஏற்படுத்துவதற்கு எழுந்தது இலக்கியம்' என்று ஒரு சாரார் நித்திரைப் புலம்பல் செய்கின்றனர். இந்த எண்ணம், தெளிவற்ற பல்வேறு ரூபங்களில், வெவ்வேறு வார்த்தைக் குவியல்களில் ஒலிப்பதைக் கேட்க முடிகிறது. இலக்கியம் மனித மனத்துக்குக் குளு குளுப்பை ஏற்படுத்துவதற்குத்தான், என்ற வாதத்தை ஒப்புக் கொண்டால், யாருடைய மனதை இதப்படுத்துவதற்கு என்பதை நாம் அறியவேண்டும். எழுதுபவருடைய மனதை இதப்படுத்துவதற்கு என்றால், எழுதிய பின்னர், தனது அறுவடையைத் தானே ஐந்தாறு தடைவைகள் சுவைத்து மனங்குளிர வாசித்து விட்டு, சாம்பிராணிப் புகைகாட்டித் தனது புத்தக அலுமாரியில் தூங்க வைக்கட்டுமன். யார் மல்லுக்கட்டி நிற்கிறது? அதை ஏன் வாசகனின் தலையில் கட்டியடிக்கவேண்டும்? இல்லை, இலக்கியம் வாசகனின் மனதை இதப்படுத்தும் பணியானால், குடிகாரனுக்கு மதுவும், காமிக்குப் பெண்ணும், ஏழைகளுக்குச் சோறும் அளிக்கக்கூடிய இத உணர்ச்சியை அல்லது குளு குளுப்பை எந்த மன்னாதி மன்னனை இலக்கிய கர்த்தாவாலும் கொடுத்துவிட முடியுமா? புரட்டுத்தனமாக, சுய எழுச்சிகளுக்கு, மன உளைச்சல்களுக்கு, இலக்கியம் என்ற உருக்கொடுத்து, மாரிசனின் மாயமான் வேடத்தில், வாசகச் சீதையை இத்திருக்கூட்டம் ஏமாற்ற முனைகிறது. இந்தக் கோஷ்டியைச் சேர்ந்த இலக்கிய கர்த்தாவின் மன எழுச்சியை நன்றாகத் துருவிப் பார்த்தால், 'ஏ, அற்ப வாசக மரினடப் பதரே! என் மூளையில் வெடித்துச் சிதறும் எண்ண அலைகளில் உன்னைக் குளிப்பாட்டி மகிழ்விக்கப் போகிறேன்' என்ற அகங்காரமும் 'அதை யாருக்காவது கொட்டித் தீர்க்காவிட்டால் என் வாழ்க்கை சாபல்யம் அடையப்போவதில்லை' என்ற தவிப்பும் மண்டிக் கிடப்பதைக் கவனிக்கலாம். ஆனால், உண்மையில், சுயபிரக்ஞையற்ற நிலையில், அவர்களுடைய எழுத்துக்களும் வாழ்க்கையின் ஏதோவொரு இரசனையைப் பிரதிபலிப்பதாலேதான் 'எழுத்தாளர்' என்ற பட்டத்தை அவர்களால் சுமக்க முடிந்தது. இந்த உள் இரகசியத்தை அறியாமல், கொள்கைளற்ற சூனிய நிலையில், அல்லது தெளிவற்ற கொள்கையில் கலங்கிய நிலையில், அல்லது செல்லரித்து உததவாதது என்று குப்பையில் வீசப்பட்ட கருத்துக்களின் தழுவல், தாங்கள் மண்ணகத்துப் புழுதியில் வேரூன்றியிருப்பதை மறந்து, விண்ணகத்துத் தந்தக் கோபுரத்தில் வாழ்வதற்காகக் கனவு காண்கிறார்கள். இந்தப் போதைக் கனவிலிருந்து விழிப்பு ஏற்படும்பொழுது, கால வெள்ளத்தின் நீர்ப் பிரவாகத்தில் இலவகமாக நீந்த இயலாது, கரையில் ஒதுங்கி நின்று, 'நாங்கள் அந்தக் காலத்தில் எழுதினோம் அது பொற்காலம். இன்று காலான்கள் தோன்றிவிட்டன' என்று சப்புக்கட்டுவதுடன் திருப்திப் படவேண்டியிருக்கிறது.


எஸ்.பொன்னுத்துரை




இதன் காரணமாக, 'முற்போக்கு இலக்கியக்காரர்' என்று சீல் குத்தப்பட்டவர்கள் காலத்தை எதிர்த்து நிக்கவல்ல இலக்கியத்தை தாங்கள் பூரணமாகப் படைத்துவிட்டதாகக் கனவு காணத் தேவையில்லை. ஆனால், இந்தக் கோஷ்டியினர், கட்டுப்பாடாக, ஏதோ ஒரு வரையறுத்த குறிக்கோளு டன் எழுதுவதால், ஏதோ சாதித்துத்தான் விட்டார்கள் என்று மயக்கத்தைத் தருகிறார்கள்,...."

"...சமூகப் பிரச்சினைகளை விமர்சிப்பதும் சித்திரிப்பதும் இலக்கியத்தின் குறிக்கோள்க ளுள் ஒன்று என்பதை மறுக்க இயலாது..."

"...குறுகிய வட்டத்தில் சுழன்று ஜாதிப் பிரச்சினைகளை மட்டுமே சமூக இயலாக நோக்குவது மூன்றாம் பிறையை நிறைநிலவாகச் சித்திரிப்பதற்கு ஒக்கும்..."

"...வாழ்க்கையில் இருக்கக்கூடிய பிரச்சினைகளைத் திரையிட்டு மறைத்துவிட்டு ஜாதிப் பிரிவின் வேறொரு பிரிவினரின் பிரச்சினைகளை எழுதுவதாகக் காட்டி, வக்காலத்து வாங்கி அந்த ஜாதியினரின் உயர்வுக்கு உழைப்பதாகப் பிரமை கொள்கிறார்கள். ஜாதிப்பிரச்சினை தொடக்கச் சாமான் இலக்கியப் படைப்புக்குத் தொடக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. அது சமூகத்தின் ஓர் அங்கம். விஸ்தரிக்கப்பட வேண்டும். அதுவே சமூகத்தின் முழுமை என்று கனவு காண வேண்டாம்;..."

"...ஜாதிப்பிரச்சினை, சரித்திர அரசியல், பொருளாதார மனோவியல் களங்கியல் பார்க்காமல் நுனிப்புல் மேய்கிறார்கள். இன்றைய பொருளாதார அரசியலில் ஏற்பட்டுவரும் மாறுதல்களைக் கவனிக்க மறுக்கிறார்கள். அவர்களுடைய கையில் வரையறுத்த நித்திய உருவம் பெற்றதாகக் காண்பிக்கப்பட்ட துணி கிடைத்துவிட்டது. அதன் நீள, அகலத்துக்கு ஒரு சட்டை தைத்து அதையே எல்லாப் பாத்திரங்களும் அணிகிறார்கள். சட்டை சிறுத்தும், பெருத்தும் பாத்திரங்கள் பபூன் கோலாத்தில் காட்சி தருகின்றன. புண்ணைக் கண்டு ஆஹா என்று கூச்சலிடாமல் நோயின் தன்மைகளை முதலில் அறிய வேண்டும்..."

"...இந்த முற்போக்குக் கோஷ்டியினரின் படைப்புக்களில் இன்னொரு குறைபாடு இருக்கின்றது. இவர்களுடைய எண்ணத்தைப் பிரதிபலிக்கும் ஒரு பிரபல எழுத்தாளர் அலங்காரச் சொற்களையும் வெறும் வர்ணனைகளையும் கொண்டு மக்கள் இலக்கியம் சிரு ஷ்டிக்க முடியாது என்கிறார். உருவத்துக்கு முக்கியத்து வம் கொடுக்கக்கூடாது என்றும் உருவம் முதன்மையானது இல்லையென்றும் கருதுகிறார்கள். இது மிகவும் தவறான எண்ணம். இலக்கியம் என்று சொல்லவந்தால் நிச்சயம் அதற்கு ஓர் உருவம் தேவை. இருபது வயது எழுத்தாளக் குஞ்சு ஒருவர் விஸ்தரிக்கக்கூடிய அனுபவங்களைப் பார்க்கிலும் மக்களுக் வழிகாட்டிநம்பிக்கை ஊட்டிச் சிந்திக்கத் தூண்டும் கருத்துக்களை ஓர் அனுபவம் மிக்க விபச்சாரியால் கூடச் சொல்ல முடியும். ஆனால், அவள் தனது அனுபவங்களுக்கு ஓர் உருவம் கொடுத்துச் சொல் இயலாததினால், அல்லது உருவமற்ற கொச்சையில் பிதற்றுவதால், அவள் பார்த்து அநுபவித்த வாழ்க்கை எதிரொலிகள் இலக்கிய அந்தஸ்தை அடையத் தவறுகின்றன. உருவம் இல்லாவிட்டால், கவிதை - சிறுகதை - நாடகம்-நவீனம் என்று எவ்வாறு இலக்கியத்தின் உட்பிரிவுகளுக்கு இலக்கணம் வகுப்பது? இலக்கியத்துக்கு உருவம் உண்டு என்பதை ஒருவரும் மறுக்க மாட்டார்கள். இலக்கிய உருவம் எதில் தங்கியிருக்கிறது? வார்த்தைகளில்! அலங்கார வார்த்தைகளும், அழகிய வர்ணனைகளும் கையாளப்படும்பொழுது உருவம் பட்டை தீட்டப்படுகின்றது என்பது என் அபிப்பிராயம்..."

"...இலக்கியத்தின் அமைப்பே சொற்கள் தான். அதற்காகத் திராவிட முன்னேற்றக் கழகத்தாரின் பணி வெறும் வார்த்தைக்குவியல். (உதாரணம் மு.கருணாநிதியின் தேனலைகள்) கருத்துச் சூன்யம். இத்தன்மை வசனக் குவியல்களின் முவர்ண அட்டையினாலும், கிளேஸ் காகிதத்தினாலும் இலக்கிய அந்தஸ்துக்கு உயர்த்திவிட முடியாது. இதை இலக்கியம் என்று ஏற்றுக் கொண்டால், யாழ்ப்பாணத்துப் பெரிய கடையில் மீன் விற்பவள் பேசுவது இலக்கியச் சுரங்கம் அல்லவா! (என்ன ஓசை நயம்! என்ன சந்த அமைப்பு!) கதைக்கு (அல்லது இலக்கியத்துக்கு) உருவும், கருவும் இன்றியமையாதன. அவை உடலும் உயிரும். ஒன்றின்றி மற்றது பிணம்: நசிவு இலக்கியம். உண்மை அவ்விலக்கியத்தின் கருவுக்கு அழுக்கம் கொடுத்து உருவத்தை ஊதாசீனம் செய்து ஆவியை வைத்து மாயாஜாலம் ஆடுவதை ஒக்கும். கருத்தும் தரமற்ற சொற்சிலம்ப வேடிக்கை, அழகான சிலைபடைத்து, அதனுடன் கலவி இன்பம் அனுபவிக்க விளையும் பேதைமையை ஒக்கும்.

இரண்டு கோஷ்டியினரதும் குறைபாடுகளை, நினைப்பதை நினைத்தபடி எழுதிவிட்டபடியால் பத்தினிக்கும் எதிரி, விபச்சாரிக்கும் எதிரி என்ற நிலையில் தனிநபர் வாதத்தில் ஊன்றிவிட்டேன் என்று குற்றஞ்சாட்டத் தேவையில்லை. நமது இலக்கியம் பிள்ளைப் பருவத்திலிருக்கிறது. பரிசோதனைகள் செய்வதற்கு விசாலித்த வெளியிருக்கிறது. இதற்கிடையில் கோஷ்டி மனப்பான்மையில் இயங்குவது ஒரு பக்கம் மனக் கசப்பையும் புலமைக் காய்ச்சலையும் மறுபக்கம் துதி பாடுதலையும் முதுகு சொறிதலையுந்தான் வளர்க்கும். இலக்கியம் எப்பொழுதும் வாழ்க்கையைப் பிரதிபலிக்கக் கூடியதாகவும், கலையழகு மிக்கதாகவும், அதேசமயம் வாசகனைச் சிந்திக்கத் தூண்டுவதாகவும், சில உண்மைகளையும் கருத்துக்களையும் புலப்படுத்தக் கூடியதாகவும், வாழும் வழியினைக் கொடி கட்டி நம்பிக்கை ஊட்டுவதாகவும் அமையவேண்டும். இப்படி அமையும் மக்கள் இலக்கியம் தான் காலத்தின் சோதனைகளை எதிர்த்து உயிருடன் நிலைத்து நிற்கும் வல்லமை பெற்றது. (மேலே குறிப்பிட்டுள்ள சில இலட்சணங்களையேனும் கொண்ட சங்ககால நூல்கள்தான் நமது இலக்கியச் சொத்தாக இருக்கின்றன) மற்றவை குறை மாசப் பிண்டங்கள், நசிவு இலக்கியம், இலக்கியச் சோலையில் மணம்பரப்ப இயலாது. அரும்பிற் கருகியவை. பொதுமக்களின்(சமூகத்தின் எல்லாப் பிரிவினது வட்டத்தினதும்) வாழ்க்கையின்(சமுதாயத்தின் இயக்க முறை) எதிரொலிகளுக்கு உருவம் கொடுத்து வாசகனின் மனதில் அவற்றை மனதில் நிறுத்த அழுக்கம் கொடுத்து நல்லனவற்றை வாழும் வழிமுறைகளையும் கொடி காட்டி தீயனவற்றை நிர்வாண கோலத்தில் தோலுரித்துக்காட்டவேண்டும். கரும்பலகையிலேதான் வெண்புள்ளி துலக்கமாகத் தெரிகிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. 'ஆபாசம்' என்று முகம் சுழிக்கத் தேவையில்லை. ஆபாசமும் சமுதாயத்தில் புரையோடிக் கிடக்கிறது. அதற்குப் புணுகுத டவும் வியாபாரியல்ல எழுத்தாளன். நாம் முற்கூட்டியே கொண்டிருக்கும் அரசியல் பொருளாதாரக் கோட்பாட்டுக்கு இயைய ஒரு சம்பவம் வலிந்து சிருஷ்டிக்கப்ப டும் பொழுது, யதார்த்த மணத்தில் துர்நாற்றம் படிகிறது. கதை முடிவினையும் வலிந்து, தனது கருத்தினை உபதேசிக்கும் பாணியில் 'அறம் செய்ய'விரும்பு' என்ற ரீதியில் முடிப்பதும் இலக்கியத்தின் தரத்தைக் குறைக்கிறது. வாழ்க்கை ஒரு முடிவுறாத பயணம். ஆகவே முற்றுத்தரிப்பு விழமுடியாது.

முற்போக்கு இலக்கியம் பிற்போக்கு இலக்கியம் என்பது மிக மிகச் செயற்கை முறையான ஒன்று. இலக்கியத்தைச் சௌகரியத்துக்காக மக்கள் இலக்கியம், நசிவு இலக்கியம் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். வாழ்வின் குறையினை, நிறைவினை, நெறியினை, முறையானவற்றை, ஆரோகண, அவரோகண எழுச்சிகளைச் சித்திரிக்கும் இலக்கியமே, மக்கள் இலக்கியமே, சங்க காலந்தொட்டு நிலைத்து வந்திருக்கின்றன. இலக்கியம் மக்களுக்காகத் தான் சிருஷ்டிக்கப்படுகின்றது: மிருகங்களுக்கல்ல, மக்களின் பெருந்தொகையினருக்கு புரியாது என்று, எழுத்தாளன் கொச்சையில் எழுதத் தேவையில்லை. வாசகனது இரசனையை உயர்த்துவதும் எழுத்தாளனது கடமை..."

தொடர்கதை

# நின்னைச் சரணடைந்தேன்

கே.எஸ்.ஆனந்தன்

அத்தியாயம் 22



அன்று இருவரும் படுக்கையில் படுத்திருந்தனர்.
தனது தனிமையான நிலைமையைக் கூறி. ஒரு பிள்ளையை உஷாவிடம் இருந்து தத்தெடுத்து வளர்க்க வேண்டும் என்ற தனது ஆசையை வலியுறுத்தினாள் சுவேதா. அவள் கூறியவற்றை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தானே தவிர ரவிசங்கர் பதில் ஏதும் கூறவில்லை.
"என்னங்க நான் கேட்டுக் கொண்டிருக்கிறன். நீங்க பேசாமலிருக்கிறீங்கள்"
"சுவேதா எனக்குப் பிடித்தமில்லா விடயம் பற்றி நான் எதுவும் கூறப் போவதில்லை. நான் ஏற்கனவே எனது முடிவைக் கூறிவிட்டேன். பின்பும் என்னைக் கேட்டால்?"
"உன் சந்தோஷம் தான் என் சந்தோஷம் என்று கூறினீர்கள் மறந்து விட்டீர்களா?"
"மறக்கவில்லை. அப்படி மறக்காமலிருப்பதால் தான் தேவையில்லாக் கதைக்குப் பதில் கூறி உன் சந்தோஷத்தைக் கெடுக்காதிருக்கிறேன்"
"நான் கேட்ட விடயம் எனக்குச் சந்தோஷத்தை. மகிழ்ச்சியைக் கொடுக்காது என்று நினைக்கின்றீர்களா?"
"நிச்சயமாக உனக்கு உடனடியாக மகிழ்ச்சியாயிருந்தாலும் நாளாக நாளாகப் பிரச்சினைகள் வரலாம். வளரலாம். இதற்கு நான் உடந்தையாயிருக்க முடியாது. அவ்வளவுதான்"
"என்ன கோபமா?" என்று கூறி அவனை அணைத்து முத்தமிட்டாள்.
"சுவேதா கோபம் எனக்கு வராது. வந்தால் அதுவே முதலும் முடிவுமாக இருக்கும். அவ்வளவுதான் சொல்வேன்" என்று கூறி அவளை மகிழ்ச்சிப்படுத்தினான்.
"ஒன்றரை வருசத்துக்கு மேலாகுது திருமணம் முடித்து. இதுவரை வராத குழந்தை இனி எப்படி....?"
"உனக்கு நம்பிக்கை வேணும் சுவேதா. நிச்சயமாய் எங்களுக்கு ஆண்டவன் ஏமாற்றம் தரமாட்டார். நம்பிக்கையுடனிரு குழந்தை கிடைக்கும் அதுவரை பொறுமை வேண்டும்" என்று அவள் திருப்தியடையும் வரை மகிழ்ச்சிப்படுத்தினான்.

கனடா சென்றடைந்த யசோதாவும் நிவேதாவும் தங்கள் வீட்டில் நடந்தவை பற்றி கணவன்மாருக்குக் கதை கதையாகச் சொல்லி ஆவலூட்டினர். பிள்ளைகளைக் கூட்டிச்செல்லவில்லையே என்று ஆதங்கப்பட்டனர். தங்கள் பிள்ளைகளுக்கு ஊரின் நிகழ்ச்சிகளைக் கூறி ஆவலூட்டினால் அவர்கள் அப்பாக்களுடன் பிணக்குப்பட்டு ஊருக்குப் போகும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவார்கள் என எதிர்பார்த்தனர். அவர்களுடைய தந்திரம் ஓரளவுக்கு வேலை செய்ய ஆரம்பித்தது. அடுத்த வருட லீவுக்கு யாழ்ப்பாணம் போகலாம் என்று முடிவாயிற்று. ஆனால் ஒரு வருசத்துக்கிடையில் என்ன நடக்கும் என்று யாரும் எதிர் பார்ப்பதில்லையே. இறைவன் போட்டு வைத்திருக்கும் கணக்கிலிருந்து எவரும் தப்பித்து விட முடியாதே.

அன்று ஞாயிற்றுக்கிழமை ரவி சங்கர் தாயைப் பார்த்து விட்டு வந்து வீட்டிலே இருந்தான். மாலை நான்கு மணியிருக்கும் சுவேதா சிறுதூக்கம் போட்டு விட்டு எழுந்து முகம் கழுவிக் கொண்டு வந்தாள். தொலைக்காட்சியில் படம் ஓடிக்கொண்டிருந்தது. அதைப் பார்த்துக் கொண்டிருந்தான் ரவிசங்கர்.
"ரவி எங்காவது வெளியே போய் வந்தால் என்ன?"என்றாள்.
"நானும் அது பற்றித் தான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். எங்க போகலாம்? அதை நீ தான் முடிவு செய்யவேணும்"
"முதலில் அத்தையைப் பார்த்து விட்டு அப்புறம் எங்காவது போகலாம்"
"சரி புறப்படும்போகும் போது மற்றவைப் பற்றி யோசிக்கலாம்"
பதினைந்து நிமிடத்தில் அவள் புறப்பட்டு வந்தாள்.
இருவரும் வண்டியில் புறப்படுவதற்கு முன் "வர நேரமாகும்" என்று சுந்தரமூர்த்தியிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டனர். வண்டியில் போகும் போது "ஏன் ரவி அத்தையைப் பார்த்து விட்டு உஷாவிடம் போவோமா?" என்றாள்.
"இங்கே பார் சுவேதா. அங்கே போய் வந்தால் உனக்கு 'மூட்' மாறிவிடும். அம்மாவிடம் போய் எங்கள் தோட்டத்தையும் சுற்றிப் பார்க்கலாம். நீ வந்து பார்த்தில்லையே. அத்துடன் போகும்போது வழியில் என்னுடைய நண்பன் ஒருவன் இருக்கிறான் அங்கையும் போய் வரலாம்" என்று கூறினான்.
"யார் அது நண்பன்?"
"சுந்தர்சன்! அவன் ஓர் 'எலக்ரிக்கல்சொப்' வைச்சிருக்கின்றான். அவன் மனைவி உன்னோடு படித்தவளாம்! அடிக்கடி எனக்குச் சொல்வான். எங்கள் 'வெடிங்'குக்கு எல்லாம் வந்தவன். அவனுடைய மனைவி குழந்தை பெற்றிருந்ததால் அவள் வர முடியாது போயிற்று என்று கூறினான். சொல்லாமல் போனால் திகைத்து நிற்பார்கள் போகலாமா?"
"சரி போகலாம் என்னுடன் படித்தவளா? யாரயிருக்கும்?"
"போனால் உனக்குத் தெரிந்துவிடும்"என்று கூறி விட்டு அவர்களது வீட்டு முகப்பில் வண்டியை நிறுத்தி 'ஹோர்ன்' அடித்தான்.
கதவைத் திறந்து பார்த்த பெண்
"சுவேதா! நீங்களா? என்னால் நம்ப முடியவில்லை. நாங்கள் ஒருநாளைக்கு உங்கட வீட்டை வரவேணும் என்றிருந்தம். அவருக்கு நேரம் கிடைக்கவில்லை. உள்ளே வாருங்கள். அவர் சகோதரி வீட்டுக்குப் போயிருக்கிறார். உட்காருங்கள். போன் பண்ணிக் கூப்பிடுறன்"என்றாள்.
"நீ சிவகலா தானே? ஆளே மாறிவிட்டாய். அடையாளம் காண்பது கஸ்ரமாயிருந்தது. இது உன் குழந்தையா?" என்று பக்கத்தில் நின்ற பையனைக் கன்னத்தில் தட்டி அழைத்தாள். அவன் சுவேதாவின் கையைப் பிடித்துக்கொண்டு அவளருகில் வந்து அமர்ந்து கொண்டான்.
"உங்கள் பெயர் என்ன செல்லம்?"
"விக்கிரம். அம்மா விக்கி என்று கூப்பிடுவா"என்றான்.
"அடே நல்லாக் கதைக்கிறானே. ஸ்கூலுக்கு போறனிங்களா?"
"இல்லையே. நேசறிக்குத்தான் போறனான்"
"குட். அம்மா நல்லபாடம் சொல்லித் தாறாங்களா?"
"உ ம் ம் இங்கிலீஸ் எல்லாம் சொல்லுவாங்க"

கனடா சென்றடைந்த யசோதாவும் நிவேதாவும் தங்கள் வீட்டில் நடந்தவை பற்றி கணவன்மாருக்குக் கதை கதையாகச் சொல்லி ஆவலூட்டினர். பிள்ளைகளைக் கூட்டிச்செல்ல வில்லையே என்று ஆதங்கப்பட்டனர். தங்கள் பிள்ளைகளுக்கு ஊரின் நிகழ்ச்சிகளைக் கூறி ஆவலூட்டினால் அவர்கள் அப்பாக்களுடன் பிணக்குப்பட்டு ஊருக்குப் போகும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவார்கள் என எதிர்பார்த்தனர்.

"அப்படியா? எங்கே சொல்லுங்கோ பாப்பம்"
"ஏ போர் அப்பிள், பிபோர் பாற், சி போர் காற்"
"வெறி குட். நீங்கள் நல்லா படிச்சு நல்ல பிள்ளையா வர வேணும்"
"அவன் பொல்லாத குழப்படி. இப்பவே கிறிக்கட் அடிக்கப் போறன் எண்டு அடம்பிடிப்பான். இவனை மேய்ப்பதே எனக்குப் பெரிய வேலையாய்ப் போச்சுது" என்றாள் சிவகலா.
"அப்படிச் சொல்லாத சிவகலா! குழந்தைகள் தெய்வத்துக்குச் சமன். நீ கொடுத்து வைத்தவள்"என்றாள் சுவேதா.
"அதோ அவர் வந்திட்டார். கதைத்துக் கொண்டிருங்கள்" என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள்.
சிறிது நேரம் கதைத்தனர்.
"சரி புறப்படுவோமா?" என்று கூறி ரவிசங்கர் எழுந்தான்.
சுவேதாவும் எழுந்தாள் விடைபெற்றுப் புறப்பட்டனர். விக்கிரமைத் தூக்கிக் கட்டியணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டு இறக்கி விட்டாள் சுவேதா.
"எப்ப எங்கடை வீட்டுக்கு வருவாய்? அப்பா.அம்மாவையும் கூட்டிக்கொண்டு வர வேணும்?"
"சரி அன்ரி நாளைக்கு வாறன்"
"நாளைக்கு வேணாம். அடுத்த 'சண்டே' வாங்கோ" என்று கூறிவிட்டுப் புறப்பட்டனர்.

வண்டி ரவிசங்கரின் வீட்டை நோக்கிப் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தது. சுவேதா எதுவும் பேசாமல் மௌனமாயிருந்தாள். அவள் சிந்தனையில் விக்கிரம் சுழன்றுகொண்டிருந்தான்.
"என்ன சுவேதா மேடம் யோசனை? மௌனமாயிருக்கின்றீர்கள்" என்று சிரித்துக்கொண்டே கேட்டான்.
"என்ன கேட்டீங்கள்"
"அந்தப் பையன் விக்கிரம் என் மனதுள் புகுந்து நிற்கிறான்"
"நான் மாபெரும் தவறு செய்து விட்டேன்"
"என்ன ரவி?"
"அங்கே போகாமல் சிறுவர் இல்லத்துக்கே போயிருக்கலாம். உன் மனதில் எந்தச் சிந்தனையிருக்கக் கூடாது என்று நினைத்தேனோ அதை நானே வலிந்து புகுத்தி விட்டன்"
"ஏன் அப்படி நினைக்கிறீர்கள்?"
"சுவேதா! எதையும் பார்க்கலாம். சந்தோஷப்பட்டு இரசிக்கலாம். அந்த இடத்திலேயே அதை மறந்திடவேணும். அதே சிந்தனையை மனதில் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. அந்தப் பையன் விக்கிரம் நல்ல சுட்டிப்பையன். அவனைப்போல ஒரு பையனோ. பெண்ணோ எங்களுக்கு வரும் தானே. அதை விட்டிட்டுக் காணுகிற பிள்ளைகளைப் பற்றி நினைப்பது கூட ஒரு வகையில் தவறுதான்"
"நீங்கள் இப்படிக் கதைத்துக் கதைத்துக் காலத்தை ஒட்டிக்கொண்டிருப்பியள். நானும் கேட்டுக் கொண்டிருக்க வேணும் எண்டுறது தான் உங்கள் நினைப்பா? கல்யாணம் பேசும்போது அப்பா என்ன கூறினார் தெரியுமா? சுவேதா நீயாவது கல்யாணம் செய்து பேரன். பேத்தியைப் பெத்துத்தா. சாவதற்கு முன் அந்தப் பிஞ்சுப் பாதங்களால் இந்த நெஞ்சில் உதைக்காமல் இந்தக் கட்டை போவாது என்றார். அம்மா ஆசைதான் நிறைவேறவில்லை. அப்பாவின் ஆசையும் நினைவேறும் என்று தோன்றவில்லை.
அதனால் தான் ஒரு குழந்தையை வாங்கி வளர்ப்பம் என்று கேட்கிறன். நீங்கள் ஏன் இந்த விடயத்தில் பிடிவாதமாயிருக்கிறீர்கள் என்பது தான் புரியவில்லை" அடுத்து அவள் கேட்ட கேள்வியில் திணறி விட்ட ரவிசங்கர் தன்னையறியாமலே வண்டி யின் பிறேக்கை அமத்திவிட்டான். வண்டி கிறீச் என்ற சத்தத்துடன் நடு வீதியில் சடுதியாக நின்றது.

திருமணமான பெண்கள் தாய்மையை விரும்பவது இயற்கை நியதி. சமூக நிந்தனைக்கு ஆளாக வேண்டும் என்ற பயம் வேறு சேர்ந்து கொள்வதால் மலடி என்ற அவப் பெயர் வராது தாய்மை அடைவதையே எதிர்பார்ப்பதுண்டு. இதற்கு விதிவிலக்கானவர்கள் பெண்மைக்கே பழிதேடுபவர்களாயிருப்பர். சமூகச் சீர்கோட்டின் அங்கமாகவும் விளங்குபவர்கள். என்னதான் மனிதர்கள் வலுவானவர்களாக இருப்பினும் எங்களுக்கு மேலான ஒரு சக்தியைப் பற்றி உணரும் நிலை இதில் தங்கியுள்ளதை அறிந்து கொள்ள முடிகிறது.
இயற்கையாகவே தாம்பாத்தியத்தின் மூலம் குழந்தைப்பேற்றை அடைய முடியாத வசதி படைத்தோர் செயற்கைக் கருவூட்டலை நாடி இந்தியா செல்கின்றனராயினும் எல்லோரும் தாய்மையடைவதில்லை. ஆனால் வறுமையில் வாடும் குடும்பங்களில் அளவுகணக்கின்றிப் பல குழந்தைகள் பிறப்பதைப் பார்க்க முடிகிறது. சுவேதாபோல குழந்தைக்கு ஏங்கும் பலரையும் காண முடிகிறது. என நினைத்துக் கொண்டே வண்டியின் 'ஸ்ரேறிங்' மீது தலை சாய்த்துக்கொண்டிருந்தான் ரவிசங்கர்.
"என்னை மன்னித்து விடுங்கள். தெரியாமல் கேட்டு விட்டேன். பிளீஸ் எழுந்திருங்கள்" என்று தலையை வருடினாள்.
தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள். அவனுடைய விழிகளில் நீர்த் திவலைகள் வழிந்து கொண்டிருந்தன.

(தொடரும்)

# சிறைக் கதவில் எத்தனை கம்பிகள்?

6

தொடர்

தாஸ் மாஸ்ரர்

**சிறைச்சாலை நிர்வாகம்**

'எஸ்.சி.ஆர்' இந்த மூன்று எழுத்துக்களும் (ஆங்கில எழுத்துக்கள்) சிறைச்சாலையைப் பொறுத்தவரை மிகவும் முக்கியமானவை.

'எஸ்' - செக்யூரிட்டி - பாதுகாப்பு

'சி' - கெயர் - கரிசனை

'ஆர்' - றீஹப்ளிசேஷன் - மீள்கட்டமைப்பு சிறைச்சாலைக் கைதிகளுக்கு இவை உரிய முறையில் வழங்கப்பட வேண்டும். குறித்த மூன்று விடயங்களும் இலங்கைச் சிறைச்சாலைகளில் எந்தளவுக்கு வழங்கப்படுகின்றன என்பது கேள்விக்குறியே. பாதுகாப்பு விடயத்தில் கவனம் இன்மை அல்லது சிறைச்சாலை நோக்கத்தைப் புறந்தள்ளியதன் காரணமாகவே 1983ஆம் ஆண்டு வெலிக்கடைப் படுகொலை தொடக்கம் 2000ஆம் ஆண்டு பிந்துனுவெவ படுகொலை வரை நிகழ்ந்தன. 1983ஆம் ஆண்டு தொடக்கம் 1990ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சிறைச்சாலைகளில் மிக மோசமான சித்திரவதைகளும், கொலைகளும் மனிதாபிமான மறுப்புக்களும் இடம் பெற்றன. இலங்கையில் உள்ள சகல சிறைச்சாலைகளுக்கும் மத்திய நிர்வாக மையமாக இருப்பது கொழும்பிலுள்ள வெலிக்கடைச் சிறைச்சாலையாகும். சிறைச்சாலைகளுக்குப் பொறுப்பான அதி உயர் அதிகாரி சிறைச்சாலை ஆணையாளர் ஆவார். தற்போது (2002) ஆணையாளராக இருப்பவர் உபாலி சமரவீர.

●●●

சிறைச்சாலைகளில் பல வகைகள் உண்டு. தண்டனை பெற்ற குற்றவாளிகள் அல்லது விசாரணைக்குக் காத்திருக்கும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அடைத்து வைக்கும் இடம் எனப் பொதுவில் கூறப்பட்டாலும் குணாம்ச ரீதியான வேறுபாட்டை அவை கொண்டிருப்பதை மறுக்க முடியாது. 'ஜெயில்' என்பது இதில் மிகப் பெரிய உள்ளடக்கத்தைக் கொண்டதாகும். இங்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றும் இடம், தூக்கு தண்டனை தீர்க்கப்பட்டு நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள், தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சாதாரண கைதிகள் எனக் கைதிகளில் பலதரப்பட்டவர்களையும் பல்வேறுபட்ட தொழில் முறை வசதிகளைக் கொண்ட கட்டுமானத்தையும் நிர்வாகக் கட்டுமானத்தையும் உள்ளடக்கி இருக்கும்.

நான் இலங்கையில் உள்ள 6சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோதிலும் ஒரு முழுமையான சிறைச்சாலை எனப் போகாம்பர சிறைச்சாலையை மட்டுமே குறிப்பிட முடியும்.

இந்தச் சிறைச்சாலைக்குச் சொந்தமான தடுத்து வைப்புச் சிறைச்சாலை கண்டி இராஜ வீதியில் (தலதா மாளிகைக்கு அருகில்) உள்ளது. மற்றொரு திறந்தவெளிச் சிறைச்சாலை கண்டி நகரிலிருந்து 4கிலோமீற்றர்கள் தூரத்தில் பல்லேகல என்ற இடத்தில் அமைந்துள்ளது.

●●●

போகம்பரை சிறைச்சாலையில் கடூழியச் சிறைத்தண்டனையின் நிமித்தம் நீண்ட காலம் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் கைதிகளிடம் பல்வேறு விதமான வேலைகள் வாங்கப்படுகின்றன. அதற்கான சகல விதமான வேலைத்தள வசதிகளும் அங்கிருக்கின்றன.

ஒரு பெரிய சிறைச்சாலையின் கட்டமைப்பில் பல்வேறு நிர்வாகப் பதவிகள் இருக்கும். பின்வருமாறு அமையும்.


1. சிறைச்சாலை அத்தியட்சகர்
2. உதவிச் சிறைச்சாலை அத்தியட்சகர்
3. பிரதம சிறை அதிகாரி
4. சிறை அதிகாரி தரம் 1 (இரண்டு நட்சத்திரங்கள் பொறிக்கப்பட்ட சின்னத்தைக் கொண்டவர்)
5. 'ஜெயிலர்' (ஒரு நட்சத்திரம்)
6. பொறுப்பதிகாரி
7. சாஜன்
8. சிறைச்சாலை ஊழியர்

இவை தவிர, நலன்புரி அலுவலர் என்ற ஒரு பதவியும் உள்ளது. இவர் 'ஜெயிலர்' தரத்தை விட உயர்வானவர். கைதிகளின் நலன்புரி விடயங்களைக் கவனிப்பதே இந்த அதிகாரியின் பணியாக இருந்தபோதிலும், கைதிகளின் 'நலன் உறிஞ்சும்' அதிகாரிகளாகவே நான் இருந்த சிறைகளில் எல்லாம் இவர்களைக் கண்டிருக்கிறேன்.

நீண்ட காலத் தண்டனை பெற்ற ஒரு கைதி விடுதலையாகி வீட்டுக்குச் செல்லும்போது ரயில் ரிக்கற் ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் ஆவணத்தை அல்லது பஸ் பயணத்துக்கான பணத்தை மட்டுமே சிறைச்சாலை நிர்வாகம் வழங்கும். அது ஒரு கைதிக்குப் போதுமானதல்ல. கொழும்பு மற்றும் வேறு பிரதேசத்துக் கைதிகள் மட்டக்களப்புச் சிறைகளிலிருந்து விடுவிக்கப்படும்போது சிறைச்சாலை ஊழியர் குறைந்தது 100ரூபாக்களை ஆவது தனது சொந்தப் பணத்திலிருந்து கொடுத்து அனுப்புவார். ஆனால், அதற்குரிய நலன்புரி அலுவலரோ இவ்விடயத்தில் அக்கறை காட்டுவதில்லை.

●●●

மட்டக்களப்பு, திருகோணமலை இரண்டு சிறைச்சாலைகளும் மிகவும் சிறியவை. அவை பிரதம ஜெயிலர் ஒருவரின் பொறுப்பில் இயங்குகின்றன. அநுராதபுரம் சிறைச்சாலை சுமார் 750 வரையான கைதிகளைத் தடுத்து வைக்கக் கூடியதாகும். அது 'எஸ்.பி' ஒருவரின் பொறுப்பில் உள்ளது.



போகம்பரை சிறைச்சாலையில் அத்தியட்சகர் சில வேளைகளில் சிறைச்சாலைகளின் எல்லாப் பகுதிகளையும் பார்ப்பதற்காக வருவார். தேர்போல பவனி வருவார். உதவி அத்தியட்சகர், பிரதம ஜெயிலர், ஜெயிலர்கள், பொறுப்பதிகாரிகள், நலன்புரி அதிகாரி எனப் பலர் புடைசூழ வருவார். நிர்வாக விடயங்கள், கட்டடங்கள், பாதுகாப்பு நிலவரங்கள் என எல்லாவற்றையும் பார்த்து விட்டு இறுதியாகக் கைதிகளிடமும் ஏதாவது கதைப்பார். கைதிகளோ பயபக்தியுடன் நிற்பார்கள். எந்தவித பிரயோசனங்களும் அற்ற விடயங்களை அவரிடம் கேட்பார்கள். அவர் தன்னை மிக உயரத்தில் வைத்துக் கொண்டு (ஒரு குருவியை பார்ப்பது போல) கைதிகளைப் பார்த்து அதே இடத்தில் சேவை நடப்பதுபோல நிற்கிற அதிகாரிகளுக்குக் கட்டளை பிறப்பிப்பார். எனது சிறை அனுபவத்தில் அவை எதுவும் நடந்ததாக இல்லை.

●●●

களுத்துறை, பூசா ஆகிய சிறைச்சாலைகள் ஏனைய சிறைச்சாலைகளின் வரையறைகளை விட வேறுபட்ட தன்மை கொண்டவை. இவ்விரு சிறைகளிலும் தமிழ் அரசியல் கைதிகள் மட்டும் தடுத்து வைக்கப்பட்டிருந்தமையால் இவை (பூசாவில் 2002ஆம் ஆண்டு சித்திரை மாதம் அளவில் தமிழ் கைதிகளை அங்கிருந்து எடுத்து விட்டு பொதுவான சிறைச்சாலையாக மாற்றினார்கள்) புனர்வாழ்வு முகாம்கள் என்றே வரையறுக்கப்பட்டிருந்தன. சிறைச்சாலைகளின் வகைகளில் மிகச்சிறியதாக இருப்பது 'லொக்கப்'. இது தற்காலிகமாகத் தடுத்து வைக்கும் ஒரு ஏற்பாடாகும். பெரிய சிறைச்சாலை நிர்வாகம் ஒன்றின் கீழ் இது நிர்வகிக்கப்படும். பொதுவாக நீதி மன்றங்களுக்கு அருகில் இவை அமைக்கப்பட்டிருக்கும். ஒன்று அல்லது இரண்டு சிறைகள் அங்கு இருக்கும். மலசல கூட வசதியும் அதனுள் இருக்கும். உடனடியாக ஒருவரைத் தடுத்து வைக்கும் உத்தரவை நீதி மன்றம் பிறப்பிக்கும்போது அவற்றில் தடுத்து வைக்கவும் வேறு சிறைகளிலிருந்து வழக்குக்காகக் கொண்டு வரப்படும் கைதிகளைத் தற்காலிகமாகத் தடுத்து வைக்கவும் இது பயன்படுத்தப்படுகின்றது. மிகச் சிறிய சிறைச்சாலை எனலாம். இங்கு ஜெயிலர்' தரத்திலான அதிகாரி ஒருவர் இருப்பார். ஏனைய வசதிகளும் இங்கிருக்கும்.

சிறைச்சாலை ஒன்றின் சட்டரீதியான கடமை என்னவெனில், நீதிமன்றால் சந்தேக நபரை அல்லது குற்றவாளியைத் தடுப்புக் காவலில் வைக்குமாறு கோரப்பட்டதற்கிணங்க அந்தக் குறிப்பிட்ட நபரை நீதிபதியால் குறிப்பிடப்பட்ட திகதி வரை தடுத்து வைத்துப் பாதுகாப்புக் கொடுப்பதாகும். ஒரு கைதி சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றபோதிலும் அவர் நீதிபதியின் பொறுப்பிலேயே இருப்பார்.

●●●

தொடர் துன்புறுத்தல், உணவு, குளிப்பு, உறவினரைப் பார்ப்பதில் பாரபட்சம் காட்டுதல் போன்ற விடயங்களில் சிறைச்சாலை நிர்வாகத்தால் கைதி பாதிக்கப்படும்போது தனது சட்டத்தரணி மூலம் அல்லது நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும்போது ஒரு கையை உயர்த்திக் காட்டினால் நீதிபதி அவரைக் கவனத்தில் எடுப்பார். அந்தக் கைதி தன்னிடம் எதையோ தெரிவிக்க விரும்புகிறார் என்பதைத் தெரிந்து கொள்வார். இந்த நிலையில் குறிப்பிட்ட கைதி தான் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறைச்சாலையில் தமக்கு இருக்கும் பிரச்சினைகளைக் கூறுமிடத்து அதற்கான ஏற்பாட்டை நீதிபதி மேற்கொள்வார்.

தீங்கியல் கைதிகள் அதிகமாக உள்ள சிறைச்சாலைகளில் சில சிறை அதிகாரிகள் கைதிகளைத் தீண்டாமை உணர்வுடன் பார்ப்பார்கள். இதனால் கைதிகள் குறிப்பிட்ட அதிகாரிகளுடன் முரண்பட வாய்ப்பு உண்டு. இவ்வாறான வேளைகளில் கைதிகளுடன் முரண்பட விரும்பாத அதிகாரிகள் வேறு கைதிகளைத் தூண்டி விட்டுக் குறிப்பிட்ட கைதியைத் தாக்குவதற்கும் ஏற்பாடு செய்வர். சில சந்தர்ப்பங்களில் இது கட்டுக்கடங்காத அளவுக்குச் சென்று விடுவதும் உண்டு. அதைப் பயன்படுத்திக் கலகம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் குறிப்பிட்ட கைதியை வேறு சிறைக்கு மாற்றி விடவும் அவர்களால் முடிகிறது.

சிறைச்சாலைக்குள்ளான அதிகாரங்கள் அதிகாரிகளால் பலவாறு பயன்படுத்தப்படுவதுண்டு. சில வேளைகளில் சிறைச்சாலை ஊழியர்களின் தாக்குதலால் காயமடைய கைதி அல்லது கை கால்கள் முறிந்து விட அல்லது இறந்து விட கூட வாய்ப்புண்டு. சிறைச்சாலைகளில் இருந்து தப்பி ஓடி மீண்டும் கைதாகின்றவர்களை மிக மோசமாகத் தாக்குகின்ற நடைமுறை எல்லாச் சிறைகளிலும் உண்டு. அரசியல் கைதியாகத் திருகோணமலைச் சிறைச்சாலையிலிருந்து தப்பி ஓடி மீண்டும் கைது செய்யப்பட்ட ஒரு கைதியைச் சிறைச்சாலை ஊழியர்கள் கடுமையாகத் தாக்கியதில் இடுப்பு எலும்பு உடைந்தது. நீண்ட காலமாகச் சிறைச்சாலைக்குள் உரிய சிகிச்சை இன்றி அவர் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருந்தார்.

●●●

பூசா, களுத்துறைச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை வழக்குக்காகக் காலை 9மணிக்கு முன் கொழும்பு நீதிமன்றத்துக்குக் கூட்டிச் செல்லவேண்டும். ஆனால் அப்படி நடப்பதில்லை. தாமதமாகி நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதால் தமது வழக்கை விசாரிக்க நீதிமன்றத்துக்கு அவகாசம் இல்லாமல் போகிறது. தவணை போடப்படுகின்றது என்ற விடயங்களைக் கைதிகள் நீதிமன்றங்களுக்கு எடுத்துக் கூறிய பின் சிறைச்சாலை ஊழியர்களுக்குக் அதைச் சரிவரக் கடைப்பிடிக்குமாறு கடுமையான உத்தரவை நீதிபதிகள் போட்டதாக அறிந்தேன். இந்த விடயத்தில் உயர் நீதிமன்ற நீதிபதியாக சேவையாற்றுகின்ற திருமதி சிராணி பண்டாரநாயக்கா மிகவும் இறுக்கமானபேர்வழிஎன்றும் அறிந்தேன்.

●●●

கைதி ஒருவர் சிறைச்சாலை நிர்வாகத்துக்குத் தொல்லை கொடுப்பவராக இருந்தால், அவரை வேறு சிறைகளுக்கு மாற்றும் அதிகாரம் குறிப்பிட்ட சிறைச்சாலைப் பொறுப்பதிகாரிக்கு உண்டு. வெலிக்கடை மத்திய நிர்வாகத்துக்கு அறிவித்து அனுமதி பெற்ற பின்பே மாற்ற முடியும். ஆனால் ஒரு கைதியை சிறைச்சாலையை விட்டு மாற்றித்தான் ஆக வேண்டும் என்று சிறைச்சாலை அதிகாரி முடிவெடுத்தால் எவ்வகையிலாவது அதைச் சாதித்து விடுவார்.

(தொடரும்)

# சொந்த மண்

சிறுகதை

சு.இராஜநாயகன்



ஈழகேசரிப் பண்ணையில், ஈழத்து எழுத்தாளர் சம்பந்தனின் அடிச்சுவட்டில் முகிழ்த்தவர். 30வரையான சிறுகதைகளைப் படைத்துள்ளார். நனவோடை உத்தி இவருடையது. 'பிரயாணி' என்பது இவருடைய நாவல். இளம்பிறை வெளியிட்ட 'காந்தீயக் கதைகள்' என்ற தொகுதியில் 'ஓநாய்கள் அழுகின்றன' என்ற இவருடைய கதையும் உள்ளடங்கியது. சமூகத்தில் நிரம்பியுள்ள ஓநாய்கள், வெள்ளாடுகள் நனையும் போது அழுவது ஏன்? தொண்டு செய்ய முன்வருவது ஏன்? என்பதைச் சித்திரிக்கிறது. 'இளம்பிறையில்' அது மறு பதிப்பும் செய்யப்பட்டது.

## பத்தாயம்

மாதத்தின் மூன்றாவது வாரத்தில் ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர் ஒருவருடைய் கதை மீள் பதிப்பாவது வழமை. அந்த வகையில் அமரர் சு.இராஜநாயகனின் 'சொந்த மண்' இது.

"கந்த ஆ.ஆஅஅ..." முருகேசரின் இந்த அழைப்பு அந்தக் கந்தக் கடவுளுக்குக் கேட்டதோ என்னவோ, அந்தப் பொரிய வேப்பமரத்தின்கீழ், பாத்தியிலிருந்து பிடுங்கி நாற்புறமும் எறிந்து விட்ட பனங்கிழங்குகள்போல படுத்திருந்த நூற்றுக்க ணக்கான மக்களுக்குக் கேட்டது. அவர்களின் தூக்கமும் சற்றுக் கலைந்தது.

முருகேசர் எழுந்து நின்றார். ஏதோ திசை நோக்கிக் கைகூப்பி மீண்டும் "கந்தா, கந்தா ஆஅ" என்றழைத்தார். தளர்ந்திருந்த நாலு முழத்தைச் சீராக உடுத்தார். நலமுண்டுத் துண்டை உதறித் தோளில் போட்டார். குனிந்து சிறு துணிப்பை ஒன்றை எடுத்தார். புறப்பட்டு விட்டார்.

தூரத்தில் சேவல் ஒன்றின் "கொக்கரக்கோ" கேட்டது. நேரம் அதிகாலை நாலரை மணியாக இருக்கும். இயல்பு நிலை குலையாமல் இருந்திருந்தால், நல்லூர்க் கந்தசாமிக் கோயிலின் ஆயத்தமணி நாதம் முருகேசரின் கோண்டாவில் விவசாயிகளைத் துயிலெழுப்பி அவரவர் தோட்ட நிலங்களுக்கு அனுப்பியிருக்கும். அவர்களுடன் முருகேசரும் நார்க் கடகத்தில் இலைச் சருகுகளைத் தலையில் தாங்கி, மண்வெட்டியுடன் தன் நிலத்தை நோக்கிச் சென்றிருப்பார்.

இன்று...?

'எங்கு செல்கிறோம்' என்ற இலக்கின்றி 'என்ன செய்யப் போகின்றோம்' என்ற விடை கிடைக்காத வினாவைச் சுமந்து கொண்டு அலை அலையாக வந்த பல நூறாயிரம் மக்கள் வெள்ள்த்தில் ஒரு துளி முருகேசர். அத்துளியோடு ஒட்டிக் கொண்ட மற்றிரு துளிகள் மனைவி மீனாட்சியும், மகள் பூமணியும்.

மனிதத் திரட்சியை ஊடறுத்தோ அல்லது அதனுடன் அள்ளுண்டோ செல்ல இயலாமல் வீதி ஓரத்தில் ஒதுக்கப்பட்ட சில நூறு மனிதருள் இவர்களும் சேர்த்தி.

கைதடி வயோதிபர் இல்லத்துக்குச் சற்று அப்பால் வீதியை முகப்பாய்க்கொண்ட பெரிய வெறுங்காணியினுள்ளே கண்ட பெரிய வேம்பு இவர்களுக்குத் தற்காலிக புகலிடம் தந்தது.

இரவு தங்கிச் செல்லலாம். குழந்தை, குஞ்சுகளுடன் தாய்மார் பலர், வயோதிபம் வாட்டும் ஒரு சிலர், வெவ்வேறு நோய் நொடி கண்டவர்கள், ஆணும் பெண்ணுமாய் இளசுகள் என்பவர்களோடு மூட்டை முடிச்சுக்களும் அங்கு பரந்து கிடந்தன. ஆடுகள், குட்டிகள் அங்குமிங்கும், நாய்கள் சில ஓடித்திருந்தன. பல சைக்கிள்கள்.

முருகேசரின் "கந்தா" அழைப்பொலி கேட்டு மீனாட்சியும், பூமணியும் விழித்து எழுந்து அமர்ந்தார்கள். அவர் புறப்பட்டு விட்டார் என்பதைக் கண்டதுமே அவர்கள் சுறுசுறுப்பா னார்கள்.

அவருடைய போக்கு அவர்களுக்குப் பழக்கமானது. அவர் எந்த நேரத்தில்என்ன செய்வார் என்று குறிப்பாலுணர்ந்து இவர்கள் நடந்துகொள்ள வேண்டும். நடந்து கொள்வார்கள். "ஏன்?" என்று கேட்கமாட்டார்கள்."அவர் சொல்வதெல்லாம் சரி" என்பது இவர்கள் தீர்மானம்.

தாமதமின்றித் தமது சிறிய பைகள் இரண்டைத் தூக்கியோராய் முருகேசரைத் தொடர ஆயத்தமானார்கள்.

புறப்பட்ட முருகேசருக்கும் வீதிக்குமிடையே முப்பது மீற்றர் தூரம் வழியில் கால்மாடு, தலைமாடு பேதமின்றி ஆண், பெண், சிறுவர், சிறுமியர் பரந்து படுத்திருந்தார்கள்.

மிகச் சாவதானமாகக் காற் சுவடுகளை நீட்டியும், குறுக்கியும் மக்களைத் தாண்டி அவர் வீதிக்குச் சென்று மிதக்க முடிந்தது. மீனாட்சியும் மகளும் சிரமங்களினூடாக ஒரு வழியாக வீதிக்கு'வந்து விட்டார்கள்.

வீதியில் மக்கள் நடமாட்டந் தொடங்கிவிட்டது. மங்கிய ஒளியிலும் பூமணி வீதியின் இருபுறமும் கூர்ந்து நோக்கினாள். அசாதாரண உயரங்கொண்ட முருகேசர் எந்தக் கூட்டத்தில் நின்றாலும் இலகுவில் கண்டு கொள்ளலாம்.

கைதடிச் சந்தியை நோக்கிச் செல்வோரிடையே அவரில்லை. எதிர்ப்புறம் நாவற்குழிச் சந்திக்குப் போகும் திசையில் முருகேசரின் வேகநடை தெரிந்தது.

நேற்று வந்த பாதையில் திரும்பிச் செல்கின்றார் ஏன்? வீடு நோக்கியா?

ஓட்டமும் நடையுமாய் இருவரும் முருகேசருக்குப் பின்னால் பத்து மீற்றர் தூரத்துக்கு வந்து விட்டார்கள்.

நாவற்குழிச் சந்தி எதிரே. ஒரு காலத்தில் புகைவண்டி நிலையமாக இருந்த இடத்தில் மேடை அடங்க மக்கள் படுத்துக் கிடந்தார்கள். முருகேசர் நின்றார். துணிப்பையைத் தோளில் கொழுவினார். கைகளை உச்சியில் குவித்து நான்கு திசையும் சுற்றிச் சுற்றி வணங்கினார்.

"கந்தா!" என இரங்கி அழுவாராய் அவனிடம் விடைபெற்றார். பின்னர் கேரதீவுப் பாதையில் நடக்கத் தொடங்கினார்.

வைகறை ஐந்து மணியிருக்கும் நாவற்குழி குடிமனைகளினூடாகச் செல்லும் வீதியின் இருமருங்கும் சாக்குகள் விரித்துச் சில்லறைக் கடைகள் முளைத்துக் கொண்டிருந்தன. பாதையின் ஓரத்திலிருந்த வெறுங் காணிகளுள் மரங்களின் கீழும் வான முகட்டின் கீழும் இடம் பெயர்ந்தோர் பலர் இன்னும் நித்திரையிலிருந்தார்கள்.

முருகேசரின் இயல்புநடை வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் அவர் மனைவியும் மகளும் நாயோட்டத்தில் சென்றார்கள்.

மறவன்புலவு.

இருபுறமும் வயல்கள், நெற்பயிர் சோர்ந்து கிடக்கிறது. ஒரு வயல் ஓரத்தில் ஒரு சிறு கொட்



டில் கோயில், வயல் காக்குந் தெய்வக் கோயில். காலைப் பூசைக்கு ஆயத்தங்கள் நடைபெறுகின்றன.

முருகேசர் நின்றார். கோயிலில் வடகிழக்கு மூலையில் வயல் ஓரத்தில் ஒரு கிணறு. கைவாளியால் நீர் மொண்டு கை, கால், முகங் கழுவியும் நீர் குடித்தும் சிலர் மீண்டனர்.

கிணற்றடியில் எவருமில்லாதபோது முருகேசர் அங்கு போனார். நலமுண்டுத் துண்டையும் துணிப்பையையும் ஒரு கல்லின்மேல் வைத்தார். நாலுமுழத்தோடு ஒரு காகக் குளிப்புக் குளித்தார். ஈரவேட்டி, உடலுடன் கோயில் வாயிலுக்கு வந்தார்.

இந்தச் சந்தர்ப்த்தைப் பயன்படுத்தி மீனாட்சியும், மகளும் கிணற்றடிக்குப் போய் கை, கால் முகங்கழுவி, தாகசாந்தி செய்து கோயிலுக்கு வந்தார்கள்.

'அரோகரா' ஒலி மத்தியில் சுவாமிக்குப் பஞ்சாலாத்தி காட்டிக்கொண்டிந்தார் பூசகர். இவர்களும் தரிசித்து வணங்கினார்கள். விபூதிப் பிரசாதம் பெற்றார்கள்.

பின்னர் அங்கு நின்ற பத்துப் பன்னிரண்டு பேரிடையே முருகேசரைத் தேடினார்கள். அங்கு அவரில்லை. வீதியைத் திரும்பிப் பார்த்தார்கள். நேர் வீதி. பார்வை செல்லும் தூரம் வரை இருபுறமும் பார்த்தார்கள். அவரைக் காணவில்லை.!

ஈரவேட்டி, நல்லஉயரம், சிறிய துணிப்பை அடையாளங் கூறி விசாரித்தார்கள்.

சற்று முன்னர் அவர் கேரதீவுப் பக்கஞ் சென்று விட்டாராம். இவர்கள் வீதியிலிறங்கி நடக்கத் தொடங்கினார்கள். வீதியிலெங்கும் இந் நெடிய உருவத்தைக் காணவில்லை.

இவர்களுக்குப் பின்னால் சிறுவன் ஒருவன் ஓடி வந்தான் அவர்களிடம் ஒரு துணிப்பையைக் கொடுத்தான்.

முருகேசரின் பை!

"இது ஆர் தந்தது?"

"அந்த ஐயா உங்களிட்டைக் கொடுக்கட்டாம்."

"அந்த ஐயா எங்கை?"

"குடுக்கச் சொல்லிப்போட்டுப் போட்டார்"

சிறுவன் கேரதீவுச் சந்திப் பக்கம் நீட்டிக் காட்டினான்.

பூமணி பையினுள்ளே பார்த்தாள். ஒரு கடதாசிப்பை. உள்ளே சில பணத்தாள்கள். எண்ணினாள். சிறிய பெரிய தாள்களில் நாலாயிரத்து நூறு ரூபா.

"அம்மா இதுக்கை காசிருக்கு"

அம்மாவுக்கு இது கேட்கவில்லை. கணவனைக் காணாத, பறிகொடுத்த தமிழச்சியாய் அவள் நினை விழந்தாள். நிலத்தில் சரிந்து விழவிருந்த தாயை மகள் அணைத்தாள். நிலத்தில் அமர்ந்து தாயின் தலையைத் தன் மடியில் தாங்கினாள். மீனாட்சிக்கு வியர்த்துக் கொட்டியது. குளிர்ந்த இக்காலை வேளையில் இப்படி ஒரு வியர்வையா? பசியோ? துணிப்பையால் தாயின் முகத்தைத் துடைத்தாள். துடைத்தல் தொடர்ந்தபோது பூமணிக்கு அழுகை வந்துவிட்டது. பரம்பரை பரம்பரையாகச் சீவிய காலம் முழுவதும் சிறுகச் சிறுகச் சேர்த்த உடமைகளைத் தற்காலிகமாகவேனும் கைவிட்டு, "எங்கு, ஏன், என்ன செய்ய" புரியாமல் ஓரொரு துளியாகச் சென்று கொண்டிந்த மனிதப் பேரலையில் எவரும் இவர்களைத் திரும்பியும் நோக்கவில்லை.

பேரலை நகரத் தொடங்கியது. வீதி நிறைந்து மக்கள் கிழக்குத் திசையில் நகர்கிறார்கள். வெயிலும் ஏறத் தொடங்கி விட்டது. தங்கி ஆற நிழலில்லை. இப்படியே இருந்தால்...?

மீனாட்சி சற்றுத் தேறிவிட்டாள். கண்கள் திறக்க வெருட்சி தெரிந்தது. அரைமணி நேர மயக்கந் தீர்ந்து மகளின் மடியிலிருந்து எழுந்தாள்.

"அப்பா வந்துட்டாரா?" முதல் கேள்வி. பூமணி பதில் தரவில்லை.

"எழும்பு போவம். போய்த் தேடுவம்" நடக்கத் தொடங்கினார்கள். கணவனைக் காணாத வெப்பியாரம் உள்ளே. வெளியே வெயில்.

ஒரு மணி நேர நகர்வின் பின் கேரதீவுச் சந்திக்கு வந்து சேர்ந்தார்கள். மர நிழல்களின் அரவணைப்பில் பலர் ஆறிக்கொண்டிருந்தார்கள். இவர்களும் அங்கு ஒதுங்கினார்கள். நகர்வதையே நோக்காக, வெயிலையும் களைப்பையும் பொருள் செய்யாது, மக்கள் சாவகச்சேரி நோக்கிச் செல்கிறார்கள். சிறுவர், சிறுமியர் வாடிய கீரைத் தண்டுகளாய் பெற்றோரின் பின்னால் ஓட்டமும் நடையுமாகச் செல்கிறார்கள்.

பூமணியும் தாயும் பயணத்தைத் தொடர்ந்தார்கள். வழியெல்லாம் திரள் திரளாக மக்கள். இடைக்கிடை சில வாகனங்களுக்கு இடம்விட்டு வீதி ஓரத்தில் நிற்கும் நிலை.

சாவகச்சேரி எட்டாத தூரத்தில் இருப்பதாக இவர்களுக்குப் பட்டது. அள்ளுண்டு சென்றார்கள். சாவகச்சேரிச் சந்தியைக் கண்டபோது முற்பகல் பதினொன்றரை மணி.

சந்தியில் விவரிக்க முடியாத நெரிசல். கூடு முழுமையும் மொய்த்துப் புரளும் தேனீக்களாய் மக்கள் திரள். கேரதீவுப் பாதைத் திரளும், பிரதான வீதித் திரளும் அங்கு சங்கமித்துப் பெருந்திரளாய்ப் பரிணாமங் கொண்டது. இதை ஊடறுத்துச் செல்வது முயற்கொம்பு. போதாதற்குச் சில வாகனங்களும் நெரிசலைப் பிரமாண்டமாக்கிக் களேபரம் ஏற்படுத்தின.

மீனாட்சிக்கும் பூமணிக்கும் வாழ்வே வெறுத்த நிலை. இந்த நிலை இன்னும் எத்தனை ஆயிரம் பேருக்கு ஏற்பட்டதோ?

நகர்வுக்காய் மேற்கொண்ட பல்லாயிரம் பகீரதப் பிரயத்தனம் ஒன்றுடன் ஒன்று மோதின. பரிதாபக் குரல்களும் அவல ஒலிகளும் குழந்தையின் அழுகைக் குரல்களும் அந்தச் சதுக்கத்தையே உருக வைத்தன.

அலையால் ஏற்றுண்ட துரும்புகளாய் அள்ளுண்டு இந்துக் கல்லூரிக்குள் இருவரும் ஒதுக்கப்பட்டபோது நேரம் ஐந்து மணிக்கு மேலிருக்கும். பசியையும் தாகத்தையும் விஞ்சிய களைப்பு.

பல நூறு மக்கள் நின்றும், நடந்தும் இருந்தும், கிடந்தும் உள்ளிடத்தை நிரப்பி இருந்தார்கள். இந்த இருவரும் குந்தி இருக்க ஓரிடம் கிடைத்துவிட்டது.

43

அறிக்கை

கதிரேசன் காத்தவராயன்

# புலுடாப் போராட்டம்...

பிசுபிசுத்துப்போன சுழிபுரப் போராட்டத்தைப் பற்றி அண்டைக்குக் கதைச்சு வாயை மூடக்கு முன்னம் அடுத்த பிசுபிசுத்த போரட்டமும் நடந்து முடிஞ்சி ருக்குப் பாருங்கோ. நான் பிறந்த ராசியோ என்னவோ என்ர வாய்க்குப் பதமாய் விசயங்கள் வந்து கொண்டே இருக்குது. அதுதான் பாருங்கோ! உந்தக் கல்விச் சமூகக்காரர் போன புதன் கிழமை நாலாந்திகதி செய்த போராட்டத்தைத்தான் சொல்லுறன். விளங்குதே?

வீட்டிலை என்ரை பேரப்பிள்ளையள் உதைப்பற்றித் திங்களண்டே சொல்லிப் போட்டுதுகள். அதுகளுக்கென்ன கொண்டாட்டந்தானே? பிள்ளையளுக்கு மட்டுமே, வாத்திமாருக்கும்தான் வலு சந்தோசம். பிள்ளையள் வராட்டிப் பாக்கிற அலுவலுகளை



நேரத்தோட பாக்கலாமெல்லே? சனி, ஞாயிறுகளிலை அவைக்கும் ரியூசன். தங்கட படிப்புகள், பிள்ளைகுட்டியளின்ர படிப்புகள் 'செமினாறுகள்'. போட்டியள் அது இதுவெண்டு அலைச்சல் தானே. ஓய்வா ஒருநாள் இருக்கவும் வேணுந்தான். அதுக்கான ஒரு சந்தர்ப்பமல்லே இது?

◀ ◀ ◀ ◀

முத்தண்ணையின்ர கடைசிப் பெட்டையும் வாத்திதானே. இப்ப அதிபராயும் விட்டாளெண்டு முத்தர் புழுகுகிறவரல்லே. அவளிட்ட என்ன ஏதெண்டு கேப்பமெண்டு போனன். அவசர அவசரமாய்ப் பள்ளிக்குப்போக வெளிக்கிட்டு நிண்டுது. என்ன பிள்ளை போராட்டமோ ஏதோவாம்? உமக்கு உதுகள் இல்லையோ? எண்டு கேட்டன். "ஓம் மாமா! எண்டுதான் கதைக்கினம். நாங்கள் போகாட்டி லீவெல்லோ அனியாயமாப் போகும்? ஏன் கிடக்கிற லீவை வீணாக்குவானெண்டுதான் போறன். இண்டைக்குக் கைநாட்டு மிசின் இல்லாதபடியாலை கொஞ்சம் பிந்திப்போகலாம்" எண்டிச்சுது அது. பேப்பருகளிலை போராட்டம் எண்டு கிடக்குதுதான் பிள்ளை! உண்மையா என்ன பிரச்சினைக்காகப் போராடுறியள்? எண்டு கேட்டன். "அதுதான் எங்களுக்குச்சரியா விளங்கேல்லை. பேப்பருகளைப் பாக்கிறதுக்கு எங்க மாமா எனக்கு நேரங்கிடந்தாத் தானே?" எண்டாள்.

அதோட அவவின்ர போராட்டம் சரி. நான் எனக்குள்ளயேநினைச்சது என்னவெண்டா, உப்பிடியான ஆக்களை வைச்சுப் போராட்டம் செய்தா பிசுபிசுக்காம என்னதான் செய்யும்? இதே மாதிரித்தான் சுப்பம்மாவின்ர மூத்தவனுக்கும் பெரிசா ஒண்டும் தெரியேல்லை. அவன் இலக்கியம், பட்டிமன்றம் அதுஇதுவெண்டு கொஞ்சம் அடிபடுகிற ஆள். ஆனால் அவனுக்கும் தெரியாதெண்டது எனக்கு ஒருமாதிரியாயிருந்துது. என்ன செய்ய? கந்தையர் நெடுகவும் சொல்லுறவர் வாத்திமார் இப்ப சமூகத்தோட ஒட்டாத ஆக்களெண்டு. அது தான் இதுபோலை!

◀ ◀ ◀ ◀

அண்டைக்கு இதைப்பற்றிக் கதைக்கேக்குள்ள ராசலிங்கத்தார் சொன்னதும் சரிதான் போலை கிடக்குது. அது என்னண்டா? "வாத்திமாரெண்டு நாங்கள் பெரிசா நினைக்கிறது பிழை கண்டியளே. அவைக்குப் பாடப்புத்தகங்களுக்கும் சிலபசுக்கும் வெளியாலை ஒரு கோதாரியும் தெரியாது. அறியவேணுமெண்ட ஆர்வமும் இல்லை. தங்கட பதவியு உயர்வுக்கான, சோதினைக்கான பொது அறிவைக்கூட 'பொது அறிவு' எண்டு தலைப்புப்போட்டு விக்கிற புத்தகங்களைப் பாடமாக்கிறதோட சரி. எதையும் விளங்கி, ஆராய்ஞ்சு, தேடியறியிற பழக்கம் இல்லை. ஆராவது ஏதாவதைத் தேடி வைச்சிருந்தா அதைப் போட்டோக்கொப்பியடிச்சுப் பாடமாக்கி அந்தநேரத்து அலுவலை முடிக்கிறதோட சரி அவையின்ர அறிவு" எண்டார்.

உண்மைதான்! வாத்திமார் தங்கட அறிவை வளக்கிறதில்லை எண்டதுக்கு நிறைய உதாரணங்களைச் சொல்லலாம். பிள்ளையளுக்குப் புத்தகத்தை வாசிச்சுக் கேள்வியும் விடையுமாக் குடுத்துப் பாடமாக்கப் பண்ணிச் சோதினைக்கு அனுப்பினாச் சரி. றிசல்ற் வீதத்தைக் காட்டினாச் சரி எண்டுற அளவோட அவையின்ர கடமை சரி எண்டு நினைக்கினம் போலைதான் கிடக்குது.

◀ ◀ ◀ ◀

"கல்விச்சேவையிலை அநியாயம் நடக்குதெண்டு பேப்பருகளிலை வந்ததுகளோ. போராட்டத்துக்கான காரணங்களோ எதையும் அறியாமலுக்குப் போராட்டமெண்டது சரிவருமோ? அது கிடக்க, போராட்டத்தை நடத்துகிற வைக்கும் வாத்திமாருக்குமான உறவு என்ன எண்டது அடுத்த பிரச்சினை" எண்டு இப்ப பென்சன் எடுக்கிற வாத்தியார் பரமர் சொல்லுறதிலையும் விசயமிருக்கல்லே? வாத்திமாற்ற பிரச்சினையளைத் தீர்க்கிறதுக்கு ஏதாலும் செய்தவையோ? சம்பள உயர்வு வசதியள், அது இதுவெண்டு நாட்டிலை உள்ள எல்லாத் தொழிற் சங்கங்களும் போரடுகுதுகள். வெற்றியும் அடையுதுகள், நன்மையள் கிடைச்சிருக்கு.

"இந்த ஆசிரியர் சங்கங்கள், ஆசிரியர் பதவியுயர்வு, சம்பள உயர்வு எண்டேதும் போராடாமலுக்கு, வாத்திமாரைக் கசக்கிப் பிழியிற பதவிக்கு வாறவைக்கு வக்காலத்து வாங்கிறதுக்காக போராடுகினை. அதுக்கு நாங்களேன் எங்கட சொந்த லீவை வீணாக்க வேணும்?" எண்டு 'சயன்ஸ்' மாஸ்ரர் சங்கரன் சொல்லுறதிலையும் நியாயமிருக்கல்லோ?


"இருக்கும் வரைக்கும் ஒளிச்சொளிச்சு வகுப்புக்கே போகாமலுக்கு இருந்து படிச்சுப் படிச்சுப் பட்டங்களை எடுத்து அதுகளையும் செல்வாக்குகளையும் வைச்சுப் பதவிக்கு வாறவை தங்கட பழங்கதையளை மறந்து வாத்திமாரை மேய்க்க வெளிக்கிடுறது நடக்கிறேல்லையெண்டு சொல்லுங்கோ பாப்பம்?" எண்டு சவால் விடுகிற துணிவு சங்கரனுக்கு மட்டுமில்லை இளங்கோவுக்கும் இருக்கு எண்டதைச் சும்மா கதையாய் விடமுடியாதல்லே?

அப்ப இந்த நிலையிலை போராட்டத்தைப் பற்றித் தெரியாதைவையையும், சங்கங்களிலையும் அதிகார மட்டத்திலையும் தெளிவான வெறுப்போடையும் இருக்கிறவையை வைச்சு ஒரு போராட்டம் செய்யலாமோ? ஒவ்வொரு தனியாளும் தனக்கு நன்மையில்லாத விசயத்துக்காகத் தன்ர சொந்த லீவை வீணாக்க முடியுமே?

அதோட அண்டைக்கு ஒரு 'போஸ்ற் பீயோன்' சொன்னான், "உவைக்குப் போராடுகிற துணிவில்லை. பேந்தேன் போராட்ம்? தங்கட சொந்த லீவை எடுக்கிறதாலை என்ன பிரயோசனம்? போராட்டமெண்டா உப்பிடியே செய்யிறது? சரியான ஏமாத்துப் பேர்வழியள்?" எண்டான். இதிலையும் உண்மை இருக்கோ? இல்லையோ? கஸ்ரமில்லாம, நட்டப்படாமச் செய்யிறது போராட்டமில்லைத்தானே? என்ன சொல்லுறியள்?

> போராட்டத்துக்கான காரணங்களோ எதையும் அறியாமலுக்குப் போராட்டமெண்டது சரிவருமோ? அது கிடக்க, போராட்டத்தை நடத்துகிற வைக்கும் வாத்திமாருக்குமான உறவு என்ன எண்டது அடுத்த பிரச்சனை....





கவிதைகள்

மாதவி உமாசுத சர்மா

## செல்லாக்காசு ஆனாய்...


அக்கம் பக்கம் வீட்டினருடன்
அன்பைச் செலுத்த மறுக்கிறாய்
ஆதரவேதும் இல்லாமல்
அநாதைபோல் ஆகிறாய்

சேர்வோர் தோஷம் அத்தனையும்
செய்ந்நன்றி மறப்பதால்
சேர்த்து வைத்த பெயரெல்லாம்
செல்லாக் காசாய் ஆனதே!

ம்னிதர்களைத் தேட மறந்து
மமதையில் நிற்பதும்,
மாற்றம் வரும் வேளையில்
மௌனமாக நிற்பதேனோ?

நாணயத்தை மறந்ததால்
நல்ல பெயர் உனக்கில்லை
நலிவுற்ற நாள்களிலே
நாதியற்று நிற்கிறாய்

வழி தவறி வந்த பணம்
வசந்தத்தைத் தந்து
செல்லாது எனும்போது
செய்வதறியாது நிற்பதேனோ?




தரித்த கார் மேகங்களின்
மழலையாக அவள்!

மண் எனும் மரபில் தத்தித் தவழ
வளர்ச்சியின் முதலாய்
நதியாகத் தனையாக்கி
மக்களின் நிறம் பாராது
தரம் பார்க்காது தவித்தவர்
தாகம் தீர்த்து உழவனின்
உழவுக்கு உதவிக்கு வந்து
உண்ண உணவு தந்து
பலன் ஏதும் பாராது பார்
முழுதும் பாய்கிறாள் அவள்!

தொகுப்பு
அனார்கலி



# தென் கிழக்கு திசையில் இருந்து



## புதிய கட்சி!

கிழக்கு மாகாணத்தைத் தளமாகக் கொண்டு புதிய அரசியல் கட்சி ஒன்றை நிறுவுவதற்கான ஆரம்ப முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.
கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சராகவிருந்த தமிழ் அரசியல் பிரமுகர் ஒருவர் இந்தப் புதிய கட்சியை ஆரம்பிப்பதற்குக் கால்கோளிட்டுள்ளார் எனவும் தெரிய வருகின்றது.
குறித்த முன்னாள் மாகாண அமைச்சர் புதிய தமிழ்க் கட்சியை நிறுவுவது தொடர்பில் கிழக்கிலுள்ள சில முக்கிய அரசியல் பிரமுகர்களுடன் ஆரம்பக்கட்டப் பேச்சுக்களை நடத்தி வருகின்றாராம்.

**"எத்தனைக் கட்சிகளப்பா எமக்கு மத்தியில்?"**
கேட்கிறார்கள் மக்கள்.

## வடக்குக்குப் பரிசாம்!




வவுனியா மாவட்டத்தின் புதிய மாவட்டச் செயலராக அம்பாறை மாவட்டம்- சம்மாந்துறையைச் சேர்ந்த ஐ.எம்.ஹனிபா கடந்த வாரம் பதவியேற்றுள்ளார். அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களில் கடந்த 27 வருட காலமாகப் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய அனுபவம் உள்ள புதிய மாவட்டச் செயலர் ஹனிபா அரச நிர்வாக சேவையின் அதிவிசேட தரம் பெற்றவராவார். இவரது பதவியேற்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட அம்பாறை தீகவாப்பி பௌத்த விகாரையின் விகாராதிபதி போதிவல சந்தானந்ததேரர், "கிழக்கு மக்கள் வடக்கு மக்களுக்கு அளித்த பெறுமதிமிக்க பரிசே புதிய மாவட்டச் செயலர் ஹனிபா" எனத் தெரிவித்தார்.

**கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் பெருமைதானே**

## கடலரிப்பைக் கட்டுப்படுத்த...

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசக் கிராமங்களில் ஏற்பட்டு வரும் கடுமையான கடலரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.
ஒலுவில்துறை முகத்திலும் அதை அண்மித்த கடலோரத்திலும் குவியும் மணல் காரணமாகவே ஒலுவிலை அடுத்துள்ள பிரதேசங்களில் கடலரிப்பு ஏற்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.
இதனால், குறித்த குவியும் மணலை கப்பல் மூலம் அகற்றி, கடலரிப்பைத் தணிப்பதற்கு துறைமுக அதிகாரசபை ஆவனசெய்யவுள்ளது.
முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் முயற்சியால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக அவரது ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

**கிழக்கு மாகாணசபைத் தேர்தலும் வரப்போகிறதே!**



## சுற்றுலா அபிவிருத்தி

அம்பாறை மாவட்ட சுற்றுலாத் துறை அபிவிருத்தி (2020 வரை) திட்டங்களடங்கிய திட்ட வரைவு ஆவணம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.
உள்ளீட்டு வளர்ச்சிக்கான திறன் அபிவிருத்தி நிறுவனம், அம்பாறை மாவட்ட செயலகத்துடன் இணைந்து 'ஆஸ்திரேலியன் எய்ட்' நிறுவன அனுசரணையுடன் இந்த ஆவணத்தை வெளியிட்டுள்ளது.
அம்பாறை மாவட்ட இணைப்பாளர் (திறனபிவிருத்தி) யூ.எல். சம்சுதீன் தலைமையில் அம்பாறை- மொண்டி மண்டபத்தில் நடைபெற்ற இந்த ஆவண வெளியீட்டு நிகழ்வில் மாவட்ட செயலர் துசித பீ.வணிகசிங்க முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டார்.

**நாட்டுக்கு வருமானம் தரும் சுற்றுலாத்துறை**





## மாவட்டச் செயலருக்கு வாழ்த்து

வவுனியா மாவட்டத்தி புதிய மாவட்டச் செயலராகப் பதவியேற்றுள்ள ஐ.எம்.ஹனிபாவுக்குக் காரைதீவு புஸ்பா பொருளாதார கல்வி, சமூக அபிவிருத்தி அமைப்பு வாழ்த்துத் தெரிவித்துள்ளது.
அமைப்பின் பணிப்பாளரும் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான செல்லையா இராசையா, அமைப்பின் சார்பில் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.
"அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேச செயலகங்களிலும் பிரதேச செயலராகக் கடமையாற்றி அனுபவமிக்க நிர்வாகியாகத் திகழும் தாங்கள் வவுனியா மாவட்ட மக்களின் நல்லபிப்பிராயம் பெற்றுச் சேவையாற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு" என வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தொடரட்டும் உமது சேவை**



## கதிர்காமத்துக்கு விசேட சேவைகள்!

கதிர்காமம் திருத்தலத்தின் ஆடிவேல் விழா உற்சவத்துக்குச் செல்லும் பக்தர்களின் நலன்கருதி கிழக்கில் விசேட பேருந்துச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பாகத் தென்கிழக்கிலுள்ள போக்குவரத்துச் சபையின் பஸ் டிப்போக்கள் பேருந்துச் சேவைகளை ஆரம்பித்துள்ளதுடன் உற்சவ இறுதிக்காலத்தில் அதிகளவான பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்தவும் திட்டமிட்டுள்ளதாக டிப்போ அதிகாரிகள் தெரிவித்தனர்.




## அமைப்பாளர் எங்கே?

தொழில் முயற்சியாளர்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் எழுச்சிப் பெருவிழா ஒன்று கடந்த சில தினங்களுக்கு முன்னர் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் முதன்மைப்பங்கு பெற்றுதலுடன் நிந்தவூரில் நடைபெற்றது.
கைத்தொழில் வர்த்தக அமைச்சும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஆட்சி அதிகாரத்திலும் உள்ள நிந்தவூர் பிரதேச சபையும் இணைந்து இந்தப் பெரு விழாவை நடத்தியது.
இந்த விழா ஏற்பாடுகளுக்கோ பயனாளிகளைத் தெரிவு செய்யும் விடயத்துக்கோ அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் நிந்தவூர் அமைப்பாளர் மருத்துவர்.ஏ.எல்.பரீத் அழைக்கப்படாது புறக்கணிக்கப்பட்டதாக விசனம் வெளியிடப்பட்டுள்ளது.
மருத்துவர்.பரீத் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலத்தில் ஏறாத பரப்புரை மேடைகளே இல்லை எனலாம்.!

**ஆறுகடக்கும் மட்டும்....!**

# தாய்லாந்துக் குகையும் சிறுவர்களின் மீட்பும்





தாய்லாந்தில் சுமார் 10 கிலோமீற்றர்கள் நீளமுள்ள, ஆழமான சிக்கலான குகை தாம் லுவாங். அதற்குள் பயணம் மேற்கொண்ட 12 பேர் கொண்ட சிறுவர் கால்பந்து அணியும் அவர்களது பயிற்சியாளரும், திடீரென ஏற்பட்ட மழை வெள்ளத்தால் சுமார் ஒரு கிலோமீற்றர் ஆழத்தில் ஜூன் 23ஆம் திகதி சிக்கிக் கொண்டனர். 17 நாள்களின் பின்னர் அவர்கள் மீட்கப்பட்டனர்.

அவர்கள் உள்ளே சென்றிருந்த நிலையில், திடீரெனப் பெய்த பெருமழையும், அதையடுத்து குகைக்குள் பாய்ந்த காட்டு வெள்ளமும் குகையின் வெளியேறும் வாயில்களை அடைத்துக் கொண்டதால், இந்த 13 பேர் அணி, ஒதுங்குவதற்குச் சற்று மேடான இடத்தைத் தேடி குகைக்குள் பின்னோக்கிச் சென்றதாகத் தெரிகிறது. அதன் பின்னர் குகைக்குள் நீர் நிறைந்ததாலும், இருட்டாக இருந்ததாலும், பாதை மறந்ததாலும் சிறுவர்கள் வந்த வழி மறந்தனர்.

குகையின் உள் பகுதி சில இடங்களில் 33 அடி உயரம் வரை இருந்தாலும், சில இடங்கள் மிகவும் குறுகலானவை. ஒரு இடம் வெறும் 40 செ.மீ. அகலம் மட்டுமே உடையது. மீட்புப் பணியாளர்கள் வாயு நிரப்பப்பட்ட கொள்கலனோடு அந்த இடங்களை நீந்திக் கடப்பது கடினம். எனவே, அவர்கள் தங்கள் அதைக் கழற்றி எடுத்துக் கொண்டுதான் அந்த இடங்களைக் கடக்க முடியும். இந்த நிலையில் ஒவ்வொரு சிறுவரோடும் இரண்டு முக்குளிக்கும் வீரர்கள் உடன் வரும்வகையில் மீட்புப்பணி திட்டமிடப்பட்டது. மீட்பு வீரர்களுக்கு வழிகாட்டுவதற்காக மீட்புப் பாதையில் மிகப் பெரியதொரு கயிறு கட்டப்பட்டது. அதன் வழியாக இரண்டு மீட்பு வீரர்களும் ஒரு சிறு வரும் நீந்திக் கடக்கும் வகையில் திட்டமிடப்பட்டது. ஒருவாறாக அனைவரும் மீட்கப்பட்டனர். அனைவரும் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்கள் தொடர்பிலான காணொலியொன்று வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் இந்தச் சம்பவத்தை மையமாக வைத்துத் திரைப்படங்களைத் தயாரிக்கவும் தயாராகியுள்ளது ஹொலிவூட்.

**"தாய்லாந்து வியக்க வைத்துள்ளது..."**

# ரவுண்ட் த வேள்ட்

தொகுப்பு

பிரகாஸ்

## தொடர்கிறது 'வரிப் போர்'



அமெரிக்கா - சீனா இடையிலான வரிப்போர் முடிவின்றித் தொடர்ந்து வருகிறது.

ட்ரம்ப் அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்ற போது அமெரிக்க உற்பத்திகளுக்குச் சீனா விதிக்கும் வரி வீதம் 25 என்று இருந்தது. எனினும் சீன உற்பத்திகளுக்கு அமெரிக்கா வெறும் 2.5 வீத வரியை மட்டுமே விதித்து வந்தது. இந்த நிலையில் இதை மாற்ற முடிவெடுத்த ட்ரம்ப் சீனப் பொருள்களுக்கான இறக்குமதி வரியை அதிகரித்தார். இதையடுத்து சீனாவும் அமெரிக்க உற்பத்திகளுக்கான இறக்குமதி வரியை அதிகரித்தது. இவ்வாறு மாறிமாறி வரி அதிகரிப்பு இடம்பெற்று வந்தது. தற்போது 13 இலட்சம் கோடி சீனப் பொருள்களுக்கு 10 வீதம் வரியை விதித்துள்ளார் ட்ரம்ப்.

## மிதக்கிறது ஜப்பான்!

ஜப்பானில் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் கடும் மழையை அடுத்து ஜப்பானின் ஹிரோசிமா, யாமாகுச்சி, ஒகாயமா ஆகிய மாநிலங்களின் கணிசமான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

கடந்த 26 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அங்கு தற்போது கடும் மழை பெய்கிறது. வீதிகள் பல்லாயிரக் கணக்கான வீடுகள் என்பன வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 260ஆக உயர்ந்துள்ளது. ஏராளமானவர்களைக் காணவில்லை.

மீட்கப்பட்ட சிலரின் நிலமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் உயிரிழப்பு அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. இதையடுத்து வெள்ள இடர் ஏற்பட்ட நகரங்களில் 'அவசர நிலை' அறிவிக்கப்பட்டுள்ளது.

**"சட்டடென மீண்டெழுவது ஜப்பானுக்குப் புதிதல்ல..."**





## உலகின் மிகச்சிறிய நாய்

உலகிலேயே ஆகச்சிறிய நாய். அதன் பெயர் மில்லி. அமெரிக்காவில் இரண்டு தடவைகள் உலகத்திலேயே ஆகச் சிறிய நாய் என்ற பெருமையைத் தனதாக்கிக் கொண்ட மில்லி, 'அதிசய' மில்லி என்ற அடைமொழியுடனேயே பிரபலமாகி யுள்ளது.

மில்லி பிறந்த போது ஓர் அப்பிளின் எடையையே கொண்டிருந்ததுடன், உள்ளங்கையில் உருண்டு புரளக்கூடியதாகவும், 3.8 அங்குலம் உயரம் கொண்டதாகவும் இருந்துள்ளது. பிறந்த போது இந்த நாய் உயிர்பிழைக்காது என்றே பலரும் கருதினர். எனினும் கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டு, பாலூட்டி மில்லியைக் காப்பாற்றியுள்ளனர் மருத்துவர்கள்.

கொரியாவிலுள்ள ஆராய்ச்சி மையம் மில்லியின் மரபணுக்களைப் பெற்று ஆராய்ச்சிகளை மேற்கொண்டு இப்படி மிகச் சிறிய அளவிலான நாய் எப்படி உருவாகியது என்பதைக் கண்டுபிடிக்க முயல்கி றது. இந்த மரபணுவை எடுத்து ஒரு தாய் நாயின் கர்ப்பப்பையில் வைத்து 12 நாய்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் மில்லியைப் போன்ற தோற்றத்திலேயே உள்ளனவாம்.

**"எலியை குளோனிங் செய்யாதேங்கோ 'தெலஸ்கோப்' வாங்கக் காசில்லை..."**



## முதலிடத்தில் ட்ரம்ப்!

கீச்சகத்தில் அதிகமானோரால் பின்தொடரப்படுகிற தலைவல்களின் பட்டியலில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் முதலிடம் பிடித்தார். 5.2 கோடி மக்கள் கீச்சகத்தில் ட்ரம்ப்பைப் பின்தொடர்கின்றனர். அமெரிக்க அதிபராகப் பதவியேற்ற பின்னர் ட்ரம்பைப் பின்தொடர்பவர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்தது. இரண்டாவது இடத்தில் 4.75 கோடி பேருடன் பாப்பரசர் பிரான்சிஸ் உள்ளார். மூன்றாவது இடத்தில் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி உள்ளார்.

**"அப்ப மைத்திரிக்கு...?"**

சிரிப்பு

செ.செல்வராஜா

# நகரவாசியான பரமசிவத்தார்!

பரமசிவம் எனது சிறந்த நண்பர். நான் வேறு அவர் வேறு அல்ல. நெருங்கிய-'திக்'கான நண்பர்கள். 'திக்' என்றால் அப்படியொரு 'திக்'. அன்றைக்கு எங்களது கோவில் அன்னதானத்தின் போது காய்ச்சப்பட்ட பாயாசம்போல அவ்வளவு'திக்'கான - தடிப்பான நட்பு.

▼ ▼ ▼

கோவிலில் பாயாசம் காய்ச்சப்பட்டுக் கொண்டிருந்தது. மரக்காலை மணியத்தாரின் சார்பில்தான் அன்னதானம். விறகு விறகாக் கொண்டுவந்து மனுசன் குவிச்சு வைச்சுது. பிறகென்ன? அடுப்பு எரிப்பவர்களைக் கேட்க வேண்டுமா? விறகுகளை அடுப்பில் சொருகி, கிட்ட நெருங்க முடியாதவாறு வெக்கை. சமையல் வேலைகளில் ஈடுபட்டவர்கள் தாம் முழுமூச்சாக வேலை செய்வதைக் காட்டுவதற்குத் தத்தமது பங்குக்கு விறகுகளை உட் செலுத்தியவாறே இருந்தனர். அப்போதுதான் இரண்டு, மூன்று 'ரின்' பால் பேணிகள் திறக்கப்படாமல், இருப்பதை மாணிக்கம் மாமி கண்டு பிடிச்சா. அந்தப் பாயாசப் பானையை அடுப்பில வைச்சதிலிருந்து, முன்னின்று அதைக் கவனிச்சு, ரின்பால் உட்பட அதுக்கான சகலதையும் சரி வரக் கலந்துவிட்டு ஒரு முழுக்கைப்போ ட்டுக் கொண்டு வருவம் என்று எண்ணி வீட்டுக்குப் புறப்பட்ட கனகன்னை, "பதம் பாத்து இறக்கினால் சரி" என்று சொல்லிவிட்டுப் போகும்போது மாணிக்கம் மாமி அவ்விடத்தில் இருக்கவில்லை.

"மச்சாள்! ரெண்டு, மூண்டு பால்பேணி கிடக்குது. அதுவும் பாயாசத்துக்கோ?" எண்டு, அன்னதான உபயகாரரான மரக்காலை மணியண்ணையின்ர மனைவியைக் கேட்டார்.

"பின்னையென்ன வீட்டுக்குக் கொண்டு போகவே வாங்கினது? பாயாசத்துக்குத்தான்" என்று கூறினார் மணியண்ணையின் பெண்சாதி.

உடனே தூரத்தில் நின்ற துரைசிங்கத்தைக் கூப்பிட்டு அந்த மூன்று பால் பேணிகளையும், வெட்டுவித்து, "நான் கண்டிருக்காவிட்டால், பாயாசத்துக்குப் பால் ரின் விடாமல் விட்டிருப்பினை" என்று கூறிக் கொண்டே, அடுப்பிலிருந்த பாயாசப் பானைக்குள் ரின் பாலைச் சேர்த்தார் மாணிக்கம் மாமி. பின்னர் வேறொரு வேலையாக அப்பால் அகல, அகப்பையுடன் வந்த

அன்னலட்சுமி, பாயாசத்தைக் கிண்ட அது எங்கை? அந்த எரிப்புக்கு, எல்லாச் சேர்மானமும் சேர்த்து, ரின் பாலும் ஒன்றுக்கு மூன்று ஊற்றி, அந்த மாதிரி விறகும் செலுத்தினால்... பாயாசத்தைக் கிளறுவதற்காக உள்ளே விட்ட அகப்பையைத் திரும்ப எடுக்க முடியவில்லை... அப்படியொரு 'திக்'கான பாயாசம். அப்படித்தான் எனதும் பரமசிவத்தின் நட்பும்.

▼ ▼ ▼

பரமசிவம் கதைகள் கூறுவதில் ஒரு கலைஞன்தான். அவர் வருகின்றார். ஏதாவது கதை சொல்லத் தொடங்கப் போகின்றார் என்றால் சுற்ற நிற்பவர்கள் மெல்ல மெல்லமாகக் கலைந்து செல்லத் தொடங்கி விடுவர். அதனால்தான் அவரை ஒரு கலைஞர் என்று நான் குறிப்பிட்டேன்.

அல்லாமலும், சில இடங்களில் பலரும் வேலை மும்முரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில், அங்கு சென்று, "இந்தக் கதையைக் கேளுங்கோவன். உப்பிடித்தான்" என்று உவர் கதை சொல்லத் தொடங்க, வேலைக் களைப்பிலிருக்கின்ற சின்னவன் போன்றவர்கள், "உந்தக் கதையை வேறையெங்கேயும் போய்ச் சொல்லுங்கோ" என்று பரமசிவத்தாரைக் கலைத்து விடுவதும் அடிக்கடி நிகழ்வது. அப்படிப் பல தடவைகள் அவர் கலைபட்டிருக்கின்றார். அந்த வகையிலும் அவர் ஒரு 'கலைஞர்'தான்.

அப்படிப்பட்ட பரமசிவத்தின்ர கதை கேட்பதில் எனக்கு நிகர் நானே. எனக்கு வருகிற சின்னதான அந்தப் பென்சனை எடுத்துக்கொண்டு, ஒரு வேலை வில்லட்டி இல்லாமலிருக்கிறதும் அதுக்கு ஒரு காரணமாக இருக்கலாம். அதற்கு மேலாக 'திக்'கான நட்பும் ஒரு காரணம்தான். இப்போது கோவில், குளம், காணி, பூமி எல்லாவற்றையும் விடுத்து ரவுண் பக்கமாக ஒரு வீடு வாங்கிக் குடியேறியிருந்தார் பரமசிவத்தார்.

இறந்த வீடு ஒன்றுக்குப் போய்விட்டு வந்துகொண்டிருந்தேன். வழியில் கண்டுவிட்டார். விடயத்தைச் சொன்னதும் கடந்தவாரம் தான் ஒரு சாவு வீட்டுக்குச் சென்று வந்த கதையை எடுத்து விடத் தொடங்கினார்

▼ ▼ ▼

அருகில் வீட்டின் மேற்குப் புறமாகப் பின் ஒழுங்கையில் சாவு வீட்டு மேளச் சத்தம் கேட்டது. யார் இறந்தது என மனைவியிடம் கேட்டிருக்கிறார், "காங்கேசன்துறையிலிருந்து இடம் பெயர்ந்து எங்கடை பக்கத்து வீட்டிலை இருந்த அந்த ஐயா தான் செத்துப் போனார். அவை இப்ப புதுசாக் காணிவாங்கி, வீடு கட்டியிருக்கீனம்.

இப்ப செத்து நாலு நாளாகுது. மகன் ஒருத்தர் வெளிநாட்டிலை. நேற்று வந்திட்டாராம். இன்றைக்கு எடுக்கிறதாம், நீங்களும் ஒருக்கால் போய்விட்டு வாருங்கோ. நல்ல மனுசர். இங்க பக்கத்து வீட்டிலை வாடகைக்கு இருக்கிற வரைக்கும், வெளிநாட்டாலை காசு வந்தால், எங்கடை சின்னஞ் சிறிசுகளுக்கு ஏதும் வாங்கிக் குடுக்காமல்; விடாது மனுசன்" என்றிருக்கிறார் மனைவி. தனக்கு அவர்களைத் தெரியாது. தான் போகவில்லையெனப் பரமசிவம் மறுத்திருக்கிறார்.

"என்னப்பா! நீங்கள் வன்னியாலை வந்திருக்கேக்கை அந்த ஐயா சில வேளை இங்க வருவார். ஒரு நரம்புப் பலவீனம் மாதிரி, தலை நடுக்கம். கைகால் நடுக்கம்...? அந்த ஐயாதான் செத்தவர். பிள்ளைகள் உங்களைக் கண்டால் அதுகளுக்கு ஆறுதலாக இருக்கும்" என வற்புறுத்திச் சாவு வீட்டுக்கு அவரை அனுப்பிவைத்திருக்கிறார் அவர் மனைவி.

அங்கு சென்றால், அவரை வரவேற்பாரும் இல்லை. விசாரிப்பாரும் இல்லை. பரமசிவம் ஒரு மாகாண அல்லது உள்ளூராட்சி சபை 'மெம்பர்' இல்லை என்பதால் யாரும் அவர் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ஒரு கரையாக ஓரிரு மணித்தியாலங்கள் இருந்துவிட்டு வீடு திரும்பினார்.

▼ ▼ ▼

உள்ளுக்குள் மனைவி மீது ஒரு குமைச்சல் ஏற்பட்டிருந்தது என்னவோ உண்மைதான். வீட்டுக்கு வந்ததும் மனைவி, "நீங்கள் இன்னாரென்று சொன்னனீங்களே?" என்று கேட்டார். பரமசிவம் வழக்கமான தனது பாணியில், "செத்தது நீ சொன்ன ஆளில்லையப்பா... இது வேறை யாரோ. செத்தமனுசன், கைகால் நடுக்கம், தலை நடுக்கம், அது இது ஒண்டுமில்லை. இது வேறையாரோ போலிருக்குது" என்றார்.

"இருக்கும்... இருக்கும், அயலட்டையிலுள்ள ஆக்கள் இன்னாரெண்டு தெரிஞ்சால் தானே?" கூறியவாறே சமையல் பாத்திரங்களைப் புறக்கிக்கொண்டு கழுவுவதற்காகத் தண்ணீர்க் குழாயடிக்குச் சென்றார் பாரியார்.



வெளிநாட்டாலை காசு வந்தால், எங்கடை சின்னஞ் சிறிசுகளுக்கு ஏதும் வாங்கிக் குடுக்காமல் விடாது மனுசன்.' என்றிருக்கிறார் மனைவி. தனக்கு அவர்களைத் தெரியாது. தான் போகவில்லையெனப் பரமசிவம் மறுத்திருக்கிறார்.

# ஆண்மை (ஆளுமை)



ஆண்மை என்பது
ஆணவம் அல்ல
ஆண்களின் வல்லமை-அதன்
மேன்மையை விளக்கும்
அவன்செய்யும் செயல்களின்
திறமையில் உள்ளன
பெண்மை என்பதன்
எதிர்பதம் அல்ல
நான்கூறும் ஆண்மை-அது
பெண்ணுக்கும் சமயத்தில்
வெளிப்படில் அவளும்
பெற்றிடுவாள் மேன்மை

ஆணென்ற சொல்லுக்கு
இலக்கணமே இந்த
ஆண்மை என்றாகும்-என்றும்
நானென்ற எண்ணம்
கொள்பவன் மனதில்
ஆணவம் நின்றாடும்
சாணொன்றே ஆனாலும்
ஆணென்றே சொல்வதில்
அர்த்தங்கள் உளதாகும்-ஆண்
தானென்று எண்ணாது
வாழ்ந்திடில் நற்
பெயர் உண்டாகும்

எடுத்தற் கெல்லாம்
எக்காளத் தொனியில்
சத்தம் இடுவதுவோ-இன்னும்
அடுத்தவ ருடனே
அற்பனுக் கெல்லாம்
அடம் பிடிப்பதுவோ
தடுத்திட ஆள்கள்
இல்லை எனும் துணிவில்
வீண்போர் நடத்துவதோ-நல்ல





துடிப்புள்ள, துணிவுள்ள
வீரம் பொருந்திய
ஆண்மை என ஆகாதே

வீரமும் விவேகமும்
வீரியமும் பலமும்
அறிவுடன் ஆளுமை-ஒன்று
சேரநல் துணிவுடன்
செயலாற்றி வெற்றி
கொள்வதே ஆண்மை
நீரும் நல் நிலமும்
நித்திய பசளையும்
நிறைவான வேளாண்மை-இவை
கூறும் விதம்யாவும்
'ஒருவனுக்கு அமையின்
அதுவே மேலாண்மை

கவிதை

டே.த.எட்வின்

# ஓலைச் சுவடியும் 'ஒன்லைன் சேர்ட்டிபிக்கரும்'

கட்டுரை

சி. சந்திரகலா

அரசுகளின் கட்டமைப்பின்படி மனிதன் பிறந்ததற்கான முதலாவது எழுத்து மூல ஆதாரப்படுத்தலைக் குறித்துநிற்பது ஒருவரின் பிறப்புச் சான்றிதழ் ஆகும். இந்தச் சான்றிதழுக்கான சட்ட அங்கீகாரம் இலங்கையில் 1951ஆம் ஆண்டில் 11ஆம் இலக்கப் பிறப்புப் பதிவுச் சட்டத்தின்மூலமே வலுவுள்ள ஓர் ஆதாரமாக்கப்பட்டது.

இலங்கையைப் பொறுத்தவரை பிறப்பு. இறப்புப் போன்ற விடயங்கள் ஒல்லாந்தர் காலத்தில் பதிவுக்கு உட்படுத்தப்பட்டபோதிலும் அதற்கு முன்பிருந்தே ஒருவரின் பிறப்புப் பற்றிய விவரங்களை 'சாதகம் கணித்தல்' என்ற பெயரில் ஓலைகளில் எழுதி வைக்கும் பழக்கம் வடக்குக் கிழக்கு இந்துத் தமிழரிடம் இருந்தது.

### ஓலைச் சுவடிகள்

ஓலைச் சுவடியில் ஒருவர் பிறந்த ஆண்டு. மாதம். திகதி(தமிழ் எழுத்து. இலக்கத்தில் எழுதப்பட்டிருக்கும்) என்பன தமிழ் நாள்குறிப்புக்கு ஏற்றவாறு நேரம். கிரக அமைப்புக்கள். நட்சத்திரம் (இருப்பு நாழிகை) தாய். தந்தையின் பெயர். சூரிய உதயம். ஆதி அந்த பரம நாழிகை. உதயாதி ஜனாந்தர நாழிகை. கிரக நிலை. நவம்ச நிலை. தேசா இருப்பு (நடைபெறுகின்ற பலனைக் கணிப்பது) என்பன ஓர் ஓலையின் இரண்டு இதழ்களிலும் எழுதப்பட்டிருக்கும். சிலருக்கு மட்டும் விரிவான பலன் எழுதி மேலதிக ஓலைகளும் சேர்க்கப்பட்டிருக்கும். இந்த ஓலைச் சுவடிச் சாதனங்கள் மிகவும் சுருக்கமாகவும். மிகவும் சரியாகவும் எழுதப்பட்டிருக்கும். அந்த ஓலைச் சுவடியை ஒரு பிறப்புச் சான்றிதழாகச் சட்டபூர்வமாக ஏற்காவிட்டாலும் சமய அடிப்படையில் அல்லது கலாசார விழுமியங்களின் அடிப்படையல் அது ஓர் ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணமே. அவ்வாறான ஆவணத்தைப் பேணியதற்காக நமது முன்னோர்களுக்கு நாம் நன்றிகூறக் கடமைப்பட்டவர்கள்.

### பதிவுகள். சான்றிதழ்களின் அவசியம்


பிரித்தானியர் இலங்கையை ஆண்ட காலத்தில்., இலங்கைச் சுதேசி ஒருவர் பல பெண்களைக்கூட்டிச் செல்லுகின்ற நிலையைக் கண்டனர். அது பற்றி விசாரித்தபோது ஒரு நபருக்கு இரண்டு அல்லது மூன்று மனைவிகள் இருப்பது கண்டறியப்பட்டது. அதன் பின்னர் ஒருவர் திருமணம் செய்வதாயின் சட்டபூர்வமாகப் பதிவு செய்யப்படுவது அவசியம் என வலியுறுத்தப்பட்டது. அந்தப் பெண்ணுடன் தொடர்ந்தும் வாழப் பிடிக்கவில்லை எனின் மணமுறிவை (டிவோஸ்) ஏற்படுத்துவதற்கும் சட்டத்தில் இடம் ஒதுக்கப்பட்டது. மணமுறிவைச் சட்டபூர்வமாக ஏற்படுத்திய பின்னர் இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்வதற்குரிய ஏற்பாடும் இருந்தது. இந்த நடைமுறை இன்றுவரை தொடர்கிறது. இதில் 'தனிமனித சுதந்திரம்'. 'ஜனநாயக அணுகுமுறை'. 'ஒரு குடிமகனுக்குரிய வாழும் உரிமை'. 'ஒரு பெண்ணோ அல்லது ஆணோ தனக்குப் பிடித்தவருடன் வாழ்வது' போன்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதன் பின்னர் விவாகப் பதிவுகள். பிறப்பு. இறப்புப் பதிவுகள் எனப் பலவாறான பதிவுகளும் சட்டமயமாகின. இந்த அடிப்படையிலேயே பிறப்புச் சான்றிதழ் ஒன்றில் ஒருவரின் முழு விவரங்களும் அடக்கப்படுகின்றது. பிறந்த பிள்ளையின் அல்லது நபரின் தாய். தந்தை. பரம்பரை. பூர்வீகம் எனப்பலவற்றையும் ஒரு தாளில் அறிய வழிசெய்வதே இதன் முதன்மை ஏற்பாடாகும். இத்தகைய சான்றிதழைப் பதிவதற்குப் பதிவாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமது பதிவை இலக்கத்திலும் சொல்லிலும் எழுதி. அந்தப் பதிவுகளை உரியவாறு உள்வாங்கி. பதிவுகளைப் பேணும் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி வைப்பார்கள். அல்லது கையளிப்பார்கள்.

### நகல் அல்லது பிரதியைப் பெறக்கூடிய வசதி

ஒருவர் தனது கையில் வைத்திருந்த மூலச் சான்றிதழைத் தொலைத்து விட்டால். அல்லது நெருப்பு. வெள்ளம் போன்ற இயற்கை இடர்களில் ஏதாவது ஒன்றால் அது சிதைந்து விட்டால் புதிதாக ஒரு பிரதியை எடுக்கும் தேவை உணரப்பட்டது. அலுவலகங்களில் பேணப்பட்ட அதன் மூலப் பிரதியை நகல் எடுத்து அந்த நகலைப் பொறுப்பானவர் உறுதிப்படுத்தும் நடைமுறை ஆரம்பத்தில் இருந்தது. இதில் இருக்கின்ற சிரமங்களைத் தவிர்க்கும் பொருட்டு பின்னாளில் அந்த மூலப் பிரதிகள் அனைத்தையும் 'ஸ்கான்' எனப்படும் புதிய முறை மூலம் நகலாக்கி கணினிகளில் சேமித்து. அந்தக் கோப்புக்களை இணையவழி ஊடாகப் பிரதேச செயலகங்களில் நகலெடுக்கும் வசதியும் ஏற்படுத்தப்பட்டது.

தற்போது ஒரு பிறப்புச் சான்றிதழை எடுக்கவேண்டுமாயின் ஒரு சில நிமிடங்களில் பெற்றுவிடக்கூடிய 'ஒன்லைன்' சேவைகள் பிரதேச செயலகங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இது மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாகக் காணப்படுகின்றது.



### 'ஒன்லைன்' குளறுபடிகள்

1972ஆம் ஆண்டு பிறந்த ஒரு பெண்ணின் பிறப்புச் சான்றிதழ் ஒன்றைப் பெறுவதற்கு யாழ்ப்பாண மாவட்டத்துக்கு உட்பட்ட பிரதேச செயலர் பிரிவு ஒன்றில் அண்மைக்காலத்தில் விண்ணப்பித்தபோது அவர்களின் 'ஒன்லைன்' சேவையின் ஊடாக வழங்கப்பட்ட பிரதியில் உரியவரின் பெயர். பால். தந்தையின் முழுப்பெயர். தந்தை பிறந்த திகதி. பிறந்த இடம். தந்தையின் தொழில். தாயின் முழுப் பெயர். பிறந்த திகதி. பிறந்த இடம். வயது எனப் பத்துவரையான விடயங்கள் வெட்டப்பட்டு. திருத்தி எழுதப்பட்ட நிலையில் அந்தச் சான்றிதழ் வழங்கப்பட்டது. உரியவரின் பெயருக்குப் பதிலாக வேறொருவரின் பெயர் எழுதப்பட்டு அதை வெட்டி மேலே உரியவரின் பெயர் எழுதப்பட்டிருந்தது. அப்படியே கீழ்வருகிற சிலவும் வெட்டித் திருத்தப்பட்டிருந்தன. ஒரு பிறப்புச் சான்றிதழில் ஓர் எழுத்துப் பிழை அல்லது திகதியில் ஏற்படும் பிழை காரணமாக அந்தச் சான்றிதழை அரச, தனியார் நிறுவனங்கள் நிராகரித்து விடுகின்றன. தேசிய அடையாள அட்டையைப் பெறுவதிலும் பிறப்புச் சான்றிதழில் உள்ள சிறிய குறைபாடுகள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இவ்வகைச் சான்றிதழ்களை வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் வழங்க முடியாது. அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளப் போவதும் இல்லை. இதனால் தெளிவான சான்றிதழைப் பெறவேண்டி. யாழ்ப்பாணம் பிரதிப் பதிவாளர் அலுவலகத்தில் தேடிப்பார்த்தபோது அவர்களும் அதே வெட்டப்பட்ட சான்றிதழ்சரியானது என்றுமீண்டும்வழங்கினார்கள்.

### கொழும்பு சென்று தீர்வு

அந்தப் பிறப்புச் சான்றிதழை வெளிநாட்டுத் தூதரகம் ஒன்றுக்கு வழங்க வேண்டியிருந்தமையால் விண்ணப்பித்தவர் கொழும்பு - மாளிகாவத்தையில் உள்ள பிரதம பதிவாளர் அலுவகத்துக்குச் சென்று பதிவாளர் நாயகத்திடம் யாழ்ப்பாணத்தில்தான் பெற்றுக் கொண்ட பிரதியைக் காட்டியிருக்கிறார். அந்தப் பிரதியைப் பார்த்ததும் பிரதம பதிவாளர் அதிர்ச்சியடைந்துள்ளார். இந்தப் பிழை யாழ்ப்பாணத்தில் எழுதப்பட்ட பிரதியில்தான் நிகழ்ந்திருக்கிறது என்றுகூறி அதன் மூலப் பிரதியில் இருந்து அவருக்குத் தேவையான பிரதிகளை வழங்கினார். சரியான பிரதியைப் பெறுவதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்று வந்த செலவு அவருக்கு 6 ஆயிரம் ரூபாக்களுக்கு மேல்!

அதேவேளை சட்டபூர்வமற்ற முறையில் இவ்வாறான ஆவணங்களைப் பெற்றுக்கொடுக்கின்ற முகவர்களும் அவ்விடங்களில் உலாவுகிறார்கள். '200 ரூபா செலவளித்து இரண்டு பிரதிகளை மாளிகாவத்தையில் பெற்றுவிடுகின்றனர். வடக்குக் கிழக்கில் இருந்து கொழும்பு செல்லும் சிங்களம் மற்றும் இடம் தெரியாத தமிழர்கள் இந்தக் கும்பலிடம் சிக்கினால், 'மாஸ்ரர் கொப்பியில் மாற்றம் செய்வதற்கு பெரியவருக்கும், மற்றவர்களுக்கும் பணம் கொடுக்கவேண்டியிருக்கும்" எனக்கூறிப் பல ஆயிரம்: வரை அறவிடுகின்றனர்.

### 'கிளறிக்கல் எறர்'

அரசால் வழங்கப்படுகின்ற உத்தியோகபூர்வ ஆவணத்தைத் தயார் செய்கிற ஓர் அலுவலர். பொறுப்பில்லாது எழுதியது மட்டுமல்லாது அதை மேலதிகாரிகள் பார்க்காது பல வருடங்களாக அதைப் பேணிக் காத்து வருவதும் நிகழ்கிறது. வெட்டி எழுதப்பட்ட. திருத்தங்கள் செய்யப்பட்ட அதையே மூலப்பிரதியாக 'ஒன்லைன்' சேவையிலும் வைத்திருக்கிறார்கள் . அரச ஆவணம் ஒன்றைப் பொறுப்பற்ற முறையில் கையாண்டுவிட்டு அது 'கிளறிக்கல் எறர்' என்று சாதாரணமாகக் கூறி அவ்விடத்தில் ஒப்பமிட்டு விடுவதால். அந்தச் சான்றிதழால் பொதுமகனுக்கு ஏற்படப்போகும் அலைச்சலை இவர்களால் தவிர்க்க முடியாது. ஓர் அரசின் பிறப்பத்தாட்சிப் பத்திரம் எந்தவிதமான பிழையும் இன்றி எழுதப்பட்டிருத்தல் வேண்டும் பொதுமக்களும் இந்த விடயத்தில் விழிப்பாக இருப்பது அவசியம். ஒரு 'ஏ4' அளவுடைய தாளில் நகலெடுக்கப்பட்டு. உரியரால் உறுதிப்படுத்தப்படும் 'ஒன்லைன்' மூலம் வழங்கப்படுகிற பலருடைய பிறப்புச் சான்றிதழ்களின் நிலை கவலைக்கிடமாகவே இருக்கின்றது. அந்த 'ஏ4' தாளின் எங்கோ ஒரு மூலையிலும். பல கோணங்கள் சரிவாகவும்கூட பல சான்றிதழ்கள் உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றன. 'ஒன்லைன்' சேவையின் நிமித்தம் சான்றிதழ்களை 'ஸ்கான்' பண்ணிப் பதிவேற்றுவதற்குப் பொறுப்பாக இருந்த அரச ஊழியர்களதும். அதற்குப் பொறுப்பான அதிகாரிகளினதும் வேலைத் தரத்தை இதன் மூலம் உணரமுடிகிறது. அரச ஊழியர்கள் விடுகிற பிழையால் பொது மக்கள் அல்லல்படுவதை இவர்கள் அறிவதில்லை. "இவர்களின் 'ஒன்லைன்' சான்றிதழ்களைக் காட்டிலும் அந்தக் காலத்து ஓலைச் சுவடிகள் பரவாயில்லை" என்று முணு முணுக்க வைக்கின்றது இவர்களுடைய இந்தச் சேவை.

# அவள் மீனாகிய கதை...

அனு!
அவள்
வர்ணங்கள் குழைத்து
தூரிகையால் வரைகிறாள் ஓவியம்
நீலம் கரைத்து வானம் கீறுகிறாள்
மஞ்சள் தொட்டு நட்சத்திரம் செய்கிறாள்
சின்னத்தோணியாய் மிதக்கிறது நிலவு
மேற்கு மூலையில் சின்னதாய்ப் பறவைகள்
சிறகு கீறும்போது தானும் பறந்து பார்க்கிறாள்
பறவைக் கண்ணால் தனது வீட்டை
சிறு புள்ளியாகக் காண்கிறாள்.
முடிவாக வர்ணத்தாளின் கடைசிப் பகுதியில்
கடலைக் கொண்டு வருகிறாள்
மீன்கள் வரையும்போது
அவள் மீனாகியிருந்தாள்
நீரில்முழ்கியும் எழுந்தும்
என் சின்னப்பெண் அனு
"அனு.....!"
நான் அழைக்கிறேன்
அவள் மிதந்தபடி வருகிறாள்

கவிதை
வேலணையூர் தாஸ்






# தமிழ்ப் படம்–2

## 'பகிடி' வகைப் படம்

**2010** ஆம் ஆண்டில் வெளியாகி வசூலில் ஓரளவுக்கும், நிறைவான விமர்சனங்களையும் பெற்றது 'தமிழ் படம்'. அதன் தொடர்ச்சியே இந்த இரண்டாம் பாகம். முதல் படத்தைப்போலவே, கதைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் பல திரைப்படக் காட்சிகளைக் கேலிசெய்வதையே முதன்மை யானதாகக் கொண்டிருக்கிறது.

**கதை**

அறிமுகமாகும் முதல் காட்சியிலேயே இரண்டு கிராமங்களுக்கு இடையில் நடக்கவிருக்கும் பெரிய கலவரத்தை, சப்பைக்கட்டு வசனம் பேசியே நிறுத்துகிறார் சிவா.

இதற்குப் பிறகு அவர் பொலிஸில் வேலைக்குச் சேர்கிறார். அப்போது அவருடைய மனைவி ப்ரியா (திஷா பாண்டே), 'பி' (சதீஷ்) என்பவன் அனுப்பிவைத்த கைபேசி வெடித்துவிட இறக்கிறார்.

மிகப்பெரிய தாதாவான 'பி'யைப் பிடிப்பதற்காகப் பணியிலிருந்து நீக்கப்பட்டதைப்போல நடிக்கிறார் சிவா. முடிவில் 'பி'ஐக் கொல்கிறார். ஆனால், 'பி' சாகாவரம் பெற்றவன் என்பதால் திரும்ப வருகிறான். அதனால் ஒரு கடிகாரத்தின் உதவியால் 'பி' சாகாவரம் பெற்ற காலத்துக்கே போய், அவனுக்குச் சாகாவரம் கிடைக்காமல் செய்கிறார். பிறகு அவனை முறியடிக்கிறார். இதற்கு நடுவில் ரம்யா (ஐஸ்வர்யா மேனன்) என்ற பெண்ணுடன் காதல். முடிவில் துணை ஆணையராகப் பதவி உயர்வு பெறுகிறார் சிவா. மேலே சொன்ன கதை என்பது படத்தின் காட்சிகளை இணைப்பதற்கான ஓர் உத்தி மட்டுமே. மற்றபடி தமிழில் இதுவரை வெளிவந்த, வெளிவராத, ஹொலிவூட்டில் வெளிவந்த படங்களின் காட்சிகளைத் தனது விருப்புக்கு ஏற்ப கலாய்த்திருக்கிறார் இயக்குநர் அமுதன்.

**தமிழில் அரிது**

ஹொலிவூட்டில் இதுபோன்ற 'ஸ்பூவ்ப்'(பகிடி) வகைத் திரைப்படங்கள் அவ்வப்போது வெளிவந்தாலும் தமிழில், இவை ஓர் அரிய ரகம்தான். கிட்டத்தட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட படங்களின் காட்சிகளைக் கேலி செய்கிறது இந்தப் படம். இன்னும் வெளியாகாத ரஜினிகாந்தின் 2.0 வரை கேலிசெய்திருக்கிறார்கள். 'சைலன்ஸ் ஒவ் தி லாம்ப்', 'கோட் பாதர்' ஆகிய ஹொலிவூட் படங்களைக்கூட விட்டுவைக்கவில்லை. அதேபோல ரஜினிகாந்தில் துவங்கி, அஜித், விஜய், எம்.ஜி.ஆர்., டி. ராஜேந்தர் வரை யாரும் தமிழில் யாரும் தப்பவில்லை. ஏன், நரேந்திர மோடி, தொலைக்காட்சி அலைவரிசைகள் கூட விட்டுவைக்கவில்லை.



**பாத்திரங்கள்**

படத்தின் நாயகன் சிவா, முதல் படத்தைப்போலவே இந்தப் படத்திலும் புகுந்து விளையாடியிருக்கிறார். சிவா இல்லாமல் இந்தப் படத்தைக் கற்பனைகூட செய்துபார்க்க முடியாது. அவர் வசனங்களைப் பேசும் விதமும், மற்ற நடிகர்களைப்போல நடிப்பதும் தற்போதைய நடிகர்களில் வேறு யாராலும் இவ்வளவு இரசிக்கும்படி செய்ய முடியாது.

திஷா பாண்டே ஒரு காட்சியில் வந்து இறந்துபோய் விடுகிறார். ஐஸ்வர்யா மேனனுக்கு இந்தப் படம் ஒரு நல்ல அறிமுகத்தை அளிக்கக்கூடும். வில்லனாக வரும் சதீஷ், படம் முழுதும் வந்தாலும் பெரிய அளவில் சிரிப்பூட்டவில்லை. மனோபாலா, ஆர். சுந்தர்ராஜன், சந்தானபாரதி ஆகியோர் சிவாவின் நண்பர்களாக நடித்திருக்கின்றனர். அவர்களுக்கான காட்சியில் எந்த அழுத்தமோ, சுவாரஸ்யமோ இல்லை. சந்தானபாரதி தாதி வேடத்தில் வரும்போது மட்டும் திரையரங்கு வெடித்துச் சிரிக்கிறது. சேத்தன், விஜய் நெல்சன், நிழல்கள் ரவி, ஓ.ஏ.கே.சுந்தர், அஜய் ரத்னம் ஆகியோர் 'பகிடிப்படத்துக்கான பாத்திர வார்ப்புகள்.

**பலவீனமான கதை**

முதல் படத்தைப் போலவே இரண்டாவது படத்திலும் கதை மிகப் பலவீனமாகவே இருக்கிறது. பல படங்களை நக்கலுக்கு உள்ளாக்கும் காட்சிகளை ஒன்றாகச் சேர்ப்பதற்கான நூலாகவே கதையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். தவிர, இந்தப் படத்தை முழுமையாக இரசிக்க வேண்டுமென்றால், இதில் கலாய்க்கப்படும் படங்களில் பாதிப் படங்களையாவது பார்த்திருக்க வேண்டும். இல்லாவிட்டால், இப்படி ஒரு காட்சி ஏன் வருகிறது என்பதே புரியாது. படத்தின் இரண்டாவது பாதியில் வரும் இறந்தகாலக் காட்சிகளும் அவ்வளவு சுவாரஸ்யமில்லாதவை.

ஆனால், வாய்ப்புக்கிடைத்தால் யாரையும் கேலி செய்து இரசிக்கும் இந்த காலகட்டத்தின் ஒரு சிறந்த பதிவாக இந்தப்படம் விளங்கக்கூடும். சிரிப்புப் பொலிஸ் 'சீரியஸ்' பொலிஸ் என சினிமாவில் சுழலும் பொலிஸ் அதிகாரிகளைக் கலாய்த்திருக்கும் 'பகிடி' வகைத் திரைப்படம் இது.

**இயக்குநரின் துணிச்சல்**

உச்ச நட்சத்திரம், சினிமா, அரசியல் என எதையும் விட்டு வைக்காமல் கிண்டல் செய்யும் இயக்குநரின் துணிச்சல் வரவேற்கத்தக்கது. அகில உலக சுப்பர் ஸ்டார் சிவா என்று தலைப்பிடலிலேயே இயக்குநர் அமர்க்களமாக ஆரம்பிக்கிறார். தமிழ் சினிமாவில் காலம் காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் வழக்கமான காட்சிகள், 'பில்டப்', 'நாயகத்தனம்' ஆகியவற்றைக் கிழி கிழி என்று கிழித்திருக்கிறார். கதாநாயகி பார்வையற்றவர் சாலையைக் கடக்க உதவ வேண்டும், மழையில் நனைந்தபடி ஐஸ்கிறீம் சாப்பிட வேண்டும் போன்ற தமிழ் சினிமாவின் அத்தனை அபத்தங்களைத் தோலுரித்திருக்கிறார். கூவத்தூர் விடுதி, தர்மப்போர், சமாதியில் சத்தியம், இந்தியன் எதிர், சிஸ்டம் சரியில்லை, ஓடவும் முடியாது ஒளியவும் முடியாது என்று சமகால அரசியல் நகர்வுகளை மிகச் சாமர்த்தியமாக நையாண்டி செய்திருக்கிறார்.

வசனங்களில் கூட பகிடித்தனத்தை வாரி வழங்கி இருக்கிறார். "கடைசியில என்னையும் நடிக்க வைச்சுட்டீங்களேடா" என்று சிவா சொல்லும்போது விசில் பறக்கிறது.


முன்னணி நடிகர்கள், முன்னணி இயக்குநர்கள் என யாரையும் விட்டு வைக்காமல் பட்டியல் பொட்டு கலாய்ப்பில் உச்சம் தொட்டிருக்கிறார். 'தேவர் மகன்', 'விஸ்வரூபம்', 'வேட்டையாடு விளையாடு', 'பதினாறு வயதினிலே', 'தளபதி', 'கபாலி', 'காலா', 'சத்ரியன்', 'வால்டர் வெற்றிவேல்', 'துப்பாக்கி', 'கத்தி', 'பைரவா', 'பில்லா', 'மங்காத்தா', 'வேதாளம்', 'வீரம்', 'விவேகம்', '24', 'வாரணம் ஆயிரம்', 'சாமி', 'விண்ணைத்தாண்டி வருவாயா', 'ரெமோ', 'ரஜினிமுருகன்', 'இறுதிச் சுற்று', 'விக்ரம் வேதா', 'ஆம்பள', 'துப்பறிவாளன்', 'தீரன் அதிகாரம் ஒன்று', 'இரும்புத்திரை' 'பாகுபலி' எனக் கலாய்க்கப்பட்ட படங்களின் பட்டியல் பெரிது.

**இசை, ஒளி**

கோபி அமர்நாத்தின் ஒளிப்பதிவு படத்துக்குப் பலம் சேர்க்கிறது. கண்ணனின் இசையில் ஒரு பாடல் மாத்திரம் இரசிக்க வைக்கிறது. ஏனைய பாடல்கள் மனதில் ஒட்டவில்லை. கஸ்தூரி ஆடும் கவர்ச்சிப் பாடல் வேகத் தடையாய் இருக்கிறது.

சிவா பேருந்திலிருந்து பொதுமக்களைக் காப்பாற்றும் காட்சி எந்த வித சுவாரஸ்யமும் இல்லாமல் கடந்துபோகிறது. படம் ஆரம்பித்ததில் இருந்து இறுதிவரை இரசிகர்கள் சிரித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் திரைக்கதையை அமைத்திருந்தாலும் சிரிப்பைத் தாண்டிய எந்தத் தாக்கமும் இரசிகர்களுக்கு ஏற்படவில்லை.

# 'மிஷன்: இம்பொசைபிள் – வ்பால்அவுட்'




ஜுலை 27ஆம் திகதியன்று டாம் க்ரூஸ் நடிப்பிலான 'மிஷன்: இம்பொசைபிள் வ்பால்அவுட்' வெளியாக விருப்பதாகத் தகவல்கள் வந்திருக்கின்றன. உலகின் எந்த நடிகரும் இதுவரை முயலாத புதிய சாகசங்களைத் தனது இந்தப் படத்துக்காகச் சாதித்திருக்கிறார் கதநாயகன் டாம் க்ரூஸ். அவருடைய இரசிகர்களால் இணையவெளியில் அதிகம் சிலாகிக்கப்படும் இதில் வருகிற சாகசக் காட்சிகள் இரண்டும் படத்துக்கான எதிர்பார்ப்பை அதிகரித்து விட்டிருக்கின்றன.

**தொடராக வெளிவரும் கதை**

அதிரடியும் துப்பறிதலுமாக 90களின் தொடக்கத்தில் பிரபலமான ஒரு தொலைக்காட்சித் தொடரைத் தழுவி, 'மிஷன் இம்பொசைபிள்' திரைப்படம் 1996ஆம் ஆண்டில் வெளியானது. இதில் டாம் க்ரூஸ் நிகழ்த்துகிற விறு விறுப்புக்கு இரசிகர்களின் ஏகோபித்த வரவேற்புக் கிடைத்தது. வசூலும் குவிந்தது. ஆகவே, தன்னளவில் நிறைவாகவும் அடுத்தடுத்துப் படமாக்கும் எதிர்பார்ப்புடனுமாக, 'மிஷன் இம்பொசைபிள்' தொடர் வரிசைகள் உதயமாகின. இந்த வரிசையின் ஐந்தாவது பாகமான 'மிஷன் இம்பொசைபிள் றோக் நேஷன்' 2015ஆம் ஆண்டில் வெளியானது. தற்போது அதன் ஆறாவது வெளியீடே 'மிஷன்: இம்பொசைபிள் வ்பால் அவுட்' .திரைக்கு வரத் தயாராக உள்ளது.



**கதை**

சாகச நாயகன் ஈதன் ஹண்டின் முயற்சி ஒன்று தோல்வியில் முடிகிறது. அதனால் அவரது விசுவாசம், செயல்பாடு மீது சி.ஐ.ஏ நிறுவனம் சந்தேகம் கொள்கிறது. தன்னை நிரூபிக்கும் வகையில் அதுவரையில்லாத உலகப் பேரழிவுக்கு எதிரான சாகசத்தை ஈதன் மேற்கொள்கிறார். இதற்காக இம்முறை காலத்துடன் போட்டியிடும் ஈதனுடன், அவருடைய வழக்கமான கொலைகார எதிரிகளும் முன்னாள் நண்பர்களும் மோதுகிறார்கள்.

தனது 55வயதில்கூட இரசிகர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்ய, இந்தப் படத்தில் டாம் க்ரூஸ் கடினமாக உழைத்திருக்கிறார் என்று ஹொலிவூட் புகழ்ந்து தள்ளுகிறது.

லண்டனில் கட்டடங்களுக்கு இடையே தாவும்போது கால் முறிந்து 2மாதம் ஓய்விலிருந்தார். அபுதாபியில் 9ஆயிரம் மீற்றர் உயரத்தில் பறக்கும் விமானத்திலிருந்து குதிக்கும் அந்தப் புதிய வகைச் சாகசத்துக்காக ஒரு வருடம் பயிற்சி பெற்றுப் பின்னர் சாதித்துள்ளார்.

சைமன் பெக், றெபக்கா பெர்குசன், மைக்கல் மோனஹன், சீன் ஹாரிஸ் என வழக்கமான நட்சத்திரப் பரிவாரங்கள் இதிலும் உண்டு. 'றோக் நேஷனை'த் தொடர்ந்து 'மிஷன்: இம்பொசைபிள்' வரிசையில் இரண்டாம் படத்தை இயக்கும் வாய்ப்பை கிறிஸ்தோபர் மெக்கியூரி பெற்றுள்ளார்.

# 'இண்டியானா ஜோன்ஸ் 5'




ஸ்ரீபன் ஸ்பீல்பெர்க் இயக்கத்தில் 1981ஆம் ஆண்டு வெளியான 'இண்டியானா ஜோன்ஸ்: த ரைடர்ஸ் ஒவ் த லாஸ்ற்; ஆர்க்' திரைப்படம் உலகமெங்கும் பெரும் வரவேற்பைப் பெற்றது. இண்டியானா ஜோன்ஸ் கதாபாத்திரத்துக்குக் கிடைத்த மாபெரும் வரவேற்பைத் தொடர்ந்து 'இண்டியானா ஜோன்ஸ்: ரெம்பிள் ஒவ் டூம்' (1984), 'இண்டியானா ஜோன்ஸ்: த லாஸ்டற் க்ருஸேட்' (1989), இறுதியாக 'இண்டியானா ஜோன்ஸ்: கிங்டம் ஒவ் த க்ரிஸ்டல் ஸ்கல்'ஆகிய படங்கள் வெளியாகின. அதன் தொடர்ச்சியே இனி வரவிருக்கிற இண்டியானா ஜோன்ஸின் 5ஆவது பாகம். இது 2021ஆம் வெளியாகும் என அதற்குப் பொறுப்பான 'டிஸ்னி' நிறுவனம் அறிவித்துள்ளது.



இதுவரை வெளியான 4 இண்டியானா ஜோன்ஸ் படங்களையும் இயக்கிய ஸ் ரீபன் ஸ்பீல்பெர்க்கே இந்தப் படத்தையும் இயக்குகிறார். அதுமட்டுமல்லாமல் இதுவரை இண்டியானா ஜோன்ஸாக நடித்த ஹாரிஸன் வ்போர்ட் தான் இதிலும் நாயகன். அவருக்குத் தற்போது வயது 75. கிட்டத்தட்ட 13வருடங்களுக்குப் பிறகு வரவிருக்கிற இண்டியானா ஜோன்ஸின் இந்தப் பாகத்தைப் பெரிய திரையில் பார்க்கப்போகும் மகிழ்ச்சி இப்போதே ஜோன்ஸ் இரசிகர்களைத் தொற்றிக் கொண்டு விட்டது

# 'ஆன்ற்-மன் அண்ட் த வேஸ்ப்'




மார்வெல் நிறுவனத்தின் 'ஆன்ற்-மன் அண்ட் த வோஸ்ப்' திரைப்படம் கடந்த வாரம் வெளியானது. 'பீட்டன் ரீட்' இன் இயக்கத்தில் உருவாகியிருக்கும் இந்தப் படத்தில், பால் ரூட், ஹப்றில் வ்பிறாறி, ஜக் ஹிர்பீ, லாறி லிபேர் எனப் பல பட்டாளங்கள் நடித்துள்ளனர். கடந்த நான்காம் திகதி வெளியான இந்தப் படம், வெளியாகி ஒரு வாரத்தில் 76 மில்லியன் டொலர்களை வசூலித்துத் தள்ளியிருக்கிறது.

இதன் முதல் பாகமான 'ஆன்ற்-மன்' (2015) வெளியான முதல் வாரத்தில் வசூலித்த தொகை 57மில்லியன் டொலர்கள். 'ஆன்ற்-மன்' 2 திரைப்படம் அமெரிக்காவில் மட்டும் 4ஆயிரத்து 206திரையரங்குகளில் திரை யிடப் பட்டது.



160 மில்லியன் டொலர் தொகை மதிப்பில் உருவாகியுள்ள இந்த படம் 'ஜுராசிக் வேர்ல்ட் : த வ்பாலன் கிங்டம்', 'இன்கிரெடிபில்ஸ் 2' ஆகிய படங்களைப் பின்னுக்குத் தள்ளி வசூல் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. கடந்த வார நிலவரப்படி 'இன்கிரெடிபில்ஸ் 2' 29 மில்லியன் டொலர்களையும், 'ஜுராசிக் வேர்ல்ட் : த வ்பாலன் கிங்டம்' 28.6 மில்லியன் டொலர்களை வசூலித்து இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களில் உள்ளதும் குறிப்பி டத்தக்கது. ஆக, இந்த வாரம் 'ஆன்ற் - மன்' காட்டில் பண மழைதான்!

## ஆசிரிய வாண்மைக்கு உரமூட்டிய

1993ஆம் ஆண்டில் கல்விக் கழகத்தால் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து வெளியிட்டு வைக்கப்பட்ட விளக்கு சஞ்சிகைகள் குறித்த மீள் பார்வை.

# விளக்குகள் 17

தொகுப்பு
செ.மகேஷ்

சிறுகதையைப் பதிப்பிப்பதில்லை என்ற கருத்து ஆரம்பத்தில் விளக்கு சஞ்சிகைக் குழுவினரிடம் இருந்தது. எனினும் அந்தக் காலத்தில் ஆசிரியராகப் பணியாற்றிய செ.செல்வராஜா எழுதிய 'தேவைகள்' என்ற பின்வரும் சிறுகதை பரீட்சார்த்தமாக பதிப்பிக்கப்பட்டது. இந்தச் சிறுகதையாளர் அதிபராகவும் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர். அவரது இந்தச் சிறுகதையைப் பலரும் வரவேற்றதுடன். விளக்கில் சிறுகதைகள் மாத்திரமல்ல ஆசிரியர்களுக்குப் பயன்தரும் இலக்கிய வடிவங்களான கவிதை, நாடகம் போன்றவற்றையும் பதிப்பியுங்கள் என வேண்டிக் கொண்டனர்.

**"தேவைகளால் நாம் செயற்படத் தூண்டப்படுகின்றோம். இந்தத் தேவைகள் படிநிலை அமைப்பினாலானவை. ஒரு தேவை பூர்த்தியாகும்போது, அடுத்த படிநிலையிலுள்ள தேவை எழுகிறது"**

**ஆபிரகாம் மாஸ்லோஸ்.**

# தேவைகள்


செ.செல்வராஜா



தொண்ணூறுகள் இன்றுபோலில்லை. மிகக் கடுமையான பொருளாதாரத் தடைச்சட்டமிருந்த காலம் அது. தொலைபேசி, இணைய வசதியில்லாத காலம். வெளியிடத் தொடர்புகளுக்கு எப்போதாவது வருகின்ற கடிதங்களை நம்பியிருந்த காலம்.
கடிதக்காரனின் மணியோசை கேட்டதும் பரிமளத்துக்கு மனது துள்ளிக் குதித்தது. ஜேர்மனியிலிருந்து கணவனின் கடிதம் இன்று வரும் என்பது அவள் எதிர்பார்த்த ஒன்றுதான். அல்லாமலும் கிணற்றடி மதிலிலிருந்து காகம் கரைந்தால் கணவனிடமிருந்து கடிதம் வரும் என்ற சாத்திரம், கடந்த நான்கு வருடங்களாகப் பொய்யானதில்லை. இன்றும் அந்த இடத்திலிருந்துதான் காகம் கரைந்து கொண்டிருந்தது.

○ ○ ○

நாடு திரும்புவதாகக் கடிதம் அனுப்பிவிட்டு. மேற்கு ஜேர்மனியில் உள்ள 'ஸ்ரட்ஸ்' ஒன்றையும் தப்பவிடவில்லை புஷ்பநாதன். 'ஸ்ரட்ஸி'லுள்ள 'மார்க்ட்'டிலுள்ள ஒவ்வொரு பொருள்களையும் அப்படியே சுருட்டி எடுத்து யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுபோக வேண்டும் போலிருக்கும் அவனுக்கு. எதை வாங்குவது எதை விடுவது என்ற மனப் போராட்டம் ஒவ்வொரு சுப்ப மார்க்கற்றிலும் ஏறி இறங்கும் போது ஏற்படும். 'இன்டியன் சொப்பில்' காணப்படும் விபூதி. சந்தனக் குச்சு முதல். 'குரோசா மார்க்கட்டில்' காணப்படும் நவீன இலத்திரனியல் சாதனங்கள் வரை வாங்க ஆசைதான்.
அவனுடைய நண்பன் இராசலிங்கமும் அவன் போன்றதொரு குடும்ப காரன்தான். அவனும் நாடு திரும்ப இருப்பது புஷ்பநாதனுக்குத் துணையாகப் போய்விட்டது. இருவரும் சேரந்தே 'சொப்பிங்' செய்தனர்.

○ ○ ○

இன்னும் ஒரு மாதத்தில் கணவன் நாடு திரும்புகின்ற செய்தியைக் கடிதத்தில் படித்த பரிமளத்துக்குக் காலும் ஓடவில்லை: கையும் ஓடவில்லை. ஒவ்வொரு கடிதத்திலும் தப்பாமல், ஒரே மகளான துஷ்யந்தியின் படிப்பு விடயம் முக்கிய இடம் பெறும். எவ்வளவு செலவழித்தேனும், என்ன பாடுபட்டாயினும், அவளைப் படிப்பித்து உயர் நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற ஆதங்கம் கடிதத்தில் தொக்கி நிற்கும். கணவனின் முரட்டுக் குணம், அழுங்குப்பிடி அவளுக்கு நன்றாகத் தெரியும். அதனால் மகளின் படிப்பில் அதிக கவனம். எந்த நேரமும் படிப்பு, படிப்பு, படிப்புத்தான்.

○ ○ ○

தற்போதெல்லாம் புஷ்பநாத னின் சிந்தனை தனது நாட்டையும் வீட்டையும் சுற்றியேதான். அவன் நாட்டைவிட்டுப் புறப்பட்டபோது துஷ்யந்திக்கு வயது ஆறு. இப்போது அவளுக்குப் பத்து வயது. தாயுடன் அண்மைக் காலத்தில் அவள் சேர்ந்து எடுத்த ஒளிப்படத்தை அவன் பார்த்தபோது, .....அன்று நாட்டைவிட்டுப் புறப்பட்டபோது. முத்தமிட்டு. டாட்டா காட்டி, வழியனுப்பிவைத்த துஷிக் குட்டிதானா இவள்? என்கின்ற ஆச்சரியம் எழும்.
அவன் அனுப்பி வைத்த 'டொட்ஜ் மார்க்' ரூபாக்களாகி 'குழு குழு மொழு, மொழு' வென்றிருந்தாள் துஷ்யந்தி. தான் இன்னும் பத்து நாள்களில் வீட்டை அடைவதாக இருந்தாலும், வழக்கப்படி, பழக்கப்படி இன்றும் ஒரு கடிதத்தை எழுதி, 'போஸ்ற்'பண்ணினான். அதிலும் துஷ்யந்தியின் படிப்புப் பற்றி இரண்டு. மூன்று பக்கங்களுக்கு மேல் இடம்பெற்றிருந்தது.

○ ○ ○

பரிமளம் மகள் துஷ்யந்தியையும் அழைத்துக்கொண்டு. தனது கணவனின் சகோதரி பிரியா வீட்டில், இராமாயணம் தொலைக் கட்சித் தொடர் பார்க்கப் புறப்படுக்கொண்டி ருந்தாள். அப்போது பிரியாவின் மகள் நிஷா துள்ளிக் குதித்து ஓடி வந்து கொண்டிருந்தாள். நிஷா. துஷ்யந்தியை விட ஒரு வயது மூத்தவள். அவள் ஆண்டு ஆறு. இவள் ஆண்டு ஐந்து படித்துக்கொண்டிருந்தாள். நிஷா படிப்பில் படு சுட்டி. ஓடி வந்தவள் பரிமளம் மாமிக்கு டொபிகளை அள்ளி வழங்கினாள். புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்டத்திலே தான் முதலாவது வந்த செய்தியை மகிழ்வுடன் கூறினாள்.
அடுத்த வாரம் துஷ்யந்திக்கும் புலமைப் பரிசில் பரீட்சை!. எப்படி எழுதுவாளோ? தற்செயலாக சித்தியடை யாவிட்டால்? அந்த மனுசனுடன் இருந்த பாடில்லை. பரீட்சைக்கு ஒருவாரமிருக்கப் படம் பார்க்க நான் திரிவதா? அவளின் படிப்புக்காகப் படம் பார்ப்பதைத் தியாகம் செய்வதா? இந்த வாரம் பொறுத்த கட்டம். அதிலும் இராமனைக் காண்பது எவ்வளவோ மன நிறைவு. இராமனாக நடிக்கும் அந்தக் ஹிந்தி நடிகர் சரியாக எங்கடை அவற்றை முகச் சாயல் தான். சரியாக எண்டு சொல்லாவிட்டாலும் கிட்டத்தட்ட அவரையே மாதிரித்தான். எங்கடை அவர் நிறம் கொஞ்சம் குறைவு. மற்றப்படி இராமனாக நடிப்பவர் சரியாக எங்கடை அவரையே மாதிரித்தான். நினைவு வந்ததும் மகளை வீட்டிலிருந்து படிக்கும்படி கண்டிப்பான உத்தர விட்டுவிட்டு, நிஷாவுடன் அவளது வீட்டை நோக்கிச் சென்றாள். அவர் வரும்போது புது ரீவி கொண்டு வருவார். வீட்டுக்கு வீடு ரீவி பார்க்கப் போகிற சிரமம் இருக்காது. ஆனாலும் வீட்டில் ரீவி இருந்தால் துஷ்யந்தியின் படிப்புக் குழம்பிப் போய்விடும் என்கின்ற எண்ணமும் பரிமளத்தின் மனதில் எழுந்தது.

○ ○ ○

'ஷொப்பிங்' செய்து செய்தே புஷ்பநாதனின் உடம்பு கொஞ்சம் குறைந்து விட்டது. ஏனைய இடங்களில் ஐந்து டொட்ஜ் மாக்குக்கு வாங்குகின்ற பொருள்களை, 'லூண்டா' மார்க்கற்றில் எழுபத்தைந்து எண்பது 'பெனிக்' குக்கு வாங்கலாம். ஆனால் இங்கு வாங்கும் பொருள்கள், உடைகள், ஓரிரு தடவைகள் யாராலேனும் பாவித்தவையாக இருக்கும். 'லூண்டா மார்க்கற்றில்' வாங்கிய பொருள்களை இரு பெரும் சூட்கேசில் அடுக்கியாகிவிட்டது. சூட்கேசைக் கை பிடி வாரில் இழுத்துப் பார்த்தான் புஷ்பநாதன். சூட்கேஸ் சில்லுகள் உருண்டு கொடுக்க சூட்கேஸ் மிக இலாவகமாக அசைந்து வந்தது. அவன் திருப்திப் பட்டான். உடன் வந்த நண்பனின் வற்புறுத்தலில் மேலும் சில பொருள்கள் வாங்க பாகிஸ்தானி ஒருவரால் நடத்தப்படும், 'இன்டியன் சாறி கவுஸினுள்' நுழைந்தான் புஷ்பநாதன்.

○ ○ ○

தாயார் தன்னைப் படத்துக்கு அழைத்துச் செல்லாதது துஷ்யந்திக்கு ஒரு மாதிரி ஏக்கமாக இருந்தது. இன்று மட்டுமல்ல; இப்படிப் பலதடவைகள்... அன்றொரு நாள் கோயிலுக்கு அழைத்துச் செல்ல நிஷாவுடன் அவளது அப்பா வந்திருந்தார். துஷ்யந்தயின் படிப்புக் குழம்பிவிடுமென அவளைக் கோவிலுக்குச் செல்ல பரிமளம் அனுமதிக்கவில்லை. எந்த நேரமும் படிப்பு. ரியூசன். ரியூசன் முடிந்து வீடு திரும்பினால் மாமியார் வீட்டில் தாயார் படம் பார்த்துக்கொண்டிருப்பார். துஷ்யந்தி 'ஹோம் வேர்க்' செய்ய வேண்டும். இல்லாவிட்டால், அம்மாவுக்குப் பொல்லாத கோபம் வரும். அதிலும் நிஷா புலமைப்பரிசில் பரீட்சை பாஸ் பண்ணியதன் பின்னர், அம்மா கடும்பிடி...
அப்பாவின்ர கடிதத்தைத்தான் நூறு தரம் வாசிப்பா.... முழுக்க வாசிக்க என்னை விடமாட்டா. மற்றப் பிள்ளைகள் தகப்பன் மாரோடை மோட்டார் சைக்கிளிலை, ஸ்க்கூட்டரிலை எவ்வளவு இடம்போய் வருகினம். எனக்குத்தான் எந்த நேரமும் படிப்பு படிப்பு... நினைக்க நினைக்க அவளுக்கு அழுகை வந்தது. தலைக்குள் ஏதோ குடைந்தது..

○ ○ ○

அன்று பிளைட். சூட்கேசுக்குள் நிறைந்த பொருள்களுக்கே இடம் மட்டு மட்டாக இருந்தது. ஆனாலும் 'இன்டியன் சாறி கவுஸில்' அவன் எடுத்த இரண்டு சாறிகளையும், அந்தச் சூட்கேஸினுள் திணிக்க வேண்டியிருந்தது. அதை வாங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் கூடப் போன நண்பன் அப்போதுதான் மார்க்கற்றுக்கு வந்த. அந்த லேட்டஸ் சாறியை வாங்கியிருந்தான். நண்பனின் மனைவி அந்த லேட்டஸ் சாறியை உடுத்திக் கொண்டு. ஊரில் உலா வரும்போது. என் மனைவி அப்படியொரு சாறி உடுக்காவிட்டால், என் கௌரவம் என்னாவது? எனச் சிந்தித்தான். அதனால் அந்த இரண்டு சாறிகளையும் கடைசி நேரத்தில் வாங்கவேண்டி ஏற்பட்டது. ஏற்கனவே நிறைந்த சூட்கேசில் ஒன்றைத் திறந்தான். அதனுள் இரண்டு சாறிகளையும் வைத்து. சூட்கேஸைப் பூட்டுவதற்கு முயன்றான். 'டக்' கென்று ஓசை கேட்டது. அளவுக்கு மிஞ்சிப் பொருள்களைத் திணித்து. முன்பக்கம் மூட முயல. பின் பக்கம் பிணைச்சல் 'டப்' பென்று விட்டுப் போயிற்று. 'ஏயர் போர்ட்' போக ராக்ஸியில் வந்திறங்கிய புஷ்பநாதனின் நண்பன். வெளியே பிதுங்கிய புதுச் சாறி மற்றும் பொருள்களை, மீண்டும் உள்ளே தள்ளி சூட்கேஸைப் பின்பக்கமாக மூட முயன்ற புஷ்பநாதனைப் பார்த்து வாய்விட்டுச் சிரித்தான்.

○ ○ ○

படம்முடிந்து பரிமளம் வீட்டுக்கு வந்து பார்த்தபோது. துஷ்யந்தி முகட்டைப்பார்த்து முழித்துக் கொண்டிருந்தாள். கைவிரல்களை மடக்கி எண்ணிக் கணக்குப் பார்த்தாள். தாயாரைக்கூடக் கவனிக்கவில்லை. அவளுடைய பார்வையில் ஒரு வெறுமை தெரிந்தது. பரிமளத்துடன் வந்த நிஷாவின் தாயார், அவளை உடனே உள நல மருத்துவரிடம் அழைத்துச் செல்லுமாறு ஆலோசனை வழங்கினாள்.

கல்வி வலிந்து வழங்கப்படுவதனால் ஏற்படும் விளைவைத் தெளிவாக விளக்கும் கதை இது. புலமைப் பரிசில் பரீட்சைக்கு எதை? எவ்வாறு? ஏன்? புகட்டுவது என்பவை குறித்த விளக்கம் இல்லாமலேயே பிள்ளைகளின் தூக்கம் கெடுத்து அவர்களின் ஓய்வுகளைத் தொலைத்து பரீட்சை வினாக்களுக்கு விடை எழுதும் பயிற்சிகளையே வழங்குகிறார்கள். இதனால் பாடசாலை ஆசிரியர்களும் ரியூசன் ஆசிரியர்களாகி உழைப்பதையே நோக்காகக் கொள்வதால் கல்வியின் நோக்கங்கள் சிதறடிக்கப்படுகின்றன.

(தொடரும்)



# ஆங்கிலத் திமிரை அடக்கியவர் மோவிக்

விளையாட்டு

பிரகாஸ்

கால்பந்தாட்ட உலகக்கிண்ணம் இம்முறை தமக்குத்தான் என்று மார்தட்டிக் கொண்டிருந்த ஆங்கில தேசம் அப்படியே அதிர்ச்சியில் உறைந்து கிடக்கிறது. அரையிறுதியில் குரோசியாவிடம் தோல்வியடைந்து துவண்டு போயுள்ளது 'கிரேட்' பிரிட்டன்.

அரையிறுதியில் குரோசியாவும் இங்கிலாந்தும் மோதின. குரோசிய அணித் தலைவர் மோவிக் குறிப்பிடுவதுபோல் குரோசியாவைக் குறைத்து மதிப்பிடுவதற்கு ஆங்கிலேய ஊடகங்கள் தவறவில்லை. குரோசிய அணி வயதான அணி, களைப்படைந்த அணி, இங்கிலாந்துக்கு நிகராக அந்த அணியால் ஈடுகொடுக்க இயலாது என்றெல்லாம் தொடர்ந்து செய்திகள் பலவற்றை வெளியிட்டு வந்தன இங்கிலாந்து ஊடகங்கள். அனைத்தையும் அவதானித்துக்கொண்டு மௌனம் காத்திருந்த குரோசிய அணி அரையிறுதியில் இங்கிலாந்தைப் போட்டுப் புரட்டியெடுத்துள்ளது. கால்பந்தாட்ட உலகக்கிண்ண வரலாற்றில் முதல் முறையாக அந்த அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

குரோசியாவின் இந்த வளர்ச்சியில் அணித்தலைவர் மோர்விக்கின் பங்கு அபரிமிதமானது. மோவிக் ஆகச் சிறந்த வீரர்களில் ஒருவர். கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்களில் அவர் ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் கழகத்துக்காக விளையாடி வருகிறார். ரொனால்டோ, ராமோஸ், இஸ்கோ, மார்செலோ, பென்சிமா, பேல் உள்ளிட்ட முன்னணி வீரர்களுடன் தனது ஓய்வறையைப் பகிர்ந்துகொண்ட அனுபவம் அவருக்கு உண்டு. எனினும் குரோசியாவில் உள்ள ஏனைய வீரர்கள் சிறிது அனுபவத் தளம்பல் உடையவர்கள். இவான், ராகிடிக் இருவரையும் இந்த வரையறையில் விதி விலக்காகக் கொள்ளலாம். அப்படிப்பட்ட அணியை ஒருங்கிணைத்து ஒரு வீரராகவும், தலைவராகவும்,.தேவைப்படும் இடங்களில் பயிற்சியாளராகவும் மோவிக் செயற்பட்டிருந்தார். இங்கிலாந்துக்கு எதிரான அரையிறுதியில் இங்கிலாந்தின் ஏகப்பட்ட வாய்ப்புக்களை மோவிக் தடுத்திருந்தார். அவை விரல்விட்டு எண்ண முடியாதவையும் கூட. அரையிறுதியில் குரோசியாவிடம் இங்கிலாந்து வாங்கிக்கட்டியதை அடுத்து இன்று நடைபெறும் இறுதியாட்டத்தில் குரோசியாவுக்கும் கிண்ணம் வெல்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்று ஆர்வத்தோடு எதிர்பார்த்துள்ளது கால்பந்து அரங்கு.

## ஜூவென்டாஸில் ரொனால்டோ



ரியல் மட்ரிட் அணியில் இருந்து ஜூவென்டாஸுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார் நட்சத்திர வீரர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ. போர்த்துக்கல் அணியின் தலைவராக ரொனால்டோ கழகத்தைப் பொறுத்த வரையில் ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் கழகத்துக்காக கடந்த சில ஆண்டுகளாக விளையாடி வருகிறார். ரொனால்டோவின் அபார ஆட்டத்தால் ரியல் மட்ரிட் அணி கடந்த மூன்று வருடங்களாக (2016, 2017, 2018) ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் கிண்ணத்தைத் தனதாக்கியது. 2017ஆம் ஆண்டில் ஸ்பானியக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்றுவரும் லா லிகா தொடரைக் கைப்பற்றியது. எனினும் ரொனால்டோ - மட்ரிட் நிர்வாகம் இடையில் அண்மைக் காலமாக சம்பளப் பிரச்சினை இருந்து வந்ததாக அறிவருகிறது.

இதையடுத்தே ரொனால்டோ மட்ரிட்டில் இருந்து வெளியேறுகிறார் என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. இதன்படி ரொனால்டோவை ஒப்பந்தம் செய்ய இத்தாலியக் கழகமான யுவென்டாஸ் முன்வந்துள்ளது. மட்ரிட்டில் இருந்து யுவென்டாஸுக்குச் செல்வதற்கு ரொனால்டோவுக்கான பரிமாற்றத் தொகை மட்டும் 100 மில்லியன் ஸ்ரேர்லிங் பவுண்டுகள்.



## 'மப்பே' எனும் மன்னன்

விளையாட்டரங்கில் ஒவ்வொரு தொடரும் ஜாம்பவான்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. பற்பல வீரர்களை அறிமுகம் செய்து கொண்டுள்ளது. அந்த வகையில் ரஷ்யாவில் தற்போது நடைபெற்றுவரும் கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடர் 'மப்பே' என்னும் மன்னனைப் பற்றிப் பேசவைத்துள்ளது.

19 வயதேயான ஒரு வீரர்தான் மப்பே. பிரான்ஸ் இறுதியாட்டம் வரைக்கு முன்னேறுவதற்கு மப்பேயின் அபார ஆட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. பலரும் பல்வேறு விதமாக மப்பேயைப் புகழ்ந்துவருகின்றனர். இந்தப் புகழாரங்கள் எல்லாம் "மப்பே இன்னொரு பீலே" என்கிற பிம்பத்தை உருவாக்கியுள்ளன. மப்பேயின் வேகத்தையும் விவேகத்தையும் துல்லியத் தன்மையையும் வைத்துப் பார்க்கையில் பிலேயுடனான ஒப்பீடு உண்மையென்றே எண்ணத் தோன்றுகிறது.

கால்பந்தாட்ட உலகக்கிண்ணம் தமக்குத் தான் என்ற கொண்டாட்டத்தில் மூழ்கிப் போயுள்ளதாம் பிரெஞ்சுத் தேசம். தலைநகர் பரிஸ் உள்ளிட்ட பல்வேறு நகரங்களிலும் தற்போது விழாக் கோலம்தானாம்.





## "ஆஸ்திரேலியா இல்லை இது"

ஆஸ்திரேலிய அணியை வீழ்த்தியதுபோல் இந்தியாவை இங்கிலாந்தால் இலகுவில் வீழ்த்திவிட முடியாது என்று தெரிவித்திருந்த இந்திய அணியின் தலைவர் கோக்லி தற்போது அதைச் செயலிலும் காட்டியுள்ளார்.

இந்திய அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இதற்கு முன்னர் ஆஸ்திரேலிய அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தது. இங்கிலாந்து 5:0 என்ற அடிப்படையில் ஆஸ்திரேலியாவை வழித்துத் துடைத்தது. இதனால் இந்தியாவுக்கும் அதுவேதான் நடக்கப் போகிறது என்று பலரும் கருதினார்கள். தொடர் ஆரம்பமாவதற்கு முன்னரேயே "ஆஸ்திரேலியாவைப்போன்று இந்தியாவை எடைபோட வேண்டாம்" என்று எச்சரித்திருந்தார் கோக்லி. இங்கிலாந்துக்கு எதிரான ரி20 தொடரை 2:1 என்ற அடிப்படையில் கைப்பற்றி சாதித்துள்ளது இந்தியா. ஒருநாள் தொடரிலும் இந்தியா சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தி வருகிறது. ஆக, சொன்னதைச் செய்துள்ளார் கோக்லி.

கட்டுரை

ஸூடோ ஸ்வாமி

# யாழ்ப்பாணத்தை பாலைவனம் ஆக்குகிறோமோ?




"யாழ்ப்பாணத்தின் வலி. மேற்கு பிரதேசத்தின் தரைத்தோற்ற வடிவமைப்பானது வேறுபட்டது. இதனால், வலி. மேற்கில் கிடைக்கும் அனைத்து மழைநீரும் நிலத்தடி நீரில் கலப்பதில்லை. அனைத்து மழைநீரும் கடலுக்குள்ளேயே செல்கிறது. வருடாந்தம் யாழ்.குடாநாடு பெறுகின்ற உண்மையான மழைக்கும் பஞ்சாங்கத்தின் அடிப்படையிலான மழைக்கும் இடையிலானதொடர்புபற்றி 2006ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதித் தரவுகள்ஆராயப்பட்டிருக்கிறது. அந்தஆய்வின் பிரகாரம், இனிவரும் காலங்களில் குடாநாட்டுக்கான மழைகுறைவாகவே இருக்கும் என எதிர்வு கூறப்பட்டிருக்கிறது"

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் யாழ். பல்கலைக்கழக புவியியல்துறைசிரேஷ்டவிரிவுரையாளர் நா. பிரதீபராஜா. வலி. தென் மேற்குப் பிரதேசசபையின் முன்னெடுப்பில், உலகதரிசனம் ஏ.டி.பி. நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மரங்கள் நாட்டும் விழாவில் காணொலி மூலம் சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். அவருடைய உரையில், வலி. தென் மேற்கின் அராலிப் பிரதேசம்.எதிர்வரும் 5 ஆண்டுகளில் குடிதண்ணீருக்கான பஞ்சத்தினை எதிர்கொள்ளும் என்றும் எச்சரித்திருக்கிறார்.

மனித நாகரிகத்தின் வளர்ச்சி, நீர்நிலைகளை அண்மித்தே தோற்றம் பெற்றபின்னணியில்,வடக்குக் கிழக்கின் விசேடமாக யாழ். குடாநாட்டின் புவியியில் மற்றும் காலநிலைதொடர்பிலானமாறுபாடுகள் தொடர்பில் துறைசார் வல்லுநர்கள் அடிக்கடி அபாயச் சங்கை ஊதி வருகின்றனர்.அத்தகைய அபாய அறிவிப்புக்கள்.குடாநாடு இழந்து கொண்டிருக்கக்கூடிய மனிதர்கள் குடியிருக்கும் தகுதி தொடர்பில் மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தத் தவறவில்லை.

### சம்பிக்கவின் எதிர்வுகூறல்

உலகவெப்பமயமாதல் மற்றும் திட்டமிடாத கட்டட உருவாக்கங்கள் காரணமாக எதிர்வரும் 50 வருடங்களில் யாழ்ப்பாணம் அரைப்பாலைவனமாக மாறிவிடும் அபாயம் நிலவுவதாக பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க கடந்த ஆண்டில் தெரிவித்திருந்தார். பாரம்பரிய தாயக நிலப்பரப்புகளுக்காகக் கூச்சலிடுவோர் முதலில் தமது சக்திமற்றும் வளங்களை சூழலைப் பாதுகாப்பதற்காகச் செலவழித்துத் தமது நிலங்களைக் காத்துக் கொள்ள வேண்டும் என்றிருந்தார்.




யாழ்ப்பாணக்குடாநாடு இயற்கைக்குரிய அணிகலன்கள்சிலவற்றைக் கொண்டிராத நிலப்பிரதேசப் பகுதியாகும். இந்தத் தீபகற்ப பிரதேசத்தினுள் வற்றாத நதி என்றெல்லாம் ஒன்றும் கிடையாது. வெள்ளம் பெருகினால்தோன்றிமறையும் ஒருசில ஆறுகள் உண்டு. மண்ணைகுளிர்மைப் படுத்த ஆறு,நதிதான் இல்லை மண் மேற்பரப்பை மறைக்கக் கொஞ்சம் காட்டுப்பரப்பு இருந்தால் நல்லது என்றுதேடினால்.., அதுவும் யாழ்ப்பாணத்தில் கிடையாது. மலை..? கீரிமலை, சுதுமலை இருக்கிறது. ஆனால், அவை யாவும் சமதரையாகவே இருக்கின்றன. யாழ்ப்பாணத்துக்கு இருக்கக்கூடியவரமும் சாபமும் நிலத்தின்கீழ் அமைந்திருக்கக்கூடிய சுண்ணக்கல் பாறைகளேயாம். யாழ்ப்பாணத்தில் கானநீர் வளத்தினை அதுவும் நிலத்தடிநீர் வளத்தைத் தீர்மானிப்பவையாக இவையே அமைகின்றன.

8ஆயிரத்து 805.02 சதுரகி.மீ.பரப்பளவைக் கொண்ட வடமாகாணத்தில் ஆயிரம் சதுரகி.மீபரப்பளவினை கொண்ட யாழ்ப்பாணம், உலர் வலயத்துக்குரிய பிரதேசமாகும். இதனால் வருடாந்த மழைவீழ்ச்சி குறைவாகவே இங்கு கிடைக்கிறது.வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்றினாலும் தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காற்றினாலும் மழையைபெறும் இந்தப் பிரதேசம்,அண்மைக்காலமாக ஒழுங்கற்றமழைவீழ்ச்சியை எதிர்கொள்வதுடன் மழைவீழ்ச்சியிலும் வீழ்ச்சியை எதிர்நோக்கியிருக்கிறது. குறைவடைந்து வரும் மழைவீழ்ச்சி, சீதோஷ்ண மாற்றங்களை ஏற்படுத்துவதுடன்,குடிநீர்ப்பஞ்சம்,விவசாயநடவடிக்கைகளில் தடங்கல் போன்ற தொடர்விளைவுகளுக்கும் கால்கோள் இடுகிறது.

### தருக்களை தறிக்கச் செய்யும் தகரவேலிகள்!

அண்மைக்காலமாக ஏற்பட்டு வரும் பொருளாதார முன்னேற்றம் காரணமாக மாத்திரமின்றி,பாதுகாப்பு மற்றும் பராமரிப்புநெருக்கடிகள் காரணமாகவும் சமூக அந்தஸ்.தைத் தக்கவைக்கும் முகமாகவும் போரிலும் பொசுங்கிப்போகாத பழமைவாய்ந்த பச்சை மரங்களைக் கொண்ட 'கதியால்'வேலிகள், வேர் கிளறப்பட்டும் தறிக்கப்பட்டும் அகற்றப்பட்டுவருகின்றன. பின்பு அவ்விடங்கள், மதில்களாகவும் கொன்கிரீட் தூண்களைக் கொண்ட தகரவேலிகளாக உருமாறி,அச்சறிக்கை செய்கின்றன. இதுபல இடங்களில் எல்லைப் பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளதோடு,கால்நடைப் பராமரிப்பாளர்களுக்கும் நெருக்கடியைக் கொடுத்திருக்கிறது. மதில்களுக்கும் தகரவேலிகளுக்கும்,பச்சையத்தை முதலீடாகக் கொண்டு பிராணவாயுவைத் தொகுக்கும் வாய்ப்போ,நிழல் தரும் சாத்தியமோ,மாடு, ஆடுகளுக்குத் தீவனமாக அமையும் சந்தர்ப்பமோ,அல்லது தோட்டங்களுக்கான தொடர்ச்சியான பசுந்தாட் பசளையாகவோ சருகாகி உரமாகும் பயன்பாடோ,ஈற்றில் விறகாகவேனும் மாறும் பாக்கியமோ, துளிகூடக் கிடையாது. ஆனால் யாழ்ப்பாணமெங்கும் அசுரவேகத்தில் உருவாகிவரும் தகரவேலிகளும், தங்கு தடையின்றிக் கட்டியெழுப்பப்படும் சுற்றுமதில்களும் மானிடர் ஏற்படுத்தும் பேரிடர்களுக்கு இரகசியமாக வலுச்சேர்த்து வருகின்றன.

### வீதி விஸ்தரிப்புக்காக விலை கொடுக்கப்பட இருக்கும் பச்சைமரங்கள்

மிகஅண்மையில் வடக்கு-கிழக்குமாகாணங்களில் சிலமுக்கிய வீதிகள் சீரமைக்கப்படுவதற்கான அனுமதியை அமைச்சரவைவழங்கியிருக்கிறது.நல்லிணக்க வேலைத்திட்டத்தின் கீழ் 200 மில்லியன் ரூபாசெலவில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினது பராமரிப்பின் கீழும்,வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பராமரிப்பின் கீழும் வரும் வீதிகள் உள்ளடங்கலாககிராமவீதிகளையும் உள்ளடக்கி சுமார் 2ஆயிரத்து 500 கி.மீ. நீளமான வீதிகள் சீரமைக்கப்பட இருக்கிறது.

இதன் பிரகாரம், இதுவரைகவனிக்கப்படாதிருந்தயாழ்ப்பாணத்தின்வழுக்கையாறு,புங்குடுதீவு,குறிகாட்டுவான் வீதி,யாழ்ப்பாணம் மானிப்பாய்- காரைநகர் வீதிமற்றும் பொன்னாலை- பருத்தித்துறை வீதி என்பன இந்தத் திட்டத்தினுள் உள்ளடங்கும் முதன்மை நெடுஞ்சாலைகள் ஆகும்.வீதி அகலிப்பு நடவடிக்கைகளுக்காக,வீதியோர கதியால், வேலிகள் மற்றும் பயன்தருமரங்களைப் பறிகொடுக்க வேண்டியபுறச்சூழல் ஏற்பட்டிருக்கிறது.

இத்தகையதோர் சடுதியான மரஅழிப்பு முதலில் காங்கேசன்துறை வீதி அகலிப்பின் போதும் பருத்தித்துறை வீதி அகலிப்பின் போதும் நிகழ்ந்திருந்தது. நஷ்டஈடுகளைவழுங்குவதுடன் மாத்திரம் நின்றுவிடாது மரம் வளர்ப்பு நடவடிக்கைகளை உற்சாகப்படுத்துவதன் மூலம், இடம்பெறும் அபிவிருத்திகள் இடராக மாறுவதைத் தவிர்க்க வேண்டும். இந்த விடயத்தில் சூழல் சார்ந்து இயங்கும் தன்னார்வத் தொண்டுநிறுவனங்கள் மாத்திரமின்றி, வீதிஅபிவிருத்திசார் நிறுவனங்களும் உள்ளூராட்சிஅமைப்புக்களும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

### சோலைவரி, பாலைநிலமாகுதல் தொடர்பில் கரிசனைகொள்கிறதா?

கண்மூடித்தனமானநடவடிக்கைகள் காரணமாக அன்றாடம் பறிபோகும் மரவளம் தொடர்பில்,உள்ளூராட்சி அமைப்புக்கள் கண்டும் காணாமல் இருப்பது விசனத்துக்குரியது. 'சோலைவரி' என்னும் பெயரில் கணிசமான'வரிவருமானத்தினைப் பெறும் இந்தச் சபைகள்,மாறிவரும் சமூகநடைமுறைகளுக்குஏற்ப தமதுநடவடிக்கைகளை திருத்தி, மேம்படுத்தி மாற்றுநடவடிக்கைகளை முன்னெடுத்தல்வேண்டும். அனுமதிப்பத்திர நடைமுறையிலோஅல்லது வரி அறவீட்டிலோ மாத்திரம் தங்கியிருப்பதைத் தவிர்த்து மரம்நடுகை முயற்சிகளை ஊக்குவிக்கும் திட்டங்களையும்,நட்டமரங்களை செவ்வனே பராமரிக்கும் திட்டங்களையும் தமது திட்டமிடல்களில் உட்புகுத்தவேண்டும்.

உலகம் பூராகவும் புவிவெப்பமடைதல் தொடர்பில் கரிசனைகொண்டு அதைக் குறைக்கும் மற்றும் அதை தடுக்கும் முறைகளை முடுக்கிவிட்டிருக்க, நாமோ நமது தாயகப் பிரதேசத்தை குடியிருப்புக்குத் தகுதியற்ற பிரதேசமாக மாற்றி வருகிறோம்.செறிவான மரம்வளர்ப்புத் திட்டங்களையும் சூழல் பாதுகாப்புப் பொறிமுறைகளையும் நடைமுறைக்கிடாதவிடத்து,எமது தலைமுறை போரினால் இடம்பெயர்ந்த வரலாறினை பதிவு செய்திருக்க,எமது அடுத்தசந்ததி, குடிநீர் பஞ்சத்தினால் குடாநாட்டினைவிட்டு இடம்பெயர்ந்த வரலாற்றைப் பதிவுசெய்யும்.






# கால்பந்துத் தொடரின் கற்பிதங்கள்!

கட்டுரை

எம். சூரியா

**2018** ஆம் ஆண்டுக்கான உலகக் கால்பந்துக் கோப்பையைத் தனதாக்கப்போவது யார்? என்பது இன்று தெரிந்துவிடும். ஆனால், இதற்கு முன்பு எந்த உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டியிலும் அரங்கேறாத அதிர்ச்சிகளும், மகிழ்ச்சிகளும் இந்த உலகக் கோப்பையில் அரங்கேறியிருக்கின்றன. தென் அமெரிக்க அணி இல்லாத அரை இறுதியை முதன் முறையாக இந்த உலகக் கோப்பைக் கண்டிருக்கிறது. இந்த உலகக் கோப்பைக்குக் கொஞ்சமும் கணிக்கப்படாத அணிகள் அரையிறுதிச் சுற்றுவரை முன்னேறியிருக்கின்றன. இந்த உலகக் கோப்பை சொல்லும் செய்தி என்ன?

இந்த உலகக் கோப்பையில் அரை இறுதிச் சுற்றுக்குப் பிரான்ஸ், பெல்ஜியம், இங்கிலாந்து, குரேஷியா ஆகிய அணிகள் தகுதி பெற்றன. 1930ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் உலகக் கோப்பைக் கால்பந்துத் தொடரில் பிரான்ஸ், இங்கிலாந்து அணிகள் தலா ஒரு முறை சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றி இருக்கின்றன. மற்ற இரண்டு அணிகளான பெல்ஜியம், குரேஷியா அணிகள் இதுவரை இறுதிப் போட்டிக்குள் கால்பதித்ததே கிடையாது! இந்த முறையும் இறுதிப் போட்டிக்குச் செல்ல முடியாமல் பெல்ஜியம் வெளியேறிவிட்டது. ஆனால், அரையிறுதியில் இங்கிலாந்தை வீழ்த்தி குரேஷிசியா இறுதிப் போட்டிக்கு முதன் முறையாக முன்னேறிப் புதிய சாதனையைப் படைத்துள்ளது. அந்த அணியைப் பொறுத்தவரை இது வரலாற்று நிகழ்வு.

### எதிர்பாராத திருப்பம்

கால்பந்துப் பித்துப் பிடித்த தேசங்கள் எனக் கருதப்பட்ட ஆர்ஜெண்டினா, போர்த்துக்கல், ஸ்பெய்ன், ஜேர்மனி, பிரேசில் ஆகிய அணிகள் அரையிறுதிக்குக்கூடத் தகுதி பெறாமல், ரஷ்யாவிலிருந்து மூட்டை முடிச்சுகளுடன் புறப்பட்டுவிட்டன. முன்னணி அணிகள் இல்லாத இந்த உலகக் கோப்பைக் கால்பந்துத் தொடரின் அரையிறுதிப் போட்டிகள் வித்தியாசமாகவே இருந்தன. இறுதிப் போட்டியும் அப்படியே இருக்கக்கூடும்.

லீக் சுற்றுப் போட்டிகளில் குரேஷியா, ஐஸ்லாந்து அணிகளுக்கு எதிரான போட்டியில் கால்பந்து ஜாம்பவான் எனக் கருதப்பட்ட ஆர்ஜெண்டினா, தனது முழுத் திறமையையும் வெளிப்படுத்த முடியாமல் போனது. மொராக்கோ அணிக்கு எதிரான கடைசி ஆட்டத்தில் ஸ்பெயின் சந்தித்த சவால்கள், கால்பந்து இரசிகர்களை ஆச்சரியப்படுத்தியது. ஈரான் அணிக்கு எதிரான போட்டியில், எளிதாக வெற்றிபெற்று விடலாம் எனக் கெத்தாகக் களமிறங்கிய போர்த்துக்கல் அணியின் கனவு பொய்த்துப் போனது.

பொதுவாகப் பார்க்கும்போது கால்பந்து உலகக் கோப்பைத் தொடரில் சம்பியன் பட்டத்தை வெல்லும் எனக் கணிக்கப்பட்ட ஜாம்பவான் அணிகள், லீக் போட்டியில் வெற்றி பெறவே நிறையப் போராட வேண்டியிருந்தது. கோல் அடிப்பதற்கு மகத்தான வாய்ப்புகள் கிடைத்தபோதும் அதை அந்த அணிகளால் கோலாக மாற்ற முடியவில்லை. தென் கொரியாவுக்கு எதிரான கடைசிப் போட்டியில் ஜேர்மனி அணி, போட்டியின் முக்கால்வாசி நேரம் பந்தைத் தன் வசம் வைத்திருந்தது. ஆனால், கோல் அடிக்க முடியாமல், அந்த அணியின் தடுப்பாட்டம் வீண் ஆனது. ரஷ்யாவுக்கு எதிராக விளையாடிய ஸ்பெய்ன் அணிக்கும் இதே கதிதான். ரஷ்யாவின் தடுப்பாட்ட வீரர்களால், ஸ்பெய்ன் அணியின் கோல் வாய்ப்புகள் முழுமையாகத் தடுக்கப்பட்டன.

### அதிர்ச்சித் தோல்வி

ஆக்ரோஷம், தடுப்பாட்டம் இரண்டிலும் சிறந்த அணியாகக் கருதப்பட்ட ஜேர்மனி, இந்த உலகக் கோப்பையில் மிக மோசமான தோல்வியைச் சந்தித்திருக்கிறது. ஜேர்மனிய ஆட்டக்காரர்களின் தடுப்பாட்டம் விமர்சனத்துக்கு உள்ளாகி இருக்கிறது. ஜேர்மனியின் நட்சத்திர ஆட்டக்காரர் மிராஸ்லவ் குளோஸ், நடுக்கள ஆட்டக்காரர் பாஸ்ரியன் இல்லாததால், அந்த அணியின் ஆட்டத் திறன் வெகுவாகக் குறைந்துவிட்டதை இந்த உலகக் கோப்பைத் தொடரில் உணர முடிந்தது. தோமஸ் முல்லர், மரியோ கோம்ஸ் ஆகிய நடுக் கள ஆட்டக்காரர்களால் கோல் அடிக்கும் வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க முடியவில்லை என்பது ஜேர்மனி அணியின் பலவீனத்தை அப்பட்டமாக்கியது. நட்சத்திர ஆட்டக்காரர்கள் மீது மட்டுமே ஜாம்பவான் அணிகள் நம்பிக்கை வைத்ததும், இந்த உலகக் கோப்பையில் அவற்றின் சரிவுக்குக் காரணமாக அமைந்துவிட்டது. உதாரணமாக, ஸ்பெய்ன் அணி இனியெஸ்டாவையும் போர்த்துக்கல் அணி ரொனால்டோவையும் ஆர்ஜெண்டினா அணி மெஸ்ஸியையும் நம்பியிருந்தன. ஆனால், 22பேர் விளையாடக்கூடிய கால்பந்தில், ஒரே ஒரு நபர் என்ன மாற்றத்தை நிகழ்த்திவிட முடியும் என்பதற்கு, 2018ஆம் ஆண்டு உலகக் கோப்பைக் கால்பந்துத் தொடர் சிறந்த உதாரணமாகியிருக்கிறது. தடுப்பாட்டத்தில் கவனம் செலுத்திய ஜாம்பவான் அணிகள், கோல் வாய்ப்புகளை உருவாக்கத் தவறியதும், அவற்றின் சரிவுக்குக் காரணமாகிவிட்டன. ஸ்பெய்ன் அணி இந்தத் தொடரில் மிக மந்தமான தடுப்பாட்டத்தையே கடைப் பிடித்தது. தவறுதலாகப் பந்து எதிரணியினருக்குக் கிடைத்த தருணங்களில், ஸ்பெய்னின் தடுப்பாட்ட வியூகம் உடைந்ததால், எதிரணிக்குக் கோல் வாய்ப்பு அதிகரித்தது. ஸ்பெயின் ஆட்டக்காரர்கள் பயோல், கேஸில்லஸ் ஆகியோரின் ஓய்வு அந்த அணிக்கு மிகப் பெரிய பின்னடைவை இந்தத் தொடரில் ஏற்படுத்தியிருக்கிறது.

### திறமையான வியூகங்கள்

போர்த்துக்கல், ஆர்ஜெண்டினா அணிகளுக்குத் தகுதியான தடுப்பு ஆட்டக்காரர்கள் இல்லை என்பதும் மறுக்க முடியாத உண்மை. போர்த்துக்கல் அணி பீபேயையும் ஆர்ஜெண்டினா அணி மஸ்செரனோவையும் மட்டுமே தடுப்பாட்டத்துக்குப் பெரிதும் நம்பியிருந்தன. ஆனால், எதிரணியின் திறமையான வியூகங்களைத் தனிப்பட்ட முறையில் இவர்களால் எதிர்கொள்ள முடியவில்லை.

இந்த உலகக் கோப்பையில் குரேஷியா, பெல்ஜியம், ரஷ்யா அணிகள், எதிரணி வீரர்களின் வியூகத்தை முறியடித்து, பந்தைக் கடத்திச் செல்வதில் பாராட்டத்தக்க ஒருங்கிணைப்பை வெளிப்படுத்தின. இதன் மூலம் குழுவாக விளையாடினால் மட்டுமே சாதிக்க முடியும் என்பதையும் அந்த அணிகள் தெள்ளத் தெளிவாகக் கால்பந்து உலகுக்குக் கோடிட்டுக் காட்டியிருக்கின்றன. சம்பியன் அணிகளின் மிகப் பெரிய சொதப்பல்களால் 1998ஆம் ஆண்டுக்குப் பிறகு இரண்டாம் முறையாகப் பிரான்ஸ் அணி இறுதிப் போட்டி வரை தன் ஆதிக்கத்தைச் செலுத்தி முன்னேறியிருக்கிறது.

52ஆண்டுகளுக்குப் பிறகு இங்கிலாந்து இறுதிப் போட்டிக்குச் செல்லும் வாய்ப்பைப் பெற்றிருந்தும் அரையிறுதியில் கோட்டைவிட்டுவிட்டது. 1998ஆம் ஆண்டுக்குப் பிறகு இரண்டாவது முறையாக அரை இறுதிவரை முன்னேறிய குரேஷியா, முதன் முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறி அதகளப்படுத்தியிருக்கிறது. 1986ஆம் ஆண்டுக்குப் பிறகு இரண்டாவது முறையாக பெல்ஜியம் அணி அரையிறுதி வரை முன்னேறி ஆச்சரியப்படுத்தியது. முதன்முறையாகத் தென் அமெரிக்க அணிகள் எதுவும் அரையிறுதிவரை முன்னேறாமல் போன துரதிர்ஷ்டமும் இந்த முறை நடந்தேறியது. முழுவதுமாக ஜாம்பவான் அணிகளுக்கு இந்த உலகக் கோப்பைத் தொடர் மிகச் சிறந்த பாடத்தைக் கொடுத்திருக்கிறது.

FIFA WORLD CUP
RUSSIA 2018



**இ**ந்த உலகக் கோப்பையில் குரேஷியா, பெல்ஜியம், ரஷ்யா அணிகள், எதிரணி வீரர்களின் வியூகத்தை முறியடித்து, பந்தைக் கடத்திச் செல்வதில் பாராட்டத்தக்க ஒருங்கிணைப்பை வெளிப்படுத்தின. இதன் மூலம் குழுவாக விளையாடினால் மட்டுமே சாதிக்க முடியும் என்பதையும் அந்த அணிகள் தெள்ளத் தெளிவாகக் கால்பந்து உலகுக்குக் கோடிட்டுக் காட்டியிருக்கின்றன.

# ஈழத்தவர் வரிசையில்...

## வரதர்



வரதர் என அழைக்கப்படுபவர் தியாகர் சண்முகம் வரதராசன். இவர் ஜூலை 1ஆம் திகதி 1924ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - பொன்னாலையில் பிறந்தார். சிறுகதை, புதுக் கவிதை, குறுநாவல், இதழியல், பதிப்புத் துறை என இலக்கியத்தின் பலதுறைகளிலும் முத்திரை பதித்தவர். ஈழத்து இலக்கியத்தில் மறுமலர்ச்சி எழுத்தாளர் என அழைக்கப்பட்டவர்.

**சிறுகதைகள், கவிதை**


இவரது முதற் சிறுகதையான 'கல்யாணியின் காதல்' ஈழகேசரியில் வெளியானது. ஜூன் 13, 1943ஆம் ஆண்டில் ஈழத்தின் முதல் எழுத்தாளர் சங்கமான 'தமிழிலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்' ஆரம்பிக்கப்படுவதற்குக் காரணமாக இருந்தவர்களில் இவரும் ஒருவர். இதே ஆண்டில் ஈழகேசரியில் வரதர் எழுதிய 'ஓர் இரவினிலே' எனும் வசன கவிதையே ஈழத்தின் முதல் புதுக்கவிதை எனப்படுகிறது. வரதரின் முதற் சிறுகதைத் தொகுதியான 'கயமை மயக்கம்' 1960ஆம் ஆண்டில் வெளியானது.

**சஞ்சிகைகள்**

மறுமலர்ச்சி சஞ்சிகையின் (1946-1948) ஆசிரியர் குழுவில் ஒருவர் இவர். ஆனந்தன் (1952), தேன் மொழி (1955), வெள்ளி (சஞ்சிகை), புதினம் (வார இதழ்), அறிவுக் களஞ்சியம் ஆகியன இவர் நடத்திய இதழ்கள். இவர் ஓர் அச்சக முகாமையாளர். 'வரதர் வெளியீடு' என்னும் வெளியீட்டு முயற்சியின் மூலம் பெருமளவு நூல்களை வெளியிட்டுள்ளார். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் இலக்கிய வழியே வரதர் வெளியீடாக வெளிவந்த முதல் நூலாகும். மஹாகவி, வித்துவான் பொன். முத்துக்குமாரன், செங்கை ஆழியான், சாந்தன், க. கைலாசபதி, முருகையன், நா. சோமகாந்தன், நாவற்குழியூர் நடராஜன் ஆகிய பலரது நூல்கள் வரதர் வெளியீடாக வெளிவந்துள்ளன. பதினைந்து வயதுக்குட்பட்ட சிறார்களுக்காக வரதர் கதைமலர் தொடரில் ஐந்து நூல்களை வெளியிட்டார். 'வரதரின் பல குறிப்பு' என்ற பெயரில் தமிழ் மக்களுக்குத் தேவையான பலவித விடயங்களைத் தொகுத்து ஆண்டுக்கு ஒன்றாக நான்கு பதிப்புக்கள் வெளியிட்டார்.

**விருதுகள்**

இவருடைய சேவைகளைப் பாராட்டி இலங்கைக் கலைக் கழகம் அவருக்கு சாகித்திய இரத்தினம் எனும் பட்டத்தை அளித்தது. இவரே புதுக்கவிதையின் பிதாமகர் எனவும் பட்டார். 'யாழ்ப்பாணத்தார் கண்ணீர்' அவரது நெடுங்கவிதை நூல். 'மறுமலர்ச்சி', 'புதினம்', 'வெள்ளி', 'தேன்மொழி', 'ஆனந்தன்' என்பன அவர் நடாத்திய சஞ்சிகைகள். 'கயமை மயக்கம்', 'வாழ்க நீ சங்கிலி மன்னா', 'நாவலர்', 'மலரும் நினைவுகள்', 'பாரதக் கதை' என்பன அவரது நூல்கள். சிறுகதைகள் மற்றும் எழுத்துக்களால் ஈழமண்ணுக்குப் பெருமை சேர்த்த இவர் 2006ஆம்



## வழிகாட்டுவோம்



# தோல்விகளாலும் கண்டுபிடிப்புக்கள் நிகழ்ந்தன!



சென்ற வாரம் தோமஸ் அல்வா எடிசன் குறித்த ஒரு சிறந்த கதையைப் படித்திருப்பீர்கள் என நினைக்கிறேன். இதுவும் எடிசன் சம்பந்தப்பட்ட ஒரு தகவல்தான். வரலாற்றில் இடம்பிடித்த எடிசன் போன்றவர்களின் சாதனைகள் எப்படிச் சாத்தியமானவை என்பது உங்களுக்குத் தெரியுமா?


தோல்விகள் பலவற்றையும் சந்தித்து, அவற்றைத் திருத்தியமைத்து, காரணங்களை ஆராய்ந்து, அவற்றில் அறிவு தேடித் தெளிந்து பின்னரே அவர் போன்றவர்கள் வெற்றி கண்டிருப்பது நிஜம். தமது முயற்சிகளின்பால் நேர் எண்ணங்களை வளர்ப்பதாலேயே அவை சாத்தியமானவை. அதைவிட தளராத முயற்சியுடன் இருப்பதும் முக்கியமானது. கடந்தவாரக் கதையில் குறிப்பிட்டதுபோல பாடசாலையில் ஆசிரியரால் 'மோக்கன்' எனப் புறமொதுக்க ப்பட்டு, வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்ட தோமஸ் அல்வா எடிசன்தான் பின்னாளில் மின்குமிழைக் கண்டுபிடித்த விஞ்ஞானியானார். அந்த முயற்சியில் 10ஆயிரத்துக்கும் மேற்பட்ட தடவைகள் தோற்ற பின்பே வெற்றிகண்டார். இதைப்பற்றி ஒரு பத்திரிகையாளர் எடிசனிடம், "நீங்கள் இந்த முயற்சியில் பத்தாயிரம் தடவைகள் தோற்றிருக்கிறீர்கள். அப்பொழுது நீங்கள் என்ன உணர்ந்தீர்கள்?" என்று கேள்வி எழுப்பினாராம்! அதற்கு எடிசன் "யார் சொன்னது நான் தோற்றேனென்று 10ஆயிரம் தடவைகளுக்கு மேல்; எப்படியெல்லாம் மின்குமிழ் ஒளிராது என்பதையும் நான் கண்டுபிடித்துள்ளேன். அதுவும் எனது கண்டுபிடிப்புக்களே" என்றாராம்! இவை எடிசனின் விடமுயற்சிகளுக்கு நல்லதொரு எடுத்துக்காட்டு.

*சிறுவர்களே! முயற்சிகள் வெற்றியையே தருவன. அவை பல சந்தர்ப்பங்களிலும் தோல்வியைத் தரினும் எவ்விதத்திலாவது அவை கூட அறிவையும், அனுபவத்தையும் தந்து நிற்பதை நாம் தான் உணர்வதில்லை. அவற்றை உணர்ந்ததன் பிற்பாடு நாம் எடுக்கின்ற முயற்சிகள் அடுத்தடுத்து வெற்றிகளையே குவிக்கும். முயற்சிகளில் தோல்விகளும் நல்ல படிப்பினையைத் தரும் என்பதை இப்போது நீங்கள் உணர்ந்திருப்பீர்களே?*

# பொது அறிவு

1. அமிலத் தன்மை உள்ள பழம் எது?
   எலுமிச்சை
2. உலகில் குறைந்த சனத்தொகை கொண்ட நாடு எது?
   வத்திகான்
3. மனித உடலில் காணப்படும் எலும்புகள் எத்தனை?
   206.
4. மாணவருக்கு இலவச சீருடையை வழங்கும் அமைச்சு எது?
   கல்வி அமைச்சு
5. கிரிக்கெட் முதன் முதலில் அறிமுகமான நாடு எது?
   இங்கிலாந்து
6. உலகில் புவி தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
   ஏப்ரல்- 22
7. கறையானின் முதிர்ச்சிப் பருவம் எது?
   ஈசல்
8. இலங்கை சுதந்திர பொன் விழா கொண்டிய ஆண்டு எது?
   1998.02.04
9. குழந்தை பிறந்தவுடன் ஏற்றப்படும் தடுப்பூசி எது?
   BCG
10. உலக குடி நீர் தினம் எப்போது?
    மார்ச் - 22

## கண்ணில்லாதவர் போல்வர் கல்லாதவர்



பிச்சை எடுப்பினும் கற்றல் இனிதே
கல்வி அழகே என்றும் நீங்கா அழகு
கல்வியே எல்லோர்க்கும் வாழ்வினைத் தந்திடும்
கல்வி கல்லாதவர் கண்ணில்லாதவர் போல்வர்

இளமையில் கல்வி நிலையாக நின்றிடும் என்றும்
கல்வியே வாழ்வில் எம்மை உயர்த்திடும்
கற்றவரே தெய்வத்துக்கு நிகராக விளங்கிடுவர்
செல்லும் இடமெங்கும் சிறப்புறுவர் கற்றோரே

கற்றோரைக் கற்றவரே என்றும் விரும்பிடுவர்
தேவரும் விரும்பிப் போற்றிடுவர் கற்றோரையே
நாளும் பொழுதும் கல்வியைக் கண்ணாகக் கொண்டு
பலதும் பத்தும் கற்றே அறிவினை வளர்த்திடுவோம்

கல்லாதவர் துன்பம் பல காண்பர் நாளும்
அவர்கள் வாழ்வே இருண்டு போகும்
இன்பத்தைத் தொலைத்துத் துன்பத்தில் மிதத்திடுவர்
அறியாமை இருளைப் போக்காமல் திகைத்திடுவர்

*சுதாகரன் கிருத்திகா,*
*கிளி. இராமநாதபுரம் ம.வி.*



ரா.சிவசக்தி,
தரம் - 8,
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்.



என்.விஜிதா,
தரம் - 4

# சிரிப்பு


**மனைவி :** என்னங்க நம்ம பையனுக்கு பொண்ணு பார்க்கும் போது நல்ல குண்டா, இருக்க பொண்ணா பார்க்கணும்.
**கணவன் :** ஏன்?
**மனைவி :** அப்போ தான் அவன் பொண்டாட்டிய தலையில தூக்கி வெச்சிக்கிட்டு ஆட மாட்டன்.

"அப்பா நான் வெற்றியின் முதல்படியில் நிற்கிறேன்,"

"வெறி குட்!.. நீதான் கிளாஸ் பர்ஸ்ட்டா..?",

"இல்லப்பா... நீங்கதான் சொன்னீங்களே... வெற்றியின் முதல் படி தோல்வின்னு...!"


புத்தகத்தின் வழியே சக மனிதர்களை நெருங்கலாம்





## பரமேஸ்வரியாக காஜல் அகர்வால்!

ஹோலிவுட்படமான 'குயீன்' படம் தமிழில் மறுதயாரிப்பு செய்யப் பட்டு வருகிறது. நடிகர் ரமேஷ் அரவிந்த் இயக்கி வரும் இந்தப் படத்துக்கு 'பாரிஸ் பாரிஸ்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தப்படத்தில் காஜல் அகர்வால் கங்கனா ரனாவத் பாத்திரத்தில் நடிக்கிறார். இந்த நிலையில் காஜல் நடிக்கும் கதாபாத்திரத்தின் பெயர் பரமேஸ்வரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.







## twitter

பிளாக் லைட்@BlackLightOfl
'நாலு காசு சேர்த்து வைக்கணும்' என்கிற எண்ணம் வந்துவிட்டாலே, வயசு ஆகிறது என்று பொருள்.

சப்பாணி @manipmp
அந்த காலத்தில் பேனா எழுதுதா என்று பார்ப்பதற்காகவே பிள்ளையார் சுழி கண்டுபிடித்திருக்க வேண்டும்.

twitter.com/MSRajRules
வெட்டிப் பேச்சுக்கு பெரும்பாலும் வெட்டியாய் இருப்பவர்களே செவி சாய்ப்பார்கள்....



காசும் பெருகுது கூட
உடம்பும் பெருகுது
அதுங்க கூடவே மாத்திரைகளின்
அளவும் பெருகுது
#வசதி படைத்தவர்கள்

பேஸ்புக்கில
போஸ்ட் போட்டு சமூகத்தைத்
திருத்த முடியும் என்று நினைப்பதும்
முகப்பூச்சுப் பூசி வெள்ளையாக முடியும்
என்று நினைப்பதும் ஒன்றுதான்.

## சுடோக்கு

என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | 2 | | 1 | | | 9 | |
| | | | | | 8 | 2 | 7 | 1 |
| | | 9 | 2 | | | | 5 | |
| | | | | | 2 | 5 | | 6 |
| | 2 | | | | | | 1 | |
| 6 | | 5 | 7 | | | | | |
| | | | | | 4 | 3 | | |
| 7 | 9 | 8 | 5 | | | | | |
| | 3 | | | 8 | | | | 5 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 8 | 5 | 1 | 6 | 3 | 9 | 2 | 4 |
| 3 | 9 | 1 | 2 | 5 | 4 | 6 | 8 | 7 |
| 4 | 6 | 2 | 9 | 8 | 7 | 3 | 1 | 5 |
| 6 | 4 | 9 | 7 | 2 | 1 | 8 | 5 | 3 |
| 1 | 7 | 8 | 3 | 4 | 5 | 2 | 9 | 6 |
| 5 | 2 | 3 | 8 | 9 | 6 | 7 | 4 | 1 |
| 2 | 3 | 4 | 6 | 1 | 9 | 5 | 7 | 8 |
| 8 | 1 | 7 | 5 | 3 | 2 | 4 | 6 | 9 |
| 9 | 5 | 6 | 4 | 7 | 8 | 1 | 3 | 2 |

நேற்றைய விடை

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சிறிய முயற்சியும் அதிக நன்மை தரும். விலகிச் சென்ற உறவினரும் அன்புடன் நெருங்குவர். தொழில் வியாபாரத்தில் பணவரவு அதிகரிக்கும்.

**இடபம்:** நல்லவர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** வழக்கத்திற்கு மாறான திடீர் பணி குறுக்கிடலாம். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். இலாபம் சீராக இருக்கும்.

**கடகம்:** முக்கிய பணிகளை பிறர் பொறுப்பில் தர வேண்டாம். எதிர்பார்ப்பு ஓரளவு நிறை வேறும். தொழில் வியாபாரம் செழிக்க கூடுதல் உழைப்பு அவசியம். பணவரவு சுமார்.

**சிங்கம்:** பேச்சு, செயலில் நேர்மையைப் பின்பற்றுவீர்கள். பலரும் உங்கள் மீது நல்ல எண்ணம் கொள்வர். தொழில் வியாபாரத்தில் விற்பனை உயர்வால் ஆதாயம் அதிகரிகஅகும்.

**கன்னி:** சிலர் உங்களிடம் கொடுத்த வாக்குறுதியை மீறி நடப்பர். பொறுமை காப்பது நல்லது. தொழில் வியாபாரம் வளர்ச்சிபெற விடாமுயற்சி தேவை. பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர். பயணத்தில் கூடுதல் கவனம் வேண்டும்.

**துலாம்:** கடந்த கால உழைப்பின் பலனைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பெண்களால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்து இருக்கும்.

**விருச்சிகம்:** சுயகவுரவம் நிலைநாட்டுவதில் அக்கறை கொள்வீர்கள். தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். வருமானம் சீராக இருக்கும்.

**தனுசு:** குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பணக்கடனில் ஒருபகுதியை செலுத்துவீர்கள்.

**மகரம்:** பெருந்தன்மையுடன் எதிரியையும் மன்னிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**கும்பம்:** சொந்தப்பணிகளில் மட்டும் கவனம் செலுத்தவும். தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேற்ற தாமதமாகும். இலாபம் சுமாராக இருக்கும்.

**மீனம்:** யாருக்கும் தகுதி மீறி வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும். முக்கிய செலவுக்கு கடன் பெற நேரிடலாம்.

# உடல் சூட்டைத் தணிக்கும் சின்ன வெங்காயம்

அனைத்து வகையான சமையலிலும் முக்கிய இடம் பிடித்துள்ளது வெங்காயம். இதில் எண்ணற்ற மருத்துவ பயன்கள் அடங்கியுள்ளன. நீர்க்கடுப்பால் பாதிக்கப்பட்ட நபர்கள் ஒரு சிறிய வெங்காயத்தைச் சிறு துண்டுகளாக நறுக்கி, அதை ஒரு குவளை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து அந்தத் தண்ணீரைக் குடித்தால் நீர்க்கடுப்பு உடனே நின்றுவிடும்.

இதேபோன்று வெயில் காலத்தில் உடலில் கட்டிகள் தோன்றும். இதற்கு, சிறிய வெங்காயத்தை நசுக்கி, சாறு பிழிந்து



கட்டிகள் உள்ள இடங்களில் தடவி வந்தால் வெகு விரைவில் நிவாரணம் கிடைக்கும்.

உடல் சூட்டால் பாதிக்கப்பட்ட நபர்கள் சிறிய வெங்காயத்தை துண்டுகளாக்கி பசு நெய்யில் வதக்கிச் சாப்பிட்டால் உடல் சூடு தணியும்.

வெங்காயத்துடன் வெல்லத்தைச் சேர்த்து அரைத்து சாப்பிட்டால் பித்தம் குறையும், பித்த ஏப்பம் மறையும்.

வெங்காய சாற்றை மோரில் கலந்து குடித்தால், இருமல் குறையும். வெங்காயச் சாற்றையும், வெந்நீரையும் கலந்து வாய் கொப்பளித்து, வெறும் வெங்காயச்சாறை பஞ்சில் நனைத்து பல் ஈறுகளில் தடவி வந்தால் பல்வலி, ஈறுவலி குறையும்.

வெங்காயச் சாற்றையும், தேனையும் கலந்து அல்லது வெங்காயச் சாற்றையும், குல்கந்தையும் சேர்த்து சாப்பிட்டால், சீதபேதி நிற்கும். வெங்காய ரசத்தை நீர் கலந்து குடிக்க நன்கு தூக்கம் வரும்.

வெங்காயத்தில் குறைந்த கொழுப்புச்சத்து உள்ளது. எனவே குண்டானவர்கள் தாராளமாக வெங்காயம் சாப்பிடலாம்.

வெங்காயம் வயிற்றிலுள்ள சிறுகுடல் பாதையை சுத்தப்படுத்துகிறது. ஜீரணத்துக்கும் உதவுகிறது. வெங்காயம் குருதி அழுத்தத்தை குறைக்கும். இழந்த சக்தியை மீட்கும்.

தொடர்ந்து புகைப்பிடிப்பவர்கள் வெங்காயச் சாற்றை நாள் ஒன்றுக்கு அரை அவுன்ஸ் வீதம் 3 வேளை சாப்பிட்டால் நுரையீரல் சுத்தமாகும்.

தலையில் திட்டுத்திட்டாக முடி உதிர்ந்து, வழுக்கை விழுந்திருந்தால் சிறு வெங்காயத்தை இருதுண்டாக நறுக்கி தேய்த்தால் முடி வளரும்.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 800 | 1000 | 1000 | 1000 |
| நண்டு | 600 | 500 | 600 | 500 |
| கணவாய் | 800 | 800 | 1000 | 1000 |
| பாரை | 600 | 600 | 700 | 900 |
| சுறா | 600 | 900 | 1000 | 1200 |
| சீலா | 500 | 500 | 300 | 400 |
| விளை | 600 | 500 | 600 | 800 |
| முரல் | 400 | 400 | 500 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 400 | — |
| கிளாக்கன் | 800 | 400 | 600 | 600 |
| ஓரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 250 | 500 | 250 |
| சூடை | 150 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 350 | 300 | 300 | 400 |
| திருக்கை | 350 | 300 | 500 | 400 |
| மதனம் | 250 | 300 | 300 | 300 |
| கொய் | 150 | 100 | 100 | 100 |
| பாலை | 200 | 300 | 500 | 300 |
| வாளை | 200 | 300 | 450 | 200 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 120 | 70 | 80 | 70 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 120 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 150 | 100 | 140 | 120 |
| பாகல் | 280 | 200 | 150 | 180 |
| க.கிழங்கு | 100 | 140 | 120 | 120 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 110 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 150 | 160 |
| பூசணி | 40 | 35 | 40 | 40 |
| தக்காளி | 280 | 260 | 160 | 250 |
| வாழைக்காய் | 40 | 90 | 80 | 60 |
| கீரை | 40 | 15 | 15 | 15 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 40 |
| ப.மிளகாய் | 200 | 400 | 450 | 500 |
| புடோல் | 120 | 70 | 80 | 100 |
| கோவா | 140 | 160 | 160 | 180 |
| வெண்டி | 100 | 90 | 80 | 100 |
| போஞ்சி | 300 | 200 | 240 | 180 |
| லீக்ஸ் | 240 | 200 | 200 | 180 |
| தேங்காய் | 70 | 50 | 70 | 70 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 80 | 80 | 40 | 80 |
| வல்லாரை | 20 | 50 | 15 | 20 |
| கறிமிளகாய் | 280 | 240 | 350 | 300 |
| கரட் | 280 | 260 | 260 | 200 |
| முருங்கைக்காய் | 300 | 280 | 200 | 250 |

# சிறுநீரகங்களைப்பற்றி ஒவ்வொருவரும் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டிய தகவல்கள்

தற்போது நீண்ட நேரம் ஒரே இடத்தில் அமர்ந்து வேலை செய்வதால், பலரும் சிறுநீரக நோய்களுக்கு உள்ளாகின்றனர்.

உடல் உறுப்புக்களில் மிகவும் முக்கியமான ஒன்று தான் சிறுநீரகம்.

இந்தச் சிறுநீரகம் உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் பல பணிகளைச் செய்கிறது.

அதில் பலரும் அறிந்தது, சிறுநீரகம் குருதியில் உள்ள கழிவுகளைப் பிரித்து குருதியைச் சுத்தம் செய்யும் என்பது மட்டும் தான்.

ஆனால் சிறுநீரகம் வேறுசில பலரும் அறிந்திராத பணிகளையும் செய்து வருகிறது. ஒருவருக்கு சிறுநீரகத்தில் பிரச்சினை ஏற்படுவதற்கு குருதி அழுத்தமும், நீரிழிவும் முக்கிய காரணமாக உள்ளது.

இந்த இரு பிரச்சினைகளும் கொண்டவர்களுக்கு சிறுநீரக நோய்கள் எளிதில் தாக்கக்கூடும். சரி, இப்போது சிறுநீரகங்களைப் பற்றி ஒவ்வொருவரும் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டிய தகவல்கள் பற்றிப் பார்க்கலாம்.


சிறுநீரகங்கள் உடலின் திரவ அளவை நெறிப்படுத்த உதவும். டாக்ஸின்களை வெளியேற்றும் சிறுநீரகங்கள் குருதியில் உள்ள கழிவுகள் மற்றும் டாக்ஸின்களை பிரித்தெடுத்து, குருதியைச் சுத்தப்படுத்தும். குருதி அழுத்தத்தை சீராக்கும் சிறுநீரகங்கள் ரெனின் என்னும் ஹார்மோனை வெளிப்படுத்தி, உடலின் குருதி அழுத்தத்தை சீராக்க உதவும்.

எலும்புகள் ஆரோக்கியமாக இருப்பதற்கு சிறுநீரகங்கள் தான் முக்கிய பங்கை வகிக்கின்றன. சிறுநீரங்கள் தான் விற்றமின் டியை செயல்படுத்தி, எலும்புகளில் கால்சியம் சத்தைப் பராமரித்து, எலும்புகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கிறது.

குருதி சிவப்பணுக்கள் சிறுநீரகங்கள் எரித்ரோபொயட்டின் என்னும் ஹார்மோனைத் தூண்டி எலும்புமஞ்சையில் குருதியில் சிவப்பணுக்களை உருவாக்குகிறது. குருதியில் உள்ள கனிமச்சத்துக்களான சோடியம், பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியத்தின் அளவை சீராக பராமரிக்கும்.

ஒவ்வொரு 30 நிமிடத்திற்கு ஒருமுறையும், உடலின் ஒட்டு மொத்த குருதியையும் வடிகட்டி, கழிவுகள் மற்றும் டாக்ஸின்களை வெளியேற்றும்.

ஒரு சிறுநீரகம் போதும் மனிதன் உயிர் வாழ்வதற்கு 2 சிறுநீரகங்கள் இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. ஒரேயொரு சிறுநீரகம் இருந்தால் போதும். சிறுநீரகங்கள் ஒவ்வொன்றும் 4.5 இன்ச் நீளமும், 5 அவுன்ஸ் எடையும் கொண்டிருக்கும். 50 கலன் குருதியை சுத்தமாகும் ஒவ்வொரு நாளும் சிறுநீரகமானது 50 கலன் குருதியை 140 மைல் குழாயின் மூலம் வடிகட்டுகிறது.





## இது புதுசு

பெண்களுக்கான காதணி வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# சொந்த மண்

(28ஆம் பக்கத் தொடர்ச்சி)

"கந்தா, முருகா!"

தாகம்-பசி-களைப்பு என்பவற்றுக்கு மேலாக குடும்பத் தலை வரைக் காணாத சோர்வின் உக்கிரம் இருவரையும் உலுப்பியது.

நேரம் கரைந்து இரவும் வந்தது. பூமணி வெளியே சென்றாள். திரும்பியபோது சில திண்பண்டங்களும் பிளாஸ்ரிக் போத்தல் ஒன்றில் நீரும் கொண்டு வந்தாள். மீனாட்சி தண்ணீர் மட்டும் குடித்தாள். பக்கத்திலிருந்த சிறுமி ஒருத்தியுடன் பூமணி பலகாரங்களைப் பகிர்ந்து உண்டாள்.

நான்கு நாள் இரவும் பகலும் வருவோரும் தங்குவோரும் வெளியேறுவோரும் "அடுத்தது என்ன" என்றபிரச்சினைக்குத் தீர்வு காண இயலாத மக்களின் அவலங்களுக்குச் சான்று ஆயினர்.

முருகேசரோ, அவரின் சுவடோ காணப்படவில்லை. காலை நேரங்களில் கஞ்சி. பிற்பகல் சிறிய சோற்றுப் பொட்டலம் எவரோ புண்ணியாத்மா அரிசியும் பருப்பும் தர அங்கு ஒதுங்கியிருந்த பெண்கள் சமைத்துப் பகிர்ந்து வழங்கினார்கள்.

ஐந்தாம் நாள் காலை முருகேசர் அங்கு வந்தார். நாலுமுழம் மட்டும். நலமுண்டைக் காணவில்லை. அவரது திருநீற்றுப் பட்டுப்பை அரையில் தொங்கிக் கொண்டிருந்தது. நாலு புறமும் நோட்டம் விட்டார். பூமணி கண்டுவிட்டாள். "அப்பா" என்ற கதறலுடன் அவரிடம் ஓடினாள். அவளை அணைத்தபடி அவர் மீனாட்சியின் அருகில் வந்து ஒதுங்கி அமர்ந்தார். "போன உயிர் மீண்ட" உணர்வில் மீனாட்சி மிதந்தாள். யுவதிகள் சிலர் உணவுப் பண்டங்களை அங்கும் இங்கும் திரிந்து கொடுத்தார்கள். குறிப்பிட்ட சிலருக்கு அவர்கள் அருகில் சென்று மருந்து வில்லைகளும் தந்தார்கள். அவர்கள் அணிந்திருந்த காற்சட்டை ஷேட்டும் அவர்களின் சுறுசுறுப்பும் முருகேசர் கவனத்தை ஈர்த்தன. யுவதிகள் காட்டிய ஆதரவும், அரவணைப்பும் தனக்கும் கிடைத்தாற்போல முருகேசர் ஆயாசந் தீர்த்தார்.

"அப்பா, அம்மாவைக் கவனமாய்ப் பார்த்துக் கொள்ளுங்கோ" என்ற பூமணி முருகேசரின் மடியில் அவரது துணிப்பையை வைத்தாள். அதனுள் அவள் எடுத்துச் செலவிட்ட தொகை போக மிகுதிப் பணம் இருந்தது.

"ஒருக்காப் போட்டுவாறான்" பெற்றோரை இரண்டு மூன்று தடவைகள் திரும்பிப் பார்த்தவள் சிரித்துக்கொண்டே நடை வேகத்தை அதிகரித்தாள்.

உள்ளம் பூர்த்தவளாய் மீனாட்சி எழுந்தாள். "நான் ஒருக்கா முகங் கழுவிப்போட்டு வாறன். இருந்து கொள்ளுங்கோ"

பத்து நிமிஷங் கழித்துத் திரும்பிப் வந்தாள். முகத்தைக் துடைத்துக் கொண்டே, "உங்கடை விபூதியிலை கொஞ்சம் தாருங்கோ" என்றாள்.

"என்னட்டை விபூதி இல்லை மீனாட்சி"

"உங்கை பை வைச்சிருக்கிறியள். கொஞ்சம் எண்டாலும் கிடக்குந் தானே!"

முருகேசர் சிரித்தார். வழமைக்கு மாறாகக் கதைக்கத் தொடங்கினார்.

"இரு பக்கத்திலை இரு. இதுக்குள்ள என்ன இருக்கெண்டு பார்"

பையை எடுத்துச் சுருக்கைத் தளர்த்திக் காட்டினார். உள்ளே விபூதி இல்லைத்தான். செந்நிறத்தில் ஏதோ இருந்தது.

"என்னப்பா இது?"

"பொறு சொல்லிறன். இந்தப் பயணத்திலை நான் தற்செயலாகக் கண்ணை மூடிட்டா. எனக்குப் போடிற வாய்க்கரிசி இதுதான். இது எங்க வீட்டுத் தோட்டத்து மண். செம்மண். சொந்த மண்"

மீனாட்சி விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

"அழாதை மீனாட்சி. மனிசன் காரியம் நிச்சயமில்லை. எதுக்கும் தயாராயிருக்க வேணுமல்லே!"

மீனாட்சியின் அழுகை மேலும் வலுத்தது. அழுகையும் விம்மலும் ஓய நீண்ட நேரம் எடுத்தது. பின்னர் மீனாட்சியும் சிரித்தாள்.

"நான் முந்திட்டா, உதிலை அரைவாசி எனக்கு!" என்றாள். முருகேசரின் முகத்தில் புன்னகை ஒன்று தோன்ற முயன்று "வேண்டாம்" என மறைந்துவிட்டது.

இந்தச் சிறிய சம்பாஷணையின் எதிர்விளைவு அத்தம்பதியினர் மேல் மௌனமாய்க் கவிந்தது. மதியங் கடந்துவிட்டது. யுவதிகள் இருவர் வந்து மீனாட்சியைப் பார்த்துவிட்டு மூன்று உணவுப் பொட்டலங்களைத் தந்து சென்றார்கள்.

'ஓ' பூமணியை இன்னும் காணவில்லை. அவள் போய் எவ்வளவு நேரம்? ஐந்து மணித்தியாலங்களுக்கு மேல்!" மீனாட்சியைக் கலக்கம் பிடித்துக் கொண்டது. உணவுப் பொட்டலங்கள் பிரிக்கப்படாமலே கிடந்தன.

முருகேசர் நிஷ்டையில் இருப்பவர்போல் மௌனித்திருந்தார். மீனாட்சி இடைக்கிடை எழுந்து போய் வீதியின் இருபுறமும் பார்த்து ஏமாற்றமே உருவாகத் திரும்பி வந்தாள்.

மாலைப்பொழுது மீனாட்சி பொறுமையின் எல்லையில் நின்றாள். "ஒருக்காப் போய்த் தேடிப் பாருங்கோவன்!" முருகேசர் சிரித்தார்.


"அவள் எங்கடை மகள். அவள் பிழை செய்வாளே? எங்கை போனாள். ஏன் திரும்பி வரவில்லை எண்டுகூடயோசிக்காதை"

தன் மடியில் செருகியிருந்த அந்தப் பையை எடுத்து மீனாட்சியிடம் கொடுத்தார்.

"கவனமா வைச்சிரு"

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 531



அனுப்புபவர் பெயர்:..............................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..............................................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. பத்துப் பாடல் திரட்டு
4. அழகும் பயனும் தரும் ஒரு மரம்
7. களவு செய்யும் மங்கை
8. மணம்
9. நாவலர் காலத்திலும் இது இருந்தது
10. விரலில் உள்ளது
11. வாய்ச் சுகாதாரத்தில் பெரும் பங்கு வகிப்பது
13. ஒருமையிலுள்ள பெயர்ச் சொற்களை பன்மையாக்கும் இடைச் சொல்
14. விவாதம்
15. முன்னுதாரணமாக இருப்பவர்
16. ஆணுமல்ல, பெண்ணும் அல்ல
17. உணவின் கழிவு
18. அந்தி மாலைப் பொழுது
19. உணர்வுகளைக் கடத்துவது
20. சடப்பொருளின் வடிவங்களுள் ஒன்று

### மேலிருந்து கீழ்

1. வாழ்விடம்
2. இலக்குமி
3. மடல்
4. மாணவர் கவனம் இதில் வேண்டும்
5. புறநானூற்றுப் பெண்ணுக்கு இதுவும் ஆயுதமே
6. ஒரு சத்தம்
8. பத்து நான்கு
10. உள்ளூராட்சி அமைப்பு ஒன்று
12. கன்னங்கரேல் என இருக்கும்
14. இராமன் இவனைக் கொன்றான்
15. பிறந்த சந்ததி
16. (பிரதம)விருந்தினன்
17. தரு

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 529 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) தேசாதிபதி (5)அக (7)சம (8)திருமகள் (10)வரைபு (12)மதில் (13)வசதி (15)தக (17)மைதானம் (19)நல்ல (20)பம்பரம் (22)சாக (23)வதி (24)சக (25)துன்பம் (26) சதாம்

**மேலிருந்து கீழ்**

(1) தேசவழமை (2)சாமரை (3)பதி (4)திருமதி (5)அகல்தல் (6) கள் (9)மதி (11)புவனம் (14)சம்பவம் (16)கலக்கம் (18)தாபகன் (19)நம் (21)ரதி (22)சாது (24)சதா

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.531**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (25.07.2018 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 529 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
திருமதி ஜெ.பத்மா,
இல.305 A, இருபாலை வீதி,
கோண்டாவில்

**2 ஆம் பரிசு**
பொ.சிவசுப்பிரமணியம்,
ஓய்வுநிலை அஞ்சலதிபர்,
கரணவாய், கரவெட்டி

**3 ஆம் பரிசு**
திருமதி கு.சிவனுஜா,
இல. 60, 'சிவநிதி' சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

**4 ஆம் பரிசு**
எஸ்.வசிகரன்,
இல.3 அன்னை திரேசா வீதி,
இறம்பைக்குளம், வவுனியா.

**5 ஆம் பரிசு**
வேலு முருகமூர்த்தி,
திருக்கேதீஸ்வரம் கோயில்,
மன்னார்.

**பாராட்டுப் பெறுவோர்**

என்.செல்வராணி,
இல.21 6/2 பெட்ரிகா வீதி,
கொழும்பு - 6

செ.பாலேந்திரன்,
இல.459, பிரதான வீதி,
புலோலி வடக்கு, பருத்தித்துறை.

அ.அகிலரசன்,
இல.16/1 மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம் போட்டி இல.531 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 29.07.2018 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 529 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**



# இந்த வாரம்

**15.07.2018 முதல் 21.07.2018 வரை**

*உங்களுக்கு எப்படி?*

## மேடம்

சூரியன், புதன், குரு, சுக்கிரனால் அதிக நன்மை ஏற்படும். நண்பர் மற்றும் உறவினர் உதவுவர். மனதில் தைரியம் வளரும். திட்டமிட்ட பணி சிறப்பாக நிறைவேறும். வாழ்வியல் நடைமுறை திருப்திகரமாகும். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வாகனப்பயணம் அளவுடன் இருக்கட்டும். பிள்ளைகள் விரும்பி கேட்ட பொருள் வாங்கித்தருவீர்கள். உடல் ஆரோக்கியம் பலம்பெறும். மனைவி உங்கள் கருத்துக்கு முக்கியத்துவம் தருவார். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து லாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகை எளிதாக கிடைக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

## இடபம்

ராகு, சுக்கிரன், சந்திரன் அளப்பரிய நற்பலன் தருவர். உங்கள் பேச்சில் வசீகரம் இருக்கும். சிறு பணியிலும் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். உறவினர்களிடம் கூடுதல் அன்பு வளரும். வாகன பயன்பாடு அதிகரிக்கும். பிள்ளைகளின் செயல்பாடு சிறக்க முன்நின்று உதவுவீர்கள். நண்பர்க்கு கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். மனைவியின் அன்பு மனதில் நெகிழ்ச்சியை தரும். தொழில், வியாபாரம் செழித்து வளர புதிய உத்திகளை பயன்படுத்துவீர்கள். குடும்ப தேவைகளை தாராள பணச்செலவில் நிறைவேறும். பணியாளர்கள் விரும்பிய பணியிட மாற்றம் பெறலாம். பெண்கள் உறவினர் குடும்பத்தில் மங்கள நிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து நண்பருக்கும் உதவுவர்.

## மிதுனம்

சுக்கிரன், குரு, சந்திரன் அனுகூல பலன் தருவர். புதிய திட்டங்களை தீட்டி செயல்படுத்துவீர்கள். அன்புக்கு உரியவரின் உதவி ஊக்கம் தரும். பணவரவு அதிகரிக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகள் பெற்றோரின் வழிகாட்டுதலை ஏற்று செயல்படுவர். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், பணவரவும் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். மனைவி குடும்பத்தின் ஒற்றுமையை பாதுகாத்திடுவார். புதிய வாடிக்கையாளர்களின் ஆதரவில் தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணியாளர்கள் அதிக வேலை வாய்ப்பை ஏற்றுக்கொள்வர். பெண்கள் மனம் விரும்பிய நகை, புத்தாடை வாங்குவர்.

## கடகம்

சுக்கிரன், சனீஸ்வரர், சந்திரனால் நன்மை கிடைக்கும். செயல்களில் உற்சாகம் வெளிப்படும். உங்களின் நற்செயலை பலரும் பாராட்டி மகிழ்வர். குடும்பத்தில் ஒற்றுமை வளரும். பிள்ளைகள் செயலில் உருவர்கும் குளறுபடியை இதமாக சரி செய்யுங்கள். விவகாரங்களில் சுமுக தீர்வு கிடைக்கும். வெளியூர் பயணங்களில் திடீர் மாற்றம் ஏற்படலாம். நோய் தொந்தரவு குறைந்து உடல் ஆரோக்கியம் பெறும். மனைவி வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்பட சில மாற்றம் தேவைப்படும். பணியாளர் குடும்ப செலவுக்காக கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்றுக் கொள்வர். பெண்கள் பிறருக்காக பணப் பொறுப்பு ஏற்க வேண்டாம்.

## சிங்கம்

சுக்கிரன், செவ்வாய், கேது, சூரியனால் தாராள நற்பலன் கிடைக்கும். மனதில் உற்சாகம் பிறக்கும். முக்கியமான பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தாய் வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். பிள்ளைகள் பெற்றோரின் சொல்லை ஏற்பதில் தயக்கம் கொள்வர். பூர்வ சொத்தில் அளவான பணவரவு கிடைக்கும். குடும்பத்துடன் சுற்றுலா சென்று வர திட்டமிடுவீர்கள். பலரும் வியக்கும் அளவில் வாழ்க்கைத்தரம் உயரும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். கொடுப்பீர்கள் தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் வழிகாட்டுதல்படி பணிபுரிவர்.

## கன்னி

பெரும்பான்மையான கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். இடம் சூழல் உணர்ந்து பேசுவீர்கள். செயல்களில் அளப்பரிய நன்மை கிடைக்கும். குடும்பத்தேவை பெருமளவில் பூர்த்தியாகும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகளின் படிப்பு மற்றும் அறிவாற்றல் மேம்படும். வருமானம் திருப்திகரமாகும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி அதிக அன்புடன் நடந்து கொள்வார். வெளியூர் பயணம் மூலம் இனிய அனுபவம் கிடைக்கும். அரசு சார்ந்த உதவி கிடைக்கும். தொழிலில் பணவரவு செழித்து அபிவிருத்திபணி செய்வீர்கள். பணியாளர்களுக்கு விரும்பிய சலுகை கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவர்.

## துலாம்

புதன், சுக்கிரன், சனீஸ்வரர், சந்திரன் வியத்தகு நற்பலன் தருவர். உங்கள் செயல்களில் மனிதாபிமானம் நிறைந்தி ருக்கும். விலகிச் சென்றவரும் விரும்பி அன்பு பாராட்டுவர். தாயின் அன்பும், ஆசியும் ஊக்கம் தரும். பூர்வ சொத்தில் ஓரளவு வருமானம் கிடைக்கும். பிள்ளைகளின் மனதில் தெளிவும், அறிவுக்கூர்மையும் ஏற்படும். பணக்கடன் செலுத்துவீர்கள். மனைவியின் கருத்தில் உள்ள நியாயங்களை உணர்ந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி வளர்ச்சி உருவாகும். பணியாளர்களுக்கு அதிர்ஷ்டவசமாக சலுகை கிடைக்கும். பெண்கள் உறவினர் குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த உதவுவர்.

## தனுசு

புதன், சுக்கிரன், குரு தாராள நற்பலன் தருவர். உங்கள் நல்ல குணத்தை நண்பர் பாராட்டுவார். பேச்சு, செயலில் நிதானம் நிறைந்திருக்கும். குடும்பத்தேவை தாராள பணச்செலவில் நிறைவேறும். பிள்ளைகளின் அறிவாற்றல் செயல்திறன் மேம்பட உதவுவீர்கள். நோய் தொந்தரவு குறைந்து உடல் ஆரோக்கியத்துடன் இருக்கும். மனைவி உறவினர்களை உபசரித்து குடும்பத்திற்கு பெருமை சேர்ப்பார். தொழிலில் அபரிமிதமான வளர்ச்சியும், பணவரவும் உண்டு. பணியாளர்கள் பணம் சேமிக்க அனுகூலமுண்டு. பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் பயில்வர்.

## விருச்சிகம்

செவ்வாய், கேது, சந்திரன் நற்பலன் வழங்குவர். செயல்களில் மனப்பூர்வமாக ஈடுபடுவீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சமூக நிகழ்வு இனிய படிப்பினையை தரும். வாகனத்தின் பயன்பாடு அதிகரிக்கும். பிள்ளைகள் விரும்பிய பொருள் கேட்டு பிடிவாதம் செய்வர். வழக்கு, விவகாரங்களில் சமரச தீர்வு கிடைக்கும். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். குடும்பநலன் மேம்பட மனைவி உதவிகரமாக இருப்பார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்காக சில மாற்றம் செய்ய வேண்டும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் பின்பற்றுவர். பெண்கள் பிரார்த்தனை நிறைவேறி தெய்வ வழிபாடு நடத்துவர்.

## மகரம்

சூரியன், சுக்கிரன், சந்திரனால் நன்மை ஏற்படும். சமூக நிகழ்வு இனிய அனுபவம் தரும். கடந்த கால நற்செயல்களுக்கான பலன் கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகள் பெற்றோரின் சொல்லை ஏற்று செயல்படுவர். இஷ்டதெய்வ அருள்பலம் துணைநிற்கும். குடும்பத்தில் ஒற்றுமை நிறைந்திருக்கும். உடல் ஆரோக்கியத்தில் தகுந்த கவனம் வேண்டும். மனைவியின் அன்பான செயல்பாடு நிம்மதி அளிக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பை தவறாமல் பயன்படுத்துவீர்கள். பணியாளர்கள் பணியிடச்சூழல் உணர்ந்து பணிபுரிவர். பெண்கள் பணம் சேமிப்பதில் ஆர்வம் கொள்வர். மாணவர்கள் படிப்பு தவிர பிற விவாதம் பேச வேண்டாம்.

## மீனம்

செவ்வாய், கேது, சந்திரன் ஆதாய பலன்களை தருவர். தந்தை வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். திட்டமிட்ட பணிகள் ஓரளவு நிறைவேறும். வாகன பயன்பாட்டால் நன்மை உண்டாகும். பிள்ளைகளின் படிப்பு, வேலைவாய்ப்பில் தாமதம் ஏற்படலாம். உடல் ஆரோக்கியத்தை பேணிக் காத்திட வேண்டும். மனைவியின் சொல்லும், செயலும் குளறுபடியாகலாம். குடும்பத்தில் ஒற்றுமையை பாதுகாக்கவும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். பணியாளர்களுக்கு விரும்பிய சலுகை கிடைக்கும். பெண்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்கள் படிப்பில் முன்னேற கூடுதல் கவனம் செலுத்துவர்.

## கும்பம்

ராகு, புதன், குரு சனீஸ்வரரால் வியத்தகு நற்பலன் வழங்குவர். எதிர்பார்த்த சில நன்மை முழு அளவில் கிடைக்கும். உடன்பிறந்தவரின் செயலை குறை சொல்ல வேண்டாம். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகள் உங்கள் வார்த்தையை மதித்து செயல்படுவர். கூடுதல் சொத்து வாங்க அனுகூலம் ஏற்படும். எதிரியால் இருந்த தொல்லை பெருமளவில் குறையும். மனைவி குடும்பநலன் பேணிக் காத்திடுவார். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் கூடுதல் கால அவகாசத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர். வெளியூர் பயணம் புதியவர்களை நண்பராக பெற்றுத் தரும். மாணவர்கள் படிப்பில் கூடுதல் பயிற்சி பெறுவர்.

# தாய்லாந்து குகை:





## சிறுவர்கள் சிக்கியது முதல் மீட்டது வரை

தாய்லாந்தில் சுமார் 10கிலோ மீற்றர்கள் நீளமுள்ள, சிக்கலான குகை அமைப்பு ஒன்றுக்குச் சாகசப் பயணம் மேற்கொண்ட 12பேர் கொண்ட சிறுவர் கால்பந்து அணியும் அவர்களது பயிற்சியாளரும், திடீர் மழை வெள்ளத்தால் சுமார் 1கிலோ மீற்றர் ஆழத்தில் சிக்கிக் கொண்டனர்.

9 நாள்களின் பின்பான போராட்டத்துக்குப் பிறகு அவர்கள் இருக்கும் இடம் தெரிய வந்தது. பிறகு, மிகத் துல்லியமாகத் திட்டமிடப்பட்ட, மிக ஆபத்தான மீட்பு நடவடிக்கை மூலம் அவர்கள் அனைவரும் கடந்த செவ்வாய்க்கிழமை குகையிலிருந்து மீட்கப்பட்டனர்.

இந்த மீட்புப் பணியைச் சிறுவர்களின் நலம் குறித்த பதற்றத்தோடும், மீட்புப் பணியின் சாகசத் தன்மை குறித்த ஆச்சரியத்தோடு உலகம் உற்று நோக்கி வந்தது. 'காட்டுப் பன்றிகள்' என்று பெயரிடப்பட்ட இந்தச் சிறுவர் கால்பந்து அணி குகையில் தொலைந்துபோனது முதல், மீட்கப்பட்டது வரையிலான 17நாள்கள் நடந்த போராட்டத்தின் முக்கிய நிகழ்வுகளே இவை.



### எப்படிக் காணாமல் போனார்கள்?

தாய்லாந்தில் சுமார் 10 கிலோ மீற்றர்கள் நீளமுள்ள ஆழமான தாம் லுவாங் மலைக்குகைக்கு கடந்த ஜூன் 23ஆம் திகதியன்று சாகசப் பயணம் மேற்கொண்ட 12 சிறுவர்களைக் கொண்ட கால்பந்து அணியும் அவர்களது பயிற்சியாளரும் குகையில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கால் உள்ளேயே சிக்கிக் கொண்டனர். குகைக்கு வெளியே அவர்கள் நிறுத்தியிருந்த சைக்கிள்கள் கேட்பாரற்றுக் கிடந்ததைப் பார்த்து யாரோ குகைக்குள் சிக்கிக் கொண்டதை அறிந்துகொண்ட அதிகாரிகள், அரசை உஷார்ப் படுத்தியதை அடுத்து அவர்களைத் தேடும் பணி அன்றிரவே தொடங்கியது.

### எப்படித்தான் மீட்பார்கள்....?

அவர்கள் உள்ளே சென்றிருந்த நிலையில், திடீரெனப் பெய்த பெருமழையும், அதையடுத்து குகைக்குள் பாய்ந்த வெள்ளமும் குகையின் வெளியேறும் வாயில்களை அடைத்துக் கொண்டதால், இந்த 13பேர் அணி, ஒதுங்குவதற்குச் சற்று மேடான இடத்தைத் தேடி குகைக்குள் பின்னோக்கிச் சென்றதாகத் தெரிகிறது. ஆனால், வெள்ளம் சூழ்ந்த, ஆழமான, சிக்கலான பாதைகளை உடைய அந்தக் குகையில் சிக்கிக் கொண்ட அவர்களைக் கண்டுபிடிப்பது சவாலாக இருந்தது.

இந்த விவகாரம் பன்னாடுகளின் கவனத்தைப் பெற்றது. பிரிட்டிஷ் குகை மீட்பு வல்லுநர்கள் உள்பட, உலகின் பல நாடுகளைச் சேர்ந்த முக்குளிப்பு வீரர்களும், குகை மீட்பு வீரர்களும் தாய்லாந்தில் குவிந்தனர்.

9 நாள் போராட்டத்துக்குப் பிறகு, ஜூலை 2ஆம் திகதி பிரிட்டிஷ் குகை மீட்பு வீரர்கள் சிறுவர்களையும், அவர்களின் பயிற்சியாளரையும் குகை வாயிலில் இருந்து 4 கிலோ மீற்றர்கள் தூரத்தில் ஒரு பாறை இடுக்கில் உயிருடன் கண்டுபிடித்தனர்.

இந்தக் குகை அமைப்பு ஒரு மலையின் அடிப்புறத்தில் அமைந்துள்ளது. மலையின் உச்சியில் இருந்து சிறுவர்கள் சிக்கியுள்ள இடம் சுமார் 1கிலோ மீற்றர் ஆழத்தில் இருந்தது. சிறுவர்களோடு பிரிட்டிஷ் குகை மீட்பு வீரர்கள் நிகழ்த்திய உரையாடல் அடங்கிய காணொளி பதிவு ஒன்றும் வெளியானது, எல்லோருக்கும் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் தந்தது. எனினும், குகையில் வெள்ளம் சூழ்ந்திருப்பதால் ஒன்று சிறுவர்கள் முக்குளிக்கக் கற்றுக் கொண்டு வெள்ளம் சூழ்ந்த வரை (சுமார் 4மாதம்) குகையிலேயே காத்திருக்கவேண்டும் என்று தாய்லாந்து அரசு அறிவித்தது. அப்போதுதான் மீட்புப் பணி அவ்வளவு எளிதாக இருக்கப்போவதில்லை என்பதை உலகம் உணர்ந்தது.

ஒருபுறம் குகையில் இருந்த தண்ணீரை மோட்டார் வைத்து இறைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. மறுபுறம் குகையின் ஆழத்தில் சிக்கிக் கொண்ட சிறுவர்கள் மற்றும் பயிற்சியாளருக்கு உணவு, மருந்து, ஒட்சிசன் வாயு அடங்கிய சிலிண்டர் ஆகியவற்றைக் கொண்டு சேர்க்கும் பணியைத் தேர்ச்சி பெற்ற முக்குளிக்கும் வீரர்கள் மேற்கொண்டனர்.

நான்கு மாதங்களுக்கும் இப்படியே உணவும் மருந்தும் வழங்கி அவர்களைக் காத்திருக்கச் செய்யலாம் என்று முதலில் கருதப்பட்டது. ஆனால், ஒவ்வொரு முறை ஒரு முக்குளிக்கும் வீரர் குகைக்குள் சென்று திரும்புவது மிகக் கடினமான, ஆபத்தான, பல மணி நேரம் பிடிக்கும் பயணமாக இருந்தது.


தாய்லாந்து கடற்படையின் தேர்ச்சி பெற்ற முக்குளிக்கும் வீரரான 'சமன் குனன்' என்பவர் குகையில் சிக்கிய சிறுவர்களுக்கு ஒட்சிசன் உருளையைக் கொடுத்து விட்டுத் திரும்பி வரும் வழியில் அவருக்கு ஒட்சிசன் முடிந்துபோனதால் ஜூலை 6ஆம் திகதி உயிரிழந்தார்.

### மீட்புத் திட்டம்

இது மீட்புக் குழுவை அதிர்ச்சி அடைய வைத்ததோடு, இது எவ்வளவு ஆபத்தான பணி என்பதையும் காட்டியது. அத்துடன், முன்னரே திட்டமிட்டபடி சில மாதங்கள் காத்திருப்பதில் ஒரு சிக்கலும் ஏற்பட்டது. தாய்லாந்தில் சில நாள்களில் கடும் மழை எதிர்பார்க்கப்பட்டதால், இந்தக் குகை மேலும் வெள்ளமயமாகும் அபாயம் என்று மீட்புக் குழு அஞ்சியது. இதனால், ஆபத்தான வழி என்றாலும், சிறுவர்களைப் போதிய பாதுகாப்பு உடையோடு முக்குளிக்க வைத்து, மீட்பது என்று முடிவெடுத்தனர்.

குகையின் உள் பகுதி சில இடங்களில் 33அடிகள் வரை உயரமாக இருந்தாலும், சில இடங்கள் மிகவும் குறுகலானவை. ஒரு இடம் வெறும் 40 சென்ரி மீற்றர்கள் அகலம் மட்டுமே உடையது. மீட்புப் பணியாளர்கள் தங்கள் காற்று உருளையையோடு அந்த இடங்களை நீந்திக் கடப்பது கடினம். எனவே, அவர்கள் தங்கள் உருளையைக் கழற்றி எடுத்துக் கொண்டுதான் அந்த இடங்களைக் கடக்க முடியும்.

இந்த நிலையில் ஒவ்வொரு சிறுவரோடும் இரண்டு முக்குளிக்கும் வீரர்கள் உடன் வரும்வகையில் மீட்புத் திட்டமிடப்பட்டது. மீட்பு வீரர்களுக்கு வழிகாட்டுவதற்காக ஏற்கெனவே மீட்புப் பாதை நீளமும் ஒரு கயிறு போடப்பட்டுள்ளது. அதன் வழியாக இரண்டு மீட்பு வீரர்களும் ஒரு சிறுவரும் நீந்திக் கடக்கும் வகையில் திட்டமிடப்பட்டது.







### முழு முகத்தையும் மூடும் கவசம்

சிறுவனுக்குரிய ஒட்சிசன் குடுவையை ஒரு மீட்பு வீரர் சுமந்து வரும் வகையிலும், ஒரு வீரரோடு, மீட்கப்படும் ஒரு சிறுவன் கயிற்றால் இணைக்கப்பட்டிருக்கும் வகையிலும் மீட்புப் பணி திட்டமிடப்பட்டது. மீட்கப்படும் சிறுவர்களின் முழு முகத்தையும் மூடும் வகையில் மூச்சுக் கவசம் பொருத்தப்படும். இது போதிய பயிற்சி இல்லாத சிறுவர்கள் முக்குளித்து நீந்த உதவியாக இருக்கும்.

ஆனால் மீட்புப் பாதை என்பது வெறும் நீந்தும் வகையில் மட்டும் இல்லை. நடப்பது, பாறை ஏறுவது, சேற்றில் நடப்பது போன்றவற்றையும் அவர்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும். சேம்பர் 'சி' என்ற இடத்தை அடைந்த பிறகு அவர்கள் ஓய்வெடுத்துவிட்டு நடந்தே வந்துவிடலாம். அந்த இடத்தில்தான் மீட்புப் பணியாளர்கள் முகாம் அமைத்திருந்தனர். குகைக்குள் சிறுவர்கள் சிக்கியுள்ள இடத்தில் காற்றில் ஒட்சிசன் விகிதம் குறைந்திருப்பது அச்சுறுத்துவதாக இருந்தது. சாதாரணமாக

குகையின் உள் பகுதி சில இடங்களில் 33அடிகள் வரை உயரமாக இருந்தாலும், சில இடங்கள் மிகவும் குறுகலானவை. ஒரு இடம் வெறும் 40 சென்ரி மீற்றர்கள் அகலம் மட்டுமே உடையது. மீட்புப் பணியாளர்கள் தங்கள் காற்று உருளையையோடு அந்த இடங்களை நீந்திக் கடப்பது கடினம். எனவே, அவர்கள் தங்கள் உருளையைக் கழற்றி எடுத்துக் கொண்டுதான் அந்த இடங்களைக் கடக்க முடியும்.



46

# கலைத்துறையில் பரதம்

## இந்தவாரக் கருத்தாளர்

**அருள்மோகன் முருகையா**

முன்னாள் விரிவுரையாளர் (யாழ்ப்பாணப் பல்கலைக் கழக, இராமநாதன் நுண்கலைக் கல்லூரி) பிரான்ஸ் ஆடற் கலையக இயக்குநர்.



மிக நுணுக்கமான வகையில் உடலின் எல்லா உறுப்புகளும் அசையக் கூடியவகையான தன்மையைப் பரதம் என்று கூறப்படும் ஆடற்கலை உள்ளடக்கியிருக்கிறது. ஏனைய நடன நிகழ்வுகளில் கண்கள் அசைவதைப் பார்க்க முடியாது. ஒவ்வொரு முத்திரைகளைப் பிடிக்கும் போதும் விரல்களும் மடிப்புகள் பெற்று அசைகின்றன. அதன் பின்னர் மணிக்கட்டு அசைகின்றது. முழங்கை, தோள், கால் என உடலின் அனைத்து உறுப்புகளும் அசையவேண்டிய தேவை இதில் இருக்கிறது. யோகசனத்தால் கிடைக்கின்ற நன்மைகள் அனைத்தும் பரதக்கலையிலும் கிடைப்பதை பார்க்க முடியும். அதன் நிலைகள் எவ்வாறு அமைந்திருக்கிறதோ அதற்குச் சமாந்திரமான முறையில் நடனக்கலையிலும் அடைவுகள், முத்திரைகள் என்பன அமைவதைக் காணமுடியும்.

பரதம் பயில்வதால் மன அமைதி கிடைக்கின்றது. பரதக்கலையிலே ஒரு தியான நிலை இருக்கிறது. அது மன ஒருமைப்பாட்டை ஏற்படுத்துகிறது. ஆற்றுப்படுத்துகிறது. மேலைத்தேய நடனங்களாகவோ அல்லது ஏனைய நடன வகைகளாகவோ இருந்தால் பார்ப்பதற்கும், இரசிப்பதற்கும் ஏற்ற வகையினதாகவே அவற்றை அமைத்திருப்பார்கள். ஆனால் பரதக்கலையில் மாத்திரமே ஒரு தெய்வீகத் தன்மை உருவாவதைக் காணமுடியும்.

ஆரம்ப காலங்களிலே ஆலயங்களோடு இணைந்த வழிபாட்டு முறைகளோடு நடனக்கலையும் பின்னிப் பிணைந்திருந்தது. முன்னயை காலங்களில் 'தேவர் அடியார்கள்' என்று கூறக்கூடியவர்கள் ஆலயங்களிலே தமது வாழ்வை இதற்காக அர்ப்பணித்ததுடன் கோவில் பூசை நிகழ்வுகளிலும், ஊர்வலங்களிலும் நடனத்தைப் புகுத்தியே பூசைக் கருமங்களை ஆற்றிவந்தனர். பிற்காலத்தில் அந்த 'தேவரடியார்கள்' முறை ஒழிக்கப்பட்டு அது அரங்கக் கலையாக மாற்றம் பெற்றது. அதுவே தற்போது வரை இருந்து வருகின்றது.

பல கோவில்களில் முன்புபோலவே பரதக்கலையை நடைமுறையிலே கொண்டுவருகிறார்கள். இருந்தாலும் முழுமையாக அதை மாற்றமுடியாதுள்ளது. ஏனெனில் தேவரடியவர்கள் ஆலயத்துக்கேன்றே அர்ப்பணிக்கப்பட்டவர்களாகப் பணிசெய்தவர்கள். தற்போதைய காலகட்டத்தில் அவ்வாறான நிலைமை இல்லை. ஆனால், தற்காலத்திலும் ஆலயங்களில் ஓரளவுக்குப் பரதக் கலையைப் புகுத்துவதற்கு முடியும்.

ஆலயம் என்று இறைவனுடைய சந்நிதியையே குறிப்பிடுகின்றோம். ஆனால், இன்றைய காலச் சூழலிலே அங்கு நடக்கின்ற நிகழ்வுகளிலே சினிமாப் பாடல்களையோ அல்லது களியாட்டம்போன்ற மேலைத்தேய நடனங்களையோ அரங்கேற்றுவதே நிகழ்கின்றது. இது பொருந்தாத விடயமாக உள்ளது. ஆனால், மக்கள் இரசிக்கிறார்கள். இது ஏற்றுக் கொள்ளமுடியாத விடயம். ஆரோக்கியமானதும் அல்ல. அங்கே இறை தன்மையுடன் இணைந்து செல்லக்கூடிய கலைகளான நாட்டியம், சங்கீதம் போன்றவற்றை நிகழ்த்துவது தான் சரியான வழியாக இருக்கும்.

ஈழத்தில் ஆரம்ப காலங்களிலே நடனக் கலையும், இசைக்கலையும் மிகவும் செழிப்பாக இருந்தது. அன்றைய காலத்தில் இசை விழாக்கள், கச்சேரிகள் என்பன ஒவ்வொருநாளும்நடந்தவண்ணம் இருக்கும். இரசிகர் கூட்டம் மண்டபம் நிறைந்து இருக்கும். அப்படியான ஒரு சூழலிலேயே நானும் பலமுறை ஆடியிருக்கிறேன். இளங்கலைஞர் மன்றத்திலே இருபத்தைந்து நாள்கள் இசை விழாக்கள் நடந்தேறும் அவை ஒரு பொற்காலமாகவே இருந்தது. பல திறமையான அம்சங்கொண்ட நடனக்கலைஞர்கள் அன்றய காலத்தில் இருந்ததுடன் அவர்கள் பிரபலமாகியும் இருந்தனர். அவர்களுடைய மாணவர்கள் கூட நல்ல நிகழ்வுகளை வழங்கினார்கள். ஆனால் இன்றைய நிலையில் நாட்டியம் சார்ந்த நிகழ்வுகள் நடக்கும்போது சொற்ப அளவிலானோரே அதைப் பார்வையிடுகின்றனர். ஏனையோர் கைபேசிகளிலோ, வேறுவிதமாகவோ நேரத்தை வீணடிக்கிறார்களே தவிர ஆரோக்கியமான கலையம்சங்களைக் கண்டு களித்து அந்தக் கலைஞர்களுக்கு ஊக்கமளிக்கத் தவறிவிடுகிறார்கள். கலைஞர்கள்கூட அரிதாகிகொண்டு செல்கிறார்கள்.

முன்னைய காலத்தில் இருந்த திறமையான கலைஞர்கள் போல தற்காலத்தில் இல்லை. தொழிலுக்காக இதைக் கற்றுப் பட்டங்களைப் பெறும் சூழ்நிலை இருக்கின்றதே தவிரகலையைவளர்க்கவேண்டும், அதை அழிவிலிருந்து பாதுகாக்க வேண் டும் என்ற நோக்கம் ஒரு சில கலைஞர்களிடம் மட்டுமே காணப்படுகின்றது.

கலைகளுடன் தொடர்புடைய அரச திணைக்களங்கள் பெரும் பங்காற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றன. நிகழ்வுகளை நடாத்துதல், கலைஞர்களை ஊக்குவித்தல், அவர்களின் பொருளாதார நிலைகளை ஆராய்ந்து அவற்றைத் தீர்க்கும் படியான செயற்பாடுகளைச் செய்வதன் மூலமே அழிந்து செல்லும் கலைகளைத் தூக்கிநிறுத்த முடியும். அதுபோலவே பொதுமக்களும் இவ்வாறான நிகழ்வுகளை இரசிக்கும் மனநிலைக்கு மாற்றப்படவேண்டும். ஒரு சிறந்த கலையம்சத்தின் மூலம் கிடைக்கும் மன அமைதியை எவ்வளவு விலைகொடுத்தாலும் பெற்றுவிட முடியாது.

# தாய்லாந்து குகை: (தொடர்ச்சி)

காற்றில் 21 சதவீத ஒட்சிசன் இருக்கவேண்டும். ஆனால், குகைக்குள் 15சதவீதம் வரை ஒட்சிசன் அளவு குறைந்திருந்தது. எனவே, மீட்புப் பணியாளர்கள் இதுவரை நூறு ஒட்சிசன் உருளைகளைச் சிறுவர்கள் சிக்கியுள்ள இடத்துக்குக் கடும் இடர்ப்பாடுகளுக்கு இடையில் கொண்டு சென்றுள்ளனர்.

அத்துடன், மீட்புப் பணி கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடங்கப்பட்ட நிலையில், ஒரு மருத்துவர் உள்ளிட்ட 4முக்குளிக்கும் வீரர்கள் சிறுவர்களுக்குத் துணையாகக் குகைக்குள் சென்று தங்கிவிட்டனர்.



**மீட்பு**

ஞாயிற்றுக்கிழமையன்றைய முதல் நாள் மீட்புப் பணியில்நான்கு சிறுவர்கள் மீட்கப்பட்டனர். மீட்கப்பட்டவர்கள் அனைவரும் உடனடியாக மருத்துவமன்னக்குக் கொண்டு செல்லப்பட்டனர். தேவைப்படுகிறவர்களை உடனடியாக ஏற்றிச் செல்வதற்கு வசதியாக உலங்கு வானூர்தியும் பயன்படுத்தப்பட்டது. நான்கு பேர் மீட்கப்பட்டவுடன், காற்றுக் குடுவைகளை நிரப்புவதற்காகவும், அடுத்த கட்டத்தைத் திட்டமிடுவதற்காகவும், இரவு நேரத்தில் மீட்புப் பணி நிறுத்திவைக்கப்பட்டது.

திங்கள்கிழமை தொடங்கிய இரண்டாவது நா ர் மீட்புப் பணியும் வெற்றிகரமாகவே தொடர்ந்தது. ஆனால், இரண்டாவது நாள் மீட்கப்பட்ட நான்கு சிறுவர்களில் சிலர் காவுகையில் கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் நலமுடனே இருப்பதாகப் பின்பு தெரிவிக்கப்பட்டது. மீட்கப்பட்ட சிறுவர்களுக்கு நோய்த்தொற்று இருக்கிறதா? என்பதைப் பார்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகள் வரும் வரை அவர்கள் யாரும் தங்கள் குடும்பத்தினரைச் சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. எனினும், செவ்வாய்க்கிழமை சில சிறுவர்கள் கண்ணாடி வழியாகத் தங்கள் பெற்றோரைச் சந்திக்க அனுமதிக்கப்பட்டனர்.

**சீல்கள்**

செவ்வாய்க்கிழமை மூன்றாம் நாள் மீட்புப் பணியை உற்சாகத்தோடு தொடங்கியது தாய்லாந்தின் கடற்படைச் சீல் அணி. ஆரம்பம் முதல் மீட்புப் பணியை ஒருங்கிணைத்ததும், முன்னணியில் நின்றதும் இந்த அணியே. கடல், வான், நிலப் பரப்புகளில் செயல்படும் உயர் திறன் வாய்ந்த அணிகளையே சீல் அணி என்பர். (SEAL என்ற ஆங்கிலச் சொல், (Sea -கடல், Air- காற்று, Land- நிலம்) என்பதன் முதல் எழுத்துகளின் சுருக்கமே ஆகும்).

மூன்றாம் நாள் மீட்புப் பணியை மேற்கொள்ள 19வரையான தாய்லாந்து கடற்படை சீல் வீரர்கள் குகைக்குள் நுழைந்தனர்.

முதல் இரண்டு நாள்களைப்போல அல்லாமல் செவ்வாய்க்கிழமை மீட்புப்பணி நீண்ட நேரம் பிடிப்பதாக இருக்கும் என்று அவர்கள் தெரிவித்திருந்தனர். ஆனால், எதிர்பார்த்ததற்கும் மாறாக மிக விரைவிலேயே மீட்புப் பணி வெற்றிகரமாக முடிந்தது. கால்பந்து அணியைச் சேர்ந்த சிறுவர்கள் மற்றும் அவர்களின் பயிற்சியாளர் ஆகியோர் வெளியேற்றப்பட்ட பிறகு, அவர்களுடன் தங்கியிருந்த மருத்துவர், கடற்படை வீரர்கள் உள்ளிட்ட நான்குபேர் குகையை விட்டு வெளியேறினர்.

**படிப்பினை**

இயற்கையின் சிக்கலான குகை அமைப்பையும், ஆபத்தான மீட்புப் பணியையும் உலகம் வாய்பிளந்து பார்த்தது. அது மட்டுமல்ல, இடர் கால மீட்பு என்ற துறையைப் படித்துக் கொள்வதற்கு இந்த சம்பவம் மிக அரிதான பாடங்களை அளித்தது. கண்டுபிடிக்கப்படும் வரை முதல் 9 நாள்கள் குகைக்கடியில் நம்பிக்கையற்ற சூழ்நிலையில் நம்பிக்கையும், உற்சாகமும் குறையாமல் காத்திருந்த சிறுவர் அணியின் மன உறுதி குறிப்பாகக் கவனிக்கப்பட்டது. உறுதியோடு இந்த அணியைக் காத்திருக்கச் செய்ததில் பயிற்சியாளர் ஏக்போலின் பங்கு முக்கியமானதாக இருக்கும் என்றும் கணித்துள்ளனர்.

தேச, இன, நிற எல்லைகளைக் கடந்து உலகம் முழுவதும் இருந்து வந்த மீட்புப் பணியாளர்களின் உதவியும், எல்லை கடந்த மானுடத்தின் வாஞ்சையும், எதிர்பார்ப்பும் இந்த நெருக்கடிக்கு ஒரு மனிதாபிமானக் கோணத்தையும் அளித்தன.

நன்றி பி.பி.சி

# தாய்லாந்து தலைமை அமைச்சர் தலதா மாளிகைக்குப் பயணம்

கொழும்பு. ஜீலை 15

அரச தலைவர் அழைப்பின் பேரில் இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள தாய்லாந்து தலைமை அமைச்சர் பிரயுத் சான் ஓ சாவும் அரச தலைவர் மைத்ரிபால சிறிசேனவும் நேற்றுமுன்தினம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்டி தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

தலதா மாளிகையில் உள்ள புனித தந்தத்தை வழிபட்டு ஆசிர்வாதங்களைப் பெற்றுக் கொண்ட தலைவர்கள் இருவரும் தலதா மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள உலக பௌத்த அருங்காட்சியகத்தையும் பார்வையிட்டனர்.

தேரவாத பௌத்த சமயத்தைப் பின்பற்றும் நாடுகள் என்றவகையில் இருநாடுகளினதும் வரலாற்று ரீதியான பௌத்தத் தொடர்புகளை நினைவுகூர்ந்து அந்த வரலாற்று நினைவுக் குறிப்புக்களையும் பார்வையிட்டனர்.

அதனைத் தொடர்ந்து இருவரும் மல்வத்தை மற்றும் அஸ்கிரிய மகா நாயக தேரர்களைச் சந்தித்தனர்.

இலங்கைக்குப் பயணம் செய்து இரு நாடுகளினதும் பௌத்த மரபுகள் மற்றும் உறவுகள் குறித்து அறிந்து கொள்ளக் கிடைத்தது தொடர்பில் தாய்லாந்துத் தலைமை அமைச்சர் இதன்போது நன்றி தெரிவித்தார்.

தனது பயணத்தின் போது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அரசு வழங்கிய உயர்ந்த வரவேற்பு மற்றும் உபசரிப்புக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் உள்ள அர்ப்பணிப்பு மற்றும் சிறப்புத் திறமைகள் குறித்துத் தாய்லாந்து தலைமை அமைச்சர் மகாநாயக தேரர்கள் முன்னிலையில் பாராட்டினார். என்று அரச தலைவர் ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி2)




# அரங்குகளில் தேசிய கீதம்

கொழும்பு. ஜீலை 15

திரை அரங்குகளில் தேசிய கீதம் இசைக்கப்படவேண்டும் என்ற தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

அநுராதபுரம் மாநகர சபையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சிறிலங்கா பொதுஜன முன்னணியின் மாநகரசபை உறுப்பினர் ரஞ்சித் ராஜகருணாவினால் இந்தப் பிரேரணை நேற்றுமுன்தினம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

திரைப்படங்கள் காட்சிப்படுத்தப்படுவதற்கு முன்பதாக அனைத்துத் திரையரங்குகளிலும் தேசிய கீதம் இசைக்கப்படவேண்டுமென்று அவர் பிரேரணையில் முன்மொழிந்திருந்தார். பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நாட்டின் அனைத்துத் திரையரங்குகளிலும் தேசிய கீதம் இசைப்பதற்கு உத்தரவிடுமாறு அரச தலைவர் மற்றும் கலாசார அமைச்சரிடம் கோரிக்கை விடுப்பது தொடர்பிலும் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திரையரங்குகளின் உரிமையாளர்களுக்குத் தேசிய கீதத்தை இசைக்க உத்தரவிடுமாறு கோரப்பட்டுள்ளது.

அநேகமான இலங்கையர்களுக்குத் தேசிய கீதம் மறந்து விட்டதாகவும், திரையரங்குகளில் இசைப்பதன் மூலம் அதனை நினைவூட்ட முடியும் எனவும் மாநகரசபை உறுப்பினர் ரஞ்சித் ராஜகருணா தெரிவித்துள்ளார். (ரி2)






பழைமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்
**ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்**

01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்யமுடியும்.
03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விட்டீர்களா ?




ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!

Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் பதிவு தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

**ரெங்கசாமி காளியம்மா**
மாத்தளை - கண்டி வீதி, அம்பத்தன்ன.
**077 327 2302/ 076 466 4153**


# VACANCIES

## CENTRAL ENVIRONMENTAL AUTHORITY
## MINISTRY OF MAHAWELI DEVELOPMENT & ENVIRONMENT

The CEA wishes to invite applications from qualified and experienced candidates who are citizens of Sri Lanka, for the following post.

The age limit will not be applicable to applicants already in the state service. Proficiency in English, familiarity with government regulations and computer literacy are essential prerequisites. Applicants who are in the Government/ Semi Government Sector should forward their applications through Heads of the Departments/ Institutes.

1. **Post of Director (HM 1-1) - (01 Post)**

**Required Qualifications**

External : 1. A Bachelor's Degree in the field of Environment which is recognized by the U.G.C.
With
A Postgraduate degree qualification (Master's) in the field of Environment which is recognized by the U.G.C.
And
Minimum of fifteen (15) years experience at "Managerial Level" in the field of Environment in a recognized Institution.

Internal : 1. Having obtained the qualifications required by the external candidates above
2. Completion of minimum five (05) years satisfactory service in a post in the Manager Category (MM)-Grade I, in the subject area relevant to the post.

**Salary Scale** : Rs.80,295 - 15x 2,270-114, 345 P.M (w.e.f.2020)
**You will be placed at the salary step of Rs.63,589/= in terms of management services circular No.02/2016 of 25.04.2016 and its amendments.**

**Age** : Should be not less than 35 years and not more than 55 years.

The vacancy exists in the Northern Provincial Office at Kilinochchi.

**Fringe Benefits**
1. Encashment of unutilized Medical Leave
2. Encashment of Medical bills through a Medical Insurance scheme
3. Distress loan valued to 10 month salary

**General Instructions**

The applicants should visit www.cea.lk website to download the specimen application and should be forwarded in registered post on or before **26th July 2018** to reach the Director General via address given below. **Applicants those who have not used the specimen application will not be considered.**

Indicate the post applied for, on the top left-hand corner of the envelope & incomplete and late applications will be rejected.

Short listed applicants based on highest qualification & experience, will be called for an interview and selection will be based on performance at the interview. **Copies of the certificates to prove basic qualifications and experience should attach with the application.**

**Director General**
Central Environmental Authority
104, Denzil Kobbekaduwa Mawatha,
Battramulla.

13.07.2018 (IN7284)(10)


## விற்பனைக்கு உண்டு
யமுனாபாரி கிடாய் மறி ஆடுகள் விற்பனைக்கு உண்டு.
**077 900 9371** (CS/18171)(11.17)

## வாடகைக்கு
யாழ்நகரில் இருந்து 3km தூரத்தில பலாலி வீதியில அமைந்துள்ள கட்டடத்தின் மேற்பகுதி வாடகைக்கு உண்டு
**075 518 7440**

## ஜெயக்குமார் திருமண சேவை
சுவிஸ் இல் உள்ள மணமகனுக்கு 1982, 1984 இல் பிறந்த மணமகள் தேவை. வெளிநாட்டில் உள்ள மணமகள், மணமகனுக்கு இலங்கையில் உள்ள படித்த மணமகள் மணமகன் தேவை.
**077 535 3289, 075 568 5766, 076 178 7848**
**வைபர்: 0094 767 250 144**


MINISTRY OF TOURISM DEVELOPMENT & CHRISTIAN RELIGIOUS AFFAIRS

The premier institute in the country providing education for the development of human resource for Tourism and Hospitality Industries

## SRI LANKA INSTITUTE OF TOURISM & HOTEL MANAGEMENT

We invite competent, individuals with proven training & lecturing capabilities for the position of Visiting Lecturers to be attached to New provincial campus in Jaffna.

# VACANCY - VISITING LECTURERS
Provincial campus in Jaffna

Vacancies exist for Visiting Lecturers in the following disciplines.

- Professional Cookery
- Hotel Housekeeping
- Food & Beverage Operations
- English Language

## Payment method:

| Rate per hour | Qualification and Experience required |
|---|---|
| Rs.500/= | A recognized Diploma in Professional Cookery / Housekeeping operations / F & B Operations or Diploma in any Language indicated above and at least 1 year experience in the relevant field or teaching at a recognized Institution. |
| Rs.750/= | A recognized Diploma in Professional Cookery / house Keeping operations / F & B Operations or Diploma in any Language indicated above and at least 3 year experience in the relevant field or teaching at a recognized Institution. |
| Rs.1000/= | A Degree in relevant field / Language with 5 years Managerial / Teaching experience at a recognized Institution. |
| Rs.1250/= | Masters qualifications in the relevant field Language with 10 years Managerial / Teaching experience at a recognized Institution. |
| Rs.1500/= | PhD in the relevant field with 12 year Managerial / Teaching experience at a recognized Institution. |

(Knowledge in Tamil language will be an added advantage)

Application for the post of visiting lecturer and subject should be indicated on the top left hand corner of the envelope and duly completed applications should be forwarded with copies of relevant certificates under registered cover to reach below address on or before 24th July 2018.

Director General
Sri Lanka Institute of Tourism & Hotel Management,
No. 78, Galle Road,
Cololmbo 03





ஜூன் 1ஆம் திகதி முதல் ஜூன் 30 வரை
எல் பி தங்க ஆபரண அடகுச்சேவை உடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டு
**தங்க நாணயங்கள் 40 ஐ வெற்றியீட்டியோர்**

உடனடி அழைப்புகள் **0112 200 200**
275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. www.lbfinance.com

**LB FINANCE**

# மாறுபட்ட வடிவங்களில் காணி அபகரிப்பு

சந்திரசேகர ஆசாத்




இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொது மக்களின் காணிகள் தொடர்பாகத் தலைமை அமைச்சர் அலுவலகத்துக்கு யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் அனுப்பியுள்ள அறிக்கையில் யாழ்.மாவட்டத்தில் 4ஆயிரம் ஏக்கர் காணிகள் இன்னமும் படையினர் வசமுள்ளதாகத் தெரிவித்துள்ளார். மேலும் அந்த அறிக்கையில் இதுவரை 3ஆயிரத்து 838 ஏக்கர்கள் மட்டுமே விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் நலன்புரி முகாம்களிலேயே இப்போதும் பல குடும்பங்கள் வசித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளையில் பல குடும்பங்கள் உறவினர் வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் வாழ்ந்து வருவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அரச தலைவர், தலைமை அமைச்சர், அயலுறவுத்துறை அமைச்சர் ஆகியோர் இராணுவம் கைப்பற்றி வைத்திருந்த காணிகளில் 80வீதம் விடுவிக்கப்பட்டுவிட்டதாகவும் விரைவில் மிகுதியும் விடுவிக்கப்படும் எனவும் ஐ.நா பிரதிநிதிகளிடமும், வெளிநாட்டு இராஜதந்திரிகளிடமும் கூறிவரு கின்றனர். எனவே அரச தரப்பால் பன்னாட்டு அளவில் முன் வைக்கப்படும் உண்மைக்குப் புறம்பான தகவல்களை அம்பலப்படுத்தி உண்மைகளை வெளியிடவேண்டியது தமிழ் மக்களைப் பிரதிபலிக்கின்ற அரசியல் தலைமைகளின் கடமையாகும். ஆனால் அவர்களோ அரசு பல விடயங்களை நிறைவேற்றியிருக்கிறது என்று கூறி அரச தரப்பை நியாயப்படுத்தியே வருகின்றனர். இப்படியான போக்கால் பன்னாட்டுச் சமூகம் அரசுக்குக் கொடுக்கக்கூடிய அழுத்தங்களைப் பலவீனப்படுத்தும் என்பது தமிழ் மக்கள் பலரின் கவலையாக இருக்கிறது. எனினும் அரச அதிபர் வெளியிட்டுள்ள குறித்த அறிக்கை உண்மைகளை எவ்வித ஒளிவுமறைவுமின்றி வெளிக்கொண்டுள்ளது.

### ஆக்கிரமிப்புப் பகுதிகளில் வருமானமும் மாற்றங்களும்

இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளில் பாதிகூட இன்னமும் விடுவிக்கப்படவில்லை. இந்த அபகரிக்கப்பட்ட காணிகள் ஒருபுறம் மக்களின் குடியிருப்புக்களைக் கொண்ட பகுதிகளாக இருக்கும். அதேவேளையில் பெரும் பகுதி மக்களின் பொருளாதார உற்பத்தி மையங்களாக விளங்கிய பகுதிகளுமாகும்.

குறிப்பாக இலங்கையின் முக்கிய மீன்பிடி மையங்களாக விளங்கிய பகுதிகள் மிளகாய், வெங்காயம், மரவள்ளி, புகையிலை, முருங்கைபோன்ற வர்த்தக விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்யப்படும் விளைநிலங்கள், தொன்மை வாய்ந்த, வரலாற்றுப் புகழ்பெற்ற ஆலயங்கள் என்பன படையினரின் ஆக்கிரமிப்புக்குள் அடங்குகின்றன. அங்கு அவர்கள் விவசாயம் மீன்பிடி என்பவற்றில் ஈடுபடுவதுடன் சுற்றுலா விடுதிகள், விளையாட்டு மைதானங்கள், பௌத்த விகாரைகள் என்பவற்றையும் அமைத்துள்ளனர். ஆனால் இந்த நிலங்களின் பாரம்பரிய உரிமையாளர்களோ நிவாரண முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தொழில்களை இழந்த நிலையில் வறுமையில் வாடுகின்றனர்.

### அரசின்,ஏமாற்று வித்தை

காணிகளை விடுவித்துக்கொண்டிருப்பதாகவும், அவற்றை முழுமையாக விடுவிக்கப்போவதாகவும் பன்னாடுகளையும், தமிழ் மக்களையும் ஏமாற்றிவரும் அரசு மறுபுறத்தில் தமிழ்மக்களின் காணிகளை வெவ்வேறு வடிவங்கொண்ட நடவடிக்கைகளால் மேலும் அபகரிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

இப்பொழுது மகாவலி அபிவிருத்திச்சபை, வனபரிபாலனம், தொல்பொருள் திணைக்களம் என்பனவற்றின் நடவடிக்கைகள் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் காணிப்பறிப்புகள் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன.

1984ஆம் ஆண்டு மகாவலி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் மணலாற்றில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். அதன் காரணமாகக் கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், பட்டிக்குடியிருப்பு, ஊஞ்சல்கட்டி உள்ளிட்ட பல கிராமங்களிலிருந்து தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டனர். கொக்குத்தொடுவாய் உட்பட்ட சில பகுதி மக்களின் நிலங்கள் மகாவலி வலயத்தின் கீழ்கொண்டுவரப்பட்டு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். அவ்வாறே சோழகக் காற்றுக் காலத்தில் மீன்பிடித்து வந்த சிங்களவர்கள் கொக்கிளாயில் நிரந்தரமாகக் குடியேறினர். முல்லைத்தீவு முகத்துவாரம் பகுதியில் மீன்பிடிக் கிராமம் அமைக்கப்பட்டு அது சிங்களமயமாக்கப் பட்டது.

அத்துடன் அங்கு ஒரு தனியார் காணியும், மருத்துவமனைக்குரிய காணியும் அபகரிக்கப்பட்டு பிரமாண்டமான புத்தர் விகாரை அமைக்கப்பட்டு வருகிறது. கொக்கிளாயின் நிரந்தரக் குடிகளான தமிழ்மக்கள் இந்துக்களாகவும் அங்கு குடியேறிய சிங்கள மக்கள் கிறிஸ்தவர்களாகவும் இருக்கையில் அங்கு ஒரு விகாரை அமைக்கப்படுவது நிச்சயமாக வழிபாட்டு நோக்கத்துக்காக இருக்க முடியாது. எதிர்காலத்தில் அது புனித பிரதேசமாக அறிவிக்கவும் அதைச்சுற்றிச் சிங்கள மக்கள் குடியேற்றப்படவும் வாய்ப்புக்கள் உள்ளன.

முக்கிய மீன்பிடி மையங்களாக விளங்கிய பகுதிகள் மிளகாய், வெங்காயம், மரவள்ளி, புகையிலை, முருங்கைபோன்ற வர்த்தக விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்யப்படும் விளைநிலங்கள், தொன்மை வாய்ந்த, வரலாற்றுப் புகழ்பெற்ற ஆலயங்கள் என்பன படையினரின் ஆக்கிரமிப்புக்குள் அடங்குகின்றன.

### சிங்கள மயப்படுத்தும் நோக்கம்

முஸ்லிம்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த காணிகளை, அவை 300 ஏக்கர் தொன்மையான பௌத்த சின்னங்களைக் கொண்டுள்ளன எனக் கூறி ஒரு பௌத்த பிக்கு ஆக்கிரமித்தார். அதைத் தொல்பொருள் திணைக்களம் கையகப்படுத்தும் முகமாக அளவிட்டு நடவடிக்கைகளில் இறங்கியிருந்தது. கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் பிரதேச சபையினர் ஆகியோர் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தும் பலன் கிடைக்கவில்லை. மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளில் போருக்கு முன்பு முஸ்லிம்கள் வாழ்ந்த குடியிருப்புக்கள் வன்பரிபாலனர் திணைக்களத்துக்கு உரியவை என அறிவிக்கப்பட்டது. இங்கு இப்போதும் மக்களின் அதே வீடுகளும், பாவனையற்ற கிணறுகளும் காணப்படுகின்றன.

இப்படியாகத் தொல்பொருள் திணைக்களத்தைக் கொண்டும், வனபரிபாலனரைக் கொண்டும் காணிகளை அபகரித்தல்; விகாரைகளை அமைத்தல் போன்றவற்றுனூடாகத் தமிழ், முஸ்லிம்களின் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. இது வடக்கின் இனப்பரம்பல் விகிதாசாரத்தை மாற்றிச் சிங்களமயப்படுத்தும் நோக்கம் கொண்டது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

### முல்லைத்தீவை நோக்கிய பாய்ச்சல்

இப்படியான ஆக்கிரமிப்பு நடவடிக்கை இப்போது முல்லைத்தீவு மாவட்டத்தையும் நோக்கிப் பாய்ந்துள்ளது. வர்த்தமானி அறிவித்தல் மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாறு, நந்திக்கடல் ஆகிய பிரதேசங்கள் வன ஜீவராசிகள் திணைக்களத்துக் கென ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவித்திருக்கிறார்கள்.

இந்தப் பகுதிகள் நாட்டுக்கு அந்நியச் செலவாணியைத் தேடித்தரும் நல்ல உற்பத்தி மையம் என்பதும் நன்னீர் மீன்பிடி மூலம் ஏறக்குறைய 10ஆயிரம் குடும்பங்கள் வாழ்க்கையைக் கொண்டு செல்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. நந்திக்கடல் பகுதியில் 5ஆயிரம் வரையான குடும்பங்கள் தொழில் செய்கின்றன. நாயாறுப் பகுதியில் 4ஆயிரம் குடும்பங்கள் தொழில் புரிகின்றன.

இன்னும் பல பகுதி மக்களும் தமது வாழ்வாதாரத்துக்காக இந்தப் பகுதியையே நம்பியுள்ளனர். இவ்வறிவித்தல் மூலம் இவர்கள் அனைவரும் பாதிக்கப்படுகிறார்கள். பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களாகப் அறிவிக்கப்பட்ட இவை சுற்றுலா மையமாக்கப்பட்டு, சுற்றுலாவுடனும் அதனுடன் சம்பந்தப்பட்டதுமான நடவடிக்கைகளைச் சாட்டாக வைத்து சிங்களக் குடியேற்றங்களும் உருவாகலாம்.

ஏற்கனவே இராணுவம் ஆக்கிரமித்த பொதுமக்களின் காணிகளை விடுவிக்க முடிய வில்லை. மக்கள் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அது வெளிப்படையான ஆக்கிரமிப்பு. ஆனால் வெவ்வேறு திணைக்களங்கள் மூலம் மாயத் தோற்றத்தில் புற்றுநோய்போல் அமைதியாக மெல்ல மெல்ல இவ்வகை ஆக்கிரமிப்புக்களும் இடம்பெறுகின்றன.

வெளிப்படையில் காணிகளைக் கொஞ்சம் கொஞ்சமாக விடுவிப்பதாகத் தோற்றம் காட்டிக்கொண்டு வெவ்வேறு காரணங்கள் கூறப்பட்டுத் தமிழ் மக்களின் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன.

16ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 28 - 04 - 1938

மறைவு 30 - 06 - 2018



அமரர் கணபதிப்பிள்ளை சிவலிங்கம்

எமக்கெல்லாம் நல்வழி காட்டிய தீபமே – எம்
குடும்ப விளக்கே நீங்கள் எம்மை விட்டுச் சென்று
வாரங்கள் இரண்டு உருண்டோடி விட்டதே நம்ப முடியவில்லை? – உங்கள்
இனிய அன்பான கதைகள் எம் காதுகளில் ஒலிக்கின்றது.
உங்கள் சிரித்த முகம் அன்பான பார்வை கொண்ட தோற்றம்
எம் கண்களில் தெரிகின்றது எம்முடன் கூடவே இருக்கின்றீர்கள் – நீங்கள்
மறையவில்லை என்றென்றும் எங்களுக்குள் வாழ்கின்றீர்கள்

30.06.2018 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச்சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் முன்வந்து உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது இதயபூர்வநன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (15.07.2018) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சிவலிங்கம் மோட்டோர்ஸ்
77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3212

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## TONERS விற்பனைக்கு

HP/Epson/Conon/Lexmark மற்றும் சகல விதமான Comportable & Original Toners, Cartridge & Ribbons என்பனவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள.
*Replacement warranty தரப்படும்.
85A-1200/= 35A-1200/=
12A-1200/= 78A-1200/=
36A-1200/=
Ultra Stationers
No. 20/4, Bankshall Street, Colombo 11.
077 308 4336, 0112327187

## வீடு வாடகைக்கு

இராமலிங்கம் றோட் திருநெல்வேலி கிழக்கில் 5 அறைகள், இணைந்த குளியலறை, வாகனத்தரிப்பிட வசதிகளுடன் பிரதான சாலையின் முகப்பாக கொண்ட வீடு நிறுவன பாவனைக்கு மட்டும் வாடகைக்குண்டு. தொடர்பு - 077 547 2377

## வீடு விற்பனைக்கு

உரும்பிராய், கோப்பாய் வீதியில் 4 பரப்புக்காணியுடன், மேல்மாடி வீடு உடன் விற்பனைக்குண்டு. (உரும்பிராய் சந்தியில் இருந்து 1km தொலைவில்)
தொடர்பு - 071 321 8883

## தேவை

13. 17. 21. 200. 201. 204. 205 தொடரிலக்கம் உடைய ஆட்டோ தேவை.
தொடர்பு - 076 2216 713

## காணி விற்பனைக்கு

இராச வீதி, கரந்தன் வீதியிலிருந்து 1Km தூரத்தில் சிவபூதராயர் கோயிலுக்கு அருகில் 17 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு - 077 495 5593

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி சந்தைக்கு அருகில் வீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள் விரும்பத்தக்கது
077 968 6050

## தேவை

வெள்ளவத்தையில் அமைந்துள்ள புத்தக வெளியீட்டு அலுவலகத்திற்கு HORIZON BOOK BINDER BO 440 Perfect Machine Operator ஒருவர் தேவை.
தொடர்பு - 077 650 3432

## மரண அறிவித்தல்

# திருமதி இரத்தினம்மா தர்மலிங்கம்



தோற்றம் 17.07.1933 மறைவு 10.07.2018

யாழ். கொக்குவில் கிழக்கு நந்தாவில்லைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கு காளி கோயிலடியை வதிவிடமாகவும், லண்டன், கொழும்பு ஆகிய இடங்களை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம்மா தர்மலிங்கம் 10.07.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தர்மலிங்கம் (S.S.T வர்த்தகர் - காலி) அவர்களின் அன்பு மனைவியும், தர்சினி (லண்டன்), தர்மசீலன் (சுவிஸ்), ரோகிணி (லண்டன்), பிருந்தா (சைவ மங்கையர் வித்தியாலயம் - கொழும்பு), தர்மராஜ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் (செல்லத்துரை), அன்னபூரணம், சபாரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சந்திரராஜ் மற்றும் தர்மினி, செந்தில்நாதன், தனஞ்சயன் (இராமகிருஷ்ண வித்தியாலயம் - கொழும்பு), சுதர்சினி ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம், சிவஞானம், தங்கச்சியம்மா, பொன்னுத்துரை, அருளம்மா, இரத்தினம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், சாகித்தியா, சாதுரியா, தர்மிஷான், தர்ஷனா, ரோசியன், வினோஜன், பிரணவன், வியூகன், விகாசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (16.07.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சீலன் - இலங்கை**
**செல்லிடப்பேசி** - +9477 8596 600)
**பிருந்தா - இலங்கை**
**செல்லிடப்பேசி** - +9471 4102 174)

**தகவல்**
**குடும்பத்தினர்.**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

## மரண அறிவித்தல்

# திருமதி சரோஜா மகாதேவன் (சங்கானை)



பிறப்பு 01.02.1941 இறப்பு 13.07.2018

கலைமகள் வீதி, நல்லூர் வடக்கைப் பிறப்பிடமாகவும் நாகலிங்க சுவாமி வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரோஜா மகாதேவன் கடந்த (13.07.2018) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவ கொழுந்து - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் மகாதேவன் (V.C.Nallur) மனைவியும் கிரிதரன் (ஜேர்மனி), சிவாஜினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கவிதா (ஜேர்மனி), சதானந்தராஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரியந்தி, இலிதுசன், யதுர்சினி, அபிவர்சன், அஜிதேஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற பாக்கியமலர் மற்றும் சிதம்பரநாதன், ஈஸ்வரி, தங்கேஸ்வரன், திவ்வியமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற மாசிலாமணி, மரகதாம்பாள், சண்முகலிங்கம், இதயராணி, பாஸ்கரன் ஆச்சாரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.07.2018) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3.00 மணியளவில் இலுப்பத்தாழ் முருகமூர்த்தி மயானம், சங்கானையில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நாகலிங்கசுவாமி வீதி,**
**சங்கானை.**

(CS 18253/15/17)

**தகவல்: சி.மகாதேவன் (கணவர்)**
**021 225 0421, 076 358 1135**

## மரண அறிவித்தல்

பிறப்பு 20 . 02 . 1949



இறப்பு 11 . 07 . 2018

# திருமதி நாகேஸ்வரி (தேன்) கோபாலசிங்கம்

கோப்பாய் தெற்கு அழகிய வான்தோட்டம், இருபாலையைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கு, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி (தேன்) கோபாலசிங்கம் கடந்த (11.07.2018) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கோபாலசிங்கத்தின் அன்பு மனைவியும் பாலேஸ்வரன் (பவா - வதிரி), பாலேந்திரன் (ரமேஸ் - கொழும்பு), பாலச்சந்திரன் (சுபாஸ் - கனடா), பாலசுதன் (சுதா - ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சந்திரமலர், செந்திலரசி, தமிழினி, சர்மிளா ஆகியோரின் அன்பு மாமியாரும் பானுஜா, அக்ஷயா, தர்வேசன், யானுஜா, நிலக்ஷன், நிகிலன், நியாஷன், சஜித், கவினா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி, சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நீர்வேலி தெற்கு.**
**நீர்வேலி. 021 223 1527**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

# திருமதி செல்லமுத்து சுப்பிரமணியம்



பிறப்பு: 18.04.1942 இறப்பு: 12.07.2018

யாழ். மிருசுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லமுத்து சுப்பிரமணியம் கடந்த (12.07.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயிலு - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னாச்சி தம்பதிகளின் பாசமிகு மருமகளும், சுப்பிரமணியம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற செல்வேந்திரன் மற்றும் தெய்வேந்திரன் (இலங்கை), சுரேந்திரன் (கனடா), தெய்வரஞ்சினி (இலங்கை), மகேந்திரன் (இலங்கை), நாகேந்திரன் (கனடா), செல்வரஞ்சினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், வள்ளிப்பிள்ளை, குஞ்சுப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நந்தினிதேவி, கேதீஸ்வரி, குண்ச்சந்திரன், முகுந்தா, சுஜீபா, ரகுநாதன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, சரவணமுத்து மற்றும் செல்வநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், இராஜேஸ்வரி அவர்களின் அன்புச் சகலியும், திருச்சயிந்தன், விபூசனா, கலைவாசன், சுரேஸ்குமார், ஆருசன், ஆதவன், ஆர்த்திகா, சிவானுஜா, சுஜித்தா, துளசிகன், கவிநயா, யானுகன், யனுசிகா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.07.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வடக்கு மிருசுவில் பெரியானோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 138 0992**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

யாழ் மண்ணின் மைந்தரால் உருவாக்கப்பட்ட

# செபமாலைத்தாசர் சபையின் 8ஆவது பொதுச்சங்க அமர்வு

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

செபமாலைத்தாசர் சபையின் 6 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் நிர்வாக அமைப்பைத் தெரிவு செய்யும் 8ஆவது பொதுச் சங்க அமர்வு, 'செபமாலைத் தியான வாழ்வையும் பணியையும் மறுபடியும் உயிர் ஊட்டம் பெறச்செய்தல்' என்னும் கருப்பொருளில் பெங்களூரில் கடந்த 7ஆம் திகதி ஆரம்பித்து இன்று வரை நடைபெற்று வருகிறது. அதுபற்றிப் பேசுகிறது இந்தக் கட்டுரை.

**செபமாலைத்தாசர் சபைத் தலைவராக செல்லத்துரை ஜஸ்ரின் ராஜ் அடிகளார்**

செபமாலைத்தாசர் சபையின் 8ஆவது பொதுச் சங்க அமர்வில் செபமாலைதாசர் சபையின் இலங்கை இந்திய நாடுகளின் உயர் தலைவராக செபமாலைதாசர் சபையின் இலங்கையைச் சேர்ந்த செல்லத்துரை ஜஸ்ரின் ராஜ் அடிகளார் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவரின் முதல் ஆலோசகராக தமிழ் நாட்டை சேர்ந்த சகாயதாஸ் அடிகளார் தெரிவுசெய்யப்பட்டார். கேரளாவைச் சேர்ந்த பி.வி.மத்தியு அடிகளாரும் வட இந்தியாவைச் சேர்ந்த அருட்சகோதரர் ஜோண் லக்காரா அடிகளாரும் தமிழ் நாட்டைச் சேர்ந்த அருட்சகோதரர் அந்தோனி அடிகளாரும் ஏனைய ஆலோசகர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

செல்லத்துரை ஜஸ்ரின் ராஜ் அடிகளார் 1966ஆம் ஆண்டு திரு திருமதி செல்லத்துரை சந்தனமேரி தம்பதியரின் மகனாக மன்னாரில் பிறந்தவர். 1996ஆம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டவர். கண்டி மற்றும் நீர்கொழும்பு துறவற இல்ல அதிபர் மெய்யியல் மற்றும் இறையியல் மாணவர்களின் பயிற்றுனர் செபமாலைதாசர் சபையின் இலங்கை மாகாண ஆலோசகர் எனப் பல பணிகளை ஆற்றிய இவர் உரோமாபுரியில் உள்ள தோமஸ் அக்குவைனாஸ் பல்கலைக்கழகத்தில் ஆன்மிக இறையியலில் முதுமானிப் பட்டத்தை பெற்றவர். 2012 - 2018 ஆண்டு காலப்பகுதியில் செபமாலைதாசர் சபையின் உதவித் தலைவராக பெங்களூரில் உள்ள தலைமைச் செயலகத்தில் பணியாற்றியவர்.

செபமாலைதாசர் சபையின் 8ஆவது பொதுச்சங்க அமர்வின் பின்னர் செபமாலைத்தாசர் சபையின் இலங்கைக்கான புதிய முதல்வராக அ.பிரான்சிஸ் ஜெயசீலன் அடிகளார் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவரின் முதல் ஆலோசகராக ஏற்கனவே ஆலோசகர் பணியை ஆற்றிய ஏ.எம்.ஸ்ரீபன் அடிகளாரும் இலங்கையின் தென்பகுதியை சேர்ந்த அனில் கிறிசாந்த அடிகளாரும் செ.செபதாசன் அடிகளாரும் ஏனைய ஆலோசகர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**அ.பிரான்சிஸ் ஜெயசீலன் அடிகளார்**

இலங்கை மாகாண புதிய முதல்வர் அ.பிரான்சிஸ் ஜெயசீலன் அடிகளார் சின்ன உரோமை என அழைக்கப்படும் சில்லாலை புனித கதிரைமாதா ஆலயப் பங்கைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1969ஆம் ஆண்டு திரு திருமதி மேரி யோசப்பின் அமிர்தநாதர் தம்பதிகளின் மகனாக பிறந்த இவர் 1998ஆம் ஆண்டு செபமாலைதாசர் சபையின் குருவாக திருநிலைப் படுத்தப்பட்டார். வவுனியாவில் உள்ள மதகுவைத்தகுளத்தில் நவதுறவு ஆசிரியர் கண்டி இறையியல் கல்வியகத்தில் குருத்துவ உருவலாக்கல் பயிற்சியாளர் செபமாலைதாசர் சபையின் இலங்கை மாகாண ஆலோசகர் என பல பணிகளை இவர் ஆற்றியுள்ளார். திருச்சபை நிர்வாகத்தில் இளமாணி பட்டத்தைப் பெற்றவர். இவர் கனடா புனித பவுல் பல்கலைக்கழகத்திலும் , கனடா ஒட்டோவா பல்கலைக்கழகத்திலும் திருச்சபை சட்டவியலில் இரு முதுமானி பட்டங்களைப் பெற்றவர். கனடா ஒன்ராறியோ மாகாணம் லண்டன் மறைமாவட்டத்தில் முதன் முதலாக செபமாலைதாசர் சபையின் இல்லமொன்றை உருவாக்கி ஏழு ஆண்டுகள் (2010 2017) பணியாற்றியவர். 2016ஆம் ஆண்டு இரக்கத்தின் ஆண்டாக உலக கத்தோலிக்க திருச்சபையில் அறிவிக்கப்பட்ட போது இறை மன்னிப்பை வழங்க இரக்கத்தின் பணியாளர்' என்ற பெயரில் உலகெங்குமிருந்து திருத்தந்தை பிரான்சிஸால் நியமிக்கப்பட்ட குருக்களில் இவரும் ஒருவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

புதிய நிர்வாகத்தில் இலங்கை ஆச்சிரமங்களின் அதிபர்கள்
செபமாலைதாசர் சபையின் 8ஆவது பொதுச்சங்க அமர்வின் பின்னர் செபமாலைதாசர் சபையின் இலங்கைக்கான புதிய முதல்வராக அ.பிரான்சிஸ் ஜெயசீலன் செ.தா அடிகளார் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவர் தனது புதிய நிர்வாகத்தில் இலங்கை ஆச்சிரமங்களின் அதிபர்களுக்கான புதிய நியமனங்களை வழங்கியுள்ளார். அதன்படி அருள் ஆச்சிரமம் எஸ்.பிரான்சிஸ் அடிகளாரும், வவுனியா பி.அலன் அடிகளாரும், கொச்சிக்கடை நீர் கொழும்பு பிறியாந்த கமல் அடிகளாரும், கண்டி பேடினன்ட் அடிகளாரும், இரத்தினபுரி எஸ்.பாலேந்திரன் அடிகளாரும் நியமிக்கப்பட்டுள்ளனர். மிருசுவில் அச்சுவேலி ஆகிய இடங்கள் மாகாண நிர்வாகத்தின் கீழ் இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**எட்டு பொதுச்சங்க அமர்வுகளும் பணியாற்றிய தலைவர்களும்**

2018ஆம் ஆண்டு நடந்த 8ஆவது அமர்வுக்கு முன்னர் செபமாலைதாசர் சபையானது 7 உயர் தலைவர்களால் வழிநடத்தப்பட்டுள்ளது. அவர்கள் பெயரும் பணிக்காலமும் வருமாறு. டோமினிக் (கார்மேல் சபை) அடிகளார் (1970 - 1976), சாக்கோ பேணாட் செ.தா அடிகளார் (1976 - 1982), ஜே.பி.பாக்கியநாதர் செ.தா அடிகளார் (இலங்கை) (1982 - 1985, எம்.எல். அலோசியஸ் செ.தா அடிகளார் (1985 2000), கே.பி.சேவியர் செ.தா அடிகளார் (2000 2006), ஏ.எம்.ஸ்ரீபன் செ.தாஅடிகளார் (இலங்கை) (2006 2012), கே.பி.சேவியர் செ.தா அடிகளார் (2012 2018), 2018 முதல் செல்லத்துரை ஜஸ்ரின் ராஜ் செ.தா அடிகளார் (இலங்கை)



"எம்முடைய நாட்டிலே போர்த்துக்கேயருடைய காலம் தொடக்கம் துறவற சபைகள் இருந்துள்ளன. ஆனால் இந்தத் துறவற சபைகள் அனைத்தும் வெளிநாட்டில் இருந்து வந்து இங்கு நிறுவப்பட்டவை. ஆசியக் கண்டத்திலே முதல் முதலாக ஆசிய நாட்டவரால் நிறுவப்பட்ட காட்சி தியான யோக சபை யாழ்ப்பாணம் பாண்டியன்தாழ்வு மண்ணின் மைந்தர் பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளாரால் நிறுவப்பட்ட செபமாலைத்தாசர் சபையே ஆகும். வயாவிளான் பகுதியில் உள்ள கற்பூமியான தோலகட்டி இன்று தோலகட்டி ஆச்சிரமத்தாலும் தோலகட்டி நெல்லி இரசத்தாலும் இலங்கை வரலாற்றில் மட்டுமல்ல உலக வரலாற்றிலுமே சிறப்பிடம் பிடித்துக்கொண்ட சிற்றூராகி விட்டது.

**வித்திட்ட யாழ் மைந்தன்**

யாழ் பாண்டியன்தாழ்வு மண்ணின் மைந்தர் பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளார் (1886 - 1964) முதலில் செபமாலைத்தாசர் தியானயோக துறவுசபையை (02 பெப்ரவரி 1928) தோலகட்டியில் நிறுவினார். பின்னர் கன்னியர்க்கான செபமாலைக் கன்னியர் தியானயோக துறவுசபையை (8 செப்ரெம்பர் 1948) வயாவிளானில் நிறுவினார். இவையே ஆசியாவின் முதல் தியான யோக துறவற சபைகள் ஆகும். எம்முடைய நாட்டிலே போர்த்துக்கேயருடைய காலம் தொடக்கம் துறவற சபைகள் இருந்துள்ளன. ஆனால் இந்தத் துறவற சபைகள் அனைத்தும் வெளிநாட்டில் இருந்து வந்து இங்கு நிறுவப்பட்டவை. ஆசியக் கண்டத்திலே முதல் முதலாக ஆசிய நாட்டவரால் நிறுவப்பட்ட காட்சி தியான யோக சபை யாழ்ப்பாணம் பாண்டியன்தாழ்வு மண்ணின் மைந்தர் பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளாரால் நிறுவப்பட்ட செபமாலைத்தாசர் சபையே ஆகும். வயாவிளான் பகுதியில் உள்ள கற்பூமியான தோலகட்டி இன்று தோலகட்டி ஆச்சிரமத்தாலும் தோலகட்டி நெல்லி இரசத்தாலும் இலங்கை வரலாற்றில் மட்டுமல்ல உலக வரலாற்றிலுமே சிறப்பிடம் பிடித்துக்கொண்ட சிற்றூராகி விட்டது.

1962ஆம் ஆண்டு வத்திக்கான் சங்கத்திற்கு உரோமை வத்திக்கான் நகர் சென்ற அப்போதைய யாழ் மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜே.எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையும் இலங்கையில் இருந்து இந்தியாவில் செபமாலைத்தாசர் சபை பரவி இருந்த இடங்களான தூத்துக்குடி திருச்சி வடஇந்தியாவின் அம்பிகபூர் ஆயர்களும் செபமாலைதாசர் சபையின் தேவையும் முக்கியத்துவத்தையும் உணாந்து இதனை வளர்க்க வேண்டுமென முடிவு செய்து உரோமையில் இருக்கும் துறவு சபையினருக்கான அதிகாரிகளுக்கு இந்தச் சபை பற்றி அறிவித்ததன் பயனாகவே 1969ஆம் ஆண்டு டோமினிக் (கார்மேல் சபை) அடிகளாரை உயர் தலைவராக நியமித்தது. 1970ஆம் ஆண்டு இந்தியா வடக்கன் குளத்தில் நடைபெற்ற முதலாவது பொதுசங்க அமர்வில் டோமினிக் (கார்மேல் சபை) அடிகளார் ஆறு ஆண்டுகளுக்கு (1970 - 1976) செபமாலை தாசர் சபை உயர் தலைவராக சம்பிரதாயபூர்வமாக தெரிவு செய்யப்பட்டார்.

**தோமஸ் அ.ம.தி. அடிகளாரின் புனிதர் பட்ட இன்றைய நிலை**

செபமாலைத்தாசர் சபை இலங்கை மாகாண முதல்வராக மூன்று தடவைகள் (1996-1999) (2000-2003) (2003 -2006) பணியாற்றியவரும் செபமாலைத்தாசர் சபையின் உயர் தலைவராக இந்தியாவில் பெங்களூரில் உள்ள தலைமைப் பீடத்தில் 2006 முதல் 2012 வரை பணியாற்றியவருமான ஏ.எம்.ஸ்ரீபன் செ.தா அடிகளார் செபமாலைத்தாசர் சபை நிறுவுனர் யாழ் மண்ணின் மைந்தர் இறையடியார் பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளாரின் புனிதர் பட்டப்பணியினை இலங்கையில் ஆற்றி வருகிறார். ஏ.எம்.ஸ்ரீபன் செ.தா அடிகளார் இறையடியார் பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளார் முதலில் அருளாளர் நிலையையும் தொடர்ந்து புனிதர் பட்டத்தையும் பெற்றுக் கொள்ளவேண்டுமென செபிக்க ஏராளமான பக்தர்கள் இலக்கம் 5 கோவில் வீதியில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் உள்ள இவரின் கல்லறைக்கு வந்து வேண்டுதல் செய்கிறார்கள். இவரின் புனிதர் பட்டத்திற்காக செபிக்கும் செப அட்டையை பக்தர்கள் அருள் ஆச்சிரமத்தில் பெற்று செபிக்க முடியும். இறையடியார் பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளார் பெயரில் நடைபெறுகின்ற புதுமைகளை இலக்கம் 5 கோவில் வீதியில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் ஆதாரங்களுடன் தெரிவிக்க இறைமக்கள் அழைக்கப்படுகின்றனர் என்றார். இறையடியார் பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளார் புனிதர் பட்டத்தை விரைவில் பெற இறைவரம் வேண்டுவோம்.



## வீடு வாடகைக்கு

மன்னார் வீதி (A32) நாவற்குழியில் புகையிரத நிலையம், மாகாண சபை அலுவலகம், வைத்திய சாலைகள், கடைகள் ஆகியவை அமைந்துள்ள A9 வீதிக்கருகே வருமானத்துடன் உடனடியாக வீடு வாடகைக்குண்டு.

**076 221 6797**

## புது வீடு வாடகைக்கு

75 B, Adiyapatham Raod, Kokuvil.
75B, ஆடியபாதம் றோட், கொக்குவில்.
Contact : Maru
(077 519 9326)

## வேலை வாய்ப்பு

சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் விளம்பரப்பகுதி அனுபவம் விரும்பத்தக்கது.
மோட்டார் சைக்கிள் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Wedding Directory
590/2, Point Pedro Road, Jaffna.
தொடர்பு - 076 638 5626

## காணி விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். இல.79 (குறேசற் வீதிச் சந்தியில்) விநாயகர் மில்லுக்கு மேற்காக வெறும் காணி 2.1பரப்பு விற்பனைக்கு.
Phone, Viber, Whatsapp +94 (0)718163018

## வரன் தேடுகிறீர்களா ?

Jaffna மேட்ரிமோனியில் இன்றே பதிவு செய்யுங்கள்
நல்லூர் ஆலய தெற்கு வீதியில்
BOC வங்கி முன்பாக
தொடர்பு - 077 893 9397

## மாபிள் வேலை

உங்கள் வீட்டிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் வேலை செய்து தரப்படும். சதுர அடி ரூபா 45 /=
தொடர்பு - 077 3341 281

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 3056 திகதி: 14.07.2018 சனிக்கிழமை
ශනිදා වාසනාව
பச்சை

| வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து | போனஸ் இலக்கம் | அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் |
|---|---|---|
| 08 44 49 61 Y | 41 | 32,565,420/- |

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 311
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.07.14
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,320,430/-

வெற்றி இலக்கங்கள்: 28 32 57 65
ஆங்கில எழுத்து: Z

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## සංවර්ධන වාසනාව

அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் ▶ 160
சீட்டிழுப்பு திகதி ▶ 14.07.2018 சிவப்பு

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விதி எண் |
|---|---|---|
| A | 20 36 40 | 08 |

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 31, 557, 284/=

## ஸ்வர்ண திலின

| | |
|---|---|
| களுத்துறை | 9612363 |
| கண்டி | 8608067 |
| புத்தளம் | 6898312 |
| அனுராதபுரம் | 9779424 |
| கிளிநொச்சி | 1831751 |

2018.07.19 ம் திகதி வியாழக் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை,
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்

## கண்ணீர் அஞ்சலி



### கந்தையா நடராசா

கடந்த (13.07.2018) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்ப தெய்வத்திற்கு எமது கண்ணீரை காணிக்கையாக செலுத்துகின்றோம்.

**ரூபாவதி, பிள்ளைகள்.**
**இல.1, பண்டார குளம் ஒழுங்கை,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

### செல்வி வளர்மதி குமாரசாமி

(ஓய்வு பெற்ற ஆசிரியர்,
யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை)



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும். உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி வளர்மதி குமாரசாமி நேற்று (14.07.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் குமாரசாமி காலஞ்சென்ற செல்லம்மா தம்பதியரின் அன்புமகளும் தனலக்சுமி, கிருஷ்ணகுமாரி ஆகியோரின் அன்புச்சகோதரியும் காளிதாசன், அரியரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் தேவகாந்தன், தமயந்தி, கர்ணன் ஆகியோரின் அன்புச்சித்தியும் கிருஷ்ணசாமி, சிவப்பிரகாசம், காலஞ்சென்ற செல்வநாயகம் ஆகியோரின் அன்பு மருமகளும் சச்சிதானந்தம், சொர்ணம்மா. காலஞ்சென்ற அழகேந்திரம், வேலுப்பிள்ளை, சிவசோதி ஆகியோரின் பெறாமகளும் காண்டீபன். சசிகலா, இனோஜா ஆகியோரின் மாமியும் அபிஷேன், அனுத், அகானா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.07.2018) திங்கட்கிழமை பி.ப. 5 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

50/4, பலாலி வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## Hotel Lovusiyah

இல. 584, ஆஸ்பத்திரி வீதியில்
இயங்கிவந்த
**Hotel Lovusiyah**
தற்போது
நவீனத்துவமான வசதிகளோடும்
உயர்தரமான கட்டமைப்புக்களோடும்
தங்கள் சேவைகளை முற்றிலும்
குளிரூட்டப்பட்ட வசதிகள்
வாகனத்தரிப்பிட வசதிகளோடும் !

**இல.42, மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்**
**என்கின்ற முகவரியில் தங்கள் சேவைகளை**
**வாடிக்கையாளர்களுக்கு வழங்கிவருகிறார்கள்.**

# பாக். பரப்புரையில் வெடித்தது குண்டு

## 128 பேர் சாவு
## 200 பேர் காயம்

இஸ்லாமபாத், ஜுலை 15

பாகிஸ்தானில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் நடத்தப்பட்ட இருவேறு தாக்குதல்களில் 128 பேர் உயிரி ழந்தனர். மேலும் 200 பேர் காயமடைந்தனர்.

பாகிஸ்தானில் நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்காக அங்கு தேர்தல் பரப்புரைகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு நடைபெற்ற இரண்டு பரப்புரைக் கூட்டங்கள் பயங்கரவாதத் தாக்குதலுக்கு உட்பட்டுள்ளன.

பன்னு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் பிற்பக்ல் நடைபெற்ற தாக்குதலில் ஐவர் உயிரி ழந்தனர். சமநேரத்தில் மஸ்துங் மாவட்டத்தில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டமொன்றில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 123 பேர் உயிரிழந்தனர்.

மஸ்துங் தாக்குதுலில் பலுசிஸ்தான் அவாமி கட்சித் தலைவர் நவாப்ஸதா சிராஜ் ரெய்சானி என்பவரும் உயிரிழந்தமை அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. (ம)

## அரசியல்...

அயலுறவுத்துறைச் செயலர் விஜய் கோகலே. உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கைக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்த இந்திய அயலுறவுத்துறைச் செயலர், அரச தலைவர், தலைமை அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அலரி மாளிகையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுமுன்தினம் காலை சந்தித்துப் பேச்சு நடத்திய அயலுறவுத்துறைச் செயலர், மாலை 3 மணியளவில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படவேண்டும் என்று இரா.சம்பந்தன் சந்திப்பில் வலியுறுத்தியிருந்தார்.

இந்தச் சந்திப்பை முடித்த கையோடு மாலை 4.30 மணியளவில் கொழும்பிலுள்ள அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு இந்திய அயலுறவுத்துறைச் செயலர் சென்றார். அங்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் அரசியல் தீர்வு விவகாரம் குறித்தே நீண்ட நேரம் அவர் பேச்சு நடத்தினார்.

'தமிழ் மக்களின் நலனில் இந்திய நடுவண் அரசு தொடர்ந்து அக்கறை செலுத்திக் கொண்டு இருக்கின்றது. தங்களை அரச தலைவராகத் தெரிவு செய்ததில் தமிழ் மக்களுக்கும் பெரும் பங்குண்டு. இலங்கையின் நீண்டகாலத் தேசியப் பிரச்சினைக்கு புதிய அரசமைப்பின் ஊடாகவே தீர்வைக் காண வேண்டும் என்பதில் தமிழ் மக்கள் உறுதியாக உள்ளார்கள். இந்த ஆண்டின் இறுதிக்குள் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட வேண்டும் என்று தமிழ் மக்களும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் வலியுறுத்துகின்றனர். தாங்களும் தங்கள் தலைமையிலான இந்தக் கூட்டரசும் தீர்வு விடயத்துக்கு முதலிடம் கொடுத்து அதனை உடன் நடைமுறைப்படுத்த வேண்டும். காலத்தை இழுத்தடிக்காமல் தீர்வைக் காண வேண்டும். இது இந்திய நடுவண் அரசின் நிலைப்பாடாக உள்ளது' என்று இந்திய அயலுறவுத்துறைச் செயலர் விஜய் கோகலே தெரிவித்தார் என்று அறிய முடிகின்றது. (5)

## எந்தத்...

காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தின் அமர்வு யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுடனான சந்திப்பு, சிவில் சமூக அமைப்புகளுடனான சந்திப்பு என்பன முதலில் நடைபெற்றது. தொடர்ந்து செய்தியாளர்களுடனான சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இன்று அமர்வுக்காக இங்கு வந்தபோது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சிலர் வெளியே ஆர்ப்பாட்டம் நடத்தினர். பெரும்பாலானோர் அமர்வுகளில் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்கினர். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்குப் பெரும் பிரச்சினைகள் இருப்பதை ஏற்றுக் கொள்கின்றோம். கருத்துக்களைத் தெரிவிக்க வருவோருக்கு இடையூறு விளைவிக்காது நடந்துகொள்ள வேண்டும். இன்று அமர்வுகளில் பலர் கலந்து கொண்டு கருத்துக்கள், ஆலோசனைகளை வழங்கினார்கள். அவர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவர்களின் கருத்துக்கள் ஆலோசனைகள் தொடர்பில் கரிசனை கொண்டுள்ளோம். சிவில் அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், மதகுருமார் எனப் பலரும் இன்று இங்கு வந்து கருத்துக்களையும், பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளனர். பயன்மிக்க அந்தக் கருத்துக்களைக் கவனத்தில் கொள்வோம் - என்றார்.

'காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டதால் வந்தோம். காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பணியக அமர்வு என்றால் வந்திருக்க மாட்டோம் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனரே?' என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் என்பவற்றின் ஊடாக இது தொடர்பாக அறிவித்தல் வழங்கப்பட்டது. இன்றைய ஊடகங்களில் இது தொடர்பான தகவல்கள் வெளியாகியிருந்தன. இவ்வாறு கூறுவதை ஏற்க முடியாது. என்று பதிலளித்தார்.

'பணியகத்தின் பெயரில் காணாமல் ஆக்கப்பட்டோர் என்பது மட்டும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் எதுவும் இல்லை என்று சிவில் அமைப்பினர், மத குருமார் ஆகியோர் சுட்டிக்காட்டியிருந்தனர். அது தொடர்பில் என்ன கூறுகின்றீர்கள்?' என்ற கேள்விக்கு, நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளின் பங்களிப்புடன் சட்டம் இயற்றப்பட்டு இந்தப் பணியகம் உருவாக்கப்பட்டுள்ளது. பணியகத்தின் பெயரை மாற்றுவதானால் மீண்டும் ஒரு சட்டம் இயற்றப்பட வேண்டும். பணியகத்தின் பெயரில் அது இல்லாவிட்டாலும், சட்ட ஏற்பாடுகளில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விடயங்கள் உள்ளன - என்றார்.

'முன்னர் அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்களை விட உங்களுக்கு கூடிய அதிகாரம் உள்ளது என்று கூறப்படுகின்றது. கையளிக்கப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் இராணுவ அதிகாரிகளிடம் விசாரணை நடத்த முடியுமா?' என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, அதில் பிரச்சினை இல்லை. எந்தத் தரப்பினரையும் எம்மால் விசாரிக்க முடியும். புலனாய்வுகள் செய்வோம். எமக்கு அதற்கான அதிகாரம் தரப்பட்டுள்ளது, என்று பதிலளித்தார்.

'இந்த அரசின் காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான பிரச்சினைக்கு உங்களால் தீர்வு காண முடியுமா?' என்ற கேள்விக்கு, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை என்பது இலங்கையைப் பொறுத்தவரை நீண்ட காலப் பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினை வடக்கில் மட்டுமல்லாது தெற்கிலும் இருக்கின்றது. இதற்கான தீர்வைப் பெற்றுக் கொள்ளும் காலத்தை வரையறை செய்ய முடியாது. விஞ்ஞானம், தொழில்நுட்பம் என்பவற்றின் துணையுடன் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தெளிவான பொறிமுறை ஒன்றை நாம் நிச்சயமாக அமைப்போம்' - என்றார்.

'விசாரணைகளின்போது இராணுவ உயர் அதிகாரியை விசாரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டால் அழுத்தங்கள் இன்றி உங்களால் செயற்பட முடியுமா?' என்ற கேள்விக்கு, சாட்சி, ஆதாரங்கள் இருந்தால் நாம் யாரை வேண்டுமானாலும் விசாரணை செய்வோம். அதில் எந்த வேறுபாடும் காட்டப்படமாட்டாது. எமக்கு அதிகாரங்கள் தரப்பட்டுள்ளன. நாங்கள் புலனாய்வு செய்வோம். விசாரணைகள் நடத்துவோம். அது எந்த நபராக இருந்தாலும் பரவாயில்லை. நாம் சுயாதீனமாகச் செயற்படுவோம், - என்றார்.

'அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இல்லை என்று கூறியுள்ளார். அப்படியிருக்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பணியகத்தால் காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டறிய முடியுமா?' என்ற கேள்விக்கு,

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இல்லை என்றால் இந்தப் பணியகத்தை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருந்திருக்காது. மேடைகளில் என்ன வேண்டும் என்றாலும் கூறலாம். விசாரணை நடத்த வேண்டும், புலனாய்வு செய்ய வேண்டும். அதன்பின்னரே முடிவு செய்ய முடியும். எமது பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினாலே நாம் முன்நகர முடியும், - என்றார்.

'காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களிடம் சாட்சியங்கள் பதிவு செய்யப்படும் என்கிறீர்கள். முன்னர் இருந்த பரணகம ஆணைக்குழுவிடம் மக்கள் சாட்சியங்கள் வழங்கியுள்ளனர். அவற்றைப் பெற்றுக் கொண்டு உங்கள் நடவடிக்கைகயை கொண்டு செல்ல முடியாதா? அல்லது அந்த அறிக்கை மீதான நம்பிக்கையின்மை காரணமா?' என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, அப்படி இல்லை. பரணகம ஆணைக்குழுவின் அறிக்கையைப் பெற்றுக் கொள்வோம். முன்னைய ஆணைக்குழுவில் சாட்சியாளர்கள் சிலர் பயம் காரணமாக சாட்சியமளிக்கவில்லை. சிலர் பயம் காரணமாக சாட்சியங்களில் பெயர்களைக் குறிப்பிடவில்லை என்று தெரிவித்துள்ளனர். அவை தொடர்பாகக் கரிசனை கொள்வோம். முன்னைய அறிக்கையையும் நாம் பெற்றுக்கொள்வோம். ஆரம்பத்திலேயே புலனாய்வு நடவடிக்கைகளில் நாம் இறங்க மாட்டோம், - என்றார்.

'அரசு மாற்றமடைந்தால் இந்தப் பணியகம் தொடர்ந்து இயங்குமா?' என்ற கேள்விக்கு, பலம் பெருந்திய ஒரு பணியகத்தை அவ்வாறு இலகுவாகத் தடை செய்ய முடியாது. இந்தப் பணியகத்தைப் பலம் பொருந்தியதாக மாற்றுவதற்கு மக்களின் ஒத்துழைப்பே அவசியம். இந்தப் பணியகத்துக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும், - என்றார். (ற-5)

## ஏமாற்றவேண்டாம்...

ஆக்கப்பட்டோரின் உறவுகளில் ஒரு தொகுதியினர் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாகக் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். அதேவேளை, ஒரு தொகுதி மக்கள் காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தின் அமர்வுகளில் பங்கேற்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம் நிறுவப்பட்ட பின்னர், ஒவ்வொரு மாவட்டத்துக்கும் சென்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுடன், பணியகத்தின் ஆணையாளர் உள்ளிட்டோர் சந்திப்பு நடத்தி வருகின்றனர். யாழ்ப்பாண மாவட்டத்துக்கான சந்திப்பு வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுக் காலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வடக்கு மாகாணம் முழுவதும் நேற்று மின்சாரம் இல்லாத நிலையில், அதற்கு மாற்று ஏற்பாடாக மின்பிறப்பாக்கி மண்டபத்தில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. மின்பிறப்பாக்கியிலிருந்து மின்இணைப்பைபெறுவதற்கான 'பிளக்கை' இனந்தெரியாதோர் கழற்றியிருந்தனர். இதனைக் கண்டறிந்து சீர்செய்த பின்னரே, தாமதமாகவே அமர்வு ஆரம்பமானது.

வீரசிங்கம் மண்டபத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சுமார் 500பேர் வரையில் பங்கேற்றிருந்தனர். வீரசிங்கம் மண்டபத்துக்கு வெளியே, வெளிமாவட்டங்களிலிருந்து வருகை தந்தவர்களுடன் இணைந்து சுமார் 100 பேர் வரையிலானோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட தங்களின் உறவுகளின் படங்களைக் கைகளில் ஏந்தியிருந்தனர். இந்தப் பணியகத்தில் நம்பிக்கையில்லை என்று கோசம் எழுப்பினர். எங்கள் பிள்ளைகள் எங்கே, எங்கள் பிள்ளைகளை எங்களிடம் தாருங்கள் என்று கண்ணீர்விட்டுக் கதறி அழுதனர். இந்தப் போராட்டத்தில் பங்கேற்றிருந்த தாய் ஒருவர் திடீரென மயக்கமுற்று அங்கே வீழ்ந்தமையினால் பரபரப்பு ஏற்பட்டது.

பணியகத்தின் ஆணையாளர் சாலிய பீரிஸை வெளியேவருமாறு போராட்டக்காரர்கள் கோசம் எழுப்பினர். திடீரென வீரசிங்கம் மண்டபத்துக்குள் அவர்கள் நுழைந்தனர். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளைச் சந்தித்த ஆணையாளர், கலந்துரையாடல் நடைபெறுவதற்கு ஒத்துழைப்புத் தாருங்கள் என்று கோரி மண்டபத்தில் தனது பேச்சை தொடர்ந்தார். இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மண்டபத்தின் மேடை வரையில் வந்தனர். மேடை முன்பாக நின்று கண்ணீர் விட்டுக் கதறியழுதனர்.

மண்டபத்தில் ஏற்கனவே அமர்ந்திருந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கும், போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் இடையில் சில கருத்துமுரண்பாடுகள் ஏற்பட்டது. சிறிது நேரத்தின் பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டோருடன் பணியகத் தலைவர் பேச்சு நடத்தினார். தொடர்ந்து மண்டபத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுடன் பணியகத்தினர் சந்திப்புக்களை நடத்தினார்கள். (5.7)

## யாழ்ப்பாண...

வாறு சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு இரு நாள் பயணமாக வந்திருந்த அமைச்சர், கொழும்புக்கு நேற்றுமுன்தினம் திரும்பினார். கொழும்பில் ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

'தென்னிந்தியத் திரைப்படங்களில் காண்பிக்கப்படும் வன்முறைகளைப் பார்த்து, அதனைப் பின்பற்றி மக்கள் மத்தியில் ஆவாக் குழுவினர் அச்சத்தை ஏற்படுத்துகின்றனர். அதனைப் பயன்படுத்திக் கொள்ளையிலும், வன்முறையிலும் ஈடுபடுகின்றனர். யாழ்ப்பாணத்திலுள்ள மூத்த பொலிஸ் அதிகாரிகள் அங்குள்ள நிலமைகளை எடுத்துரைத்தனர். ஊடகங்களும், அரசியல் எதிராளிகளும் தெரிவிப்பது போன்று அங்கு நிலமை மோசமானதாக இல்லை. வடக்கில் கடந்த ஆண்டு மாத்திரம் 3 ஆயிரம் கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது' - என்றார். (5)

## காணாமற்...

பணியகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தின் ஆணையாளர்மற்றும்உறுப்பினர்கள்யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்தனர். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை வீரசிங்கம் மண்டபத்தில் இரண்டு கட்டங்களாகச் சந்தித்தனர். இதன்போதே, ஆணையாளர் சாலிய பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைக் கண்டுபிடிப்பதற்கு எமது பணியகத்துக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். நீங்கள் எமக்குத் தரும் தகவல்களில்தான் உறவுகளைக் கண்டுபிடிக்க முடியும். எமது பணியகத்தின் மீது நீங்கள் நம்பிக்கையிழந்தமைக்கு காரணங்கள் இருப்பதை நான் அறிவேன். இந்த விடயத்தில் பல ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு அவை மக்களின் தேவையை நிறைவு செய்யவில்லை. இதனால்தான் எமது பணியகத்தின் மீதும் நம்பிக்கையிழந்து நீங்கள் புறக்கணிக்கின்றீர்கள் என்று நினைக்கின்றேன். எங்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தைத் தாருங்கள். பக்கச்சார்பற்ற, நீதியான விசாரணைகளை முன்னெடுப்போம். இந்தப் பணியகத்தை வேண்டாம் என்று நீங்கள் கூறினால், உங்கள் பிரச்சினைகளுக்கு யார் தீர்வைப் பெற்றுத் தருவார்கள்? இதனை யோசித்துப் பாருங்கள். உங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்றுதான் நாங்கள் விரும்புகின்றோம். உங்கள் வேதனைகளை நாம் நன்றாகவே அறிவோம் - என்றார்.

'எங்களுக்கு கொள்ளி வைப்பதற்கு எங்கள் உறவுகள்வேண்டும். வீதிகளில் ஆண்டுக்கணக்காக இருந்து போராட்டம் நடத்தி நாங்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். தற்கொலை செய்யும் மனநிலையில்தான் நாங்கள் இருக்கின்றோம். உழைப்பவர்களை இழந்து வாழ்வாதாரம் அற்று இருக்கின்றோம். எம்மைக் கவனிப்பார் யாரும் இல்லை. அதிகாரிகளின் பிள்ளைகள் காணாமல் போயிருந்தால்தான் அவர்களுக்கு எங்களின் வலிதெரியும். உதவிகள் தந்து எங்கள் கண்களை மறைக்கவேண்டாம்' என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்தனர். (5.7)

# வைகறை வென்றது

யாழ்ப்பாணம், ஜீலை 15
சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வைகறைவிளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

வசந்தசிறி விளையாட்டுக் கழக மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது. உதயசூரியன்விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வைகறை விளையாட்டுக் கழக அணி மோதியது. 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வைகறை அணி வென்றது. (ம-23)

# பெல்ஜியம் மூன்றாமிடம்

உலகக்கிண்ணக் கால்பந்துத் தொடரில் மூன்றாவது இடத்தைத் தனதாக்கியது பெல்ஜியம் அணி.

ரஷ்யாவில் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. மூன்றாமிடத்துக்கான ஆட்டம் இலங்கை நேரப்படி நேற்று இரவு 7.30 மணிக்கு நடைபெற்றது. லீக் சுற்றில் இந்த இரண்டு அணிகளும் மோதிய ஆட்டத்தில் பெல்ஜியம் வெற்றி பெற்றது. இதனால் இந்த ஆட்டத்தில் பதிலடி கொடுக்க வேண்டிய தேவையும் இங்கிலாந்துக்கு இருந்தது. எனினும் ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரையில் பெல்ஜியமே ஆதிக்கம் செலுத்தியது.

ஆட்டத்தின் நான்காவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் தோமஸ். முதல் பாதியில் முடிவில் வேறெந்தக் கோல்களும் பதிவாகவில்லை. இரண்டாம் பாதியின் 82ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார் ஹசாட். முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பெல்ஜியம்.

பெல்ஜியத்தை விட அதிகளவான நேரங்களில் இங்கிலாந்து பந்துடைமையைக் கொண்டிருந்தது. பெல்ஜியத்தை விட அதிகளவான பந்துப் பரிமாற்றங்களை இங்கிலாந்து மேற்கொண்டிருந்தது. எனினும் இங்கிலாந்தில் பின்வரிசை தளம்பலாக இருந்ததை அடுத்து பெல்ஜியம் வாய்ப்பைப் பயன்படுத்தியது. (ம)






# பிரான்ஸின் வெற்றி வெற்றியே இல்லையாம்




கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் பிரான்ஸிடம் பெல்ஜியம் தோல்வியடைந்த நிலையில் பிரான்ஸின் இந்த வெற்றி, வெற்றியே இல்லை என்று தெரிவித்தார் பெல்ஜியத்தின் கோல் காப்பாளர் திபாவ்.

பிரான்ஸின் வீரர் சாமுவல் உம்ரிரி 51ஆவது நிமிடத்தில் கோலைப் பதிவுசெய்து பெல்ஜியத்துக்கு தலைவலியை ஏற்படுத்தினார். உம்ரிரி பதிவுசெய்த கோலே பிரான்ஸை இறுதிக்கு அழைத்துச் சென்றது. இந்த முறை உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றப் போவது பிரான்ஸ்தான் என்கிற கருத்துக்கணிப்புக்கள் வலுவாக உள்ள நிலையில் பிரான்ஸின் வெற்றியை கடுமையாகச் சாடியுள்ளார் உம்ரிரி.

"மிகவும் வெறுப்பான ஆட்டம். பிரான்ஸ் விளையாடவே இல்லை, 11 வீரர்களையும் தடுப்பாட்டக் காரர்களாக நிறுத்தியது. கோலிலிருந்து 40 அடி தூரத்தில் 11 வீரர்களையும் நிறுத்தியது. இது என்ன ஆட்டமா? ஆனால் கிலியான் மப்பேயை வைத்து எதிர்த்தாக்குதல் நடத்த முயன்றது. மப்பே மிகவும் விரைவானவர், இது அவர்கள் உரிமை. ஏன் வெறுப்பு எனில் எங்களை விட சிறந்த அணி வெற்றி பெற்றிருந்தால் கவலையில்லை, ஒன்றுமே ஆடாத பிரான்ஸ், ஒன்றுமேயில்லாத பிரான்ஸ் வெற்றி பெற்றது தான் வெறுப்பாக இருக்கிறது. பெல்ஜியம் வெற்றி பெறாதது கால்பந்தாட்டத்துக்கு வெட்கக் கேடு, பிரான்ஸ் வெற்றி பெற்றதும் கால்பந்துக்கு வெட்கக்கேடு" என்று மேலும் தெரிவித்தார் திபாவ். (ம)

# தென்னாபிரிக்காவை சுருட்டியது இலங்கை

## இரண்டரை நாள்களில் முடிந்த டெஸ்ட்



இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி 278 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. வெறும் இரண்டரை நாள்களில் இந்த டெஸ்ட் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

காலியில் கடந்த 12ஆம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பமாகி நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 287 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. கருணாரத்ன அதிகமாக 158 ஓட்டங்களையும், குணதிலக 26 ஓட்டங்களையும், சண்டகன் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ரபாடா 4 இலக்குகளையும், சம்சி 3 இலக்குகளையும், பிளன்டர், ஸ்ரெய்ன் இருவரும் தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 126 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அணித் தலைவர் பிளாசிஸ் அதிகபட்சமாக 49 ஓட்டங்களைப் பெற்றார். அவரைவிட பிளன்டர் 18 ஓட்டங்களையும், பவுமா 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் டில்ருவான் பெரேரா 4 இலக்குகளையும், லக்மல் 3 இலக்குகளையும், கேரத் 2 இலக்குகளையும், சண்டகன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

161 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி நேற்றுமுன்தின இரண்டாம் நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அந்த அணி 190 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக கருணாரத்ன 60 ஓட்டங்களையும், மத்தியூஸ் 35 ஓட்டங்களையும், லக்மல் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

தென்னாபிரிக்காவுக்கு வெற்றியிலக்காக 352 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. அந்த அணி வெறும் 73 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து இலங்கை அணி 278 ஓட்டங்க்ளால் அபார வெற்றிபெற்றது. பிளன்டர் ஆட்டமிழக்காமல் பெற்ற 22 ஓட்டங்களே அதிகபட்சம். பந்துவீச்சில் டில்ருவான் பெரேரா 6 இலக்குகளையும், கேரத் 3 இலக்குகளையும், சண்டகன் ஓர் இலக்கையும் பெற்றனர். (ம)

# மத்தியின் போர் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜீலை 15
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 202ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மத்தியின் போர் என்று வர்ணிக்கப்படும் துடுப்பாட்டத் தொடர் இன்று ஆரம்பமாகிறது. யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கல்லூரிகளின் பழைய மாணவர் சங்கங்களின் அணிகளுக்கு இடையில் இந்தத் தொடர் நடைபெறவுள்ளது. சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் அணி, கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் அணி, மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் அணி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் அணி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் அணி, ஸ்ரான்லிக் கல்லூரி பழைய மாணவர் அணி, றிபேக் கல்லூரி பழைய மாணவர் அணி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் அணி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவர் அணி, சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் அணி, சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பழைய மாணவர் அணி ஆகிய 14 அணிகள் கலந்து கொள்கின்றன. (ம-23)

## கால்பந்து உலகின் மகுடத்தைத் தனதாக்கப்போவது

# பிரான்ஸா - குரோசியாவா?

பிரகாஸ்

கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது. 32 அணிகளாக எம்முன் இருந்த தெரிவுகள் படிப் படியாக குறைவடைந்து இன்று பிரான்ஸ், குரோசியா என்று இரண்டு தெரிவுகள் மட்டும் எஞ்சி நிற்கின்றன.

### எப்படிப்பட்டது பிரான்ஸ்

கால்பந்தாட்ட உலகில் வலுவான ஆதிக்கம் செலுத்தும் அணிகளில் பிரான்ஸும் ஒன்று. அது முன்னாள் உலகச் சம்பியனும்கூட. இதற்கு முன்னர் முக்கிய பல்வேறு தொடர்களில் இறுதியாட்டத்தில் விளையாடிய அனுபவம் பிரான்ஸுக்கு உண்டு. அத்துடன் தற்போதுள்ள ஆகச் சிறந்த அணிகளில் பிரான்ஸும் ஒன்று. மின்னல் வேகத்தில் செயற்படக் கூடிய மப்பே, கிரீஸ்மன் கூட்டணி நிச்சயம் குரோசியாவுக்குக் கலக்கத்தை ஏற்படுத்தக்கூடியது. அத்துடன் போக்பா, உம்ரிரி உள்ளிட்ட வீரர்களும் பிரான்ஸுக்குப் பலம் சேர்க்கின்றனர்.



நடுகள வீரரான 25 வயதாகும் போக்பா, 2011ஆம் ஆண்டில் பிரான்ஸ் 16 வயதுக்குட்பட்டோர் அணிக்காகத் தேர்வானார். அதைத் தொடர்ந்து 17, 18, 19, 20 வயதுக் குட்பட்டோர் அணிகளில் விளையாடினார். 2013ஆம் ஆண்டு முதல் தேசிய அணியில் தொடர்ந்து இடம்பிடித்து வருகிறார்.

19 வயதாகும் கைலியன் மப்பே களத்தில் இறங்கினால் புயல்தான். கோல் மழை பொழியும் வரை தனது முயற்சியைக் கைவிடமாட்டார். 2017ஆம ஆண்டில் பிரான்ஸ் தேசிய அணியில் இடம்பிடித்தார். [illegible] ஆகும் பட்டம் தீட்டப்பட்ட வைரமாய் பிரான்ஸ் அணிக்காக களமிறங்கவுள்ளனர். ஆக, பிரான்ஸின் கடந்த கால பெறுபேறுகளும் அந்த அணியில் உள்ள வீரர்களும்

குரோசியாவுக்குக் கெட்ட கனவுகள்.

### எப்படிப்பட்டது குரோசியா?

இந்த உலகக்கிண்ணத் தொடரில் இடம் பெற்ற பேரதிர்ச்சிச் சம்பவமாக குரோசிய அணி உலகக்கிண்ணத் தொடரின் இறுதி யாட்டத்துக்குத் தகுதி





பெற்றமை பார்க்கப்படுகிறது. குரோசியாவின் கால்பந்தாட்ட வரலாற்றில் அந்த அணியின் [illegible] உலகக் கிண்ணத் தொடருக்கான களத்தில் குதிக்கிறது. உலக கால்பந்து வீரர்களில் மிகச [illegible] ஒருவர். அதே நேரத்தில் [illegible] குரோசியா அணி உலகக் கிண்ணத் தொடரில் அரையிறுதியைத் தாண்டியதில்லை. [illegible] முதல்முறையாக 1998ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் குரோசியா பங்கேற்று அரையிறுதி வரை சென்றது. ஆனால் பலம் பொருந்திய பிரான்ஸிடம் தோல்வி கண்டு வெளியேறியது குரோசியா. இதனால் பிரான்ஸுக்கு திருப்பிச் செலுத்த வேண்டிய கடனொன்றும் குரோசியாவின் கைவசம் உள்ளது. தற்போது பயிற்சியாளராக உள்ள டாலிக், [illegible] அனுபவம் இல்லாதவர். மேலும் [illegible] அவர் பற்றிய [illegible] அது அணியினரிடையே எதிரொலிக்கும்.

மேலும் குரோசிய அணி தடுப்பாட்டத்தில் பிரவும் பலம் குறைந்த அணியாகப் பார்க்கப்படுகிறது. எனினும் 32 வயது குரோசிய சூப்பர் ஸ்டாரான லூக்கா மோவிக், தங்களது நாட்டுக்கு கிண்ணத்தை வாங்கி வருவார் என ரசிகர்கள் காத்திருக்கின்றனர். எது எப்படியதக அமைந்தாலும் வலியது எதுவோ அதுவே இன்று வெல்லும்.





## வேலையாள்கள் தேவை

கிளிநொச்சியில் அமைந்துள்ள (நியூ சண் செரமிக்ஸ் பிறைவேட் லிமிட்டட்) நிறுவனத்துக்குக் கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு O/L, A/L சித்தியடையந்த அனுபவமுள்ள / அனுபவமற்ற பணியாளர் தேவை.

**விற்பனையாளர்** - ஆண்/ பெண் - வயதெல்லை - 22 தொடக்கம் 35 வரை

**களஞ்சியப்படுத்துநர்** - ஆண் - வயதெல்லை 30 தொடக்கம் 40 வரை

**குறிப்பு:-** அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (AKN/496)(11.17)

**நியூ சண் செரமிக்ஸ் பிறைவேட் லிமிட்டட்**

A-9, கண்டி றோட், கிளிநொச்சி, (பழைய வைத்தியசாலை முன்பாக)

071 792 3721, 021 228 3872

## த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்



ஸ்தாபனத்தின் அசத்தலான

**ஆடித்தள்ளுபடி**

சிறுவர்கள் முதல் பெரியோர் வரை அனைவருக்கும் புத்தம் புதிய டிசைன்களில் நவீன ஆடைத் தெரிவுகளை பெற்றுக் கொள்ள

**ஓர் அரிய சந்தர்ப்பம்**

த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
44,42, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம். (IN 7283)(10)

## IELTS கற்பதுடன் எங்களது கல்லூரியிலே பரீட்சைக்கும் தோற்றுங்கள்

மேலைத்தேய நாடுகளில் கல்வி கற்க, குடியேற மற்றும் தொழில் வாய்ப்பிற்கு..

**IELTS** Academic General **FULL / PART TIME**

திருமணம் முடித்து Spouse விசாவில் **UK** செல்லவுள்ளவர்களுக்கு

**IELTS** Life Skills **A1 B1**

BRITISH COLLEGE of Education

More information 0777-596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124
565, Peradeniya Rd, Kandy. 13, 1st Chapel Rd, Colombo -6

British College of Educatin - IELTS பரீட்சை நிலையம்

## Genesis Academy Lanka (Pvt) Ltd

A BOI APPROVED COMPANY
National Franchisee For
UCMAS MENTAL ARITHMETIC
SRI LANKA

**UCMAS அபாகஸ்**
**மனக்கணிதப் பயிற்சி நிறுவனம்**

நாடு முழுவதும் தனது பயிற்சிநெறியை விஸ்தரிக்கப்படவுள்ளதால்

**எமது நிறுவனத்திற்கு புதிய மாணவர்களும், பெண் பயிற்றிவிப்பாளர்களும் தேவை**

குறிப்பு: பகுதி நேரவேலை

இடங்கள்:
- யாழ்குடா நாடுமுழுவதும்
- கிளிநொச்சி
- முல்லைத்தீவு

தகைமை: A/L சித்தி

வயதெல்லை : 18 - 35

உங்கள் சுயவிவரக்கோவையை பதிவுத்தபால் மூலமாகவோ. அல்லது Email மூலமாகவோ 30.07.2018 இற்கு முன் அனுப்பிவைக்கவும்

*Address:*

R & B UCMAS BRAIN DEVELOPMENT ACADEMY
No.75/12, Front Lane, Palaly Road.
Thirunelveli, Jaffna

தொடர்புகளுக்கு: T.P.: 077 316 4399

Email - ucmasjaffna01@gmail.com

## காணி விற்பனைக்கு

வேலணை மேற்கு கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள நெற்பரப்பு இருபதும் (20). வீடும், பயிர்களும் சேர்ந்த காணி விற்பனைக்குண்டு.

**தொடர்பு** - 076 396 3692

## விற்பனைக்கு

ஜேர்மன் சீப்ட் நாய்க்குட்டிகள் மற்றும் பெரிய இன கிடாய் ஆடுகள் விற்பனைக்கு.

**தொடர்பு - 075 511 3457**

## E.S Printers



பனர் பிரிண்ட் (Banner), 35/=

\# 357, Kasthuriyar Road, Jaffna.

## காப்புறுதித் துறையில் புதிய பரிணாமம் நிரந்தர வேலைவாய்ப்பு

**65 % Commission**

அனுபவமுள்ளவர்களுக்கு ETF, EPF உடன் உடனடி நிரந்தர வேலைவாய்ப்பு.

**தொடர்பு - 077 359 5599**

## பணிப் பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து பணி-புரியக்கூடிய பணிப்பெண் தேவை.

**தொடர்பு - 077 6687 688**

## வீடு வாடகைக்கு

இல. 99/7, நீராவியடி பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் உள்ள மேல்மாடி வீடு வருட வாடகைக்கு விடப்படும்.

**077 450 6113, 076 202 5405**

## வேலை வாய்ப்பு



யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நகரில் இயங்கும் E.S. நிறுவனத்திற்கு

**வரவேற்பாளர்கள்**

தேவை. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக விரும்புபவர்கள் நேரில் சமுகம் அளிக்கவும்.

நாளை 16.07.2018 திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணிமுதல் 12.00 மணிவரை சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

**E.S Printers**
இல. 357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (90)

## உதயன் விளம்பர தொடர்புகளுக்கு

advt@uthayan.com, 021 493 1111

## மரண அறிவித்தல்



**திருமதி இரட்ணேஸ்வரி குமாரசாமி**

*(மலர்)*

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பிடாரி கோவிலடி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரட்ணேஸ்வரி நேற்று (14.07.2018) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற செல்லையா - நாகம்மா தம்பதிகளின் மருமகளும் செல்லையா குமாரசாமியின் (ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி) பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற ஜீவதாசன், பிரியதர்சினி (ஆசிரியை தாவடி இந்து த. க. பாடசாலை), டினேஷினி, ஜெகதீஸ்வரன் (ஆஸ்திரேலியா), சசிக்குமார் (சுவிஸ்), பிரபாகரன் (மாவட்ட செயலகம், கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சித்திரா (முகாமையாளர் ஜனசக்தி காப்புறுதி), ரவீந்திரராஜா (இ. போ. ச. காரைநகர் சாலை பரிசோதகர்), பத்மலோயன், எவரெஸ்ரா, ரேவதி, கஸ்தூரி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற ராணி,ஈஸ்வரி,ராஜேஸ்வரிஅன்ரன்(கனடா),குணசீலிஆகியோரின் அன்புச் சகோதரியும் மகேஸ்வரி, குமாரசிங்கம், தவமணிதேவி, காலஞ்சென்றவர்களான துரைராசா, முருகையா ஆகியோரின் அன்பு மைத்துனியும் தாட்சாயினி, எமிலன், வனுஷா, பிரவீன், அன்றூஸ், ஆன்சன், அய்விஸ், அய்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2018) ஞாயிற்றுக்கிழமைமுற்பகல்10.00மணியளவில்அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணிக்கு காக்கைதீவு, எருக்கலப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பிடாரி கோவிலடி,**
**ஆனைக்கோட்டை.** (CS 9918/15/17)

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 484 8678**

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

Lanka Farm இன் No.1 ஊர்க்கோழிக் குஞ்சு விற்பனை **விலை 65/=**

சேவல், பேடு, கழுத்துவெட்டி குஞ்சுகளும் தனியாக கிடைக்கும்

**தொடர்பு - 077 753 1344**

## சிறுநீரகம் தேவை

35, வயதுடைய 6 வயது இரட்டைப் பெண் குழந்தைகளின் தாயார் ஒருவர், சிறுநீரகப் பாதிப்பிற்குட்பட்டிருப்பதால் இவரின் உயிரை காப்பாற்ற மாற்று சிறுநீரகம் பொருத்த வைத்தியர்கள் ஆலோசனை வழங்கி உள்ளனர். இவர் O+ வகை மாற்று சிறுநீரக கொடையாளரைத் தேடிக்கொண்டிருக்கிறார். சிறுநீரக நன்கொடையளிக்க நீங்கள் விரும்பின் **076 157 4509** என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். தகுந்த சன்மானம் வ்ழங்கப்படும். (CS 18224/15/17)

## German Institute

German, Swiss, Netherland, Ostria மொழி வகுப்புக்கள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகிறது.

Embassy யின் A1 Certificate க்கு ஏற்றவாறு

**தொடர்பு - 077 160 4823,**

Mrs. P. Kajenthini

இடம் : 10, Palaly Road, Jaffna மற்றும் யாழ்ப்பாணம் கார்கில்ஸ் சதுர்க்கத் திற்கும். போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வரவும்.

## காணி விற்பனைக்குண்டு

கொக்குவில் கிழக்கு, பழைய தபாற் கந்தோர் வீதியில் பல்கலைக்கழகத்திற்கு அருகில் இரண்டு பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**தொடர்பு :**
**076 1844 680**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.